
# Sancta Maria

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வெளியீடு

"சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிப்பது" (எபே. 1:10)

பாரம்பரிய கத்தோலிக்க இதழ்

மே - ஆகஸ்ட் 2013



## Credidimus Caritati

வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை
சிறப்பிதழ்



*Edward Quarton*
*The Coronation of Virgin (15th Cent.)*

14.04.2013

நல்லாயன் ஞாயிறு



அன்பார்ந்த வாசகர்களே,

"Credidimus Caritati" (தேவசிநேகத்தை விசுவசிக்கிறேன்) இந்த இரு வார்த்தைகளில் வந். மார்செல் லெஃபவர் ஆண்டகையின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி இந்த அருமையான நிறுவனரின் நினைவாக இவ்விதழை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அவரது வாழ்வு நமக்கொரு மேல்வரிச் சட்டம். குறிப்பாக விசுவாசத்தைப் பாதுகாப்பதில் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் அவர் ஒரு முன்னோடி. விசுவாசம் சீரழிந்து வரும் இந்நாட்களில் அவர் நமக்கொரு கலங்கரை விளக்கம். கத்தோலிக்கத் திருச்சபையின் விரோதிகளை எதிர்ப்பதில் அவர் காட்டிய வீரமும், அசாதாரண தைரியமும் நமக்கொரு பாடம்.

ஆனாலும் அவரை போற்றுவோரைவிட தூற்றுவோர் அதிகம். அவர் ஒரு பிரிவினைவாதி என இடைவிடாது குறை சொல்வோர் உண்டு. முந்தைய பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர், அதிமேற்றிராணியாரைப்பற்றிக் குறிப்பிடும்போது "வணக்கத்திற்குரிய அதிமேற்றிராணியார்" என்று குறிப்பிட்டார். இந்த "வணக்கத்திற்குரிய அதிமேற்றிராணியார்" யார்? அவர் போற்றப்படவேண்டியவரா, அல்லது தூற்றப்பட வேண்டியவரா என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். அவரது சுயசரிதையை வாசியுங்கள். அவரது பிரசங்கங்களைப் படியுங்கள். அவர் ஒரு பரிசுத்தமான மேற்றிராணியார் என்பதையும் அவர் கத்தோலிக்கச் சத்தியங்களைக் காப்பதில் எவ்வளவு போராடினார் என்பதையும் நீங்களே கண்டுகொள்ளுவீர்கள். அவர் ஒரு பிரிவினைவாதியல்ல, அவர் ஓர் உத்தம கத்தோலிக்கர். அவர் கத்தோலிக்க மறையைவிட்டு ஒருபோதும் வெளியேறியதில்லை.

இந்த 21-ம் நூற்றாண்டில் நமக்கு இப்படி ஒரு நல்ல ஆயனைத் தந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். கத்தோலிக்கத் திருச்சபைக்கு அவர் விட்டுச்சென்ற மிகப்பெரிய ஆஸ்தி அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை. அதற்காக அவருக்கு நன்றி சொல்வோம். அவர் கொண்டிருந்த தேவ சிநேகத்தை முழுமையாக விசுவசிப்போம்.

இம்மாதம் தனது முதல் பிறந்த நாளைக் கொண்டாடும் "Sancta Maria"-விற்கு நீங்கள் காட்டிவரும் நல்லாதரவுக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Benedicamus Dómino

**சங். திரேஷியன் பாபு**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**


May - August 2013
Volume V, Number 3 & 4

Sancta Maria

**Publisher**
Society of St. Pius X
**Editor**
Fr. Therasian Babu SSPX
**Editorial Team**
Mr. Xavier Ignatius Devasahayam
Mr. Francis Kumar
Mr. Roger Montini
**Design and Layout**
Fr. Therasian Babu, SSPX
Mr. T.V. Rosario
**Shipping and Handling**
Mr. Clement
Mr. Robin
**Printers**
The Safire Printers, Sivakasi

# அதிமேற். மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை



“நான் கத்தோலிக்க சத்தியங்களை அப்படியே உங்களிடம் ஒப்படைக்கும் ஒரு எளிய மேற்றிராணியார். ‘நான் பெற்றுக்கொண்டதையே உங்களிடம் கையளித்தேன்’ என்ற அர்ச். சின்னப்பரின் வார்த்தைகளை என் கல்லறையில் நீங்கள் எழுதி வைக்கலாம். (இது நடப்பதற்கு வெகு நாளாகாது). நான் உங்களுக்கு ஒரு கடிதத்தைக் கொண்டுவரும் ஒரு தபால்காரர். அதாவது கடிதத்தை (கடவுளின் வார்த்தையை) நான் எழுதவில்லை, அதைக் கடவுள்தாமே எழுதினார். நமதாண்டவர் அதை நமக்குத் தந்தார். அதை நான் அப்படியே உங்களுக்குத் தருகிறேன். இங்கு இருக்கிற அன்புள்ள குருக்கள் வழியாக இன்னும் திருச்சபையில் அடிக்கிற நாசகார அலைகளுக்கு எதிராக போராடுகிற குருக்கள் வழியாக நாங்கள் மீட்பின் சாதனங்களை உங்களுக்குத் தருகிறோம். இவற்றை நாங்கள் உண்டாக்கவில்லை. மாறாக, திவ்விய பலிபூசை உண்மையான திவ்விய பலிபூசை, உண்மையான தேவதிரவிய அநுமானங்கள் என்ற மீட்பின் கருவிகளை நாங்கள் சுமந்து உங்களிடம் வருகிறோம்.”

*– அதிமேற். மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை*

# ஆண்டகையின் வாழ்க்கைச் சுருக்கம்

**1905, நவம்பர் 29 :** *மார்செல் லெஃபவர் பிரான்ஸ் நாட்டின் லீல் (Lille) என்ற ஊரில் பக்தியுள்ள கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார்.*

**1929 :** *உரோமையிலுள்ள பிரெஞ்ச் குருமடத்தில் குருத்துவக்கல்வி பயின்று குருப்பட்டம் பெற்றார்.*

**1932–1946 :** *திவ்ய இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையில் சேர்ந்து ஆப்பிரிக்கா நாட்டின் காபோன் மாநிலத்திற்கு வேத போதகக் குருவாக அனுப்பப்பட்டார்.*

**1947–1962 :** *இதற்கிடையில் மேற்றிராணியாராக அபிஷேகம் பெற்று செனிக்கல் நாட்டு டாக்கா (Dakar Senegal) பகுதியின் அப்போஸ்தலிக்க ஸ்தானாதிபதியாகவும் (Vicar), பின்னர் ஆப்பிரிக்காவில் பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாதிபதியாகவும் பணியாற்றினார். இறுதியில் டாக்கார் மேற்றிராசனத்தின் முதலாவது அதிமேற்றிராணியாராகவும் ஏற்படுத்தப்பட்டார். அங்கே அநேக கத்தோலிக்க ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவர், தங்கள் சொந்த மேற்றிராசனங்களின் குருக்களாக்குவதற்கு ஆப்பிரிக்க நாட்டு இளைஞர்களைத் தயாரித்தார்.*

**1962 :** *பிரான்ஸ் நாட்டில் தூல் (Tulle) மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக பாப்பரசரால் நியமிக்கப்பட்டார். ஆறு மாதங்களுக்குப் பிறகு திவ்விய இஸ்பிரித்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டராக தேர்வு செய்யப்பட்டார்.*

**1962–1965 :** *1960-ல் கூட்டப்படவிருக்கும் 2-ம் வத்திக்கான் சங்கத்திற்கான தயாரிப்பு குழுவில் அமர்த்தப்பட்டார். சங்கத்தின் முதல் அமர்விலேயே நவீனர்கள் சங்க நடைமுறைகளையும், செயல்பாடுகளையும் கைப்பற்றி, சங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களை (Schemas) தயாரிக்கத் தொடங்கினார். சங்கத்தில் நவீனத்தை எதிர்த்துப் போராட கத். பாரம்பரியத்தை விரும்பும் சங்கத் தந்தையர்களைக் கொண்ட Coetus Internationalis Patrum என்ற சிறு குழுவை உருவாக்கினார்.*

**1968–1969 :** *தாம் சார்ந்திருந்த குருக்கள் சபையின் துறவியர்கள் நவீனக் கொள்கைகளை விரும்பியதால் தமது அதிசிரேஷ்டர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார். எஞ்சிய வாழ்வை ஓய்விலும், ஜெப வாழ்விலும் செலவிட விரும்பி உரோமையில் தங்கயிருந்தவரை, பாரம்பரிய குருமடப் போதனைகளை விரும்பிய, நவீனத்தால் பாதிக்கப்பட்ட குருமாணவர்கள் சிலர் சந்தித்து தங்களது, பாரம்பரிய குருத்துவ பயிற்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அதுவே தேவ சித்தம் என்பதை உணர்ந்த லெஃபவர் ஆண்டகை அதற்கான ஒரு இல்லத்தைத் திறந்தார்.*

**1969 :** *சுவிட்சர்லாந்து நாட்டில் ஈக்கோனில் பாரம்பரிய குருமடத்தை நிறுவி, அதற்காக அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையை திருச்சபையின் முறையான அங்கீகாரத்துடன் ஸ்தாபித்தார். அதன் முதலாவது அதிசிரேஷ்டராக 1982-ம் ஆண்டு வரை செயல்பட்டார்.*

**1970–1988 :** *உலக நாடுகளெங்கிலும் பயணம் செய்து கத்தோலிக்க மக்களை தங்களது பாரம்பரிய கத். விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஊக்கப்படுத்தியும், உறுதிபூசுதல் தேவ திரவிய அனுமானங்களை நிறைவேற்றியும், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை குருமடத்தில் பயின்ற புதிய குருக்களுக்கு குருப்பட்டமும் கொடுத்தும் வந்தார்.*

**1976, ஜுலை :** *நவீன அதிகாரிகளால் Divine என்ற குருத்துவப்பணியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால் அது திருச்சபையின் சட்டப்படியானதாக இல்லாததாக இருந்தாலும், எந்த விதமான விசாரணையின்றி, விசேஷத் தீர்ப்புக் கடிதம் (Forma specifica letter) கூட வெளியிடப்படாமல் தண்டனை விதிக்கப்பட்டார்.*

**1988, ஜுன் 30 :** *திருச்சபையில் கத். பாரம்பரியமும் குருத்துவமும் காப்பாற்றப்படுவதற்காக அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் நான்கு குருக்களை மேற்றிராணியார்களாக அபிஷேகம் செய்தார். இச்செயல் திருச்சபைச் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பிடப்பட்டு, அவரும் அவரால் அபிஷேகம் செய்யப்பட்ட நான்கு மேற்றிராணிமார்களும் சுயமாகவே திருச்சபை விலக்கம் பெற்றுக் கொண்டார்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள்.*

**1991, மார்ச் 25 :** *"நான் எதைப் பெற்றுக் கொண்டேனோ, அதனை வழங்கியிருக்கிறேன்" என்ற உத்தம கத்தோலிக்க மேற்றிராணியாரின் கடமையை செவ்வனே நிறைவேற்றிய அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை அவர்கள் பாக்கியமான மரணமடைந்தார்.*

# மார்செல் லெஃபவர் ஆண்டகையின் சுயசரிதை



**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை கன்னியர் மத்தியில் அதிமேற்றிராணியார் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவு இங்கு தரப்பட்டுள்ளது. அந்த சொற்பொழிவு அவரது வாழ்க்கையைப் படம்பிடித்து காட்டுகிறது. அவர் ஒரு எளிய மேற்றிராணியார், பரிசுத்த மேற்றிராணியார், தன் வாழ்வை முழுமையாக திருச்சபைக்காக அர்ப்பணித்த ஒரு மேற்றிராணியார். குருமாணவராக, குருவானவராக, வேதபோதகராக, குருமட அதிபராக, மேற்றிராணியாராக, திருத்தந்தையின் தூதுவராக, இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் தலைவராக, அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை நிறுவனராக பல்வேறு நிலைகளில் அவர் வாழ்ந்த விதம், அவர் திருச்சபை மீது ஆழ்ந்த அன்பு அலாதியான நேசம் கொண்டிருந்தார் என்பதை நமக்கு தெரிவிக்கிறது. இந்தப் பண்பை நாமும் நம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஏக பரிசுத்த கத்தோலிக்க அப்போஸ்தலிக்க திருச்சபையை விசுவசிப்பது மட்டும் போதாது, அத்திருச்சபையை மிக அதிகமாக நேசிக்க வேண்டும். இந்த நேசம்தான் நம்மை மீட்பின் பாதையில் வழிநடத்தும்.**

## அணிந்துரை

அன்புள்ள வாசகரே,

தங்கள் சபையின் ஸ்தாபகர் ஒரு சில நாட்களுக்கு ஓய்வெடுக்க விரும்பி அடிக்கடி வருகிற தங்களுடைய அர்ச். மிச்செல் மடத்திற்கு (பிரான்ஸிலுள்ள அர்ச். பத்தாம் பத்திநாதர் சகோதரிகள் சபையின் தாய்மடம்) ஒரு முறை அவர் வருகை தந்த போது, சபையின் சகோதரிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுக்கு ஒரு சில ஞான உரைகள் வழங்கும்படி அவரிடம் கேட்டுக் கொண்டார்கள்.

ஒரு நல்ல தகப்பனைப்போல, தம் குழந்தைகளின் இரகசிய விருப்பங்களைத் தம் மனதில் உணர்ந்த அதிமேற்றிராணியார் அவர்கள், ஒரு சில உரைகளில், தம் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக அவர்களுக்கு வழங்கினார்.

இந்த உரைகளில் அவருடைய இருதயத்தின் எளிமையை, தமது உயர்ந்த பதவிகளையும் மீறி எப்படிக் காத்துக் கொள்வது என்று அவர் அறிந்திருந்த அவருடைய தாழ்ச்சியையும், திருச்சபைக்கான மிக அநேக ஆண்டுகள் தாம் நடத்திய போராட்டத்தில் தாம் எதிர்கொண்ட பெரும் துன்பங்களின் மத்தியில் அவரிடமிருந்து சுடர் வீசிப் பரவிய அவருடைய சாந்தத்தையும் நாம் கண்டு, வியந்து பாராட்டுகிறோம்.

தங்களுக்கே உரிய சுவை முழுவதையும் அப்படியே பாதுகாக்கும் முயற்சியாக, உள்ளபடியே பாதுகாக்கப்பட்டு வந்துள்ள பேச்சு வழக்கைக் கொண்டுள்ள பின்வரும் உரைகள், இந்த விசுவாசத்தின் முன்னோடியும், கத்தோலிக்க குருத்துவத்தின் பாதுகாவலருமானவரின் அதியற்புதமான ஆத்துமத்தின் அழகை நீங்கள் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவுகின்றன.

✠ பெர்னார்ட் ஃபெல்லே

## முகவுரை

சகோதரிகளுக்கு சில ஞான உரைகள் வழங்க முடியுமா என்று என்னிடம் அவர்கள் கேட்டார்கள். ஓ, அவர்கள் கேட்டுவிட்டதால், நான் என் நீண்ட வாழ்வின் சிறு வரலாற்றை மனமுவந்து அவர்களுக்குக் கூறுவேன். என் வாழ்வின்போது, கடவுள் எனக்கு செய்திருக்கிறவற்றைப் பற்றி நான் முழு எளிமையில் கொஞ்சம் பேசுவேன்.

இந்த ஒரு சில ஞான உரைகளுக்கு ஒரு தலைப்பைக் கண்டுபிடிக்க நான் முயன்றேன். நான் நினைத்தது இதுதான்:

என் வாழ்வு முழுவதிலும்
தேவ பராமரிப்பின் கைவேலைகள்
மற்றும் கடவுளைப் பிரியப்படுத்தும்படி
அந்த தேவ பராமரிப்புக்கு ஒருவன்
தன்னை முழுமையாக அர்ப்பணிப்பது
எவ்வளவு நல்லது என்பது பற்றி.

"Ut placeat tibi Domine Deus"

"உத் ப்ளாச்சேயாத் தீபி தோமினே தேயுஸ்."

இது பூசையின் ஒப்புக்கொடுத்தல் பகுதியில் நாம் வாசிக்கும் ஜெபமாகும்: இந்தப் பலியை, இது உமக்குப் பிரியமானதாக இருக்கும்படி உம்முடைய திவ்விய பலியோடு நாங்கள் ஒன்றிக்கிற இந்தப் பலியை, உமக்கு ஒப்புக்கொடுக் கிறோம்.

"Ut placeat tibi Domine Deus"

உத் ப்ளாச்சேயாத் தீபி தோமினே தேயுஸ்.

நான் என் குழந்தைப்பருவ வருடங்களைப்பற்றி அளவுக்கு அதிகமாகப் பேசப்போவதில்லை என்பதால், என் எண்பது அல்லது எண்பத்து இரண்டு வருட வாழ்வு உண்மையில் தேவ பராமரிப்பைப் பின்செல்லவும், தேவ சித்தத்தைப் பின்செல்ல முயலும்படி, வாழ்வின் சூழ்நிலை களிலும், நிகழ்வுகளிலும் அந்த தேவ சித்தத்தைத் தேடவும் உண்மையாகவே எனக்குக் கற்றுத் தந்துள்ளது என்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

## அத்தியாயம் 1 — குழந்தைப் பருவம்

எங்கள் பெற்றோர் நல்ல கத்தோலிக்கர்கள், ஆழ்ந்த கத்தோலிக்க உணர்வுள்ளவர்கள், அவர்களோடு நாங்கள் ஒரு சில வருடங்கள் மகிழ்ச்சியும் சமாதானமுமுள்ள குடும்ப வாழ்வை அனுபவித்தோம். எங்கள் பங்குக் கோவில் பக்கத்தில்தான் இருந்தது. நடந்து சென்றால் ஐந்து நிமிடங்கள் பிடிக்கும். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் என் பெற்றோர் தங்களால் முடிந்தவரை பூசை காணவும், திவ்விய நன்மை உட்கொள்ளவும் அங்கே போவார்கள்.

அந்தக் காலத்தில், பங்குக்கோவிலில் காலையில் 5.15 மணி முதல் 9 மணி வரை ஒரு குருவானவர் ஒவ்வொரு ஒன்றேகால் மணி நேரத்திற்கு ஒருமுறை திவ்விய நன்மை வழங்கிக்கொண்டு இருந்தார் என்று நான் நினைக்கிறேன். இது அந்த நாட்களில் வழக்கமாக இருந்தது. ஏனெனில் பலர் வேலைக்குப் போய்க்கொண்டிருப்பார்கள், கோவிலில் அதிக நேரம் இருந்து பூசை காண அவர்களுக்கு நேரம் இருக்காது. ஆகவே, இந்த நேரங்களில் ஒரு சில நிமிடங்களுக்கு முன்பாக கோவிலுக்கு வந்தால், நிச்சயமாக திவ்விய நன்மை வாங்க முடியுமென்று மக்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் ஒரு சில நிமிடங்கள் திவ்விய நன்மை வாங்க ஆயத்தம் செய்வார்கள், நன்மை வாங்கியபின் சில நிமிடங்கள் நன்றியறிதல் செய்வார்கள், அதன் பின் வேலைக்குப் புறப்பட்டுப் போய்விடுவார்கள். என் பெற்றோர் வழக்கமாக பூசை கண்டுவந்தார்கள். அது முடியாது என்றால், குறைந்த பட்சம் திவ்விய நன்மை வாங்கவாவது கோயிலுக்குச் சென்றார்கள்.


தாயார்

கடவுளின் திருச்சட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்த அவர்களுக்கு முதலில் ஒருவர்பின் ஒருவராக ஐந்து குழந்தைகளும், அதன்பின் மூன்று குழந்தைகளும் பிறந்தார்கள். முதல் மூன்று குழந்தைகள் 1903, 1904, 1905[1] ஆகிய வருடங்களிலும், அதன்பின் சகோதரி மேரி கேப்ரியெல் 1907-ஆம் வருடத்திலும்,[2] சகோதரி மேரி கிறீஸ்டியேன் 1908-ம் வருடத்திலும்,[3] ஜோசப் முதல் உலகப் போர் தொடங்குவதற்கு சற்று முன்னதாக 1914-லிலும், அதன்பின் போருக்குப் பிறகு மற்ற இருவரும் பிறந்தார்கள்.


தந்தை


போருக்கு முந்தின வருடங்களில் நாங்கள் மகிழ்ச்சி யாக வாழ்ந்தோம். என் பெற்றோருக்கு 1902-ல் திருமணம் நடந்திருந்தது. நான் 1905-ல் பிறந்தேன். ஆகவே, போர் தொடங்கியபோது எனக்கு ஒன்பது வயதாகியிருந்தது.

### வடக்கில் வாழ்க்கை

வடக்கில் வாழ்வு வேலை நிறைந்த வாழ்வாக இருந்தது. தொழிற்சாலைகளில் வேலை செய்வது எல்லாவற்றையும் ஆதிக்கம் செய்தது. முதலாளிகள், தொழிலாளிகள் என எல்லோரும் ஒரே விதமாக வேலைக்குப் போனார்கள். சிலர் காலை ஆறு மணிக்கும், மற்றவர்கள் ஏழரை மணிக்கும் வேலைக்குப் போனார்கள். தொழிலாளர்கள் மணிச்சத்தம்

ஒலிக்கும் வரைக்கும் வேலையில் இருந்தார்கள். முதலாளிகள் சில சமயங்களில் இரவு ஒன்பது அல்லது பத்து மணி வரை தொழிற்சாலைகளில் இருந்தார்கள். அங்கே ஒவ்வொரு நாளும், நாளுக்கு நாள் இப்படித்தான் இருந்தது.

காலை 5.30-லிருந்து ஆறு மணிக்குள் நெசவு ஆலை களில் தறி இயந்திரங்கள் வேலை செய்யத் தொடங்குவதைக் கேட்க முடிந்தது. புகை போக்கிகள் புகையை வெளியேற்றத் தொடங்கின. ஏனெனில் எல்லாமே நிலக்கரியால் இயக்கப் பட்டன. மின்சாரம் இன்னும் வந்திருக்கவில்லை. இதுதான் அன்றாட வாழ்வாக, மாற்றங்களே இல்லாத ஒரே விதமான வாழ்வாக இருந்தது. அந்தப் பகுதியில் வானம் வழக்கமாக எப்போதும் மேகமூட்டமாக, ஒரு வித சாம்பல் நிறமாகவே இருந்தது. ஆகவே உலாப் போவதில் நாங்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டியதில்லை. இதனால் மக்கள் வேலை செய்வதை நேசித்தனர். வேலைக்குப் போக முடியாவிட்டால், அவர்கள் மகிழ்ச்சியற்றவர்களாகவே இருந்திருப்பார்கள். சுவிட்ஸர்-லாந்தில் ஜெர்மன் மொழி பேசும் பகுதியிலும் நிலைமை இப்படித்தான் இருந்ததென்று நான் நினைக்கிறேன்; இது ஒரே விதமானது தான். நீங்கள் இவ்விஷயத்தில் நான் சொல்வதை நிச்சயமாக ஒப்புக்கொள்வீர்கள். சுவிஸ் பிரதேசத்திலுள்ள இபாக் என்ற இடத்திற்கு நான் சென்ற போது, அங்கே ஒரு பெண்மணி இருந்தார்கள். அவர்கள் பெயர் எல்ஸெனர் என்பதாகும். அவர்கள் ஒரு நல்ல பெண்மணி. உணவு மேஜைக்குத் தேவையான கரண்டிகள், முள்கரண்டிகள் மற்றும் கத்திகள் தயாரிக்கும் ஆலையொன்று அவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. ஆயிரம் பேருக்கு குறையாமல் அவர்கள் வேலை கொடுத்திருந்தார்கள். அது ஒரு சிறிய வியாபாரமன்று. அவர்களுடைய கணவர் இறந்து விட்டதால், அவர்கள்தான் அந்த ஆலைக்குச் சொந்தக்காரியாக தன் மகனோடு நடத்திக்கொண்டு இருந்தார்கள். அவர்களுடைய குழந்தைகள் எல்லோரும் அங்கே வேலை செய்தார்கள். பெண்கள் அலுவலகத்திலும், ஆண்கள் ஆலையிலும் வேலை செய்தார்கள். அந்தப் பெண்மணி காலைமுதல் இரவுவரை வேலை செய்தார்கள். தன் எளிமையில் அவர்கள் என்னிடம், "எங்கள் தொழிலாளர்களால் ஞாயிற்று கிழமைகளில் தொழிற்சாலைக்கு வேலைக்கு வர முடியாதென்பதால், அவர்கள் மகிழ்ச்சி அற்றவர்களாக இருக்கிறார்கள். இது தான் அவர்களுடைய வாழ்க்கை" என்று எளிமையாக கூறினார்கள். வடக்கில் எல்லாமே வழக்கமாக இப்படித் தான் இருந்தது, என்றோ கடந்து போய்விட்ட ஒரு காலகட்டம் இது. இப்போதெல்லாம், நடைமுறைப்படி பேசும்போது, நெசவுத் தொழில் நசிந்து போய் விட்டது; அந்நிய தேசப் போட்டியாளர்களின் காரணமாகவும், புதிய சூழ்நிலைகளின் காரணமாகவும் அந்தத் தொழில் இப்போது இல்லை.


ஞானஸ்நானம் பெற்ற ஆலயம்


நான்கு வயதில்

அங்கே மோன் நகர் செல்லும் திசையில், பெல்ஜியத்திலுள்ள சுரங்க வயலோடு இணைந்திருந்த ஒரு மிகப் பெரிய சுரங்க வயல் ஜெர்மனியில் உள்ள ரூர் வரைக்கும் பரவியிருந்தது. அது ஐரோப்பா முழுவதும் பரவி இங்கிலாந்துவரை நீண்டிருந்தது. தொழிற்சாலைகளில் உஷ்ணப் படுத்துவது போன்ற வேலைக்கு அங்கிருந்துதான் நிலக்கரி எடுக்கப்பட்டது. இதன் காரணமாகவே, தொழிற்சாலைகள் சுரங்கங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டன. ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா மற்றும் எகிப்திலிருந்து பஞ்சு மற்றும் கம்பளியைப் பெறுவதற்காக அவை துறைமுகங்களுக்கு அருகிலேயே அமைக்கப்பட்டிருந்தன. அது கடின உழைப்பாளிகள் நிறைந்த தொழில்துறை சார்ந்த இடமாக இருந்ததால், அந்தச் சாதக மான சூழ்நிலைகளில் அக்காலத்தில் தொழிற்சாலைகள் வளம் கொழிப்பவையாக இருந்தன.

பிற்காலத்தில் மின்சாரமும், பெட்ரோலியமும் வந்த பின், வாழ்க்கைத் தரமும், போக்குவரத்து வசதிகளும் முற்றிலும் மாறிவிட்டன. இது அந்நியதேசப் போட்டியை உருவாக்கியது: ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள், தென் அமெரிக்கா ஆகிய எல்லா நாடுகளும் தங்கள் தொழிற்சாலை களை அங்கே நிர்மாணித்தன. இதன் காரணமாக எல்லா இடங்களிலும் சுதேச ஆலைகள் திவாலாகி விட்டன. இன்று வடக்கே நெசவு ஆலைகள் எதுவும் இருப்பதாகவே தெரிய வில்லை.

இவ்வாறு நாங்கள் அமைதியாக வாழ்ந்தோம். நாங்கள் இருந்த இடத்திலிருந்து ஐந்து நிமிட நடை தூரத்தில் ஒரு நல்ல பள்ளிக்கூடம் இருந்தது. அர்ச். ஊர்சுலீன் சபைக் கன்னியர்களால் நடத்தப்பட்ட ஒரு நல்ல சிறுமியர் பள்ளியும் அதன் அருகில் இருந்தது. சிறுமிகள் ஊர்சுலீன் பள்ளிக்கும், சிறுவர்கள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கும் சென்றார்கள். அன்றாட வாழ்வு இப்படித்தான் இருந்தது.

நாங்கள் எட்டு மணிக்குப் புறப்படுவோம். கடவுளின் வரப்பிரசாதத்தால் எங்களிடம் இரண்டு நல்ல வேலையாட்கள் இருந்தார்கள். இவர்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதில் எங்கள் தாய்க்கு உதவியாக இருந்தார்கள். நாங்கள் புறப்படுவதற்குமுன் அவர்கள் எங்களிடம்: "நீங்கள் எதையாவது மறந்து விட்டீர்களா? உங்கள் சட்டைப்பைகளில் கைக்குட்டை இருக்கிறதா? உங்கள் சிற்றுண்டிகளை எடுத்துக் கொண்டீர்களா? இதை, அல்லது அதை மறந்து விட்டீர்களா?" என்று கேட்பார்கள். அதன்பின் எங்களுக்கு ஒரு பெரிய முத்தம்



**அதிமேற்றிராணியாரின் குடும்பம்**

தந்துவிட்டு, மீண்டும் எங்களிடம்: “புறப்பட நேரமாகி விட்டது. போய் வாருங்கள். கவனமாயிருங்கள், நடைபாதையில் மட்டும் கவனமாய் நடந்து போங்கள்...” என்பார்கள். மூன்று தாய்மார்களின் பாசம் எங்களுக்குக் கிடைத்ததால் நாங்கள் அந்தக் காலத்தில் சந்தோஷம் மிக்க குழந்தைகளாக இருந்தோம்.

### முதல் உலகப் போர்

அதன்பின் அந்தப் பயங்கரமான போர் வந்தது. *1914-1918-ல் நடந்தப் போர்கள் பயங்கரமும் பெரும் அச்சத் திற்குரியவையாகவும் இருந்தது!*

போர்வீரர்கள் போருக்குப் புறப்பட்டுச் செல்வது இயல்பாகவே இருந்தது: நாளுக்கு நாள், எல்லா ஆண்களும் போர்களில் கலந்துகொள்ள செல்லவே, தாய்மார் தங்கள் குழந்தைகளுடன் தனியாக இருந்தார்கள். இச்சம்பவங்களைப் பற்றி மீண்டும் நினைத்துப் பார்க்கும்போது, அவை அச்சந் தருபவையாகவும், பயங்கரமானவையாகவும் இருந்தன. தாய்மார்கள் வேலைக்காக என்ன செய்வார்கள்? ஜீவனத்திற்கு அவர்கள் என்ன செய்வார்கள்? வீட்டில் ஆண்கள் யாரும் இல்லாதுபோனால், அவர்களுடைய கதி என்னவாகும்?

பள்ளிகளிலும் இதே நிலைதான். ஆசிரியர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு, புறப்பட்டுப் போய்விட்டார்கள். ஒரு சிலர் மட்டும் அங்கேயே இருந்தார்கள். காரணம், ஒன்றில் அவர்கள் வயதானவர்களாக இருந்தார்கள், அல்லது நோயாளிகளாக இருந்தார்கள். பங்குகளில், பங்குக் குருக்களும்கூட இராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள். முன்பு ஐந்தாறு பேர் இருந்த இடத்தில் இப்போது ஒன்றிரண்டு குருக்கள் மட்டுமே இருந்தார்கள்.

அதன்பின் வெகு சீக்கிரத்தில் கைப்பற்றுதல், மரணங்கள், கைதிகள் போன்ற போர்க்காட்சிகள் வந்தன. போர்முகத்திலிருந்து செய்தி அனுப்பப்பட்டது. ஏராளமான வீரர்கள் இறந்து விட்டார்கள். அநேகர் கைது செய்யப்பட்டு விட்டார்கள். வடக்கிலிருந்த மக்களில் அநேகர் பெல்ஜியத்தில் கைதிகளாக இருந்தனர். என் தந்தையைப் பொறுத்தவரை, அவர் உடனடியாகப் புறப்படவில்லை. அவருக்கு ஆறு குழந்தைகள் இருந்ததால், அவர் படையில் சேர்க்கப்படவில்லை. ஆகவே அவர் எங்களோடேயே இருந்தார். இருந்தும்கூட, பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயக் கைதிகள் எதிரிகளின் எல்லைகளுக்கு அப்பாலிருந்தும், சிறைகளிலிருந்தும், அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களிலிருந்தும் தப்பி தங்கள் குடும்பங்களிடம் திரும்பி வர, அவர்களுக்கு உதவ வேண்டும் என்று எங்கள் தந்தை விரும்பினார். *1915* ஜனவரியில், ஜெர்மானியர்கள் தம்மைத் தேடுகிறார்கள் என்றும், தாம் பிடிபட்டால், நிச்சயமாகச் சுட்டுக் கொல்லப்படுவோம் என்றும் உணர்ந்ததால், அவர் தப்பியோட வேண்டியிருந்தது. ஆகவே அவர் ஜெர்மன் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்படுவதிலிருந்து தப்பிப்பதற்காக அங்கிருந்து புறப்பட்டு, பெல்ஜியம், ஹாலந்து மற்றும் இங்கிலாந்தைக் கடந்து சென்று, அங்கிருந்து மீண்டும் பிரான்ஸுக்குத் திரும்பி வந்தார்.

எங்கள் தந்தை போய்விட்டார். ஆகவே போரின் போது, ஜெர்மானியப் படைகள் பிரான்ஸை ஆக்கிரமித் திருந்த நான்கு ஆண்டுகளின் போது, நாங்கள் அங்கேயே தங்கியிருந்தோம். இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஜெர்மானியர்கள் வந்து நகரத்தை ஆக்கிரமித்தார்கள். குதிரை வீரர்களும், ஈட்டி வீரர்களும் தலைக் கவசங்கள் அணிந்து, ஒன்பதடி நீளமுள்ள ஈட்டிகளைத் தாங்கியவர்களாக குதிரைகள் மீது அமர்ந்து, தெருக்கள் வழியாகச் செல்வதை நாங்கள் கண்டோம். இந்த முறை ஜெர்மானியர்களுக்காக ஆயத்தமாயிருந்த நகரத்தை அவர்கள் ஆக்கிரமித்தார்கள். ஏனெனில் ஜெர்மானியப் படை இங்கே தங்கவும், அவர்கள் கவனித்துக் கொள்ளப்படவும் வேண்டியிருந்தது. வேலை செய்ய முடிந்தவர்கள் எல்லோரும், பெண்களும், சற்று வயதானவர்களும்கூட, ஜெர்மானியப் படைக்காக ஆயத்தம் செய்யப்பட்டு, அவர்களுக்காக வேலை செய்ய வேண்டியிருந்தது.

நண்பகலில் நகரத்தில் சூப் விநியோகிக்கப்பட்டது. சாப்பிடுவதற்கு அதிகமாக எதுவும் இல்லாததால், நகர மண்டபங்களில் ஒன்றில் கொஞ்சம் சூப் வாங்குவதற்காக



**இராணுவப்பணியில் மார்செல்**

நாங்கள் போவோம். அமெரிக்கர்கள் எங்களுக்கு உணவு அனுப்பியிருந்ததாகச் சொல்லப்பட்டது. அங்கிருந்து கோழிக் கறியும், மாவும் வந்திருந்தன. கோழிக்கறி முழுவதுமாகக் கெட்டுப்போயிருந்தது. அந்த மாவு அநேகமாக அரைக் கோதுமை மாவாக, அல்லது உருளைக்கிழங்கு, அல்லது காய்கறி மாவாக இருக்கலாம், எனக்குத் தெரியவில்லை. இந்த மாவு எங்கே இருந்தது என்று நாங்கள் ஆச்சரியப்பட்டோம். ஏனெனில் ரொட்டி சுடுபவர் அந்த மாவைக் கொண்டு தயாரித்த ரொட்டி கறுப்பாக, முழுவதுமாக வேகாதிருந்தது. அதன் உட்பக்கம் இன்னும் மாவாக இருந்தது. அது ரொட்டி யின் மேற்புறத்திலிருந்து பிரிந்து கூடவந்தது. அது பசை போல இருந்தது, ஆனாலும் அதைத்தான் நாங்கள் சாப்பிட வேண்டி யிருந்தது. அது ஒரு விதமான ரொட்டி. நாங்கள் அதை ரொட்டி சுடுபவரிடமிருந்து விலைக்கு வாங்கினோம். நாங்கள் எதையாவது சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும், சாப்பிட எங்களுக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை!

அது உண்மையாகவே கடும் சிரமமும், வறுமையும், முழுத் தரித்திரமு மான காலமாக இருந்தது. மேலும் அங்கே தேடுதல்களும் இருந்தன. எங்களிடமிருந்த கம்பளிக் கட்டுகளை ஜெர்மானியர்கள் எடுத்துக்கொள்ளாதபடி, நாங்கள் அவற்றை எங்கள் ஆலையின் நிலவறையின் சுவர் களுக்குள் மறைத்து வைத்திருந்தோம். ஆனால் அவர்கள் அவற்றைக் கண்டுபிடித்து விட்டார்கள். ஜெர்மானியர்கள் முறைப் படி, ஆலைகளின் எல்லாச் சுவர்களிலும், நிலவறைகளிலும் மூன்று அல்லது நான்கு யார்டுகளுக்கு ஒரு ஓட்டை போட்டு, அங்கெல்லாம் கம்பளி போன்றவை எதுவும் ஒளித்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டார்கள். எங்கள் ஆலையில் கொஞ்சம் கம்பளி கண்டுபிடிக்கப்பட்டதால், எங்கள் அம்மா பல வாரங்களுக்கு சிறையில் அடைக்கப் பட்டிருந்தார்கள். அது பல மாதங்களா அல்லது பல வாரங்களா என்று இப்போது எனக்கு நினைவில் இல்லை, ஆனால் எப்படியிருந்தாலும், அதன் காரணமாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

அம்மா இவ்வாறு தன் பிள்ளைகளை மிகவும் கருணை யுள்ளவர்களாக இருந்த வேலையாட்களின் கைகளில் தனியாக விட்டுவிட்டுச் சென்றார்கள். ஆனாலும் முழுச் சூழ்நிலையும் அவர்களுக்கு மிகுந்த துயரம் தந்தது. அவர்களுடைய முதுகுத் தண்டு எந்த அளவுக்கு வலுவற்றுப் போயிருந்தது என்றால், போரின் முடிவில், அவர்களுக்கு மாவுக்கட்டு போட்டு வைத்திருக்க வேண்டியிருந்தது. என்னால் இப்போதும்கூட அவர்களைப் பார்க்க முடிகிறது. போரின் துன்பங்கள் மற்றும் சிரமங்களின் விளைவாக அவர்கள் பல ஆண்டுகளாக வீட்டின் உணவறையில் படுத்த படுக்கையாக இருந்தார்கள்.


CERTIFICAT

BONNE CONDUITE

Certifie que le [redacted]

Tourcoing

A tenu une bonne conduite pendant tout le temps qu'il est resté sous les drapeaux, et qu'il a constamment servi avec honneur et fidélité.

நன்னடத்தை சான்றிதழ்

அந்தப் போர் உண்மையாகவே வேதனைமிக்க துன்பங்களுக்குக் காரணமாக இருந்தது. குழந்தைகளாக இருந்த நாங்கள் அவற்றின் அளவை முழுமையாக, அல்லது அதிக வயதுள்ளவர்கள் உணர்ந்த அளவுக்கு, உணரவில்லை என்பது உண்மையே. ஆனாலும் தெற்கு பெல்ஜியத்தில், ஐப்ரெஸுக்கு அருகிலும், மிகக் கடுமையான போர்கள் நிகழ்ந்த கெம்மல் மலையிலும், போர் மும்முரமாக நடந்த இடங்களுக்கு மிக அருகில் நாங்கள் இருந்ததால், சில குறிப்பிட்ட காரியங்கள் எங்கள் கண்களில் படாமல் போகவில்லை. இரவில், பெரும் அளவுகளில் தொடர்ந்து வெடித்துக் கொண்டிருந்த வெடிகுண்டுகளால் அடிவானம் முழுவதுமாக வெளிச்சமாக்கப்படுவதை எங்களால் காண முடிந்தது. வெடிகுண்டுகளின் முழக்கங்களையும், பேரொலி களையும் நாங்கள் கேட்டோம். போர் நடைபெற்ற இடம் முழுவதும் வானம் தீப்பற்றி எரிவதாகத் தோன்றியது. அது பயங்கரமானதாக இருந்தது. அதன்பின், மறுநாள் காயமடைந்தவர்கள் எங்கள் வீட்டிற்கெதிரே இருந்த மருத்துவமனைக்கு வந்து சேர்வதை நாங்கள் கண்டோம். நூற்றுக்கணக்கில் காயமடைந்தவர்களின் கூட்டங்கள் (இறந்தவர்களைக் கணக்கில் எடுக்காமல்). இவர்கள் நேச நாடுகளின் படைகளையும், பிரெஞ்சுப் படையையும், ஜெர்மன் படையையும் சேர்ந்தவர்கள். நாங்கள் ஜெர்மானியர்களால் ஆக்கிரமிக் கப்பட்ட பகுதியில் இருந்ததால், அவர் களில் காயமடைந்தவர்களையே நாங்கள் பெரும்பாலும் பார்த்தோம். அந்தப் பரிதாபத்திற்குரிய, காயமடைந்த மக்கள் எல்லோரையும்...

ஆகவே, இவையெல்லாம் எங்கள் குழந்தைப் பருவத்தின்மீது தங்கள் அடையாளங் களைப் பதித்தன. எங்களுக்கு அப்போது ஒன்பது, பத்து, பதினொரு வயதுதான் ஆகியிருந்தது என்றாலும், அந்தக் காட்சிகள் எங்கள் நினைவுகளில் செதுக்கப்பட்டவை யாக நிலைத்திருக்கின்றன. போர் என்பது உண்மையாகவே பயங்கரமான ஒன்று, இந்தப் போரின் எல்லா விளைவுகளும், எல்லாத் துன்பமும், தொடர்ச்சியான உணர்ச்சிக் கொந்தளிப்பும் பயங்கரமானவை. ஜெர்மானியர்களிடம் வெடிகுண்டுகள் போன்றவற்றிற்கான பித்தளை குறைந்துபோகத் தொடங்கியதால், மையங்களில் (துப்பாக்கிக் குண்டுகள், பித்தளைத் துண்டுகள் போன்றவற் றைப் பிரித்தெடுக்கும்) வேலைக்கு உடல் திறனுள்ள ஆட்களை சேர்க்கப்போவதாக அவர்கள் ஒரு நாள் அறிவித்தார்கள். இந்த வேலைக்கு அவர்களுக்கு ஆட்கள் தேவைப்பட்டார்கள். இவ்வாறு ஒவ்வொரு வீட்டையும் சேர்ந்த எல்லா உறுப்பினர் களும் வெளியே வந்து நடைபாதையில் வரிசையாக நிற்கும் படியும், புறப்படத் தயாராக இருக்கும்படியும் கட்டளைகள் தரப்பட்டன. பதினாறு அல்லது பதினேழு மற்றும் அதற்கு அதிகமான வயதுள்ள உடற்தகுதியுள்ள எல்லோரும் உடைகள்

உள்ள ஒரு பையோடு நடைபாதையில் தயாராக இருக்க வேண்டியிருந்தது. ஜெர்மானியர்கள் வந்து, தாங்கள் விரும்பிய வர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். யார் புறப்பட்டுப் போவார் கள், யார் போக மாட்டார்கள் என்பதை அதற்கு முன்னதாக நாங்கள் அறியாதிருந்தோம். ஆகவே எல்லோரும் வெளியே போக வேண்டியிருந்தது; இது எனக்கு மிக நன்றாக ஞாபக மிருக்கிறது. நாங்கள் குழந்தைகள், ஆகவே அவர்கள் எங்களைக் கூட்டிச் செல்லவில்லை. மேலும் எங்களுக்காக வீட்டில் வேலை செய்தவர்கள் கூட்டிச் செல்லப்பட முடியாத அளவுக்கு அதிக வயதானவர்களாக இருந்தார்கள். ஆனாலும் நடைபாதையில் ஆட்களின் அந்த அணிவகுப்பை நாங்கள் கவனித்தோம். ஜெர்மானியர்கள் இராணுவ வாகனங்களில் வந்து, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அதில் ஏறச்செய்து, அவர்களைக் கூட்டிக்கொண்டு போனார்கள். இவர்களோ தங்களுக்கு என்ன நேரப்போகிறது என்பதை அறியாமலே புறப்பட்டுப் போனார்கள்.

இயல்பாகவே இவையெல்லாம் கவலையையும், துயரத்தையும், பிரிவுகளையும் விளைவித்தது; இது கடும் அச்சம் தருவதாக இருந்தது. அது எப்படி இருந்தது, போர் என்பது என்னவாக இருக்க முடியும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது. கொடூரம், மிருகத்தனம், காயங்கள், பிரிவுகள், தார்மீகத் துன்பங்கள்; இவையெல்லாம் நிஜமாகவே கடினமாக இருந்தது. அது கூடுதல் வயதான எங்கள் மீது தன் அடையாளத்தைப் பதித்தது. ஒரு வயது மட்டுமே ஆகியிருந்த ஜோசப் என்ன நடந்துகொண்டிருந்தது என்பதை அறியாமல் இருந்தான்; ஆனால் எங்களில் மற்ற ஐவரையும் இந்த நிகழ்வு கள் ஆழமாகப் பாதித்தன. எங்கள் தேவ அழைத்தல்களுக்கு, குறைந்த பட்சம் ஒரு பகுதியாவது, இவைதான் காரணம் என்று நான் நினைக்கிறேன். மனித உயிருக்கு மதிப்பேயில்லை என்பதையும், துன்புறுவது எப்படி என்பதை மனிதன் அறிந் திருக்க வேண்டுமென்றும் நாங்கள் கண்டோம். அந்தக் காலங் களின்போது பெரும் தெய்வ பக்தி இருந்ததென்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும். ஒவ்வொரு நாள் மாலையி லும் ஜெபமாலை இருந்தது. கோவில் முழுவதும் பெரும்பாலும் பெண்கள்தான் நிரம்பி யிருந்தார்கள். ஆனால் வயதான ஆண்களும் அதிக எண்ணிக்கையில் இருந்தார் கள். இளம் வயதினர் இப்போது அங்கே இல்லை. ஒவ்வொரு நாளும் மாலை ஜெபமாலை சொல்லப் பட்டது. கடைசி பத்து மணியை நாங்கள் சிலுவை வடிவத்தில் கரங்களை விரித்தபடி சொன்னோம். அதைத் தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் இருந்தது. பங்கு முழுவதுமே அந்தப் பிரமாண்டமான கோயிலில் நிரம்பியிருந்தது.


**பிரெஞ்சு குருமடம்**

நாங்கள் ஜெபித்தோம், புறப்பட்டுப் போனவர்களுக்காகவும், சிறைக் கைதிகளுக்காகவும், போர்முனையில் இருந்தவர்களுக் காகவும் நாங்கள் ஜெபித்தோம். அந்தக் காலத்தில் இயல்பா கவே ஒரு மிகப் பெரும் பக்திப் பற்றுதல் நிலவியது. இந்த எல்லாக் காரியங்களும் ஒரு தனிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கின.

எல்லோருக்கும் மூத்தவரான என் சகோதரர் ரெனேக்கு 1918-ல் பதினைந்து வயதாகியிருந்தது. ஜெர்மானியர்கள் போகப்போக வயதைப் பொருட்படுத்தாமல், ஏதாவது ஒரு வேலை செய்ய முடிந்த எல்லோரையும் கூட்டிக்கொண்டு போகலாம் என்று நாங்கள் அஞ்சினோம். சுவிட்ஸர்லாந்தைக் கடந்து சென்ற செஞ்சிலுவை சங்கத்தின் இரயில்களின் பலனாக இதிலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பிருந்தது. அவர்கள் பிரான்ஸின் ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளில் தங்களை வரவேற்க யாருக்கெல்லாம் உறவினர்கள் இருந்தார் களோ, அந்த, பதினைந்து வயது வரையுள்ள குழந்தைகளை அந்த இரயில்களில் ஏற்றிச் சென்றார்கள். பிரான்ஸின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்கள் மட்டுமே ஆக்கிரமிக்கப்பட் டிருந்தன.

என் தந்தை போய்விட்டதாலும், அவர் வெர்ஸெய்லில் இருந்ததாலும் என் சகோதரர் ரெனே சுவிட்ஸர்லாந்தைக் கடந்துபோய், அங்கே அவரைச் சந்தித்தார். அங்கேயே அவர் தம் படிப்பைத் தொடர்ந்தார்.

## தேவ அழைத்தல்

ஆகவே போர் நடந்த காலம் முழுவதும், தேவ பராமரிப்புதான் என் சொந்த வாழ்வையும், என் சகோதரரின் வாழ்வையும் வழிநடத்தியது என்று நான் சொல்வேன். போர் என்ற ஒன்று இல்லாமலிருந்திருந்தால், ரெனே வெர்ஸேய்லில் படிக்கப் போயிருக்கவே மாட்டாரென்பது வெளிப்படையான உண்மை. அவருக்கு ஒரு வேதபோதக தேவ அழைத்தல் இருந்திருக்கும் என்றால், அவர் நேரடியாக இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபை, அல்லது வெள்ளை குருக்கள் சபையில் சேர்ந் திருப்பார். ஆனாலும் வெர்ஸெய்லில் இருந்ததால், அவர் என் தந்தையிடம் க்ராந்ஷாம்ப்பிலிருந்த குருமடத்திற்குப் போய் அங்கு தத்துவவியல் படிக்கவும், தமது மற்ற படிப்புகளை அங்கே முடிக்கவும் அனுமதி கேட்டார். அவர் அங்கே சேர்த்துக்கொள்ளப்பட்டார், ஆனாலும் தமக்குக் குருத்துவத் திற்கான தேவ அழைத்தல் இருக்கிறது என்று தாம் நினைப்ப தாக அவர் அவர்களிடம் உடனடியாக சொல்லவில்லை. இந்த எண்ணத்துடன் அவர் பெரிய குருமடத்திற்குச் செல்லவில்லை, ஆனால் அந்தக் காலத்தில் குறிப்பாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வருபவர்களுக்காக அதன் கதவுகள் முற்றிலு மாகத் திறந்தேயிருந்தன. ஆகவே ரெனே வெர்ஸெய்லிலுள்ள க்ராந்ஷாம்ப் குருமடத்தில் தம் கல்வியை முடித்தார். அவருடைய தத்துவவியல் ஆசிரியர் சாதாரணமானவர் அல்ல, அவர் சுவாமி காலின் ஆவார். சுவாமி காலின் தத்துவவியல் புத்தகம் ஒன்றை எழுதியவர், மிகவும் உரோமையத் தன்மை உள்ளவர், உரோமையோடும், தாம் தமது எல்லாப் படிப்பு களையும் முடித்த பிரெஞ்சு குருமடத்தோடும் மிகுந்த பற்றுக் கொண்டவர். ரெனேக்கு தேவ அழைத்தல் இருக்கலாமென்று

என் தந்தை அவரிடம் சொன்னபோது, ரோமிலுள்ள பிரெஞ்சு குருமடத்தில் அவர் தம் கல்வியைத் தொடர்வது என்று, அவருடைய சம்மதத்தோடு முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் லீல் பகுதி இன்னும் மூடப்பட்டிருந்தது. அவர் 1919-ல் புறப்பட்டுச் சென்றார்.

தேவ பராமரிப்பு எப்படி எல்லாவற்றையும் வழிநடத்து கிறது என்று பார்த்தீர்களா? போர் முடிந்தவுடன் நாங்கள் ஒரு குடும்பமாக மீண்டும் ஒன்றாக இணைய முடிந்தது. 1919-ல் நாங்கள் எல்லோரும் மீண்டும் எங்கள் தந்தையுடன் எங்கள் பண்ணை வீட்டில் ஒன்றாக இருந்தோம். ஏற்கனவே குருமடத்தில் இருந்த என் சகோதரர் ரெனே விடுமுறைக்காகத் திரும்பி வந்திருந்தார்.

இறுதியாக, 1923-ல், நான் என் பங்கிற்கு, என் பெற்றோரிடம், ஒரு குருவாக மிகவும் விரும்புவதாகக் கூறினேன். ஒரு கிராமத்தில் குருவாக, உதவி பங்குக் குருவாக, பங்குக் குருவாக, ஒரு மேற்றிராசன குருவாக இருப்பது என் எண்ணமாக இருந்ததால், லீல்லிலுள்ள மேற்றிராசன குருமடத் திற்குப் போவதுபற்றி நான் சிந்தித்துக்கொண்டிருந்தேன்; உரோமைக்குச் செல்வதுபற்றி என்னால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை. நான் மிகுந்த கல்வித் திறன் உள்ளவன் அல்ல, மேலும் அங்கே இலத்தீனில் எல்லாவற்றையும் படிக்க வேண்டியிருக்கும். அங்கே போவதற்கு கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் பாடத்திட்டங்களை எடுத்துப் படித்து, கடினமான தேர்வுகள் எழுதி தேர்ச்சிப் பெறவேண்டும். வேண்டாம், என்னைப் பொறுத்தவரை, நான் மேற்றிராசனத் திலேயே தங்கியிருக்க விரும்பினேன்; மேற்றிராசனத்தில் உழைக்க நான் விரும்பியதால், உரோமைக்குச் செல்லும் எண்ணமே எனக்கு இல்லை. ஆனால் என் தந்தை என்னிடம்: "இல்லை யில்லை; நீ உன் சகோதரனோடு சேர்ந்துகொள்ள வேண்டும்! உன் சகோதரன் உரோமை யிலிருப்ப தால், நீயும் உரோமைக்குச் செல்ல வேண்டும்" என்றார். மேலும், மேற்றிராசன குருமடத்தின் முற்போக்கு சிந்தனைபற்றியும், பின்னாளில் கர்தினால் லியேனார்ட்[5] ஆகவிருந்தவரின் பிரபலத்தைப்பற்றியும் அவர் ஒருவித சோர்வு அடைந் திருந்தார்.




குருமாணவராக

என் தந்தை முற்போக்குவாத சிந்தனை சிறிதளவுமில்லாதவர், ஆகவேதான், "வேண்டாம், வேண்டாம், உரோமைதான் நல்லதாக இருக்கும்" என்று அவர் சொன்னார். அவர் இதை எவ்வளவு அதிகமாக வற்புறுத்தினாரென்றால், 1923-ல் நானும் பிரெஞ்சு குருமடத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன்.



பிரெஞ்சு குருமடத்திலுள்ள நூலகம்

தேவ பராமரிப்பு எவ்வாறு எல்லாவற்றையும் வழிநடத்து கிறது என்பதைப் பார்த்தீர்களா? போர் வந்திருக்காவிட்டால், என் சகோதரன் ஒரு வேத போதக சபையில் சேர்ந்திருப்பார், நான் லீல்லிலுள்ள மேற்றிராசன குருமடத்தில் சேர்ந்து இருப்பேன்; நான் உரோமைக்குப் போயிருக்க மாட்டேன். அது என் வாழ்வை முழுவதுமாக மாற்றியிருக்கும்.



*குறிப்பு:*

[1] ரெனே 1903-ல் பிறந்தார், ஷான் 1904-ல் பிறந்தார். அதிமேற்றிராணியார் மார்செல் லெஃபேர் 1905-ல் பிறந்தார்.

[2] பெர்னதெத் என்பது அவருடைய ஞானஸ்நானப் பெயர் ஆகும். இவர் அர்ச். பத்தாம் பத்திநாதர் சகோதரிகள் சபையின் இணை ஸ்தாபகி ஆவார் (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

[3] கிறீஸ்டியேன் என்பது இவருடைய ஞானஸ்நானப் பெயர் ஆகும்.

[4] ஸ்விஸ் ஜெர்மன் சகோதரிகள் இந்த உரைகளில் பங்குபெற்றனர். (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு.)

[5] 1884-ல் லீல்லில் பிறந்தவரான அக்கீல் லியேனார்ட், 1910 முதல் 1919 வரை அர்ச். சவுல்வ் பெரிய குருமடத்தில் ஒரு பேராசிரியராக இருந்தார். 1919-ல் டூர்கோயிங்கில் உள்ள அர்ச். கிறீஸ்டோபர் ஆலய முதன்மைக் குருவாக நியமிக்கப்பட்டார். 1928-ல் லீல் ஆயராகவும், 1930-ல் கர்தினாலாகவும் நியமிக்கப்பட்ட அவர், இரண்டாம் வத்திக்கான் சங்கம் வரையிலும், பிரெஞ்சு முற்போக்குவாதிகளில் முக்கியமானவர்களில் ஒருவராக இருந்தார்.

ஆக நான் உரோமையிலுள்ள பிரெஞ்சு குருமடத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். என் தந்தை இதை விரும்பினார் என்பதற்காகவும், அவர் என் விருப்பங்களுக்கு இணங்க வில்லை என்பதற்காகவும் நான் நல்ல ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். இது முற்றிலுமாக எனக்கு ஒரு வெளிப்பாடாக இருந்தது. சுவாமி ல ஃப்ளாக்கும் பேராசிரியர்களும், தற்கால நிகழ்வுகளை - விடுதலை இறையியல், நவீனவாதம், இன்னும் மிக அநேகமான, வெளிச்சத்திற்கு வந்திருக்கிற தப்பறைகளை நாங்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமென்று எங்களுக்குக் கற்பித்தார்கள். நாங்கள் இந்தத் தப்பறைகளைப் பற்றி சரிவர அறியாமல் இருந்தோம். பாப்பரசர்களின் சுற்றுமடல்களிலும், குறிப்பாக அர்ச். பத்தாம் பத்திநாதர், பதின்மூன்றாம் சிங்கராயர், அவர்களுக்கு முந்தின எல்லாப் பாப்பரசர்களினுடைய சுற்றுமடல்களிலும் சத்தியத் தைத் தேடிக் கண்டுபிடிப்பது எப்படியென்று அவர்கள் எங்களுக்குக் கற்பித்தார்கள்.

குருமடத்தில் நாங்கள் கற்றுக் கொண்டது இதைத்தான். தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்தவரை, இது உண்மையாகவே ஒரு வெளிப்பாடாக இருந்தது. இப்படித்தான் பாப்பரசர்க ளுடைய தீர்ப்புகளோடு எங்கள் தீர்ப்புகள் ஒத்திருக்க வேண்டும் என்ற இந்த ஆசை எங்களில் (நாங்கள் மொத்தம் நூற்று இருபது பேர் இருந்தோம்.) மிக மெதுவாக எழுப்பப்பட்டது. பாப்பரசர்கள், தங்கள் காலங்களின் நிகழ்வுகளையும், சிந்தனை களையும், மனிதர்களையும், காரியங்களையும் எப்படித் தீர்ப்பிட்டார்கள் என்று நாங்கள் கேட்டுக்கொள்வோம். சுவாமி ல ஃப்ளோக் பல்வேறு பாப்பரசர்களுடைய சுற்றுமடல்களின் வழியாக, இந்தப் பாப்பரசர்களுக்கு வழிகாட்டியாக இருந்த கொள்கை எது என்று எங்களுக்குத் தெளிவாகக் காட்டினார். இது எப்போதும் ஒன்றாக, மிகச் சரியாக ஒரே கொள்கை யாகவே இருந்தது. இது உண்மையாகவே எங்களுக்கு ஞான வெளிச்சம் தந்து, வரலாறு எப்படித் தீர்ப்பிடப்படவேண்டும் என்றும், காரியங்கள் எப்படித் தீர்ப்பிடப்படவேண்டும் என்றும், தப்பறை எங்கே இருந்தது, சத்தியம் எங்கே இருந்தது என்றும், ஒருவன் எப்படிச் சிந்திக்கவேண்டுமென்றும் எங்களுக்குக் காட்டியது - இது ஒரு முழுமையான வெளிப் பாடாக இருந்தது. இதன் விளைவாக அது எங்களோடு தங்கி விட்டது. சத்தியம் எங்கே இருக்கிறது, தீமையின் மூலாதாரங் கள் யாவை, தப்பறையின் மூலாதாரங்கள் யாவை, இன்றைய உலகில் எது கெட்டதாக இருக்கிறது என்பதையெல்லாம் எங்களுக்குக் காட்டிய எல்லா பாப்பரசர்களின் அழகிய சுற்று மடல்களோடும் இணைந்தவர்களாகவே நாங்கள் நிலைத் திருந்தோம்.



இது என் வாழ்வில் முதல் நிலையாக இருந்தது. சிறு நிகழ்வுகளில் கடவுள் என்னை எப்படி வழிநடத்திக்கொண்டு இருந்தார் என்பதை நீங்கள் நன்றாகக் காண்கிறீர்கள். எடுத்துக்காட்டாக உரோமையோடு இணைந்திருந்தவரும், என் சகோதரரை உரோமைக்கு அனுப்பும்படி என் தந்தைக்கு அறிவுரை கூறியவருமாகிய சுவாமி காலினின் கீழ் என் சகோதரர் கல்வி பயின்றார் என்பது உண்மை. இந்தப் பிரபலமான சுவாமி காலின் இருந்த இடத்தில் என் சகோதரர் இருந்திருக்கவில்லையென்றால், நாங்கள் உரோமைக்கு வழிநடத்தப்பட்டிருக்க மாட்டோம். நான் மேற்றிராசனத்தி லேயே இருந்திருப்பேன். தேவ பராமரிப்பு எவ்வாறு காரியங்களை ஒழுங்கு செய்கிறது என்பது நம்ப முடியாததாக இருக்கிறதல்லவா?

ஆகவே, எனக்கு விருப்பமில்லாமலிருந்தாலும், என் சகோதரர் இருந்த பிரெஞ்சு குருமடத்திற்கு நான் வழிநடத்தப்பட்டேன். இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையால் நடத்தப்பட்ட இந்தக் குருமடம் சங். ல ஃப்ளோக் சுவாமியவர் களின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. நான் உங்களுக்குச் சொன்னதுபோல, எனக்கு பிரெஞ்சு குருமடம் ஒரு வெளிப் பாடாகவும், என் முழு குருத்துவ மற்றும் மேற்றிராணித்துவ வாழ்வுக்கும் வழிகாட்டுகிற வெளிச்சமாகவும் இருந்தது. ஏறத்தாழ நூற்றைம்பது வருடங்களாக, தொடர்ந்து வந்த பாப்பரசர்களின் உணர்வில் நிகழ்வுகளைக் காண விசேஷமாக பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், திருச்சபையின் போதனைக்கு எதிரான இந்தக் கருத்தோட்டங்களிலிருந்து முளைத்தெழுந்த சகல தப்பறைகளையும் அந்தப் பாப்பரசர்களின் கண்ணோட்டத்தில் காண உதவியது. பாப்பரசர்கள் அவற்றை மறுதலித்து, கண்டனம் செய்திருந்த தால், நாங்களும் அவற்றைக் கண்டனம் செய்யவேண்டி யிருந்தது.

நவீனர்கள், ஒருவன் உலகத்தோடு சமரசம் செய்து கொள்ளவேண்டும் என்கிறார்கள்; காலங்களுக்கு ஏற்ப ஒருவன் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். 'நாம் சத்தியத்தை அறிக்கையிடுவோம், ஆனாலும், தப்பறை யைக் கண்டனம் செய்யாதிருப்போமாக' என்று சொல்லி, தப்பறையைக் கண்டனம் செய்யாமலிருக்க வேண்டுமென்றும் நினைக்கிறார்கள். ஆனாலும், இது போன்ற காரியங்களில் மிக அடிக்கடி நிகழ்வதுபோல, திருச்சபையின் பாதுகாவலர்கள், சத்தியத்தினுடையவும், திருச்சபையின் பாரம்பரியத்தினுடை யவும் பாதுகாவலர்கள், இவர்கள் அனைவரின் கோபத்தையும் தங்கள் மீது வருவித்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதன் தன்னில் இரண்டு பக்கங்களைக் கொண்டவனாக

இருக்கிறான். இவன் மிக ஆபத்தானவனாக இருக்கிறான். இவன் தன்னைக் கத்தோலிக்கன் என்று அழைத்துக்கொள்கிறான். இருந்தாலும், அதே சமயத்தில், திருச்சபையின் எதிரிகளை ஆதரிக்கிறான். சத்தியத்தை, மாறாததும், முழுமையானதுமாகிய சத்தியத்தை அவனால் தாங்க முடியாது. நாம் தப்பறைக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கிறோம். நாம் உலகத்திற்கும், சாத்தானுக்கும், திருச்சபையின் எதிரிகளுக்கும் எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறோம். நாம் ஒரு சிலுவை போரின் நிலையில் இருக்கிறோம் என்ற உண்மையை இவனால் தாங்கிக்கொள்ள முடியாது. நாம் சிலுவைப் போரின் நிலையில், ஒரு தொடர்ச்சியான போராட்ட நிலையில் இருக்கிறோம். நம் ஆண்டவரும் சத்தியத்தை அறிவித்தார். நல்லது! அவர்கள் அவரை மரணத்திற்கு உட்படுத்தினார்கள். அவர் சத்தியத்தை அறிவித்ததால், தாம் கடவுளென்று அவர் சொன்னதால், அவர்கள் அவரை மரணத்திற்குத் தீர்வையிட்டார்கள். அவர் கடவுளாகவே இருந்தார். தாம் கடவுள் இல்லை என்று அவர் சொல்லியிருக்க முடியாது. வேதசாட்சிகள் அனைவரும், அஞ்ஞானிகளோடு சமரசம் செய்துகொள்வதற்குப் பதிலாக, தங்கள் இரத்தத்தைச் சிந்துவதையும், தங்கள் உயிரைக் கொடுப்பதையும் தேர்ந்து கொண்டார்கள்.



**குருமட அதிபர் சங். ல ஃப்ளோக்**

நான் உரோமையில் ஆறு வருடங்களைக் கழித்தேன் (இடையில் ஒரு வருடத்தை இராணுவ சேவையில் கழித்தேன்). முதல் மூன்று ஆண்டுகளில் (1923-1924, 1924-1925, 1925-1926) சுவாமி ல ஃப்ளோக் குருமட அதிபராக இருந்தார். உரோமையிலுள்ள கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் சேசுசபையினரால் எங்களுக்கு நடத்தப்பட்ட வகுப்புகளிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு கலந்துகொண்டேன்.

1926 மற்றும் 1927-ம் ஆண்டுகளின் போது இராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டேன். இந்தக் கால கட்டத்தில் எங்கள் அன்புக்குரிய தந்தை ல ஃப்ளோக் அவர்கள் குருமட அதிபர் என்ற தமது பதவியிலிருந்து அகற்றப்பட நடைபெற்ற பயங்கரத்துக்குரிய சதித்திட்டத்தை நான் அருகிலிருந்து காணவேண்டியிருக்கவில்லை. இந்த விதத்தில் நான் அதிர்ஷ்டசாலிதான். இது எல்லாவற்றையும் என் சக மாணவர்களிடமிருந்து வந்த கடிதங்களின் மூலம் நான் அறிந்துகொண்டேன். 1927 நவம்பரில் என் இராணுவ சேவையை நான் முடித்துவிட்டு, குருமடத்திற்குத் திரும்பி வந்தபோது, சுவாமி ல ஃப்ளோக் அகற்றப்பட்டு, பதவியிறக்கம் செய்யப்பட்ட முறை எப்படி முற்றிலுமாக துர்மாதிரிகை தருவதாக இருந்தது என்பதுபற்றிய விவரங்கள் எனக்குத் தரப்பட்டன. ஏன்? காரணம் ஏற்கனவே பிரெஞ்சு அரசாங்கத்தில் இருந்த சாத்தானின் இரகசிய சபையினருக்கும், அவர்களைச் சுற்றி வட்டமடித்துக் கொண்டிருந்த அனைத்து விடுதலைவாதிகளுக்கும் இருந்த ஒரு பயம்தான்: அதாவது சுவாமி ல ஃப்ளோக்கின் சீடர்கள் தப்பறைக்கும், தீமைக்கும் எதிராகப் போராடுவதற்காக அவரால் சத்தியத்தில் உருவாக்கப்படும் குருக்கள், பின்பு மேற்றிராணிமார்களாக ஆவார்களென்று அவர்கள் பயந்தார்கள். உலகம் முழுவதிலும் மேற்றிராணிமார்களின் பெரும்பான்மையானவர்கள் உரோமையில் குருத்துவக் கல்வி பயின்றிருந்தார்கள்; இது இன்னும்கூட உண்மையாகவே இருக்கிறது. ஆனாலும், அந்தக் காலத்தில் இது இன்னும் விசேஷமாக உண்மையாக இருந்தது. நாங்கள் மொத்தம் இருநூற்று இருபது குருமாணவர்கள் இருந்தோம். எங்களில் அநேகமாக நூற்றியெண்பது பேராவது குருப்பட்டம் பெற்று, பிரான்ஸுக்குத் திரும்புவார்கள். இவர்களில் பலர் பிற்காலத்தில் மேற்றிராணிமார்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆகவே விடுதலைவாதிகள் பயப்படுவதற்கு உண்மையாகவே நல்ல காரணம் இருந்தது. உண்மையில் இது இப்படியேதான் நடந்தது. என் சக குருக்களில் அநேகர் பிரான்ஸில் மேற்றிராணிமார் ஆயினர். துரதிருஷ்டவசமாக, இவர்களில் பெரும்பான்மையானவர்கள் விசுவாசத்தையும், பிரெஞ்சு குருமடத்தில் தாங்கள் பெற்றுக்கொண்ட போதகத்தையும் ஆதரித்துத் தாங்க தைரியமற்றுப் போனார்கள். உலகத்தின் நிலைகள், அதாவது நம் அன்றாட வாழ்வை நாம் வாழ்கிற இந்த விடுதலைவாத உலகத்தின் நிலைகள், ஒருவனுக்கு மெதுவாக, ஆனால் நிச்சயமான முறையில் விஷமூட்டுகின்றன.

இதெல்லாம் எப்படி நிகழ்ந்தது என்று எனக்குச் சொல்லப்பட்டது. அரசாங்க தூதர்கள் வத்திக்கானுக்கு வந்து, "சுவாமி ல ஃப்ளோக் இனியும் பிரெஞ்சு குருமடத் தலைவராக இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. அவர் ஓர் ஆபத்தான மனிதர்; அவர் அப்படி, இப்படி..."என்று சொன்னார்கள். ஓ! அவருக்குத் தரப்பட்ட பெயர்கள் எவை என்று உங்களுக்குத் தெரியும். அவை: இன்ட்டக்ரிஸ்ட் (இந்த வார்த்தை, பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை ஏற்க மறுத்து, திரிதெந்தீன் பொதுச் சங்கத்தால் கற்பிக்கப்பட்ட விசுவாசக் கொள்கைகளை ஆதரித்துப் பாதுகாத்தவர்களும், பாப்பரசரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தவர்களுமாகிய கத்தோலிக்கர்களைக் குறிப்பதற்காக பிரெஞ்சு விடுதலைவாதக் கத்தோலிக்கர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அர்ச். பத்தாம் பத்திநாதர் காலத்தில், அவர் நவீனவாதப் பதிதத்திற்கு எதிராக எழுதிய பாஷெந்தி தோமினிச்சி க்ரேஜிஸ் என்ற சுற்றுமடலை ஆதரித்தவர்களைப் பரிகசிப்பதற்காக விடுதலைவாதக் கத்தோலிக்கர்களால் அது பயன்படுத்தப்பட்டது. இன்று பாரம்பரியக் கத்தோலிக்கர்களை ஏளனம் செய்யும் வார்த்தையாக இது பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக நவீன பூசையை ஏற்க மறுத்து, அர்ச். ஐந்தாம் பத்திநாதரின் திரிதெந்தீன் திவ்விய பலிபூசைக்கு எத்தகைய

சூழ்நிலையிலும் பிரமாணிக்கமாய் இருப்பதற்காகவும், தங்கள் பாரம்பரிய விசுவாசத்தைக் காத்துக்கொள்வதற்காகவும், வத்திக்கானையும், தேவையானால் பாப்பரசரையும் எதிர்த்து நிற்கிறவர்களை ஏளனம் செய்ய இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.) பாஸிஸ்ட், அல்ட்ராமோன்டேன் (பாப்பரசரின் தனிப்பட்ட விசேஷ சலுகைகளையும், அவருடைய அதிகாரத்தையும் வலியுறுத்துகிற பாரம்பரியக் கத்தோலிக்கர்கள்), இன்னும் பல பெயர்கள். சூழ்நிலையை இன்னும் இருட்டாக்க தீய வார்த்தைகளைக் கண்டுபிடிப்பது எளிதாக இருந்தது. சுவாமி ல ஃப்ளோக் ஃப்ரான்ஸுவா செயல்பாடு (சார்ல்ஸ் மோராஸ் என்பவரின் தலைமையில் குறிப்பிட்ட கால அவகாசத்தில் நிகழ்கிற, அரசியல் சார்ந்த பிரெஞ்சு இயக்கம். விடுதலைவாத ஜனநாயகமயமாக்குதலுக்கு எதிராகப் போராட வலிமையான இயற்கைக் கோட்பாடுகளைப் பயன்படுத்திய இந்த Action Francaise அமைப்பு விடுதலைவாதக் கத்தோலிக்கர்களால் வெறுக்கப்பட்டது) என்ற அமைப்பில் இருக்கிறார். அவர் மோராஸின் சீடர்; சுவாமி ல ஃப்ளோக் இப்படி, அப்படி என்றெல்லாம் அவர்கள் அவரைப்பற்றிப் பேசினார்கள்.

பாப்பரசர் பதினோராம் பத்திநாதர் மிகவும் புத்திசாலியான ஒரு மனிதர், அவரிடம் பெரும் விசுவாசம் இருந்தது. அவர் அற்புதமான சுற்றுமடல்களை எழுதினார். ஆனாலும் துரதிருஷ்டவசமாக, திருச்சபையின் அரசராக அதை நிர்வகிப்பதில் அவர் பலவீனமானவராக, மிகப் பலவீனமானவராக இருந்தார். ஒருவிதத்தில் உலகத்தோடு உறவாடுபவராக ஆகிவிடும்படி அவர் சோதிக்கப்பட்டார். அவர் சுவாமி ல ஃப்ளோக்கை மட்டுமல்ல மாறாக, கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் பிரசித்திபெற்றவரும், ஓர் அசாதாரணமான பேராசிரியருமாகிய கர்தினால் பில்லோ என்பவரையும் பதவியிறக்கம் செய்தார். கர்தினால் பில்லோவின் வேதசாஸ்திர நூல்கள் அதியற்புதமானவை. சுவாமி ல ஃப்ளோக் எதற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டாரோ அதே காரணத்திற்காகத்தான் இவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஏனெனில் இவர் ஒரு நேர்மையான மனிதராக இருந்தார். பதிதத்தோடு சமரசம் செய்துகொள்ளாதவராக இருந்தார். அவரைப் பொறுத்த வரை, அர்ச். பத்தாம் பத்திநாதரைப் போல மாறாத சத்தியத்திற்காக எப்போதும் போராடுவது, பதிதத்திற்கும், விடுதலைவாதத்திற்கும், நவீனவாதத்திற்கும் எதிராகப் போராடுவதுதான் முக்கியமானதாக இருந்தது. ஆகவே பிரெஞ்சு அரசாங்கத்தால் குறிவைக்கப்பட்ட மற்றொருவரான கர்தினால் பில்லோ பதவி நீக்கம் செய்யப்பட்டார்.



பாப்பரசர் பதினோராம் பத்திநாதர்

அமெரிக்க மேற்றிராணிமார்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மெக்ஸிகோவில் க்றீஸ்டெரோஸ் புரட்சி அமைப்பினர் படுகொலை செய்யப்படக் காரணமாயிருந்தவரும் இதே பரிதாபத்திற்குரிய பாப்பரசர் பதினோராம் பத்திநாதர்தான். (இது மெக்ஸிகோவின் மாபெரும் மக்கள் புரட்சியாகும். உரோமைக் கத்தோலிக்கத் திருச்சபையைக் கலாபனைக்கு உட்படுத்தும் விதமாக நாஸ்தீகரும், முன்னாள் மெக்ஸிக்கோ ஜனாதிபதியுமான ப்ளூட்டார்கோ எலியாஸ் கால்லெஸ் என்பவரால் அமுல்படுத்தப்பட்ட 1917 மெக்ஸிகன் சட்ட அமைப்பிற்கு எதிராக இந்தப் புரட்சி வெடித்தது. பத்து வருடங்கள் நீடித்த இந்தப் புரட்சியை ஆதரித்தவர்கள் நாஸ்தீக மெக்ஸிகன் அரசாங்கத்தால் ஆயிரக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர் - மொழிபெயர்ப்பாளர் குறிப்பு.) மெக்ஸிகன் கத்தோலிக்கர்கள் சாத்தானின் இரகசிய சபை சார்ந்த, கிறீஸ்தவத்திற்கு எதிரான, கத்தோலிக்கத்திற்கு எதிரான அரசாங்கத்திற்கு எதிராகப் போராடி, தங்களைத் தாங்களே தற்காத்துக்கொண்டிருந்தனர். பிரெஞ்சுப்புரட்சியின் போது வெண்டியர்கள் என்ற அமைப்பினர் செய்தது போல, இவர்களும் வேதத்தைக் காப்பாற்ற, கத்தோலிக்க விசுவாசத்தைக் காப்பாற்ற, ஆயுதங்களைக் கையில் எடுத்தனர். தொடக்கத்தில் பாப்பரசர் இவர்களை ஆதரித்து உற்சாகப்படுத்தினார். ஆனால் மெக்ஸிகோவுக்கு ஆதரவாக இருந்த சாத்தானின் இரகசிய சபை சார்ந்த அமெரிக்க அரசாங்கம், இந்தப் போராட்டத்தை நிறுத்தும்படி அமெரிக்க மேற்றிராணிமார்களை வற்புறுத்தியது. ஓ, ஆனால் கத்தோலிக்கர்களோடு ஓர் ஒப்பந்தம் உருவாகும் என்பதுபற்றி கவலைப்படக் கூடாது! ஆகவே அமெரிக்க மேற்றிராணியார்கள் பாப்பரசர் பதினோராம் பத்திநாதரை நிர்ப்பந்திக்க, க்றிஸ்டெரோஸ் அமைப்பினர் தங்கள் ஆயுதங்களைக் கீழே போடும்படி பாப்பரசர் அவர்களுக்குக் கட்டளை தந்தார். அவர்களும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தினார்கள். அதனால் அவர்கள் அனைவருமே படுகொலை செய்யப்பட்டார்கள். அரசாங்கம் கூட்டங்கூட்டமாக அவர்களைக் கொன்று

குவித்தது. பயங்கரம், முற்றிலும் பயங்கரம்! இது உண்மை யாகவே அந்தப் பரிதாபத்திற்குரிய மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் துரோகம்!


Action Francaise அமைப்பிற்கும் இதுதான் நடந்தது. பாப்பரசர் பதினோராம் பத்திநாதர் இந்த அமைப்பைக் கண்டனம் செய்யும்படி வற்புறுத்தப்பட்டார். ஏனெனில் கண்டிப்பான முறையில் ஒரு கத்தோலிக்க இயக்கமாக இல்லா திருந்த இந்த அமைப்பு, சாத்தானின் இரகசிய சபை பிரான்ஸிற்குள் கொண்டுவந்துகொண்டிருந்த ஒழுங்கீனங் களுக்குப் பதிலடி தரும் இயக்கமாக இருந்தது. இந்த அமைப்பு ஓர் ஆரோக்கியமான, உறுதியான பதில் நடவடிக்கையை முன்னின்று நடத்தியது. ஒழுங்குக்கு, ஒழுக்கத்திற்கு, ஒரு நல்லொழுக்கச் சட்டத் தொகுப்பிற்கு, கிறீஸ்தவ நல்லொழுக்க விதிகளுக்குத் திரும்பி வருதலுக்காகப் போராடியது. ஆகவே இந்த இயக்கத்தைக் கடுமையாக வெறுத்த அரசாங்கம், அதைக் கண்டனம் செய்யும்படி பாப்பரசர் பதினோராம் பத்திநாதரை வற்புறுத்தியது. ஆக்ஷியோன் ஃப்ரான்ஸுவா அமைப்பு பிரான்ஸை மீண்டும் சரியான பாதைக்குக் கொண்டு வருவதற் காக முயன்றுகொண்டிருந்த மிகச் சிறந்த கத்தோலிக்கர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. இருந்தும் பாப்பரசர் பதினோராம் பத்திநாதர் அதைக் கண்டனம் செய்தார். அவர் இறந்தபோது, அவருடைய அரசுச் செயலாளரும், அவருடைய அடுத்த ஸ்தானாதிபதியுமாகிய பாப்பரசர் பன்னிரண்டாம் பத்திநாதர் இந்த இயக்கத்தின் மீதான தடையை விலக்கினார். இது பதினோராம் பத்திநாதரின் தீர்ப்பு ஆரோக்கியமற்றது, தவறானது என்பதற்கு மிகச் சிறந்த நிரூபணமாக இருந்தது. ஆனால் ஏற்கனவே மிகவும் தாமதமாகி விட்டது! அதற்கு தீங்கு செய்யப்பட்டு விட்டது. ஆக்ஸியோன் ஃப்ரான்ஸுவா அழிக்கப்பட்டு விட்டது. இது அச்சமூட்டும் நிகழ்வாக இருந்தது, மிகப் பெரும் விளைவுகளைக் கொண்டிருந்தது.

சுவாமி லா ஃப்ளோக்கிற்கு நடந்ததும் இதேதான்: அவர் குருமடத்தை நடத்தும் விதத்தில் குற்றம் சாட்டப்படத் தக்க காரியம் ஏதாவது இருக்கிறதா என்று கண்டுபிடிக்கும்படி ஒரு விசாரணை நடத்தப்பட்டது. இது கடினமானதாக இருக்காது; அவர்களால் நிச்சயமாக எதையாவது கண்டுபிடிக்க முடியும். அவர் தமது ராஜினாமாக் கடிதத்தைத் கொடுத்து விட்டு, வெளியேறுவது அவருக்கு நல்லது என்று அவர் புரிந்து கொள்ளும்படி அவர்கள் செய்திருப்பார்கள்.

டோம் ஸ்கஸ்டர்[1] என்பவரால் இந்த விசாரணை நடத்தப்பட்டது. இவர் ஒரு பிரசித்தி பெற்ற ஆசீர்வாதப்பர் சபை உறுப்பினர். இந்த விசாரணையின் முடிவு சுவாமி ல ஃப்ளோக்கிற்கு முற்றிலும் ஆதரவானதாக இருந்தது. டோம் ஸ்கஸ்டர் சுவாமி ல ஃப்ளோக்கின் நடத்தை பற்றியும், அவருடைய வழிகாட்டுதல் பற்றியும், அவருடைய குருமடத்தைப் பற்றியும், குருமாணவர்களிடம் அவர் கொண்டிருந்த செல்வாக்கு பற்றியும், அவருடைய விசுவாசத்தைப் பற்றியும் மிக உயர்வாகப் பேசினார்.

சுவாமி ல ஃப்ளோக்கின் எதிரிகள், இந்த விசாரணை யின் பலனைக் கண்டு கடுங்கோபமுற்றவர்களாக, மற்றுமொரு விசாரணை நடத்தும்படியும், உண்மையில் சுவாமி ல ஃப்ளோக்கை அனுப்பிவிடக் கூடிய எதையாவது சொல்லக் கடமைப்பட்டிருக்கக் கூடிய யாராவது ஒருவரை விசாரணை யாளராக நியமிக்கும்படியும் பாப்பரசரை சம்மதிக்கச் செய்வதில் வெற்றி பெற்றனர். விசாரணையாளர்கள் ஒரு குருமடப் பேராசிரியரும், ஒன்றிரண்டு குரு மாணவர்களும், அவர் அளவுக்கு அதிகமாக வலது சாரியைச் சேர்ந்தவராக இருக்கிறார், அளவுக்கதிகமாக மோராஸின் ஆதரவாளராக இருக்கிறார், அளவுக்கு அதிகமாக விடுதலைவாதத்திற்கு எதிரானவராக இருக்கிறார் என்பன போன்ற ஒரு சில விமர்சனக் குறிப்புகளைத் தரச் செய்வதில் வெற்றி பெற்றனர். இது போதுமானதாக இருந்தது அவர் தீர்ப்பிடப்பட்டு, வெளியேற்றப்படுவதற்கு. இது முற்றிலும் வெறுப்புக்குரிய காரியமாக இருந்தது.

இப்போது நாம் தற்சமயம் நடத்திக்கொண்டிருப்பதும் இதே போர்தான். நாம் ஏன் கலாபனைக்கு உட்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கிறோம்? நான் ஏன் இன்று கலாபனைக்கு உள்ளாகியிருக்கிறேன்? பாரம்பரியத்தில் இருக்கிற நீங்களும், நாம் எல்லோருமே, ஏன் கலாபனைக்கு உள்ளாகிறோம்? ஏனெனில் நாம் சத்தியத்தை உறுதிப்படுத்தி, தப்பறையைக் கண்டனம் செய்கிறோம்; நாம் விடுதலை இறையியலைக் கண்டனம் செய்கிறோம்; நவீனவாதத்தைக் கண்டனம் கச்



பிரெஞ்சு குருமடத்தில் குருமாணவர் மார்செல்

செய்கிறோம். இது சங்கச் சபையில் அனுமதிக்கப்பட முடியாததாக இருக்கிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இதையெல்லாம் மாற்றிவிட்டது: இப்போது அது விடுதலை வாதிகளோடும், நவீனப் பதிதர்களோடும், சாத்தானின் இரகசிய சபையினரோடும், கம்யூனிஸ்ட்களோடும், எல்லோருடனும் நல்ல நட்புறவோடு இருக்கிறது; அவர்கள் எல்லோருடனும் ஒன்றிப்புள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள். நாம் இதற்கு எதிராக இருக்கிறோம். ஆகவே, நாம் சங்கத்திற்கு எதிராக இருக்கிறோம்; பாப்பரசருக்கு எதிராக இருக்கிறோம்; தீர்ப்பிடப்பட்டிருக்கிறோம்!... ஆம், இது உண்மை, நாம் தீர்ப்பிடப்பட்டிருக்கிறோம்! காரணங்கள் அதேதான், போராட்டம் அதேதான்.

மீண்டும், இது தேவ பராமரிப்பின் செயலாக, என்னைப் பொறுத்தவரை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறைப் பாடமாக இருந்தது. ஏனெனில் இது சத்தியத்தின் எதிரிகளின் துர்க்குணத்தையும், கொடிய தன்மையையும் காட்டியது. இதன் காரணமாக, திருச்சபையும், அதன் குருநிலையினரும், மேற்றிராணிமாரும், நவீன தப்பறைகளோடும், நவீன உலகத்தோடும் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்று தொடர்ச்சியான முயன்று வந்த மனிதர்களிடம் நான் எப்போதும், குறிப்பாக பிற்காலத்தில் நான் ஒரு மேற்றிராணியாராக ஆனபோதும், எச்சரிக்கையாக இருந்தேன். நான் குருக்களைச் சந்தித்தபோது, அல்லது நான் மேற்றிராசனங்களைச் சந்தித்து, ஏதாவது ஒரு காரியத்தைப் பற்றிய அறிக்கைகளைக் கேள்வியுற்றபோது, எப்போதும் விழிப்பாயிருக்க இது எனக்குக் கற்றுத் தந்தது. ஆ! இவர்கள் ஒருவருக்கொருவர் எதிரானவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் இவர்களில் சிலர் விடுதலைவாதிகளாகவும், சிலர் பழமைவாதிகளாகவும், பாரம்பரியர்களாகவும் இருக்கலாம் என்று நான் உடனே நினைத்தேன். இது எப்போதும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது. இதைக் கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் காண முடிகிறது.



இளைய சகோதரனுடன் குருமாணவர் மார்செல்

ஆகவே, பரிதாபத்திற்குரிய சுவாமி ல ஃப்ளோக் போய் விட்டார். நான் 1927-ல் திரும்பி வந்தபோது, சுவாமி பார்தே என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் இரட்டை முகம் கொண்டவராக இருந்தார். பாரம்பரியவாதியாகத் தோன்றினார்; அதே வேளையில் எதையும் மிக எளிதாக எடுத்துக்கொண்டு செயல்படுபவராக இருந்தார். மேற்கொண்டு பதிதத்தை எதிர்த்துக் கேள்வி கேட்பதோ, அதைக் கண்டனம் செய்வதோ, போராடுவதோ, எதிர்த்து நிற்பதோ அவரிடம் இருக்கவில்லை. "இதை நாம் ஒதுக்கி விடுவோம். நாம் விவேகத்தோடு இருப்போம்" என்பார். இது குருமடத்தில் என் கடைசி ஆண்டுகளைச் சற்று கடினமானதாக ஆக்கியது. மேலும் சுவாமி ல ஃப்ளோக்கின் கண்டனத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அந்தச் சமயத்தில் குருமடத்தைவிட்டு வெளியேறிய ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குரு மாணவர்கள் இருந்தார்கள்.

நான் 1929-ல் ஆயர் லியேனார்ட் என்பவரால் லீல்லில் குருத்துவ அபிஷேகம் செய்விக்கப்பட்டேன். ஆனாலும் மேலும் ஒரு வருடம் ஒரு குருவாக தொடர்ந்து குருமடத்தில் தங்கி பயிற்சி பெறுவது வழக்கமாக இருந்தது. 1930-ல் குருத்துவ ஊழியத்திற்கு ஆயத்தமுள்ளவனாக, நான் எனது லீல் மேற்றிராசனத்திற்குத் திரும்பி வந்தேன்.

என் சகோதரர் 1924-ல் இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையில் சேர்ந்து, அவர்களோடு தன் குருத்துவக் கல்வியை முடித்து விட்டு, தாம் குருத்துவ அபிஷேகம் பெற்ற 1927-ம் ஆண்டிலேயே காபோனுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார். என்னைப் பொறுத்தவரை, கர்தினால் லியேனார்ட் சற்று அதிக முக்கியத்துவம் உள்ள மாரே-த-லோம் பட்டணத்தில் (லீல் நகரத்தின் புறநகர்ப் பகுதி) என்னை உதவி பங்குக் குருவாக நியமித்தார். அங்கு சுமார் பத்தாயிரம் மக்கள் வசித்தார்கள். அவர்கள் எல்லோருமே கிட்டத்தட்ட ஆலைத் தொழிலாளர்கள்தான். அது ஒரு தொழில்துறை சார்ந்த பட்டணமாக இருந்தது. பங்கின் எல்லைகளுக்குள் ஒரேயொரு தொழிற்சாலை மட்டுமே இருந்ததால், இந்தத் தொழிலாளர்கள் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்திருந்த தொழிற்சாலைகளில் வேலை செய்யச் சென்றார்கள். இந்தப் பட்டணத்தில் நீண்ட தெருக்கள் இருந்தன. அவற்றின் வீடுகள் ஒரே மாதிரியின்படி கட்டப்பட்டிருந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருந்த பொலோன் பகுதியிலிருந்து அநேக மக்கள் வேலை தேடி வடக்கே குடிபெயர்ந்து வந்திருந்தார்கள்.

நாங்கள் போய் இந்த மக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது, ஏனெனில் இவர்களுக்கு எங்கள் பங்கோடு தொடர்பு இல்லாமல் இருந்தது. ஆனாலும் மிகுந்த பக்திப்பற்றுதல் உள்ளவர்களும், பக்தியுள்ள வாழ்வு நடத்தியவர்களுமாகிய


விசுவாசிகளின் ஒரு சிறு கூட்டம் ஒன்று அங்கிருந்தது. துரதிருஷ்டவசமாக, அங்கிருந்த பத்தாயிரம் பட்டணவாசிகளில், மிகச் சிலர் மட்டுமே நடைமுறையில் கத்தோலிக்க வாழ்வு வாழ்பவர்களாக இருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில், குழந்தைகளையும் சேர்த்து, இரண்டாயிரம் பேர்தான் அநேகமாக பூசையில் பங்கு பெற்றார்கள்.

## முதல் நியமனம்: உதவி பங்குக் குரு

நான் இவ்வாறு என் நியமனத்தைப் பெற்றுக்கொண்டேன். பங்குக் குருவுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டது. அவருக்கு ஏற்கனவே ஒரு உதவி பங்குக் குரு இருந்தார். நான் அவரைத் தொடர்புகொண்டு: "நல்லது, இதோ நான் வந்துவிட்டேன். நீங்கள் என்னை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்.

நான் அவருடைய இரண்டாவது உதவி பங்குக் குருவாக இருந்ததால், அவர் சற்று வேடிக்கையாகப் பதில் சொன்னார். அவர் கருணையோடும், சற்று நகைச்சுவையாகவும் பேசினார், என்றாலும் அவர் இப்படிச் சொன்னார்:

"ஓ! உங்களிடம் ஒளிவுமறைவில்லாமல் பேசுவதாயிருந்தால், எனக்கு ஒரு இரண்டாவது உதவி பங்குக் குரு வேண்டும் என்று நான் கேட்கவில்லை. எனக்கு அப்படி



மாரே-த-லோம் பங்கு ஆலயம்

ஒருவர் தேவையில்லை. ஒருவரே எனக்குப் போதும் என்றுதான் நான் நினைத்தேன்!"

"ஓ, உண்மையாகவா?"

"நம்முடையதைப் போன்ற ஒரு பங்கில், ஓர் இரண்டாவது உதவி பங்குக் குருவுக்கான தேவை எதையும் நான் காணவில்லை.

இருந்தாலும் எப்போதும் சுறுசுறுப்பாக வேலை செய்ய நான் முயற்சி செய்வேன்!"

"வாஸ்தவமாக, நான் உங்களை முழுமனதோடு வரவேற்கிறேன்; உங்கள் சொந்த வீட்டில் இருப்பதுபோல நினைத்துக் கொள்ளுங்கள்... உங்களுக்கு ஒரு படுக்கையறை இருக்கிறது என்று உறுதியாகக் கூறமுடியும்..."

அவருடைய ஒன்றுவிட்ட சகோதரிகள் இருவர் குருக்கள் இல்லத்தையும், சமையல், துணிகளை சலவை செய்வது போன்ற வேலைகளைக் கவனித்துக்கொண்டார்கள். அவர்கள் நல்லவர்கள். மற்றொரு உதவி பங்குக் குரு ஏற்கனவே எனக்குத் தெரிந்தவர்தான். அவர் முன்பு டூர்கோய்ங் நகரில் ஒரு திரு இருதய மாணவராக இருந்திருக்கிறார். அங்கே வேறு சிலரோடும் எனக்குப் பரிச்சயம் இருந்தது, ஆனாலும் வாஸ்தவமாக, இந்தப் பங்கைப்பற்றி, அல்லது அங்கிருந்த பெரும்பான்மையான மக்களைப்பற்றி நான் எதுவும் அறிந்திருக்கவில்லை. இந்தப் பங்கு எனக்குப் புதியதாக இருந்தது. ஆனாலும் மக்களைச் சந்திக்கும் ஊழியத்தில் நான் ஈடுபாடு உள்ளவனாக ஆகிவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அங்கே எல்லா வகையான வேலைகளும் இருந்தன...

நாங்கள் பங்கை சில பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டோம். ஒரு பிரிவு பங்குக் குருவுக்கு ஒதுக்கப்பட்டது. மற்றொரு பிரிவு முதல் உதவி பங்குக் குருவுக்கு, மற்றொன்று இரண்டாவது உதவி பங்குக் குருவுக்கு. நாங்கள் அங்கு எல்லா மக்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. வழக்கமாகவே நாங்கள் நன்றாக, கருணையோடு வரவேற்கப்பட்டோம். ஆனாலும் சில இடங்களில் அங்கே கம்யூனிஸ்ட்கள் இருந்தார்கள். இவர்கள் எங்கள் முகத்திற்கு நேராக கதவைச் சார்த்திக் கொள்வார்கள்... அச்சமயங்களில் நாங்கள் பக்கத்து வீட்டுக்காரரிடம் போய்:

"பக்கத்து வீட்டுக்காரருக்கு என்ன பிரச்சினை? அவர் ஏன் அவ்வளவு நட்பாக இல்லை?" என்று கேட்டோம்.

"அவன் ஒரு தீவிரமான கம்யூனிஸ்ட்" என்று பக்கத்து வீட்டுக்காரர் பதில் கூறினார். "அதனால்தான் உங்களை வரவேற்க அவன் மறுத்தான். ஆனாலும் அவன் ஒரு தீய மனிதன் அல்ல. நான் அவனிடம் பேச முயற்சி செய்கிறேன்; இறுதியில் அவன் உங்களை வரவேற்கும்படி, சகல காரியங்களையும் ஒழுங்குபடுத்த முயற்சிசெய்வோம்" என்று கூறினான்.

உண்மையில், நாங்கள் இரண்டாவது தடவையாகப் போனபோது, அவன் கடைசியில் எங்களுக்குக் கதவைத் திறந்தான். அந்த மக்களின் சூழ்நிலைகள் என்ன என்பதை ஓரளவு கண்டுபிடிக்க நாங்கள் முயன்றோம். துரதிருஷ்டவசமாக, மிக அடிக்கடி அவர்கள் விவாகரத்துச் செய்தவர்களாகவோ, அல்லது திருமணம் செய்துகொள்ளாமலே சேர்ந்து


உதவி பங்கு குருவாக
சங். மார்செல்

வாழ்பவர்களாகவோ இருந்தார்கள். அவர்களுடைய குழந்தைகள் ஞானோபதேசத்திற்குச் செல்வதில்லை. இன்னும் இதுபோன்ற காரியங்கள் இருந்தன. இருந்தாலும், இந்த எல்லா மக்களையும் பங்கிற்குள் கொண்டுவர நாங்கள் முயற்சி செய்யவேண்டியிருந்தது. ஆனால் அது எப்போதும் எளிதான காரியமாக இருக்கவில்லை. இதை நீங்களே கற்பனை செய்துகொள்ளலாம். இருந்தாலும் எங்கள் முயற்சி களுக்கு நல்ல பலன்கள் கிடைத்தன. ஏனெனில், இந்த மனிதர்கள் தங்கள் உள்ளாழத்தில் கெட்டவர்களாக இருக்க வில்லை; பங்கைப்பற்றியும், குருக்களைப்பற்றியும் சற்று அதிகமாக அறிந்துகொள்ள அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டியிருந்தது. குருவோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது அவர்களுக்கு ஏற்கனவே நல்லதொரு முதல் படியாக இருந்தது. இவ்வாறுதான் ஏராளமான சூழ்நிலைகளை ஒழுங்குபடுத்த எங்களால் முடிந்தது.

நாங்கள் நோயாளிகளையும் எப்போதும் சந்தித்து வந்தோம். இந்த சந்திப்புகள் ஆர்வத்தைத் தூண்டுபவை யாக இருந்தன. அங்கே பாவசங்கீர்த்தனங்கள் இருந்தன, பிரசங்கம் இருந்தது, ஞானோபதேச வகுப்புகள் இருந்தன, குழந்தைகள் சங்கம் இருந்தது, இளைஞர் குழு இருந்தது, மற்றவைகளை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். வேலைக்குக் குறைவில்லை. இந்த, எளிய, உழைப்பாளர்க ளான மக்கள் பண்பாடற்றவர்களாக, ஆனால் நல்ல மக்களாக இருந்தார்கள். இப்படிப்பட்ட அவர்களோடு எங்களுக்குள்ள இந்தத் தொடர்புகள் மகிழ்ச்சி தருபவை யாக இருந்தன. ஆனால் நான் அங்கே தங்கியிருப்பதை தேவ பராமரிப்பு விரும்பவில்லை...

*குறிப்பு:*

1 சார்ல்ஸ் மரீ போஷியுஸ் மோராஸ் என்பவர் Action Francaise அமைப்பை உருவாக்கியவர், பிரெஞ்ச் எழுத்தாளர், கவிஞர், மற்றும் விமர்சகர் ஆவார். இவருடைய சிந்தனைகள் பாப்பரசரின் இராஜரீகத் தன்மையை ஆதரிப்பவை யாகவும், திருச்சபைக்கு வெகு ஆபத்தாயிருக்கிற ஜனநாயக முறையைக் கடுமையாக எதிர்ப்பவையாகவும், பிரெஞ்சுப் புரட்சிக்கு எதிரானவையாகவும் இருந்தன.

2 உரோமையில் மதில்களுக்கு வெளியேயுள்ள அர்ச். சின்னப்பர் பேராலயத்தைச் சேர்ந்த அர்ச். ஆசீர்வாதப்பர் துறவற மடத்தின் அதிபரான டோம் இல்டஃபோன்ஸோ ஸ்கஸ்டர் என்பவர் லொம்பார்டி திருச்சபை மாகாணத்தின் குருமடங்களுக்கு அப்போஸ்தலிக்கப் பார்வையாளராக நியமிக்கப்பட்டார் (1926-1928). மேலும் இவர் உரோமையிலுள்ள பிரெஞ்ச் குருமடத்தை அப்போஸ்தலிக்கத் தூதராகச் சென்று பார்வையிடவும் நியமிக்கப்பட்டார். 1929-ல் இவர் மிலனின் அதிமேற்றிராணியாராகவும், கர்தினாலாகவும் ஏற்படுத்தப்பட்டார். 1996-ல் இவர் முத்திப்பேறு பட்டம் பெற்றார்.

அத்தியாயம் 3

## விரைவில் ஒரு துறவியாகவும், வேதபோதகராகவும்

நான் என் கதையைத் தொடர்கிறேன்... ஆக, ஒரு பங்குக் குருவையும், ஒரு முதல் உதவி பங்குக் குருவையும் கொண்டிருந்ததும், லீல் நகரத்தின் புறநகர்ப் பகுதியுமான மாரே-த-லோம் பங்கில் நான் உதவி பங்குக் குருவாக இருந்தேன். அங்கே நான் கழித்த ஓராண்டில், அதாவது, 1930-1931-ம் வருடத்தில், காபோனில் ஏற்கனவே ஒரு வேதபோதகராக இருந்த என் சகோதரரி டமிருந்து எனக்கு அடிக்கடி கடிதங்கள் வந்தன. அவற்றில் அவர் தம் வேலை பற்றியும், தம் சக குருக்களின் வேலை பற்றியும் விளக்கி எழுதுவார். அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருந்தது; "போதுமான வேதபோதகர் கள் இல்லை, நீ ஏன் வரக்கூடாது?


தன் மூத்த சகோதரர்
சங். ரெனே லெஃபவருடன்

எல்லாவற்றிற்கு மேலாக, லீல் மேற்றிரா சனத்தில் போதுமான குருக்கள் நிறைய இருக்கிறார்களே" என்று அவர் என்னை வற்புறுத்தி அழைக்கலானார். நான் மாரே-த-லோமிற்கு வந்து சேர்ந்தபோது, என் பங்குக் குரு என்னிடம் சொன்ன காரியத்திற்கு இது கிட்டத்தட்ட ஒத்து இருந்தது. அவர் என்னிடம்: "நான் உங்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன், என்றாலும் எனக்கு இங்கே இரண்டாவது உதவி பங்குக் குரு உண்மையில் தேவை யேயில்லை" என்று சொல்லியிருந்தார். என் சகோதரர் என்னை வற்புறுத்தியும் கூட, வேதபோதக ஊழியங்கள் என்னை ஈர்க்கவில்லை. ஏனென்று எனக்குத் தெரியவில்லை... இல்லை, தொலைதூர இடங்களில் ஒரு வேதபோதகனாகும்படி

நான் ஏற்படுத்தப்படவில்லை; இது எனக்குப் பொருந்த வில்லை. நான் உங்களிடம் சொன்னதுபோல, ஏதாவது ஒரு கிராமத்தில் ஒரு பங்குக்குருவாக, அல்லது உதவி பங்குக் குருவாக இருந்து, எல்லா மக்களையும் அறிந்து வைத்துக் கொண்டு, அவர்களுக்கு ஏதாவது நல்லது செய்வதையே நான் தேர்ந்துகொண்டேன். ஆனால் ஆப்பிரிக்க பழங்குடியினரின் மத்தியில், ஆப்பிரிக்கக் காடுகள் வழியாகப் பயணம் செய்வதையும், புதிய மொழிகளைக் கற்றுக்கொள்வதையும், ஒரே வார்த்தையில் கூறுவதானால், எனக்குக் கொஞ்சம்கூட பரிச்சயம் இல்லாத ஒரு உலகில் வாழ்வதையும் பொறுத்த வரை, இதெல்லாம் எனக்கு அளவுக்கு அதிகமானது என்றும், அந்த வேலை என்னுடையதல்ல என்றும் நான் உணர்ந்தேன். அது உண்மையாகவே என்னைக் கவரவில்லை. ஆனால் என் சகோதரரின் வேண்டுகோள்களின் பலனாக அறிவு என்னை என் வேதபோதக அழைத்தலுக்கு இட்டுச்சென்றது. நல்லது, நான் இங்கே முற்றிலுமாக இன்றியமையாதவனாக இல்லை என்பதாலும், அங்கே அவர்களுக்கு ஆட்கள் மிகவும் குறைவு படுவதாலும், "ஏன் கூடாது? நான் ஏன் அங்கு போகக் கூடாது!" என்று நான் நினைத்தேன்.

ஆகவே அந்த ஆண்டின் இறுதியில், நான் கர்தினால் லியேனார்ட்டிற்கும், அதன்பின் இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபைக்கும் கடிதங்கள் எழுதினேன். அவற்றில், மேற்றிராசனத்தைவிட்டுப் போக கர்தினால் எனக்கு அனுமதி தந்தார் என்றால், ஒரு வேதபோதகனாக இருக்கும்படி இஸ்பிரீத்து சாந்து குருக்கள் சபையில் மன உவப்போடு நான் சேர்வேன் என்று எழுதினேன். கர்தினாலிடமிருந்து வந்த பதில் எனக்கு சாதகமாக இருந்தது. "சரி, நிச்சயமாக, உண்மைதான். எங்கள் குருக்களில் ஒருவர் விலகிச் செல்வதைக் காண்பதில் நாங்கள் எப்போதுமே வருந்துகிறோம்தான், என்றாலும், வேதபோதக ஊழியங்களுக்குப் பயனுள்ளவராக இருப்பீர்களென்று நீங்கள் உண்மையாகவே நினைத்தால், உங்கள் வேண்டுகோளை மறுக்க எங்களால் இயலாது" என்று அவர் சொன்னார்.

### நவசந்நியாச மடத்தில்

வாஸ்தவமாகவே, இஸ்பிரீத்துசாந்து குருக்கள் ஒரு மேற்றிராசன குருவைத் தங்கள் சபைக்குள் வரவேற்பதில் மகிழ்ச்சியடைந்தார்கள். ஏனெனில், அவருடைய குருத்துவ உருவாக்கத்தைக் கவனிக்கும் தேவைகூட அவர்களுக்கு இருக்கவில்லை. நான் பிரெஞ்சு குருமடத்தில் அவர்களுடைய மாணவனாக இருந்திருந்தேன் என்பது உண்மைதான். என்றாலும், அது லீல் மேற்றிராசனத்திற்காகத்தானே அன்றி அவர்களுக்காக அல்ல; அவர்கள் என் உருவாக்கத்திற்கு ஒரு நேர்மறையான விதத்தில் தங்கள் பங்களிப்பைச் செய்திருக்க வில்லை. ஆகவே என்னை வரவேற்பதில் அவர்களுடைய மகிழ்ச்சி வெளிப்படையாக இருந்தது.

நான் இவ்வாறு ஆர்லியிலுள்ள நவசந்நியாச மடத்தில் சேர்ந்தேன். அது இன்றைய விமான நிலையத்திற்கு மிகவும் அருகாமையில் இருந்தது. அங்கே இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபைக்கு நவதுறவியர் மடத்திற்காக கொஞ்சம் நிலச்சொத்து இருந்தது. அங்கே என்னையும் சேர்த்து மூன்று குருக்கள் இருந்தோம். மூவருமே பிரெஞ்சு குருமடத்தின் முன்னாள்



கபோனில் குருமட அதிபராய் சங். மார்செல்

மாணவர்கள்தான். சுவாமி லோரென்ட் அவர்களில் ஒருவர். நாங்கள் குருமடத்தில் நண்பர்களாக இருந்தோம். தேவ பராமரிப்பு ஒருநாள் ஒரே நவசந்நியாச மடத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கும் என்று நாங்கள் ஒருபோதும் நினைத்ததில்லை. மீண்டும் தேவ பராமரிப்பு!... நாங்கள் எங்கள் நட்பைப் புதுப்பித்துக் கொண்டோம். நாங்கள் இருவரும் இஸ்பிரீத்து சாந்து குருக்களாக ஆனதால், இந்த நட்பு மேலும் ஆழமான தாக மாறியது. அங்கே சுவாமி வூல்ஃப் என்பவரும் இருந்தார். அவர் தியேகோ சுவாரெஸ் மேற்றிராசனத்தின் மேற்றிராணி-யார் ஆனார். ஆக, அங்கே நாங்கள் மூன்று குருக்களும், மொத்தமாக சுமார் எண்பது நவசந்நியாசிகளும் இருந்தோம் பிரான்ஸுக்கு மட்டுமாக! இது ஒரு மிகப் பெரிய எண்ணிக்கை. இவ்வெண்ணிக்கையைப்பற்றி நினைக்கும்போது, இப்போது ஏன் இது சாத்தியமாகவில்லையென்று நீங்கள் அதிசயிக்கக் கூடும்.

சுவாமி ஃபாவுர் நவதுறவிகள் தலைவராகவும், சுவாமி தெஸ்மாட்ஸ் அவர்களது ஆன்ம குருவாகவும் இருந்தார்கள். இவர்கள் மிக நல்ல இஸ்பிரீத்துசாந்து சபைக் குருக்களாக இருந்தார்கள். நாங்கள் நவதுறவற மடத்தில் ஓர் ஆண்டு காலத்தைக் கழித்தோம்; என் நன்மைத்தனமே, அது ஒரு குளிர்ச்சியான வருடமாக இருந்தது! நவதுறவியர்களை இப்படித் துன்பப்படச் செய்வது சாத்தியம் என்று நினைக்கும் போது நம்ப முடியவில்லை! அது அசாதாரணமான குளிர் மிகுந்த ஆண்டாக இருந்ததா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அது அப்படித்தான் இருந்தது என்று நான் நினைக்கி றேன். எது எப்படியிருந்தாலும், எங்கள் படுக்கை அறைகளில் எங்களுக்குக் கணப்புகள் இருக்கவில்லை; அனைவருக்கும் பொதுவான அறை மட்டும்தான் உஷ்ணமாக்கப்பட்டது. எங்கள் அறைகளில் குழாய்த் தண்ணீரும் அந்தக் காலத்தில் எங்களுக்குக் கிடைக்கவில்லை. நுழைவு மண்டபத்தின் ஒரு கோடியில் இருந்த ஒரு தண்ணீர்க்குழாயிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காக நாங்கள் ஒரு வாளியைத் தூக்கிக்கொண்டு போவோம். அந்த வாளியில் உள்ள தண்ணீர் அப்படியே உறைந்து போகும்! காலையில் எங்களை நாங்கள் சற்று கழுவி சுத்தப்படுத்திக்கொள்வதற்காக, வாளியிலிருந்த பனிக்கட்டியை நாங்கள் உடைக்க வேண்டியிருந்தது... நாங்கள் நான்கு, ஐந்து,

ஆறு போர்வைகளைப் பயன்படுத்தினோம். போர்வையின் பாரம்தான் கூடியதேயொழிய, உஷ்ணம் கிடைக்கவில்லை. நாங்கள் எப்போதுமே குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தோம். ஓ! அது பயங்கரமானதாக இருந்தது. அந்தக் குளிரால் நான் எப்படி இறக்காமல் இருந்தேனென்று எனக்குத் தெரியவில்லை.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, அவர்கள் சேசு சபைக் குருவான சுவாமி ரொட்ரீகஸ் என்பவரின் உத்தம தனத்தைப் பயிற்சி செய்தல் என்ற தலைப்பிலான நான்கு புத்தகங்களை நாங்கள் வாசிக்கும்படி செய்தார்கள். நாங்கள் வெளியேயுள்ள முற்றத்தில் ஒருவருக்குப் பின்னால் மற்றவர் நடந்தபடி, ரொட்ரீகஸ் புத்தகத்தை வாசிக்கவேண்டி யிருந்தது!!! அது பயங்கரக் குளிராக இருந்தது! புத்தகத்தைப் பிடித்துக்கொண்டிருக்கையில் எங்கள் விரல்கள் எல்லாம் மரத்துப்போகும்; ஆனாலும், எப்படியிருந்தாலும், நாங்கள் ஒருவர்பின் ஒருவராக நடந்தபடி அதை வாசித்தோம். ஆ! நவசந்நியாச மடம் இப்படித்தான் இருந்தது.

## துறவற வார்த்தைப்பாடும், முதல் நியமனமும்

நல்லபடியாக, என் நவதுறவறம் முடிந்தது. நான் *1932*, செப்டம்பர் *8*, திவ்விய கன்னிகையின் பிறப்பு விழா அன்று வார்த்தைப்பாடுகள் தந்தேன். அதன்பின் காபோனுக்கு என் முதல் பணி நியமனத்தை நான் பெற்றுக் கொண்டேன். நான் வேறு எங்காவது ஓர் இடத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்தக் குறிப்பிட்ட வேதபோதக ஊழியத்திற்கு என்னை இழுத்துக்கொண்டவர் நிச்சயமாக என் சகோதரர்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

காபோனின் மேற்றிராணியாரான டார்டி என்பவர் ஏற்கனவே நவசந்நியாச மடத்தில் என்னைக் காண வந்து இருந்தார். “உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் காபோனில் எங்களோடு வந்து சேர்ந்துகொள்வீர்கள்” என்று அவர் சொன்னார்.

“எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது” என்றேன் நான். அது அதிசிரேஷ்டரைப் பொறுத்தது.



வேதபோதக பணியில்

“ஒ, ஆமாம்! நான் அதில் நிச்சயமாயிருக்கிறேன். நீங்கள் நிச்சயமாக மறுக்கக் கூடாது! உங்கள் சகோதரர் அங்கே இருக்கிறார்; நீங்கள் உங்கள் சகோதரரைப் பின்பற்ற வேண்டும்.”

“அதிசிரேஷ்டர் சம்மதித்தால், நான் போவேன்.”

“நீங்கள் உரோமையில் படித்ததால், அங்கே குருமடத் தில் பேராசிரியராக இருப்பீர்கள்.”

ஓ! அதைப் பொறுத்தவரை...என்னை எல்லாவற்றிலும் அதிகமாக அச்சத்திற்கு உள்ளாக்கியது இதுதான். ஓ, இல்லை! இது இப்படி இருக்க முடியாது! நான் ஆத்தும மேய்ப்புப்பணி சார்ந்த வேலையைத்தான் உண்மையில் விரும்பினேன்; நான் குருத்துவ ஊழியத்தை உண்மையாகவே விரும்பினேன்; அதற்காகவே நான் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததுபோல உணர்ந்தேன். ஆனால் ஒரு பேராசிரியராக இருப்பது, ஆ... வேண்டவே வேண்டாம். ஒரு குருமடப் பேராசிரியரா... வேண்டாம்!

“உங்களுக்குத் தெரியுமா, நான் மற்றவர்களைவிட அதிகப் பொருத்தமானவன் இல்லை! நான் உரோமைக்குச் சென்றேன் என்ற ஒரே காரணத்தால், நான் மற்றவர்களைவிட நல்ல பேராசிரியராக இருப்பேன் என்று நினைக்காதீர்கள்” என்று நான் சொன்னேன்.

ஆனால் அவர் வற்புறுத்தினார்: “ஆ! ஆனால் ஆம்! ஆம், ஆம்!”

## காபோனில்: குருமடப் பேராசிரியரும், குருமட அதிபரும்

இவ்வாறு அதிசிரேஷ்டர் என்னை காபோனுக்கு நியமனம் செய்ய, நான் அக்டோபரில் புறப்பட்டுச் சென்றேன். அந்தக் காலத்தில் அங்கு செல்ல விமானங்கள் எதுவும் இல்லை என்பதால், நான் ஒரு படகில் ஏறினேன். அதில் காபோனுக்கு போய்ச் சேர இரண்டு வாரங்கள் ஆகியது. நான் என் பெற்றோரிடம் விடைபெற்றுக்கொண்டு, *1932* அக்டோபரில் புறப்பட்டேன். மேலும் இனி என் தாயை நான் ஒருபோதும் பார்க்கப்போவதில்லை, ஏனெனில் அவர்கள் *1938*-ல் இறந்து போனார்கள். அவர்கள் இறந்தபோது நான் இன்னும் காபோனில்தான் இருந்தேன் என்பதால், மீண்டும் அவர்களை பார்க்க என்னால் இயலவில்லை.

சுவாமி ஃபாவுரே[1] அதிபராக இருந்த குருமடத்திற்கு நான் நியமிக்கப்பட்டேன். அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து, மேற்றிராணியார் டார்டி என்னை குருமட அதிபராக நியமித்தார். துணை அதிபராக நான் சுவாமி பெர்ஜரைக் கொண்டிருந்தேன். துரதிருஷ்டவசமாக, அவர் இறந்து விட்டார். நாங்கள் இளம் குரு மாணவர்களை அக்கறையோடு கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. எல்லா வகுப்புகளை யும் நடத்துவது எளிதான வேலையாக இருக்கவில்லை. ஏனெனில் ஏறக்குறைய பதினைந்து மூத்த மாணவர்களோடு, பதினைந்து இளைநிலைக் குருமாணவர்களும் இருந்தார்கள். அந்த எல்லா வகுப்புகளுக்கும் நாங்கள் எப்படிப் பாடம் நடத்துவது? எங்கள் வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்வதற்காக, ஒரே சமயத்தில் எல்லா குருமாணவர்



**தன் இளைய சகோதரி மேரி கபிரியேலுடன்**

களுக்கும் பாடம் நடத்துவதற்காக, நாங்கள் ஒவ்வொரு ஆண்டு மாணவர்களுக்கும் சுற்று முறையில் வகுப்புகளை ஒழுங்கு செய்தோம். இப்போது இந்தக் குருமாணவர்களில் சிலர் காபோனிய மேற்றிராணிமார்களாக இருக்கிறார்கள்.

மேற்றிராணியார் ன்டோங் என் மாணவர், அவர் காபோனிலுள்ள ஓயெம் மேற்றிராசனத்தின் மேற்றிராணியார் ஆனார். காபோனின் எல்லையிலுள்ள ஃப்ரான்ஸ்வல்லில் இப்போது மேற்றிராணியாராக இருக்கிற ஆயர் ஃபெலீசியன் மேக்குவாக்கா என்பவரும் அப்படியே என் மாணவராக இருந்தவர்தான். அவ்வாறே மௌவடிலாவில் இன்று மேற்றிராணியாராக இருக்கிற வந். சிரியாக் ஒடாம்பா[3] என்பவரும் என் மாணவர்தான். மறுபுறத்தில், லீப்ரவீல்லின் இன்றைய அதிமேற்றிராணியாராக இருக்கிற வந். அங்குயிலே என் மாணவர் அல்ல. இன்னும் இங்கே வசித்துக் கொண்டு இருக்கிற ஒரு சில குருக்களும் என்னுடைய மாணவர்கள்தான்.

என் பொறுப்பில் இருந்த இளநிலைக் குருமாணவர்களின் மத்தியில், அங்கிருந்து போய்விட்ட சிலரும் இருந்தார்கள். அவர்களுக்கு இப்போது நிச்சயமாக வயது அறுபதுக்கு மேல் இருக்கவேண்டும்; அறுபத்தைந்து, எழுபது வயதிருக்கலாம். அவர்களில் சிலருக்கு என்னை நன்றாகத் தெரியும்; கடவுளுக்கு நன்றி, சுவாமி க்ரோஷே[4] காபோனில் வேத போதக ஊழியத்தை ஸ்தாபிப்பதற்கு இது மிகவும் உதவியாக இருந்தது. என் சகோதரரும், நானும், காபோனில் வேதபோதகர்களாக இருந்திராவிட்டால், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் வேதபோதக ஊழியம் ஒன்றை அங்கே நிறுவ எங்களால் ஒருபோதும் முடிந்திருக்காது. அங்குள்ள மேற்றிராணியார்கள் எங்களுக்கு மிக அதிகமாகவும், அங்கே வேதபோதக ஊழியத்தை நாங்கள் நிறுவ அரசாங்கம் தடை விதிக்கும் அளவுக்கும் நெருக்கடி தந்திருப்பார்கள். ஆனாலும் முன்பு ஒரு காலத்தில் என் மாணவர்களாக இருந்த மேற்றிராணிமாருக்கு என்னைத் திருப்பி அனுப்புவதும், எனக்கு எதிராகப் போர் தொடுப்பதும் கடினமானதாக இருந்தது. ஆகவே காபோனில் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையை எங்களால் ஸ்தாபிக்க முடிந்தது, நிச்சயமாகவே கடவுளின் ஒரு விசேஷ வரப்பிரசாதமாகவே இருந்தது. பாரம்பரியத்திற்குப் புத்துயிர் தருபவர்களும், அந்த மேற்றிராணியார்களுக்கு முன்பு நாங்கள் தந்த காரியத்திற்குப் புத்துயிர் அளித்துக் கொண்டிருப்பவர்களுமாகிய சுவாமி க்ரோஷே மற்றும் அவரோடு இருக்கும் குருக்களின் பலனாக விசுவாசத்தின் தீச்சுவாலை காபோனில் மீண்டும் பரவிக் கொண்டிருக்கிறது என்பதை நினைப்பது எனக்கு பெரும் ஆறுதலாக இருக்கிறது. நான் முன்பு ஒரு காலத்தில் அவர்களுக்காகச் செய்துகொண்டிருந்ததை, இப்போதும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம்.

## நோய், அதன்பின் ன்ட்யோல் வேதபோதக ஊழியம்

நான் அந்தக் குருமடத்தில் ஆறு ஆண்டுகளைக் கழித்தேன். இரண்டு ஆண்டுகள் பேராசிரியராகவும், நான்கு ஆண்டுகள் குருமட அதிபராகவும் இருந்தேன். இந்த வேலை மிகக் கடினமானதாக இருந்தது. சீதோஷ்ண நிலை மிகப் பயங்கரமானதாக இருந்தது. அந்த நாட்டிற்குள் அனுப்பப்பட்ட ஏராளமான இளம் வேதபோதகக் குருக்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இறந்து போனார்கள். நாங்கள் கல்லறைத் தோட்டத்திற்குச் சென்றபோது, எங்கள் வேத போதகர்களின் கல்லறைகளின்மீது, இருபத்தாறு வயதில் இறந்தார், இருபத்தேழு வயதில் இறந்தார், இருபத்தெட்டு வயதில் இறந்தார் என்ற வார்த்தைகளை நாங்கள் வாசித்தோம்... அங்கிருந்த காலநிலை தாங்க முடியாததாக இருந்தது. அந்தக் காலத்தில் அங்கிருந்த மலேரியா, ஃபிலாரியாஸிஸ், அமீபிய வயிற்றுப் போக்கு, குடற்புழுக்கள், ட்ஸெட்ஸே ஈ போன்ற பலவகையான பூச்சிகளிடமிருந்தும்,



நோய்களிலிருந்தும் ஒருவர் தம்மைப் பாதுகாத்துக்கொள்வது கடினமானதாக இருந்து - அது அச்சமூட்டுவதாக இருந்தது. கல்லீரல் நிணக்கசிவு நோயும் இருந்தது, இது மோசமான உணவாலும், உஷ்ணத்தாலும் கல்லீரல் நன்கு செயல்படாமல் போவதால் ஏற்படும் உள் இரத்தக் கசிவுநோய் ஆகும். கல்லீரல் நிணக்கசிவு நோய் மிகத் தீவிரமானது, உயிருக்கு ஆபத்தானது. என் சகோதரர் அங்கே இரண்டு வருடங்கள் இருந்த பிறகு, மிகவும் நோய்வாய்ப்பட்டார். என்னைப் பொறுத்தவரை, என் ஆறாம் ஆண்டு முடிவில், நான் பாதி இறந்தவனாக இருந்தேன். என்னால் மேற்கொண்டு என் வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போனது. என்னிடம் மேற்கொண்டு எந்தப் பலமும் எஞ்சியிருக்கவில்லை; நான் முற்றிலுமாக உடல் பலத்தை இழந்திருந்தேன்.

அந்தக் காலத்தில், ஒரு விதியாக, நாங்கள் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே பிரான்ஸிற்குத் திரும்பி வர வேண்டியிருந்தது. 1939-ல் பிரான்ஸிற்குத் திரும்பி வர எனக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நான் அதற்கு முன்னதாக, 1938-லேயே குருமடத்திலிருந்து புறப்பட்டு, உள்நாட்டு வேதபோதக ஊழியம் ஒன்றில் ஒரு வருடம் செலவழித்தேன்.

அங்கே நான் அதிக சௌகரியமாக இருந்தேன், என்றாலும் நான் அங்குள்ள மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இந்த ன்ட்யோல் வேதபோதகத்தில், பிற்கால மேற்றிராணியார் ன்டோங் ஆகவிருந்த சுவாமி ன்டோங் உடன் துணைக் குருவாகப் பணியாற்றுவதில் நான் மிக மகிழ்ச்சியாக இருந்தேன். எங்களுக்குள் நன்றாக ஒத்துப் போனது. காஸ்ட்ரேயிலிருந்த அமலோற்பவ சபைச் சகோதரிகள் அங்கே வேதபோதகர்களாக இருந்தனர்... ன்ட்யோலில் எங்களிடம் 90 சிறுவர்களும், 60 அல்லது 70 சிறுமிகளும் இருந்தார்கள். சகோதரிகள் சிறுமிகளைக் கவனித்துக் கொண்டார்கள் இந்த எல்லாச் சிறுமிகளுமே மடத்தில்தான் தங்கிப் படித்துவந்தார்கள். குருக்களாகிய நாங்கள் சிறுவர்கள் பள்ளியைக் கவனித்துக்கொண்டோம். நாங்கள் பின்பக்கமிருந்த நாட்டுப்புறத்தையும் அடிக்கடி சென்று சந்தித்தோம்.



**டோங்கிலாவில் சங். மார்செல் கட்டிய ஆலயம்**

## 1939 போர் – படைக்கு ஆட்சேர்ப்பு

1939-ல், போரின் தொடக்கத்தில் நான் ஐரோப்பாவுக்குத் திரும்பி வந்தேன். ஃப்ரீடவுனில், ஆங்கில கினியாவுக்கு அருகில் எதிர்பாராத விதமாக நாங்கள் போரில் சிக்கிக் கொண்டோம். தலைமை அதிகாரி, சுவாமி வெர்ஹில்லையும் என்னையும் எச்சரித்தார். ''ஒரு போர் தொடங்கப்போகிறது என்று நான் நினைக்கிறேன்'' என்று அவர் சொன்னார். உண்மையாகவே போர் பிரகடனம் செய்யப்பட்டது. அது நடந்தபோது, எங்கள் படகிலிருந்து வெளிச்சம் எதையும் காண முடியாதபடியும், அது ஏதாவது ஒரு நீர்மூழ்கிக் கப்பலின் நீர்மூழ்கி ஏவுகணையால் தாக்கப்படாதபடியும், முழுப் படகையும் மூடி மறைத்து நாங்கள் ஃப்ரீடவுனுக்குத் திரும்பி வந்தோம். அதன்பின் நாங்கள் ஐரோப்பாவுக்குத் திரும்பிப் போனோம். டாக்காரில், நாங்கள் சிறிது காலம் காத்திருந்தோம். அதன்பின் அங்கிருந்து, நாங்கள் போர்ப்படகுக் குழுக்களால் கூட்டிச்செல்லப்பட்டோம். ஐந்து அல்லது ஆறு பயணிகள் படகுகளை, நீர்மூழ்கிக் கப்பல்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றும்படி இரண்டு, மூன்று இராணுவப் படகுகள் பாதுகாப்பாக வந்தன. ஏனெனில் போர்ப்பிரகடனம் செய்யப்பட்டபின், சில பயணிகள்-படகுகள் மௌரிடேனிய கடற்கரையோரத்தில் மூழ்கடிக்கப்பட்டிருந்தன.

நாங்கள் எந்த அசம்பாவிதமும் நிகழாமல் போர்டோவைச் சென்றடைந்தோம். ஆனால் அது போர்க்காலமாக இருந்ததால், நாங்கள் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டோம். ஒரு மாதத்திற்குப் பிறகு, நான் ஆப்பிரிக்காவிற்குத் திரும்ப வேண்டியிருந்தது, ஒரு போர்வீரனாக! புறப்படுவதற்குமுன், அங்கிருந்த என் தந்தையையும், சகோதர, சகோதரிகளையும் ஒரு சில நாட்கள் பார்க்க மட்டுமே எனக்கு நேரம் இருந்தது.

## ஆப்பிரிக்காவுக்குத் திரும்பி வருதல் – போர்ப் பணியிலிருந்து விடுப்புப் பெறுதல்

நான் போர்டோவிலிருந்து புறப்பட வேண்டியிருந்தது. மீண்டும் ஒரு படகில் ஏறினேன். இராணுவப் படகுகள் டாக்கார் வரைக்கும் எங்களுக்குப் பாதுகாப்பாக வந்தன. பிற்பாடு படகு லீப்ரவீல் வரை தொடர்ந்து சென்றது. அங்கு நான் போர்ப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டேன்.

## டோங்கிலா வேதபோதகம்

மேற்றிராணியார் டார்டி, காட்டிலிருந்த வேதபோதக ஊழியமாகிய டோங்கிலா ஊழியத்திற்கு என்னை நியமித்தார். அது போர்க் காலமாக இருந்ததால் அங்கே நான் மீண்டும் இராணுவப் பணியில் சேர்க்கப்பட்டு, சாட் முதலிய இடங்களுக்கு அனுப்பப்பட்டேன். இவை பயனற்ற பயணங்களாக இருந்தன. பிற்பாடு நாங்கள் காபோனுக்கு மீண்டும் கூட்டி வரப்பட்டு நிறைய துன்பங்களை அனுபவித்தோம். ஏனெனில் காபோன், ஆங்கிலேயர்களின் உதவியுடன் காவுலின் படைத் தலைவரது போர்ப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. இது போர்க் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களையும், கம்யூனிஸ்ட்களையும் இந்நாட்டிற்குக் கொண்டுவந்தது. அது பயங்கரமானதாக இருந்தது; பிரெஞ்சுக்காரர்கள் ஒருவருக்கு



**டோங்கிலாவில் சகோதரர்களின் இல்லம்**

எதிராக மற்றவர்கள் போரிட்டுக்கொண்டது உள்ளூர்வாசிகளுக்கு ஒரு மிக மோசமான முன்மாதிரிகையாக இருந்தது. அது புலம்புதலுக்குரியதாக இருந்தது. மேற்றிராணியார் டார்டியும்கூட காவுலின் போர்த்தளபதியால் அனுப்பப்பட்ட ஒரு படகில் சிறிது காலம் சிறை வைக்கப்பட்டிருந்தார். அவருடைய விடுதலைக்காக பேரம்பேச வேண்டியிருந்தது. அங்கே அந்த ஏழைக் கறுப்பின மக்களுக்கு வெளிப்படையாகவே துர்மாதிரிகை விளைவித்த நம்ப முடியாத காரியங்கள் நிகழ்ந்தன. அது ஒரு மோசமான முன்னுதாரணமாக இருந்தது. எங்கள் வேதபோதக ஊழியத்திற்கு அது நன்மை பயப்பதாக இல்லை.

### மற்ற வேதபோதகங்கள்

நான் பல்வேறு வேதபோதகங்களுக்கு நியமிக்கப்பட்டேன்: லீப்ரவீல்லுக்கு சிறிது காலம், டோங்கிலாவுக்கு, அதன்பின் லாம்பரேனேக்கு, அங்கேதான் மிகப் பிரபலமாயிருந்த டாக்டர் ஸ்வீட்ஸர் இருந்தார். அவர் ஒரு பெரும் இசைக் கலைஞர், ஜெர்மானிய பாக் இசை இசைப்பதில் சிறந்தவர். அவர் புரொட்டஸ்டாண்ட் போதகர் ஆவார். அவர் ஸ்ட்ராஸ்பர்க்கிலிருந்த புரொட்டஸ்டாண்ட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்துவந்தார். அவர் லாம்பரே-னேயில், தாம் கட்டிக்கொண்டிருந்த மருத்துவமனையில் இருந்தார். அவருக்குக் கத்தோலிக்க வேதபோதக ஊழியத்தோடு மிக நல்ல உறவுகள் இருந்தன. நான் அவரைப் பல தடவைகள் சந்திக்க வாய்ப்புப் பெற்றேன்.

### புதிய நியமனம்

ஒருநாள், ஒரு சில குழந்தைகளோடு ஒரு சிறிய இயந்திரப் படகில் சுற்றி வந்துகொண்டிருந்தபோது, உள்ளீடற்ற மரத்தாலான ஒரு சிறு தட்டையான படகு தொலைவில் எங்களை நோக்கி வருவதை நான் கண்டேன். நான் அதை அடையாளம் காணவில்லை. ஆனால் குழந்தைகளின் பார்வை கூர்மையானதாக இருந்தது.

அவர்கள் என்னிடம், “சுவாமி, அது வேதபோதக இல்லத்தைச் சேர்ந்த சிறு படகு. அது வேதபோதக இல்லத்திலிருந்துதான் வருகிறது” என்று சொன்னார்கள்.

“வேதபோதக இல்லத்திலிருந்தா? ஏன்? என்ன விஷயம்? அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள்? நமக்கு அறிவிக்க அவர்களிடம் செய்தி ஏதாவது உள்ளதா?”

“ஆ! ஆம், அது நிச்சயமாக வேதபோதக இல்லத்திலிருந்து வரும் படகுதான், நிச்சயமாக அது அதேதான்.”

உண்மையில் அந்தச் சிறு படகு எங்களை நோக்கித்தான் வந்துகொண்டிருந்தது. அது எங்கள் படகுக்கு இணையாக நெருங்கி வந்தது...

“ஆ! சுவாமி, உங்களுக்கு ஓர் அவசரக் கடிதம் வந்திருக்கிறது”.

ஓ பரிதாபமே! அது 1945-ஆம் ஆண்டு, போர் முடிவுக்கு வந்துகொண்டிருந்த காலம். தகவல் தொடர்பு வசதிகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு வந்தன. வந்தவர் புகழ்பெற்ற சுவாமி லாரோன். (சுவாமி லாரோன் நவசந்நியாச மடத்தில் என்னோடு இருந்தவர்). பிரான்ஸ் மாகாண அதிபராக ஆகியிருந்த அவர் மோர்ட்டேனில் இருந்த தத்துவவியல் குருமடத்தின் அதிபராக நான் நியமிக்கப்பட ஏதுவாக எப்படியாவது என்னை என் பணிகளிலிருந்து விடுவிக்கும்படி மேற்றிராணியார் டார்டியிடம் கேட்டுக்கொண்டிருந்தார். ஓ பரிதாபமே! நான் அழுதிருக்கக் கூடும்... ஓ! நான் ஐரோப்பாவிற்கு இனியும் திரும்பிச் செல்ல விரும்பவில்லை: என் தாய் இறந்து விட்டார்கள், என் தந்தை ஒரு சித்திரவதை முகாமில் இருந்தார். என் சகோதரர்களும், சகோதரிகளும், அவரவர் வாழ்வில் அமைதியாக ஈடுபட்டிருந்தனர். இதை நான் முடிவு செய்ய முடியும் என்றால், நான் பிரான்ஸுக்கு ஒருபோதும் திரும்பிச் செல்லாமல் காபோனிலேயே நிரந்தரமாகத் தங்கியிருப்பேன். ஓ! இது எனக்கு ஒரு பாரமான துன்ப சோதனையாக இருந்தது, இதை என்னால் உங்களுக்கு உறுதியாகக் கூற முடியும்! இப்போது, நான் காபோனை விட்டுப் புறப்படுவது எனக்குக் கடமையாயிற்று!

### ஐரோப்பாவுக்குத் திரும்பி வருதல்

ஆகவே என் வாழ்வு ஒவ்வொரு காலகட்டமாக மாறிக்கொண்டே வந்தது. காபோன் காலகட்டம் முடிந்துகொண்டிருந்தது: காபோன் வேதபோதக இல்லங்களில் பதின்மூன்று வருடங்கள். இப்போது ஐரோப்பாவில் ஒரு குறுகிய காலத்திற்குத் தங்கியிருக்க வேண்டிய காலகட்டம். போர் முடிந்த போது, 1945-ல் நான் காபோனிலிருந்து புறப்பட்டேன். குடியேற்ற நாடுகளோடு மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளத் தொடங்கியிருந்த இராணுவ விமானங்கள் தங்கள் முதல் பயணங்களில் வயதானவர்களையும், நோயாளிகளையும், அல்லது புறப்படுவதற்கு விசேஷ காரணங்களைக் கொண்டிருந்தவர் களையும் பிரான்ஸிற்குத் திரும்ப அழைத்து வந்தன. லீப்ரவீல்லிலிருந்து பிரான்ஸுக்குப் புறப்பட்டுக்கொண்டு இருந்த முதல் விமானங்களில் ஒன்றில் என்னை ஏற்றுவதில் சபையின் அதிகாரிகள் வெற்றி பெற்றார்கள். இன்றைய நாட்களில் காபோனுக்கு விமானம் மூலம் செல்ல ஆறு அல்லது ஏழு மணி நேரமாகிறது, ஆனால் அந்தக் காலத்தில், விமானத்திலும்கூட, மூன்று நாட்கள் பிடித்தது. முதல் பயண கட்டம் துவாலாவுக்கு, இரண்டாவது



**மோர்ட்டேனில் குருமட அதிபர்**

கட்டம் வடக்கு நைஜீரியாவிலுள்ள கானோவுக்கு, மூன்றாவது கட்டம் அல்ஜியர்ஸுக்கு, அதன்பின் அல்ஜியர்ஸிலிருந்து பாரிஸுக்கு. விமானங்கள் இரவில் பறக்கவில்லை. அவை சிறிய விமானங்கள், மிக மெதுவாகச் செல்பவை. நான் என் சக குருக்களில் ஒருவருடன் புறப்பட்டேன், அவர் ஏதோ நோய்வாய்ப்பட்டிருந்தார். நாங்கள் பிரான்ஸுக்குத் திரும்பி வந்தோம்.

## மோர்ட்டேனில் குருமட அதிபர்

நான் மோர்ட்டேனிலுள்ள குருமடத்தில் அதிபரா யிருக்கும்படி அனுப்பப்பட்டேன். இது இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் குருமடம் ஆகும். மோர்ட்டேன் குருமடம், கட்டிடக்கலையின் அடிப்படையில் பேசும்போது, குறைந்தபட்சம் ஒரு மிக அழகிய கட்டிடமாக இருந்தது. அது ஒரு பழைய பதினோராம் நூற்றாண்டு மடமாக இருந்தது, ஓரளவுக்கு ருஃபெக் மடத்தைப்போல் இருந்தது. அதைவிட ஏதோ ஒரு விதத்தில் சற்று சிறியதாகவும், சற்று கூடுதல் ஒடுக்கமானதாகவும் இருந்தது. ஆனாலும் அதுவும் அருமை யான சிலுவை வடிவச் சிற்றாலயப் பகுதிகளோடு மிக அழகாக இருந்தது. மேலும் வரலாற்றுச் சின்னங்களுக்கான சங்கத்தால் முழுவதுமாகப் புதுப்பிக்கப்பட்டும் இருந்தது. அது முழுவது மாக அதியற்புதமாக இருந்தது. அதனுடன் முன்பு மேற்றிரா சனத்தின் இளநிலைக் குருமடமாக இருந்த கட்டிடமும் இருந்தது. போரின்போது, அது மூடப்பட்டு, காயமடைந்தவர் களுக்காகவும், நோயாளிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன்பின் அது சிறிது சிறிதாக, இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையினர் தங்கள் தத்துவவியல் குருமடமாகப் பயன்படுத்தும்படி, இந்தச் சபைக்குத் தரப்பட்டது.

இந்தக் குருமடத்தில் இரண்டாண்டு தத்துவவியல் கல்விக்காக 110 மாணவர்கள் இருந்தார்கள், ஒவ்வொரு ஆண்டுக் கல்விக்கும் 55 மாணவர்கள். இது அந்தக் காலத்தில் பிரமாண்டமான, மிகவும் தனித்துவமுள்ள எண்ணிக்கையாக இருந்தது. அதே அளவு குருமாணவர்களைக் கொண்டிருக் கவே நாமும் விரும்புவோம். இயல்பாகவே அங்கே தத்துவ-வியல் மற்றும் அதனோடு தொடர்புள்ள எல்லாப் பாடங் களுக்கும் உரிய பேராசிரியர்களைக் கொண்ட கல்வி கற்பிக்கும் குழு இருந்தது. நான் அதன் அதிபராக இருந்தேன், மாலையில் நான் மாணவர்களுக்கு ஞான உரைகள் நடத்து வேன். இந்த ஞான உரைகள் சில சிறிய புத்தகங்களாக வெளிவந்தன. நான் அவற்றை பிற்பாடு ஒளிநகல் எடுத்து வைத்திருந்தேன். அங்கே நான் இரண்டு ஆண்டுகளைச் செலவிட்டேன். இந்த வருடங்கள் காபோனில் இருந்த நிலையிலிருந்து இயல்பாகவே முற்றிலும் மாறுபட்டவையாக இருந்தன. ஆனால் அங்கே அப்போதுதான் நவதுறவற மடத்தில் இருந்து வந்திருந்த நல்ல, இளைஞர்கள் இருந்தனர். இவர்கள் நவதுறவற மடத்திலிருந்து வந்ததன் காரணமாக, நவசந்நியாச ஆர்வப் பற்றுதல் நிரம்பியவர்களாகவே இன்னும் இருந்தனர். இவர்கள் பாரிஸுக்கு மிக அருகில் இருந்த ஷெவில்லிலாரூவிலிருந்த வேதசாஸ்திரக் குருமடத்திற்குப் புறப்பட்டுப் போவதற்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

**குறிப்பு:**

1 சுவாமி ஷான்-பாப்டிஸ்ட் ஃபாவ்ரே பின்னாளில் லாம்பரேனேயிலுள்ள அர்ச். பிரான்சிஸ் சவேரியார் வேதபோதகத்தின் சிரேஷ்டராக நியமிக்கப்பட்டார். அவர் 1947, பெப்ருவரி 13 அன்று லோங்கோவின் அப்போஸ்தலிக்க முதன்மைக் குரு ஆனார்..

2 ஆயர் மேக்குவாக்கா என்பவர் இப்போது ஃப்ரான்ஸ்வீல்லின் முன்னாள் ஆயராக இருக்கிறார். 1996 நவம்பரில் ஆயர் மோடிபோ ன்ஸோக்கேனா என்பவர் அங்கே ஆயர் ஆனார்.

3 ஆயர் ஒடாம்பா 1996 ஜூலை 7 அன்று மரணமடைந்தார்.

4 1976-ல் குருப்பட்டம் பெற்ற சுவாமி பேட்ரிக் க்ரோஷே அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக் குருவாக இருக்கிறார்.

செமார்ட்டேனிலுள்ள குருமடத்தின் அதிபராக எனது இரண்டாவது வருட முடிவில், ஜூன் மாதத்தின்போது, துணை அதிபர் என்னைத் தேடி வந்தார்.

"அதிசிரேஷ்டர் தொலைபேசியில் காத்திருக்கிறார், உங்களோடு பேச விரும்புகிறார்" என்றார் அவர்.

மேற்றிராணியார் ல ஹன்ஸெக் என்னிடம்:

"சுவாமி, உங்களைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள்... டாக்காரின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்!"

டாக்காரின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி! நடைமுறைப்படி பேசுவதானால், இதற்கு டாக்காரின் மேற்றிராணியார் என்பது அர்த்தம்!


நான் காபோனின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தேன் என்று அவர் என்னிடம் சொல்லியிருந்தார் என்றால், எந்த ஒரு சூழ்நிலையிலும் அப்போஸ்தலிக்க முதன்மைக் குருவாக, அல்லது ஒரு மேற்றிராணியாராக இருக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னிடம் கொஞ்சம்கூட இல்லை, நான் அதைத் தேடவில்லை என்றாலும் எனக்கு அது விளங்கியிருக்கும். நான் காபோனிலிருந்து வந்திருந்தேன். பதின்மூன்று வருடங்கள் வேதபோதக இல்லங்களில் கழித்த பிறகு, நான் குருக்களை அறிந்திருந்தேன். அங்கு பேசுகின்ற மொழியை அறிந்திருந்தேன். அங்குள்ள மக்களில் பலரை அறிந்திருந்தேன். காபோனிலுள்ள குருக்களோடும், ஒட்டு மொத்த கத்தோலிக்க குடும்பத்தோடும் நான் உடனடியாக நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தேன்.

ஆனால் டாக்கார்! டாக்கார் வழியாகப் போகும் போது, நடைமுறையில் நீங்கள் முஸ்லிம்களை மட்டும்தான் பார்ப்பீர்கள்; அநேக குருக்களையோ, கத்தோலிக்க மையங்களையோ பார்க்க மாட்டீர்கள். நான் யாரையும், அதாவது அங்கிருந்த குருக்களையோ, அல்லது சகோதரிகளின் சபைகளையோ (க்ளூனி சகோதரிகள் சபை மற்றும் காஸ்ட்ரேயின் அமல உற்பவத்தின் சகோதரிகள் சபை) நான் அறிந்தேயிராத அதைப் போன்ற ஒரு மேற்றிராசனத்திற்குப் போவதென்றால்! ... நான் ஒவ்வொரு காரியத்திற்கும் அறிமுகம் செய்துவைக்கப்பட வேண்டியிருக்கும். மிகத் துல்லியமாக அங்கே மிக அதிகப் பெரும்பான்மையினராக இருந்த முஸ்லிம்களின் மத்தியில் நான் இருக்க நேரிடும். அங்கு வசித்த 35 இலட்சம் மக்களில், 30 இலட்சம் பேர் முஸ்லிம்கள், சுமார் ஐம்பதாயிரம் பேர் கத்தோலிக்கர்கள், மீதமுள்ளவர்கள் அனிமிஸ்ட்கள் (மனிதர்களைத் தவிர மற்ற உயிருள்ள சிருஷ்டிகளுக்கும் ஆத்துமம் உண்டு என்று நம்புபவர்கள்); எப்படியானாலும் சரி; நானாக எதையும் தேர்ந்துகொள்ள வழியில்லை. மேற்றிராணியார் ல ஹன்ஸெக் என்னிடம்: "நீங்கள் ஒரு துறவி; நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்! சரி என்றோ, முடியாது என்றோ சொல்ல உங்களுக்கு உரிமையில்லை. ஆம் என்று பதிலளிக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்" என்று கூறினார். ஆகவே நான் என்ன செய்ய முடியும்?

எனவே நான் பாரிஸுக்குச் சென்று, அதிசிரேஷ்டரை சந்தித்தேன். என்னை ஒரு மேற்றிராணியாராக யார் அபிஷேகம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இது எனக்கு ஒரு பெரிய மாறுதலாக இருக்கப்போகிறது. ஒரு வேத போதகராக, அல்லது ஒரு குருமடத்தின் அதிபராக இருப்பதும் கூட, மக்களோடு, விசுவாசிகளோடு நேரடித் தொடர்பில் இருப்பதாக இருந்தது. ஆனால் ஒரு மேற்றிராணியார் இதை விட உயர்ந்த மட்டத்தில் இருக்கிறார். அவருடைய தொடர்பு வேதபோதகர்களோடுதான். இனி மக்களோடு அவருக்கு எந்த நேரடித் தொடர்பும் இல்லை. இதையும்கூட ஒதுக்கிவைத்து விட்டுப் பார்த்தால், ஒரு மேற்றிராணியாராக இருப்பது என்ற உண்மையும்கூட, மக்களிடமிருந்து ஒருவரை ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு விலக்கி வைக்கிறது: "பார்த்தீர்களா! வந்திக்கத் தக்க மேற்றிராணியாரவர்கள்! நீங்கள் மேற்றிராணியாரை வரவேற்கப் போகிறீர்கள்!..." ஓ நேரடியாகவே அவர் ஒரு சுரூபப் பீடத்தின்மீது இருப்பதுபோல ஆகிவிடுகிறது, இது உங்களுக்குப் புரியும், அவருக்கு இனி எந்தத் தொடர்பும் கிடையாது... இத்தோடு சேர்த்து, இயல்பாகவே இன்னும் பெரிய பொறுப்புகளும் வருகின்றன. ஒரு முழு மேற்றிராசனத்தின் ஞான ரீதியான பொறுப்பு என்பது சிறிய காரியமல்ல.

### மேற்றிராணித்துவ அபிஷேகம்

கர்தினால் லியேனார்ட் லீல்லின் மேற்றிராணியாராக இருந்ததால் (இவர்தான் என்னை ஒரு குருவாக அபிஷேகம் செய்தவர்), இந்த அபிஷேகத்தை நடத்த அவருக்கு சம்மதமா என்று அவரிடம் கேட்கப்பட்டது. அவரும் சம்மதிக்கவே, நான் பிறந்த பங்காகிய டூர்கோயிங் மாதா பங்கில்,செப்டம்பர்



டாக்காரிலுள்ள மேற்றிராசன ஆலயம்

18 அன்று அபிஷேகத்தை நடத்துவது என்று முடிவு செய்யப் பட்டது. வழக்கமான உரையில், நான் பிரெஞ்சுக் குருமடத் தில் சுவாமி ல ஃப்ளோக்கிடம் பெற்றுக்கொண்ட குருத்துவ உருவாக்கத்தைப்பற்றிச் சாடையாகக் குறிப்பிட்டுப் பேசினேன். எனக்கு நல்ல, ஆரோக்கியமான விசுவாசக் கொள்கைகளைக் கற்பித்ததற்காகவும், வாழ்விலும் மரணத் திலும் என்னை நம் ஆண்டவரோடு ஒன்றித்ததற்காகவும், திருச்சபை கடந்து சென்றுகொண்டிருந்த நாடகத்தையும், சத்தியத்திற்கு முரண்பட்டவையும், நம் ஆண்டவருக்கு எதிரானவையுமான தப்பறைகளையும் புரிந்துகெள்ள எனக்கு உதவியதற்காகவும் சுவாமி ல ஃப்ளோக்கிற்கு நான் எவ்வளவு நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்பதுபற்றிப் பேசினேன். நல்லது, இது கவனிக்கப்படாமல் போகவில்லை! அந்தச் சமயத்தில் என்னிடம் யாரும் எதுவும் சொல்லவில்லை என்பது வாஸ்தவமே, ஆனால் கர்தினால் கேட்டுக்கொண்டிருந்தார். உடனே பாரிஸில் பாப்பரசரின் இராஜாங்கத் தூதராக இருந்தவரிடம் போய் எல்லாவற்றையும் சொல்வதைவிடச் சிறந்த காரியம் எதுவுமில்லை என்று அவர் நினைத்தார். இந்த அரசுத் தூதர் வேறு யாருமல்ல, எதிர்கால பாப்பரசர் 23-ஆம் அருளப்பராக வரவிருந்த மேற்றிராணியார் ரோன்கால்லிதான்!

## டாக்காரின் அப்போஸ்தலிக்க பிரதிநிதி

அதன்பின் நான் டாக்காருக்கு புறப்பட்டுச் சென்றேன். அது அக்டோபர் மாதத்தின் போது என்று நான் நினைக்கிறேன். டாக்காரில் அதிகாரிகளும், குருக்களும் என்னை அன்போடு வரவேற்றனர். ஆகவே இந்த மேற்றிராசனத்திற்குப் பொறுப்பானவனாக, இதோ நான் வந்து விட்டேன்; என்னால் முடிந்த வரை நன்றாக, என் திறமை முழுவதை யும் பயன்படுத்தி, அதற்கு நான் என்னை அர்ப்பணித்துக் கொள்ளப்போகிறேன். நான் செயல்படுத்த விரும்பிய முதல் திட்டம் சிறுவர்களுக்கான ஒரு பள்ளியை நிறுவுவதாகும். ஏனெனில் அப்படி ஒரு பள்ளி உண்மையாகவே அங்கு குறைவாயிருந்தது. அங்கே சிறுமிகளுக்குப் பள்ளிகள் இருந்தன. அவை க்ளூனியின் அர்ச். சூசையப்பர் சகோதரிக ளாலும், காஸ்ட்ரேயின் சகோதரிகளாலும் நடத்தப்பட்டு, மிக நன்றாக செயல்பட்டுக்கொண்டிருந்தன. அவர்களிடம் சிறுமிகளுக்கான மிக அற்புதமான தனிப் பள்ளிகள் இருந்தன. ஆனால் சிறுவர்களுக்கு எதுவுமில்லை. ஆகவே பல குடும்பங் களிலிருந்து மக்கள் உடனடியாக என்னிடம் வந்தனர்.


பாப்பரசர் 12-ம் பத்திநாதருடன்

“வந்திக்கத்தக்க மேற்றிராணியார் அவர்களே, எங்கள் சிறுவர்களுக்கான ஒரு பள்ளியை எங்களுக்குத் தரும்படி நீங்கள் ஏதாவது செய்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். சிறுமிகளுக்கென்று எங்களுக்குத் தேவையான எல்லாமும் இங்குள்ளது, ஆனால் சிறுவர்களுக்கென்று எங்களுக்குத் தேவையான எதுவுமில்லை”.

“சிறுவர்களுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் முதலாய் இல்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது” என்றேன் நான்.

ஆகவே நான் முயற்சியெடுக்கத் தொடங்கினேன். ஒரு வருடத்திற்குப் பிறகு, மரியாயின் குருக்கள் சபையைச் சேர்ந்த தந்தையர்களையும், குறிப்பாக செயிண்ட் ப்ரியூக்கில்[1] இருந்த பிரெஞ்சு மாகாணத்தின் சிரேஷ்டராகிய சுவாமி தாமஸ் என்பவரையும் சந்திப்பதற்காக நான் பிரான்ஸுக்கு மீண்டும் புறப்பட்டேன்.

## அப்போஸ்தலிக்க பிரதிநிதி

நான் செப்டம்பர் 1948-ல் எங்கள் தாய்மடத்திற்கு வந்து சேர்ந்தபோது, அதிசிரேஷ்டர் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வாசலுக்கு வந்தார்.

“உள்ளே வாருங்கள், வந்திக்கத்தக்க ஆண்டகை யவர்களே, உள்ளே வாருங்கள். உங்களிடம் நான் ஒன்று சொல்ல வேண்டும்.”

“அது என்ன?... அவர்கள் என்னிட மிருந்து இப்போது என்ன விரும்பு கிறார்கள்?”

“வாருங்கள், வரவேற்பறைக்குள் வாருங்கள்.”

“அதன்பின் அவர் சொன்னார்: நீங்கள் முடியாது என்று சொல்லப் போவதில்லை! நீங்கள் பாப்பரசரால் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்.”

“இதற்கு என்ன அர்த்தம்? நான் டாக்காரின் அப்போஸ்தலிக்கப் பிரதி-நிதியாக. டாக்கார் மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக இருக்கிறேன். அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியா? அதற்கு என்ன அர்த்தம்?”

“நீங்கள் பாப்பரசரின் கீழ், ஆப்பிரிக்காவிலுள்ள பிரெஞ்சு மொழி பேசும் அனைத்து மேற்றிராசனங்களுக்கும் பொறுப்பாளராக இருப்பீர்கள். நீங்கள் அங்கே தொடர்பு களை ஏற்படுத்த வேண்டும். மேலும், இது மிக எளிமையானது; பாப்பரசர் உங்களை அக்டோபரில் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார். நீங்கள் உரோமைக்குப் போகவேண்டும். நீங்கள் பாப்பரசரால் வரவேற்கப்படுவீர்கள்; அதன்பின் நீங்கள் உரோமையிலுள்ள அலுவலகங்களுக்குச் செல்வீர்கள். நீங்கள் என்ன செய்யவேண்டியிருக்கும் என்று அவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்.”

ஓ என் சர்வேசுரா! என்னை அப்படியே அமைதியாக விட்டுவிட அவர்களால் முடியாதா? புறப்பட்டுப் போய் ஆப்பிரிக்கா முழுவதும் பயணம் செய்ய வேண்டுமா! அதுவும் மற்ற சபைகளுக்கு? வெண் குருக்கள், சேசு சபைக் குருக்கள், லயோனிலுள்ள ஆப்பிரிக்க வேதபோதகக் குருக்கள்... தங்களைச் சந்திக்க வருகிற அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஓர்

இஸ்பிரீத்துசாந்து சபைக் குருவாக இருந்தால், அவர்கள் பொறாமைப்படுவார்கள். ஓ என் சர்வேசுரா!

"நீங்கள் மறுக்கப் போவதில்லை! இது சபைக்கு ஒரு மகிமை; நாம் ஒருபோதும் ஓர் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியைக் கொண்டிருந்ததில்லை!" "அருமை!" என்று நான் பதிலளித்தேன். "நான் ஏற்றுக்கொள்ள முழுவதும் சித்தமாயிருக்கிறேன்..." (ஓ! இதெல்லாமே மிக நன்றாக இருக்கிறது, ஆனால்... ஓ என் சர்வேசுரா! ஓ என் சர்வேசுரா!)

ஆகவே நான் புறப்பட்டு பரிசுத்த பிதா பாப்பரசரைச் சந்திக்கச் சென்றேன். அவர் ஓர் உண்மையான தந்தையைப் போல என்னை வரவேற்றார். எங்களுக்குள் சிந்தனையில் பெரும் ஐக்கியம் இருப்பதாகவும், நம் ஆண்டவரின் இராச்சியத்தைப் பரப்பவும், உண்மையாகவே கிறீஸ்தவ, குருத்துவ வாழ்வை வாழவும் எங்களுக்குள்ள ஆசையால் நாங்கள் நன்கு இணைக்கப்பட்டிருந்தோம் என்றும் நான் உடனே உணர்ந்தேன். நான் பாப்பரசர் பன்னிரண்டாம் பத்திநாதரோடு நடந்த இந்தச் சந்திப்பால் உண்மையாகவே நெகிழ்ச்சியுற்றேன். நாங்கள் ஒவ்வொன்றாகப் பேசினோம். ஆப்பிரிக்கப் தேசம் முழுவதிலும் சுவிசேஷப் பரம்புதலை வளர்ப்பதற்கு, தாம் என்னைத்தான் சார்ந்திருப்பதாகவும்,



அப்போஸ்தலிக்கப் பிரதிநிதிக்கு வரவேற்பு

நான் வழிநடத்துவது மட்டுமின்றி, இந்த இடங்களைச் சந்திக்க வேண்டுமென்றும் அவர் என்னிடம் சொன்னார். நான் என்ன பார்த்தேன், என்ன கேட்டேன் என்பது பற்றிய ஒரு அறிக்கையைத் தர வேண்டியிருக்கும்; சுவிசேஷப் பரம்புதலுக்கான ஆலோசனைகளைத் தர வேண்டியிருக்கும்; மேற்றிராணிமார்களை ஊக்கப்படுத்த வேண்டியிருக்கும்; வெவ்வேறு பிரதேசங்களில் மேற்றிராணித்துவ சங்கங்களை ஸ்தாபிக்கவும் வேண்டியிருக்கும் (என்று அவர் கூறினார்). அவரே மேலும் தொடர்ந்து கூறியதாவது, "இதெல்லாம் விசுவாசப் பரம்புதலின் தலைவராகிய கர்தினால் அவர்களால் எனக்குச் சொல்லப்படும், இயல்பாகவே, நீங்கள் அவரைச் சென்று பார்க்கவேண்டும்; அவர் எல்லாவற்றையும்பற்றி மிகத் துல்லியமான உத்தரவுகளை உங்களுக்குத் தருவார்" என்றும் சொன்னார். எது எப்படியிருந்தாலும் இந்த ஐக்கியச் செயல்பாடு மிகுந்த பயன் அளிப்பதாகவும், மிக நல்லதாகவும், மிகுந்த பலனுள்ளதாகவும் இருக்கும் என்று பரிசுத்த பிதா நம்பினார். மேலும் நான் அவரைச் சந்திக்க வேண்டியிருந்தால், எனக்கு உதவவும், என்னை வரவேற்கவும்கூட தாம் தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

நான் விசுவாசப் பரம்புதலின் தலைவராகிய கர்தினாலைப் பார்க்கச் சென்றேன். சூழ்நிலை எப்படி இருந்ததென்று அவர் எனக்குத் துல்லியமாக விளக்கிக் கூறினார். "நீங்கள் நாற்பத்தாறு மேற்றிராசனங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும், மேற்றிராசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமா, குறைக்க வேண்டுமா, புதிய மேற்றிராணிமாரை ஏற்படுத்த வேண்டுமா என்பதையெல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு மேற்றிராணியார் பதவி விலகினால், அல்லது இறந்தால், மற்ற மேற்றிராணியாரை நியமிப்பது போன்ற காரியங்களில் உரோமைக்குப் பெயர்களைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு உங்களுடையதே. அதாவது தனிப்பட்ட நபர்கள் பற்றிய கோப்புகளைத் தயாரிக்க வேண்டியிருக்கும். துறவற சபைகளின் அதிசிரேஷ்டர்களோடு நீங்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும், ஏனெனில் மேற்றிராணியார் பதவிக்குரிய நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அவர்களுக்கும் உரியதாக இருக்கிறது, ஏனெனில் தங்கள் சபையில் உள்ளவர்களில் யார் மேற்றிராணித்துவ பதவிக்கு மற்ற அனைவரிலும் அதிகப் பொருத்தமானவராக இருப்பார் என்பது போன்ற காரியங்களை அவர்கள்தான் உங்களுக்குச் சொல்லவேண்டும்" என்று அவர் கூறினார்.

ஆண்டவரே, ஓ என் ஆண்டவரே, ஓ என் ஆண்டவரே! என் மேற்றிராசனத்தைக் கவனித்துக்கொண்டு, டாக்காரிலேயே அமைதியாக இருந்துகொள்ள வேண்டுமென்று நினைத்த எனக்கு உங்களுக்கு துணை அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஒருவர் இருப்பாரென்றும் எனக்கு சொல்லப்பட்டது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு, 1950-ல் நான் உண்மையிலேயே அப்படி ஒருவரை வரவேற்றேன்; அவர்தான் மேற்றிராணியார் கிபெர்ட். இவரை டாக்கார் மேற்றிராசன ஆலயத்தில் நான் அபிஷேகம் செய்திருந்தேன். நான் நடைமுறையில் எப்போதுமே மேற்றிராசனத்திற்கு வெளியே தான் இருந்தேன் என்பதால், இவர் மேற்றிராசனத்தில் எனக்குச் சிறிது உதவியாக இருந்தார். நீங்கள் எளிதாகப்

புரிந்துகொள்ள முடிகிறபடி, மேற்றிராசனங்களைச் சந்திப்பது, மேற்றிராணியார்களை ஒன்றுகூட்டுவது என்று நான் தொடர்ச்சியாகப் பயணம் செய்துகொண்டே இருக்கவேண்டியிருந்தது. நாற்பத்தாறு மேற்றிராசனங்கள் என்பது சிறிய காரியம் அல்ல. அவை வெகு தொலைவில் இருந்தன: மடகாஸ்கர், ரீயூனியன், ஜிபௌட்டி, மொராக்கோ, பிரெஞ்சு பூமத்திய ஆப்பிரிக்கா, மேற்கு பிரெஞ்சு ஆப்பிரிக்கா முழுவதும், கேமரூன் போன்ற மேற்றிராசனங்கள். உங்களால் கற்பனை செய்ய முடிகிறபடி இந்தச் சந்திப்புகள் எல்லாவற்றிற்கும் பல வாரங்கள் தேவைப்பட்டன.

## வேதபோதகங்களின் விரிவாக்கம்

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு மேற்றிராணி-யாரை நியமிப்பது அவசியமாயிருந்தால், நான் சம்பந்தப்பட்ட துறவற சபையின் அதிசிரேஷ்டரைச் சென்று சந்திக்க வேண்டியிருந்தது. அதாவது உரோமைக்குச் செல்லவேண்டியிருந்தது, ஏனெனில் பொதுவாக சபைகளின் தலைமை பீடங்கள் அங்கேதான் இருந்தன. சம்பந்தப்பட்ட நபரின் பெயரைச் சமர்ப்பிப்பதுபற்றி விவாதிப்பதும், விசுவாசப் பரம்புதல் சபையைத் தவறாமல் சென்று பார்ப்பதும் அவசியமாயிருந்தது. அப்போஸ்தலிக்கப் திருத்தூதரகத்தை ஸ்தாபிக்கும்படியும் நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். இது மேற்றிராசனத்திலிருந்து வேறுபட்டது: அப்போஸ்தலிக்கத் திருத்தூதரகம் என்பது மேற்றிராணித்துவத்தைப் போலவே அவசியமாயிருந்தது. தங்கள் மேற்றிராசனங்களில் கல்வி கற்பிக்கும் சகோதரர்கள் அல்லது சகோதரிகளைக் கொண்டிருக்க விரும்பிய மேற்றிராணிமார்களின் வேண்டுகோள்களைத் திருப்தி செய்யவும் நான் கடும் முயற்சி செய்தேன். துறவற சபைகளின் அதிசிரேஷ்டர்களைத் தொடர்புகொண்டு, ஆப்பிரிக்காவுக்கும், அவர்கள் எங்கே வேண்டிக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்களோ அந்த இடங்களுக்கும் சகோதரிகளை அனுப்ப அவர்களை நான் ஊக்கப்படுத்த முயல்வேன். செல்லுமிடங்கள் பற்றிய ஆலோசனைகளை நான் அவர்களுக்குத் தந்தேன்.

இவை வெளிப்படையாகத் தெரிகிறபடி, மிக, மிகப் பரபரப்பான வருடங்களாக இருந்தன. ஆனாலும் இவை மிக உற்சாகமூட்டுபவையாகவும், மகிழ்ச்சியும், பெருமையும் தரக்கூடியவையாகவும்கூட, இருக்கவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த எல்லா மேற்றிராசனங்களிலும் 1946-ல் இருந்து, போருக்கும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வேதபோதக ஊழியங்கள் எவ்வளவு அதிகமாக வளர்ச்சியடைந்திருந்தன என்பதை என்னால் காண முடிந்தது,கிட்டத்தட்ட பத்து, அல்லது பதினைந்து ஆண்டுகள் உள்ள ஒரு நல்ல காலகட்டம்.

வேதபோதக ஊழியங்கள் ஓர் அசாதாரண வளர்ச்சி கண்டிருந்தன! குருமடங்கள் கட்டப்பட்டன. குருக்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பல துறவற சபைகள் வந்தன. (அவை குருக்களைக் கொண்டிருந்ததால், வேதபோதக குருக்களை அனுப்ப அவற்றால் முடிந்தது.) பல்வேறு ஸ்தாபனங்கள் உருவாயின, வேதபோதக ஊழியங்கள், கன்னியர் மடங்கள், மற்றும் எல்லா வகையான நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. நாங்கள் மருத்துவ விடுதிகள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு சகோதரிகளைக் கண்டுபிடித்தோம். மருத்துவ மனைகளில் வேலை செய்ய மரியாயின் பிரான்சிஸ்கன் வேதபோதக சகோதரிகளையும், செவிலியராக வேலை பார்க்கும் சகோதரிகளான அர்ச். வில்லனோவா தோமையார் சபைச் சகோதரிகளையும் நான் வரவழைத்தேன். கல்வி கற்பிக்கும் சகோதரிகளும் பெருமளவில் ஆப்பிரிக்காவுக்கு உதவி செய்ய வந்தார்கள். இந்த வளர்ச்சி அற்புதமானதாகவும், அசாதாரணமானதாகவும், உண்மையாகவே உற்சாக மூட்டுவதாகவும் இருந்தது. இவை குறிப்பிடத்தக்க வருடங்களாக இருந்தன.

ஒவ்வொரு வருடமும் நான் பாப்பரசர் 12-ம் பத்திநாதரைப் பார்க்கச் செல்வேன். இது உரோமைக் க்யூரியாவிலிருந்து பல மனிதர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை இயல்பாகவே எனக்குத் தந்தது. சில சமயங்களில் துறவறத்தாருக்கான திருச்சங்கத்தையும், மற்ற சமயங்களில் விசுவாசப் பரம்புதலுக்கான திருச்சங்கத்தையும், பரிசுத்த அலுவலகத்தை அல்லது அரசாங்கச் செயலகத்தையும் பார்க்க வேண்டியிருந்தது. அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி என்ற முறையில், அப்போஸ்தலிக்க அரசுத் திருத்தூதர்களைப் போல



*(Apostolic Nuncios)*, அரசுச் செயலகத்திற்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது. இதற்கென்று எனக்கு ஓர் இரகசிய தகவல் தொடர்பு எண் தரப்பட்டிருந்தது. நான் ஒவ்வொரு மேற்றிரா சனத்தின் நிலைபற்றி அறிக்கை தரவும் வேண்டியிருந்தது. இதெல்லாமும் பல கர்தினால்களோடும், பல மொன்சிஞ்-ஞோர்களோடும், சுருங்கச் சொல்வதானால், முழு உரோமை க்யூரியாவோடும் நான் தொடர்பு கொண்டிருப்பதை அவசிய மாக்கியது.

உரோமையில் உள்ள சிலரும், நல்ல வேளையாக, குறிப்பாக பாப்பரசரும் எனக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதை நான் மிக நன்றாக உணர்ந்தேன். பரிசுத்த பிதா என்னை மிக நன்றாக ஊக்கப்படுத்தினார். இது வெளிப்படை யாகவே ஒரு பெரும் உதவியாக இருந்தது. அரசுச் செயலகத் தைச் சேர்ந்த கர்தினால் டார்டினியின் ஆதரவும் எனக்கு இருந்தது. ஆனாலும், தங்களிடமிருந்து நான் ஒரு பதவியை அபகரித்துக்கொண்டேன் என்பதுபோலவே என்னை நடத்திய குறிப்பிட்ட சிலரும் இருந்தனர். அவர்களில் மேற்றிராணியார் மொந்தினி (எதிர்கால பாப்பரசர் ஆறாம் சின்னப்பர்), அந்தச் சமயத்தில் அரசுச் செயலகத்தில் இருந்த மேற்றிராணியார் மார்ட்டின், இன்னும் விசுவாசப் பரம்புதல் திருச்சங்கத்தைச் சேர்ந்த மற்ற மேற்றிராணியார்கள் அடங்குவர். அப்போஸ்த லிக்கப் பிரதிநிதி! கிட்டத்தட்ட ஒரு அப்போஸ்தலிக்க அரசுத் தூதர்! அதுவும் ஒரு நுன்ஷியோவின் செயலாளராக, இந்தச் செயலாளராக, அந்தச் செயலாளராக... இருக்கும் வழக்கமான படிகளைக் கடந்து செல்லாமல் நேரடியாக! நீங்கள் எதிர்கால அரசு அதிகாரிகளை, நுன்ஷியோக்களை உருவாக்குகிற உரோமையிலுள்ள மேன்மையுள்ள திருச்சபை அதிகாரிகள் கழகத்தின் வழியாகக் கடந்து வரவில்லை... நேரடியாக டாக்காரின் அதிமேற்றிராணியார் ஆவது, அதன்பின், திடீரென, அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஆவதென்றால்! நீங்கள் எதிர்பாராத, விரும்பப்படாத விருந்தாளி! எங்களுக்குத் தரப்பட்டிருக்கக் கூடிய ஒரு பதவியை நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். ஆக, இது ஒரு நிச்சயமான நம்பிக்கையின்மையாக இருந்தது.

### அப்போஸ்தலிக்க பிரதிநிதி பதவி முடிவுக்கு வருதல் - டாக்காரின் அதிமேற்றிராணியார்.

1959-ல் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பதவிக்காலத்தின் முடிவுக்கு நான் வந்து சேர்ந்தேன். பாப்பரசர் 12-ம் பத்திநாதர் 1959-ல் இறந்து விட்டிருந்தார். அவர்தான் இந்தப் பதவியில் என்னை நியமித்தவர், உண்மையாகவே என்னை ஆதரித்தவர் அவர்தான் என்றும் என்னால் சொல்ல முடியும். ஏறத்தாழ ஒவ்வொரு ஆண்டும் நான் அவரைக் கண்டேன், அது வெளிப்படையாகவே எனக்கு ஒரு பெரும் ஊக்குவிக்கும் செயலாகவும், பெரும் ஆறுதலாகவும் இருந்தது. அவர் உண்மையாகவே கடவுளின் மனிதராக, திருச்சபையின் மனிதராக இருந்தார்.

நான் அப்போஸ்தலிக்கத் பிரதிநிதி என்ற முறையில் அவ்வப்போது பாரிஸுக்குச் சென்றபோது, சில சமயங்களில் நுன்ஷியோ பதவியிலிருந்த மேற்றிராணியார் ரோன்கால்லி யைச் சந்திப்பேன். ( மேற்றிராணியார் ரோன்கால்லி 1944 முதல் 1955 வரை பிரான்ஸின் அப்போஸ்தலிக்க நுன்ஷியோ வாக இருந்தார். வெனீஸின் பிதாப்பிதாவாகவும், 1953-ல் கர்தினாலாகவும் ஏற்படுத்தப்பட்டிருந்த அவர் 1958-ல் இருபத்து மூன்றாம் அருளப்பர் என்ற பெயரில் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.) நான் அங்கே சென்ற ஒவ்வொரு முறையும், அவர் என்னை வரவேற்பது மட்டுமின்றி என்னைக் காண வேண்டுமென்று முழுவதும் வலியுறுத்தவும் செய்வார். ஒரு முறை அவர் என்னைப்பற்றி இப்படிச் சொன்னார்: "நீங்கள் என்னிடம் கேட்டால், ஒரு மேற்றிராசனத்தைக் கொண்டிருக்கிற உங்களைப் போன்ற அதிமேற்றிராணிமார்கள், அதே சமயத்தில் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாகவும் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை, அது நல்ல யோசனை இல்லை; இந்தக் காரியத்தில் பாப்பரசர் பன்னிரண்டாம் பத்திநாதரோடு எனக்கு உடன்பாடு இல்லை."

ஆ! இது என்னுடைய வேலையில்லை, அல்லவா? ஆனாலும் அவர் என்னைப்பற்றி இப்படிக் குறிப்பிட்டிருந்தார். ஆகவே, அவர் 1958-ல் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, இதோ நேரம் வந்து விட்டது! இது நீண்ட காலம் நீடிக்காது. நான் ஏதாவது ஒரு பதவியைக் கைவிடும்படி என்னைக் கேட்டுக்கொள்ளும் ஒரு அழைப்பை உரோமையி லிருந்து பெற்றுக்கொள்வேன் என்பதில் சந்தேகமில்லை என்று நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன். அதுதான் நடந்தது.



டாக்காரில் பிரியாவிடை

அதன்பின் ஒரு வருடத்திற்குள், உரோமையிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. நான் டாக்காரின் அதிமேற்றிரா ணியார் அல்லது அப்போஸ்தலிக்க பிரதிநிதி ஆகிய இரண்டு பதவிகளில் ஒன்றை மட்டும் தேர்ந்துகொள்ள வேண்டுமென்றும், அந்த நேரத்திலிருந்து இந்த இரண்டு பதவிகளும் தனித்தனி யானவையாக இருக்குமென்றும் அது கூறியது. "இந்த இரண்டு பதவிகளுக்கும் என்னையே நான் நியமித்துக் கொள்ள வில்லை என்பதால், இந்தத் தேர்வைச் செய்வது என்னைப் பொறுத்ததல்ல. இதன் காரணமாக, இந்த நியமனங்களை செய்த அதிகாரிகளிடமே இந்தப் பொறுப்பை விட்டுவிடுகிறேன்; நான் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாக நீடிப்பதா, அல்லது அதைவிட டாக்காரின் அதிமேற்றிராணியாராக நீடிப்பதா என்பதை அவர்களே எனக்குச் சொல்ல வேண்டும்" என்று நான் பதிலளித்தேன்.

அதே நேரத்தில், அவர்கள் என்னை வேறு எங்கேயாவது நியமிக்க விரும்பினால், மற்றொரு பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக எனக்கு ஆறு மாத கால அவகாசம் தரவேண்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டேன். இஸ்பிரீத்துசாந்து சபைக் குருக்கள் 1962 ஆகஸ்ட் 22 அன்று சபையின் பொதுச் சங்கத்தை நடத்தவிருந்தார்கள். நான் என் சக துறவிகளோடு நடத்திய உரையாடல் களின்படி, நான் இதை விரும்பவில்லை என்றாலும், நான் சபையின் அதிசிரேஷ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட சாத்தியம் இருந்தது! அப்படி உண்மையாகவே நான் தேர்ந்தெடுக் கப்பட்டால், என் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்திக் கொள்ளும் எண்ணம் எனக்கு இருந்தது. அதை நான் மிகக் குறைவாகவே அறிந்திருந்தேன். ஏனெனில் எங்கள் சபையில் ஆங்கிலம் பேசும் பிரதேசங்கள் ஏராளம் இருந்தன. ஏராளமான அமெரிக்கப் பங்குகள் இருந்தன. அந்த நாடுகளில் எங்களுக்கு ஏராளமான ஊழியங்கள் இருந்தன. நான் சரளமாக ஆங்கிலம் பேசவில்லை என்றால், என் வேலைகளில் பலவிதமான தடங்கல்கள் இருக்கும்.

“இல்லையில்லை, இந்தக் கேள்விக்கே இடமில்லை. நீங்கள் பிரான்ஸில் ஓர் மேற்றிராணியாராக இருக்கவேண்டும்.” பிரான்ஸில் ஓர் மேற்றிராணியாராக இருப்பது... நல்லது, இதைப் பார்த்துக்கொள்ளலாம்! பிரான்ஸின் மேற்றிராணியார்கள் என்னைப்பற்றி என்ன நினைத்தார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன்!... அவர்கள் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தில் எனக்குப் பயப்பட்டார்கள். ஏனெனில் நான் ஷான் ஊஸ்ஸேயின் ஸ்தாபனத்தை ஆதரித்தேன் என்ற காரணத்தால், நான் ஒரு பாரம்பரியவாதியாக அப்போதேக் கருதப்பட்டேன்.

ஷான் ஊஸ்ஸே என்பவர் பிரான்ஸில் இருந்த கத்தோலிக்கப் பொதுநிலை விசுவாசிகளுக்காக லா சித்தே கத்தோலிக் என்ற இயக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். நான் ஸோல்ஸ்மேக்கு (ஸோல்ஸ்மே என்பது அர்ச். ஆசீர்வாதப்பர் சபையின் ஒரு தாய்மடமாகவும், பிரான்ஸிலுள்ள ஒரு துறவற மடமாகவும் இருந்தது. இது 1837-ல் டாம் ப்ராஸ்பர் க்வெரேஞ்ஜர் என்பவரால் புதுப்பிக்கப்பட்டிருந்தது. இது பாப்பரசர் பத்தாம் பத்திநாதரின் வேண்டுகோளின்படி, திருச்சபையில் உண்மையான கிரகோரியன் இசையை மீண்டும் ஸ்தாபிக்கும் காரியத்தில் பிரசித்தி பெற்றிருந்தது- ஆ.ர்) அடிக்கடி விஜயம் செய்தேன். ஒருநாள் ஸோல்ஸ்மேயின் இல்ல அதிபர் என்னிடம் (நான் இன்னும் டாக்காரில்தான் இருந்தேன்): “வந். மேற்றிராணியார் அவர்களே, இந்த நல்ல மக்களை நீங்கள் ஆதரிக்கவேண்டும். அவர்கள் மிகுந்த தைரிய முள்ளவர்கள்; அவர்களிடம் ஒரு பலமான விசுவாசம் உள்ளது; அவர்கள் போர்க் குணமுள்ளவர்கள், மேற்றிராணிமார்களோடு தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளக் கடுமையாக முயன்று கொண்டிருக்கிறார்கள். என்றாலும் மேற்றிராணிமார்கள் அவர் களைப்பற்றிக் களைப்புற்றிருக்கிறார்கள். ஆகவே மேற்றிராணிமார்கள் உண்மையில் அவர்களை அவ்வளவு ஆதரிப்பவர்களாக இல்லை. நீங்கள் போய் அவர்களைப் பார்த்து, நீங்கள் அவர்களோடு ஒத்துப் போகிறீர்கள் என்றும், கத்தோலிக்கக் கொள்கை களை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான அவர்களுடைய இயக்கத்திற்கு நீங்கள் உதவுவீர்கள் என்றும் சொன்னால், அவர்களுக்குச் சேவை செய்தவர்களாவீர்கள்” என்றார்.



ஆகவே நான் அவர்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டேன். அதன்பின் அவர்கள் *Pour Qu'll Regne* (அவர் அரசாளும்படியாக என்பது இதன்பொருள்) - (அவர்களுடைய சட்டத் தொகுப்பு நூல் என்பது போல) இது ஒரு பெரிய புத்தகம், இப்போதும்கூட வாசிக்கத் தகுதியுள்ள ஒரு மிக அழகான புத்தகம். நாங்கள் ஈக்கோனில் ஒரு சில தடவைகள் அதை வாசித்தோம், ஏனெனில் அது ஓர் அற்புதமான புத்தகம், கிறீஸ்தவ இராச்சியத்தில், நம் ஆண்டவரில், நம் ஆண்டவரின் சமூக இராஜரீகத்தில் கொள்ளும் விசுவாசத்தின் மீதான புத்தகம் அது. ஓர் அதியற்புதமான புத்தகம்! அதற்கு நான் முகவுரை எழுதித் தர முடியுமா என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் ஒரு கடிதம் அனுப்பினேன்; நான் முகவுரை எழுதினேன். *La Cite Catholic* என்னும் இந்த இயக்கத்தை எதிர்க்கும் பிரெஞ்சு மேற்றிராணிமார்கள் கடுங் கோபமுற்றனர்: அவ்வளவுதான்! அதிமேற்றிராணியார் லெஃபவர், லா சித்தே கத்தோலிக் இயக்கத்திற்காக ஒரு கடிதம் எழுதியதன் மூலம் மீண்டும் எங்கள் காரியத்தில்

தலையிட்டு விட்டார்!

நான் அவ்வளவு அன்போடு வரவேற்கப்படவில்லை. இதற்கு மிகச் சிறந்த நிரூபணம்: நான் பிரான்ஸிலுள்ள ஒரு மேற்றிராசனத்திற்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று இருபத்து மூன்றாம் அருளப்பர் முழுவதுமாகத் தீர்மானித்து விட்டதால், நான் அதிமேற்றிராசனம் ஒன்றைக் கொண்டிருந் திருக்க வேண்டும். அதுதான் இயல்பான காரியமாக இருந்திருக்கும். உண்மையில் ஒரு அதிமேற்றிராசனத்தின் தலைமைப் பொறுப்பு, அதாவது ஆல்பி என்னும் அதிமேற்றி ராசனத் தலைமைப் பொறுப்பு அப்போது காலியாக இருந்தது. மிக நல்ல முறையில் நான் ஆல்பியின் அதிமேற்றிராணியாராக ஆகியிருக்க முடியும், எப்படியிருந்தாலும் அது அவ்வளவு பெரிய மேற்றிராசனம் அல்ல.

ஆயினும் பிரான்ஸின் மேற்றிராணிமார்கள் நிபந்தனைகள் விதித்தனர்: "அதிமேற்றிராணியாரை பிரான்-ஸில் ஒரு மேற்றிராணியார் பணிக்கு நியமிப்பதை நீங்கள் முற்றிலுமாக வலியுறுத்துவீர்கள் என்றால், நாங்கள் பின்வருவ னவற்றைக் கேட்கிறோம்:

***முதலாவதாக,*** அவர் கர்தினால்மார் மற்றும் அதிமேற்றிராணிமார் கூட்டமைப்பில் ஓர் அங்கத்தினராக இருக்கக் கூடாது. (அந்தக் காலத்தில் எல்லா மேற்றிராணிமார் களையும் ஒன்றிணைத்த மேற்றிராணிமார் சங்கங்கள் இருக்க வில்லை. கர்தினால்கள் மற்றும் அதிமேற்றிராணியார்களின் கூட்டமைப்பு மட்டும்தான் ஒரு குறிப்பிட்ட விதத்தில் பிரெஞ்சு மேற்றிராணித்துவத்தை வழிநடத்திக்கொண்டிருந்தது. ஆகவே, ஓர் அதிமேற்றிராணியாராக இருக்கும்போது, நான் சாதாரணமாக, அந்தக் கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். இது அனைவரும் அறிந்ததே.)

***இரண்டாவதாக,*** அவர் ஓர் அதிமேற்றிராசனத்தை அல்ல, மாறாக ஒரு சிறு மேற்றிராசனத்தை மட்டுமே கொண் டிருக்க வேண்டும்.

***மூன்றாவதாக,*** இது ஒரு முன்னுதாரணமாகக் கருதப் படக் கூடாது."

மூன்று நிபந்தனைகள்! நான் பாப்பரசருக்கு முகவரி யிடப்பட்டிருந்த மேற்றிராணிமார்களின் கடிதத்தை வாசித் தேன். அவர்கள் தங்கள் சக மேற்றிராணியாரை மேற்றிராணித் துவத்தில் எப்படி வரவேற்றார்கள் என்பதை நீங்களே பாருங்கள்! பிரான்ஸின் மேற்றிராணித்துவ பிறர்சிநேகத்தைப் பாருங்கள்! ஆ! தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்த வரைக்கும், இது எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை, இது எனக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை! கர்தினால்கள் மற்றும் ஆயர்களின் கூட்டமைப்பில் ஓர் உறுப் பினராக இல்லாதிருப்பது - இது முக்கியமானதாக இருக்க வில்லை. ஒரு சிறிய மேற்றிராசனத்தை மட்டுமே கொண் டிருக்கும் எனக்கு அதுபற்றிக் கவலையேயில்லை! எனக்கு ஒரு சிறிய மேற்றிராசனமே மிகவும் நல்லது. அர்ச். பிரான்சிஸ் சலேசியாரிடமிருந்து ஒரு வாக்கியத்தைக் கடன் வாங்குகிறேன்: ஓர் ஒற்றை ஆத்துமம் ஒரு பெரிய மேற்றிராசனமாக இருக்கிறது. நல்லது, என்னிடம் இரண்டு இலட்சத்து, இருபதாயிரம் ஆத்துமங்கள் இருக்கின்றன; இது இன்னும் பெரிதான ஒரு மேற்றிராசனத்தை உருவாக்குகிறது!

நான் உரோமைக்கு இவ்வாறு பதிலளித்தேன்: என்னைப் பொறுத்த வரை, நீங்கள் எனக்கு எதைத் தந்தாலும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். மீண்டும் ஒரு முறை, ஒரு மேற்றிராசனம் இல்லாமல் இருப்பதையே நான் உண்மையில் விரும்புவேன்; ஒரு மேற்றிராசனத்தோடு நான் என்னை வைத்துப் பிணைத்துக்கொள்ள மாட்டேன். ஆனால் ஒரு மேற்றிராசனத்திற்கு நீங்கள் என்னை நியமிப்பீர்கள் என்றால், அதுவும் நல்லதே.

## தூல் ஆயர்


இவ்வாறு நான் தூல் மேற்றிராசனத்தின் ஆயராக நியமிக்கப்பட்டேன்! எனக்கு தூல் மேற்றிராசனத்தைப்பற்றி எதுவும் தெரியாது, உண்மையாகவே எதுவும் தெரியாது. அது பிரான்ஸின் மத்தியப் பகுதியில் மறைவாயிருந்த ஒரு மேற்றிரா சனம் ஆகும். தூல் எங்கே இருக்கிறது என்பதைக்கூட நான் அறியாதிருந்தேன். எப்படியிருந்தாலும்!... நான் போய் முதன்மை குருக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. நான் அந்த மேற்றிராசனத்தில் உள்ள நிலையைச் சற்றாவது அறியும்படி அதன் முன்னாள் மேற்றிராணியாரான வந். ஷாஸேன் என்பவரைச் சந்தித்தேன். அவர் மிகப் பரிசுத்தமான, மிக நல்ல மேற்றிராணியாராக இருந்தார். அவர் என்னை மிகுந்த கருணையோடு வரவேற்றார். முதன்மை குருக்களும் நல்ல நட்புணர்வோடு என்னை வரவேற்றனர். எல்லாமே நன்றாகச் சென்றது.

உண்மையில் எனக்கு எந்தக் கஷ்டங்களும் இருக்க வில்லை. குறைந்தது நான் ஏற்கனவே ஒரு விதத்தில் ஒரு மேற்றிராசனத்தை நிர்வகிப்பதில் அனுபவம் பெற்றிருந்தேன். துரதிருஷ்டவசமாக, இந்தப் பரிதாபமான மேற்றிராசனம், பிரான்ஸிலுள்ள எல்லா மேற்றிராசனங்களையும் போலவே நம்ப முடியாத அளவுக்கு வருந்தத்தக்க நிலையில் இருந்தது. மேற்றிராசன நிர்வாகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் சீர்கேடுகள் இருந்தன: மேற்கொண்டு தேவ அழைத்தல்களே இல்லை. ஆகவே சகோதரிகள் தங்கள் மருத்துவமனைகளைக் கைவிட்டு விட்டு, தங்கள் கத்தோலிக்கப் பள்ளிகளை மூடிவிட்டு, மாக



**தூல் மேற்றிராசனத்தின் மேற்றிராணியார்**

தாங்கள் முன்பு இருந்து வந்த கிராமங்களை விட்டுச் சென்று கொண்டிருந்தார்கள். குருக்களின் எண்ணிக்கை மேலும் மேலும் குறைந்துகொண்டே வந்திருந்தது, ஆகவே ஒவ்வொரு குருவுக்கும் அதிகமதிகமான பங்குகள் இருந்தன; குருமடத்தில் தேவ அழைத்தல்கள் மிக அரிதாயிருந்தன. மேற்றிராசனத் திற்கு மூன்று, நான்கு தேவ அழைத்தல்கள்... அது மரித்துக் கொண்டிருந்த ஒரு மேற்றிராசனமாக இருந்தது. அதை உயிர்ப்பிப்பதற்கு வழிகள் இருந்தன. நான் குருக்களைச் சந்திக்கவும், அவர்களைப் போய்ப் பார்க்கவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் முயன்றேன். "எல்லாமே இழக்கப்பட்டு விடவில்லை. நாம் கத்தோலிக்கப் பள்ளிகளை ஸ்தாபிக்க முயல்வோம். ஏனெனில் அங்குதான் தேவ அழைத்தல்கள் உள்ள குழந்தைகளைக் கண்டுபிடிக்கலாம். நாம் இந்த மேற்றிராசனத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சகோதரிகளின் ஒரேயொரு மேற்றிராசன சபையை ஆதரித்துத் தாங்கும்படி வேலை செய்வோம்" என்று நான் சொன்னேன். ஒரு விதத்தில் நீங்கள் செய்வது போல சகோதரிகள் ஏராளமான பங்குகளை யும், மருத்துவ விடுதிகளையும், சிறிய தொடக்கப் பள்ளிகளை யும் கவனித்து வந்தார்கள், பங்குகளில் குருக்களுக்கு உதவி செய்தார்கள். அவர்கள் நம்ப முடியாத அளவுக்கு ஒரு பெரும் உதவியாக இருந்தார்கள், மக்களால் நேசிக்கப்பட்டார்கள். ஆகவே நான் குருக்களிடம், "நீங்கள் அவர்களுக்கு தேவ அழைத்தல்களை அனுப்ப வேண்டும். இளம் பெண்களை



இந்தச் சபைக்கு அனுப்புங்கள்" என்று சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தினேன். ஆனாலும் அங்கே நான் நீண்ட காலம் தங்கவில்லை, வெறும் ஆறு மாதங்கள்தான்...

## இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டர்

ஆகஸ்ட் 22 மற்றும் அதைத் தொடர்ந்து வந்த நாட்களில் ஷெவில்லி-லாரூவில் சபையின் பொதுச் சங்கம் நடைபெற்றது.

முதல் சுற்று வாக்கெடுப்பு... மூன்றில் இரு பங்கு வாக்குகள் தேவையாயிருந்தன. ஒரு மேற்றிராணியார் சாதாரண பெரும்பான்மையோடு மட்டும் அதிசிரேஷ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதிருந்தது. ஐம்பத்தொரு சதவீத வாக்குகள் போதாதவையாக இருந்தன. நான் மூன்றில் இரண்டு பங்கை, அதாவது அறுபத்தேழு சதவீத வாக்குகளைப் பெற வேண்டியிருந்தது. முதல் சுற்றில், நான் தேர்ந்தெடுக்கப் படுவதிலிருந்து இரண்டு சதவீதம் மட்டுமே குறைவான வாக்குகளைப் பெற்றிருந்தேன். ஆகவே நான் எழுந்து நின்று, "கேளுங்கள், நன்மைத்தனத்தின் நிமித்தமாக, நான் தூல் மேற்றிராசனத்திலேயே தங்கியிருக்க என்னை அனுமதியுங்கள். நான் அங்கே ஆறு மாதங்களுக்கு முன்புதான் வந்துசேர்ந்தேன். நான் குருக்களையும், மக்களையும், மேற்றிராசனத்தில் உள்ள வேலைகளையும் தெரிந்துகொள்ளத் தொடங்கியிருக்கிறேன். இரண்டு வருடங்களாக அவர்கள் ஒரு மேற்றிராணியார்கூட இல்லாமலிருந்தார்கள். அவர்கள் மீண்டும் ஒரு மேற்றிராணி-யார் இல்லாமல் விடப்பட வேண்டுமா? பாப்பரசர் இருபத்து மூன்றாம் அருளப்பர் தூல் மேற்றிராசனத்திற்கு என்னை நியமித்ததால், என்னை அங்கேயே விட்டு விடுங்கள்" என்று சொன்னேன்.

இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு... எழுபது சதவீதம், எழுபத்து இரண்டு... ஓ! நான் என்ன செய்ய முடியும்?

ஒவ்வொரு தடவையும் கடவுள் எப்படி என்னை வழிநடத்திக் கொண்டிருந்தார் என்பதைப் பாருங்கள்! எப்போதுமே என் விருப்பங்களுக்கு எதிராக! நல்லது, நான் முழு மனதோடும், தைரியத்தோடும் இதை ஏற்றுக்கொள்ள முயன்றேன். இந்த முன்னுதாரணங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிற பாடங்களில் இதுவும் ஒன்றென்று நான் எண்ணுகிறேன்: நாம் நம் சித்தத்தை யல்லாது, கடவுளின் சித்தத்தைச் செய்யும்போது, நல்ல ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். இறுதியில் கடவுள் நமக்குத் தந்திருக்கிற அலுவலோடு இணைக்கப்பட்டவர்களாக நாம் ஆகிவிடுகிறோம். அஞ்சாதீர்கள்.

பாப்பரசரின் சம்மதம் இன்னமும் பெறப்பட வேண்டி யிருந்தது. நான் தூல்லின் மேற்றிராணியாராக இருந்ததால், பாப்பரசரின் அனுமதியின்றி, சபை வெளிப்படையான விதத்தில் என் மேற்றிராசனத்திலிருந்து தன் இஷ்டப்படி என்னை அகற்றிவிட முடியாமலிருந்தது. வத்திக்கான் அரசுச் செயலாளர் இதை அறிந்துகொள்ளும்படி அவருக்குத் தந்தி கொடுக்க வேண்டியிருந்தது. "இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டராக அதிமேற்றிராணியார் லெஃப்வர் ஆண்டகை தேர்ந்தெடுக்கப்பட்டது உறுதிப்படுத்தப்படும்படி

கேட்டுக் கொள்ளப்படுகிறது'' என்று தந்தி கொடுக்கப்பட்டது. ''அதிமேற்றிராணியார் லெஃபவர் இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை நான் ஆசீர்வதிக்கிறேன்'' என்று பாப்பரசர் 23-ஆம் அருளப்பர் பதில் அனுப்பினார்.

நல்லது! தூல் முடிந்து விட்டது. இஸ்பிரீத்துசாந்து சபையின் அதிசிரேஷ்டர்! இது 1962 ஆகஸ்ட்டில் நடந்தது, உங்களுக்குத் தெரியுமா, சரியாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கியபோது இது நிகழ்ந்தது: சங்கம் 1962 அக்டோபரில் தொடங்கியது. ஆக! சரியாக மும்முரமான போர்முனையில்! நான் சொல்வதுபோல, மூன்றாம் உலகப் போர். நான் 1914-1918 போரைக் கடந்து வந்தேன், 1939-1945 போரைக் கடந்து வந்தேன், மேலும் 1962-1965-ன் சங்கப் போரையும் கடந்து வந்தேன்... என் கருத்தில், இந்தக் கடைசி உலகப் போர்தான் எல்லாவற்றிலும் அதிக மோசமானது! இது ஆத்துமங்களைக் கொன்றதால் இதுதான் மற்ற உலகப் போர்களைவிட அதிக மோசமானதாக இருந்தது. அது உடல் களைக் கொல்லவில்லை; ஆத்துமங்களைக் கொன்றது.

ஆக, இதோ நான், இப்போது இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டர். நான் என் கல்வி முழுவதையும் உரோமையில் இஸ்பிரீத்துசாந்து குருக்களோடு படித்தேன். ஆனாலும் சபையின் எதிர்கால உறுப்பினர்களை உருவாக்கிய குருமடம் பிரெஞ்சு குருமடம் அல்ல; தங்கள் படிப்பு முடிந்தவுடன் இந்தக் குரு மாணவர்கள் தங்கள் மேற்றிராசனங்களுக்குத் திரும்பிச் சென்றனர். நான் சபையை பற்றி சற்று அதிகமாக, நன்றாக அறிந்திருந்தேன், ஆனாலும் ஒரேயொரு வருடம் மட்டும் நவசந்நியாசத்தைச் செய்துவிட்டு அதன்பின் உடனடியாக வேதபோதக ஊழியங்களுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டதால், இஸ்பிரீத்துசாந்து குருக்களில் அநேகரை நான் அறியாமலிருந்தேன்.

எப்படியிருந்தாலும் அது பிரச்சினையாக இருக்க வில்லை; எனக்கு மிகச் சிறந்த உதவியாளர்கள் ஆறு பேர் இருந் தார்கள். ஏனெனில் சபையில் ஐயாயிரத்து இருநூறு உறுப்பினர் களும், அறுபது மேற்றிராணியார்களும் இருந்தார்கள். எங்கள் சபை ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலும் உள்ள மேற்றிராசனங்களில் அறுபது மேற்றிராணியார்களைக் கொண்டிருந்தது. நாங்கள் எல்லா இடங்களிலும் நிறைய மேற்றிராணியார்களைக் கொண்டிருந்தோமென்றாலும் உலகம் முழுவதிலுமல்ல. ஏனெனில் இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபை கறுப்பர்களுக்கு வேதம் போதிப்பதையே தன் நோக்கமாகக் கொண்டிருந்தது. எங்கள் பிரசன்னத்தை நியாயப்படுத்துவதற்கு கறுப்பர்களின் கூட்டம் ஒன்று எங்களோடு இருக்க வேண்டியிருந்தது. உதாரணமாக, எங்கள் சபை அமெரிக்க ஐக்கிய நாடுகளில், குறிப்பாக நிறைய கறுப்பின மக்கள் வசித்த லூசியானாவில் ஐம்பத்திரண்டு பங்குகளைக் கொண்டிருக்க முடிந்தது இப்படித் தான். காவல் துறையினர் கூடப் போகத் துணிச்சலற்ற இட மாகிய நியூயார்க்கின் புகழ்பெற்ற பகுதியாகிய ஹார்லெமில் கூட எங்களுக்கு ஒரு பங்கு இருந்தது! வாடகைக் கார்களும் அங்கே போகாது! நகரத்தில் அந்தப் பகுதிக்குப் போக வேண்டுமென்று நீங்கள் கேட்டால், வாடகைக்கார் அங்கே போய்ச் சேர்வதற்கு முன்பாக நின்று விடும். வண்டி ஓட்டுநர் உங்களிடம், ''நாங்கள் அந்தப் பகுதிக்குள் போவதில்லை என்பதால், நீங்கள் இப்போது அங்கே கால்நடையாகச் செல்ல வேண்டும்'' என்று சொல்வார். அது பயங்கரமானது. ஆனாலும் நாங்கள் பட்டணத்தின் அந்தப் பகுதியிலும் ஒரு பங்கைக் கொண்டிருந்தோம். ஒரு சில குருக்கள் (இரண்டு குருக்கள் என்று நான் நம்புகிறேன்) விபத்துக்கள் நடக்கும்போது, பத்தில் மூன்று மைல் தூரத்திலிருந்த மருத்துவமனையைச் சந்திக்க இன்னும் அங்கே போகிறார்கள் என்று நினைக்கிறேன்... விபத்துக்கள் எல்லா நேரமும் நடக்கின்றன. இங்குள்ள கறுப்பர்கள் போர்ட்டோ ரிக்கோவினராக இருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். சிலர் ஒருவரையொருவர் கொல்கிறார்கள், அல்லது காயப்படுத்து கிறார்கள், உணவு விடுதிகளில் சண்டைகளின்போது ஒருவரை யொருவர் கத்தியால் குத்துகிறார்கள், இன்னும் இதுபோன்ற பல குற்றங்கள்... அதன்பின் அவர்கள் அந்த மருத்துவமனைக் குக் கொண்டுவரப்படுகிறார்கள். தாங்கள் கத்தோலிக்கர்கள் என்று அவர்கள் சொன்னால், அவர்கள் மரண நேரத்தில் அவர்களுக்கு அவஸ்தைப்பூசுதல் கொடுக்கவேண்டியிருந்தால், ஒரு குருவானவர் அழைக்கப்படுகிறார். ஒரு மைலில் பத்தில் ஒரு பங்காகிய இந்தத் தூரத்தை குருக்கள் வழக்கமாக நடந்து தான் கடப்பார்கள். அவர்கள் குருக்களாக இருந்ததாலும், குருத்துவ அங்கி அணிந்திருந்ததாலும், அவர்கள் இன்னும் மரியாதையோடு நடத்தப்பட்டனர். அவர்கள் கொள்ளை யடிக்கப்படுவதோ, தாக்கப்படுவதோ இல்லை. இப்போது அவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக ஒரு காவல்துறை பந்தோபஸ்து வேண்டுமென்று கேட்கக் கடமைப்பட்டிருக் கிறார்கள். நம்ப முடியாத காரியம், நம்பவே முடியாதது! அங்கே அது அப்படித்தான் இருந்தது. ஆனால் இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபை மிகப் பரந்து, பெரிதாக இருந்ததென்பதை நீங்கள் காண்கிறீர்கள்.

அடிப்படையில் கறுப்பினத்தவர் மீது அக்கறை கொண்டிருந்ததால், அது ஒரு சில நாடுகளுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் (இதுபற்றி நான் ஏற்கனவே உங்களிடம் பேசினேன்.) கனடாவுக்கும் மட்டுமே பரவியது. ஆனாலும் பிரெஞ்சு மொழி பேசுபவையும், ஆங்கிலம் பேசுபவையும், போர்ச்சுக்கீசிய மொழி பேசுபவையுமான ஆப்பிரிக்க நாடுகள் தான் சபையின் வேதபோதகச் செயல்பாட்டுக்குரிய மிகப் பெரிய களமாக இருந்தன என்பது அனைவரும் அறிந்ததே. அது மேற்கிந்தியத் தீவுகளில்: மார்ட்டினிக், குவாடலூப், ட்ரினிடாட் ஆகிய இடங்களிலும், தென் அமெரிக்காவில்: பிரெஞ்சு கயானாவிலும், பிரேசிலில், அமேஸோனாஸிலும், மற்றும் தென் பிரேசிலிலுள்ள சான்ட்டா கேட்டரினா மற்றும் ரியோவிலும், இன்னும் சில இடங்களிலும்கூட செயல்பட்டு வந்தது. சுருங்கக் கூறின் கறுப்பின மக்கள் இருந்த இடங்களில் எல்லாம் அது செயல்பட்டு வந்தது.

அனைவரும் அறிந்த விதமாக ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் கனடாவிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இருந்தும்கூட நாங்கள் தேவ அழைத்தல்களைத் தேர்ந்தெடுத்

தோம், இந்த இடங்களில் சபையின் இல்லங்களை அமைத்தோம். ஆனால் ஓர் அல்சேஷன் யூதராக இருந்த சுவாமி லிபெர்மேன் என்பவரால் இந்தச் சபை ஸ்தாபிக்கப்பட்டது (இது சற்று வினோதமானதுதான், என்றாலும் இது இப்படித்தான் இருக்கிறது.) என்ற அடிப்படையில், குறிப்பாக பிரான்ஸில் இருந்துதான் அதிகமான தேவ அழைத்தல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. எங்களுக்கு பெல்ஜியத்தில் ஒரு மாகாணமும், இங்கிலாந்து, அயர்லாந்து, ஜெர்மனி, மற்றும் சுவிட்ஸர்லாந்து நாடுகளில் தலா ஒரு மாகாணமும் இருந்தன. இத்தாலியில் ஒரு மாகாணமும் இல்லை; ஒரு சில இத்தாலியர்கள் எங்கள் சபையில் இருந்தார்கள், ஆனால் அநேகர் அல்ல. இத்தாலியர்கள் இத்தாலிய துறவற சபைகளில் சேர்வதைத்தான் விரும்புகிறார்கள். அவர்கள் மிகவும் குடும்பச் சார்புள்ளவர்கள். ஒரு இத்தாலியர் இடம் பெயரும்போது, அது அமெரிக்க ஐக்கிய நாடுகளோ, சீனாவோ, அல்லது வேறு ஏதாவது ஒரு நாடோ, அவர் தம் சகோதரிகளின் மகன்கள், சகோதரிகளின் மகள்கள், ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள், ஏன், ஒட்டுமொத்த குடும்பத்தையுமே தம்மோடு அழைத்துச் செல்கிறார். அவர் தம் நாட்டு மக்களோடு வேலை செய்வதில்லை, மாறாக, தம்மோடு வேலை செய்யும்படி தம் முழுக் குடும்பத்தையும் வரவழைக்கிறார். இத்தாலியர்கள் தங்கள் நாட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்கள். இத்தாலியில் ஸ்தாபிக்கப்பட்டிராத ஒரு துறவற சபை அங்கே வேரூன்றுவது மிகக் கடினமான காரியம். சுவிஸ் ஜெர்மானியர்களைத் தேர்ந்தெடுக்கவும் எங்களால் முடியவில்லை. சுவிட்ஸர்லாந்தில் பிரெஞ்சு மொழி பேசும் பகுதியிலிருந்து எங்களுக்கு தேவ அழைத்தல்கள் கிடைத்தன, ஆனால் ஜெர்மன் மொழி பேசும் பகுதியிலிருந்து அல்ல. அங்கே எங்கள் சபை வேரூன்றுவதற்கு சாத்தியமே இல்லாதிருந்தது. அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் நிலையும் இப்படித்தான் இருக்குமா? நான் விசேஷமாக எதுவும் செய்யவில்லை என்றாலும், ஆண், பெண் இருபாலாருமாகிய சுவிஸ் ஜெர்மானியர்கள் வந்தார்கள், இத்தாலியர்களும் வந்தார்கள். எங்களிடம் சில இத்தாலியர்கள் இருக்கிறார்கள். இந்த ஆண்டு ஃப்ளாவிங்கியில் இன்னும் மூன்று பேர் சேர்ந்தார்கள், இது அற்புதமானது. கடவுளுக்கு நன்றி!



இரண்டாம் வத்திக்கான் சங்கம்

இஸ்பிரீத்துசாந்து சபை இவ்வாறு, தனது எல்லா மேற்றிராணிமாரோடும் மிக முக்கியமானதாக இருந்தது. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். வெளிப்படையாகவே, இது சபையின் உயிரின் மீது ஒரு மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிகழ்வாக இருந்தது. அதே நேரத்தில், தொடக்கத்தில் இருந்தே, சபையின் பொதுச் சங்கம் சபையின் தாய்மடத்தை இடம் மாற்றவேண்டிய பொறுப்பை எனக்குத் தந்திருந்தது. அது அச்சமயத்தில் பாரிஸில் உள்ள லோமோந் தெருவில், மாகாண இல்லத்தோடு சேர்ந்திருந்தது. இது அடிக்கடி சிறு சிறு பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்தது. ஆகவே மற்ற அநேக துறவற சபைகள் செய்திருந்ததுபோல, சபையின் அதிசிரேஷ்டர் சபையின் தாய்மடத்தை உரோமைக்கு மாற்ற வேண்டுமென்று சபையின் பொதுச்சங்கம் வற்புறுத்தியது. எனவே நாங்கள், அதிசிரேஷ்டராக என் முதல் இரு வருடங்களின்போது, மாகாண இல்லத்தை விட்டு விலகி, பாரிஸில், பிரேனீஸ் தெருவிலிருந்த மற்றொரு இல்லத்திற்கு தாய் மடத்தை மாற்றினோம். அங்கிருந்து இரண்டு வருடங்களுக்குப் பிறகு, நாங்கள் உரோமையிலுள்ள மாரியோ குன்றுக்குச் சென்றோம். சபையின் தாய் இல்லம் இன்னும் அங்கேதான் அமைந்துள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கமும், சந்திப்புகளும் தந்த கவலைகள் போக, இவையெல்லாமும் சேர்ந்து எனக்குச் சில மனக்கவலைகளை ஏற்படுத்தின. எல்லா நாடுகளையும், எல்லாப் பிரதேசங்களையும், எல்லா நிலங்களையும் நான் சந்திக்க வேண்டியிருந்தது என்பது உண்மைதான். எனக்கு உண்மையாகவே வேலைப் பளு மிக அதிகமாக இருந்தது. எனக்கு எதிராக, என் தேர்வுக்கு எதிராக இருந்தவர்கள், சங்கத்தின்போது, இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டார்கள். உண்மையில் என் சிந்தனையோட்டத்தோடு ஒத்துவராத ஒரு சிறு கூட்டம் இருந்தது. இவர்கள் என் பாரம்பரியத் தன்மையைக் குறித்து அஞ்சினார்கள். இருந்தாலும், இதையெல்லாம் மீறி, மிகுந்த பெரும்பான்மையோடு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இந்தச் சிறு கூட்டத்தின் உறுப்பினர்கள் மிகுந்த செயலூக்கம் உள்ளவர்கள். பெரும்பாலும் உரோமையில் இருந்த சுவாமி லெக்குயே என்பவரைப்போல குருமடப் பேராசிரியர்களாக இருந்தார்கள். அவர்கள் முற்போக்குவாத, நவீனவாத, திடமான தீர்மானமுள்ள ஒரு அறிவுவாதக் குழுவை உருவாக்கினார்கள் என்று நான் சொல்வேன். ஆகவே உண்மையில் சங்கம் அவர்களை ஆதரித்துக்கொண்டிருந்ததால், அவர்கள் உற்சாகப்படுத்தப்பட்டதாக உணர்ந்து, காலத்திற்கேற்றபடி மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்ற கொள்கையையும், அக்கியார்னமெந்தோ அதன் எல்லா விளைவுகளையும் சபைக்குள் பரப்ப, இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

## சபையின் அசாதாரணப் பொதுச் சங்கம் அதிசிரேஷ்டர் பதவியிலிருந்து விலகுதல்

சங்கத்திற்குப் பிறகு, எல்லாத் துறவற சபைகளும் சங்கத்தின் உணர்வுக்கேற்ப தங்கள் சபை விதிகளை மாற்றியமைத்துக் கொள்ளும்படி ஓர் அசாதாரண பொதுச் சங்கத்தை

கூட்ட வேண்டுமென்று பாப்பரசர் அனைத்து துறவற சபை களையும் கேட்டுக்கொண்டார். இது மிகவும் தெளிவற்றதாக வும், கடினமானதாகவும், ஆபத்தானதாகவும், மிக ஆபத்தான தாகவும் இருந்தது. 1968-ல் என்னுடைய சபை உட்பட எல்லாச் சபைகளும் இப்பொதுச் சங்கத்தைக் கூட்ட வேண்டி யதாயிருந்தது. பன்னிரண்டு வருடங்களுக்கு, அதாவது 1962 முதல் 1974 வரையிலான வருடங்களுக்கென்று நான் அதிசிரேஷ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நிலையில், 1968-ல் நான் என் ராஜினாமாவைச் சமர்ப்பிக்கும்படி எதுவும் என்னைக் கட்டாயப்படுத்தியிருக்க முடியாது. நான் இன்னும் ஆறு வருடங்களுக்கு அதிசிரேஷ்டராக நீடித்திருக்க வேண்டும். ஆனாலும் சபைக்குள் ஏற்பட்டிருந்த, புரட்சி என்று அழைக் கப்படத் தகுதியுள்ள ஒரு சிறு புரட்சியால் நான் குழப்பப் பட்டேன். பொதுச் சங்கத்தின் சில உறுப்பினர்கள், குறிப்பாக டச்சு உறுப்பினர்கள், எங்கள் சபைவிதிகள் மாற்றப்பட்டு, அந்த மாற்றங்கள் துறவறத்தாருக்குரிய திருச்சங்கத்தால் அங்கீகரிக்கப்படாதவரை, சபை விதிகள் அமல்படுத்தப்படக் கூடாது என்ற தங்கள் ஆசையை வெளிப்படுத்தினார்கள். ஒரு பொதுச் சங்கத்தைக் கொண்டும்கூட, துறவற சபைகள் திருத்தப்பட்ட தங்கள் சபை விதிகளை துறவறத்தாருக்கான திருச்சங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அந்தத் திருச் சங்கம் அவற்றை அங்கீகரிக்கலாம், அல்லது அங்கீகரிக்க மறுக்கலாம். ஆனாலும் இந்த மனிதர்கள் அதை விரும்பியது இந்த விதமாக அல்ல! துறவறத்தாருக்கான திருச்சங்கத்தி லிருந்து எந்த அனுமதியும் இல்லாமலேகூட, பொதுச் சங்கத் திற்கு மூவர் அடங்கிய ஆட்சிக் குழு ஒன்று தலைமை தாங்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். சபையின் பொதுச் சங்கத்தின் எல்லாக் காரியங்களையும் வழிநடத்தும் பொறுப்பு அதிசிரேஷ்டருக்கு மட்டுமே உரியது என்பது சபை விதிகளில் தெளிவாக எழுதப்பட்டிருந்தாலும், அதிசிரேஷ்ட ராக இருந்த நான் சபையின் பொதுச்சங்கத்திற்குத் தலைமை தாங்கக்கூட இல்லை.

இத்தகைய மனநிலையைக் கண்டபோது, ஒரு வாக் கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென நான் தீர்மானித்தேன். அந்த வாக்கெடுப்பு இந்த மூவர் தலைமைக் குழுவுக்கு, பொதுச் சங்கத்தில் இந்த அடிப்படை மாற்றத்திற்குச் சாதக மாக இருந்தால், நல்லது, பிறகு பார்க்கலாம்... முடிவுகள்: பெரும்பான்மை வாக்குகள் இந்த மூவர் தலைமைக் குழுவை ஆதரித்தன. இந்த ஆதரவு அடிப்படையில் அதிசிரேஷ்டர் பதவியையே நீக்கிவிடக் கேட்பதாக இருந்தது! இந்த மூவர் குழு - சபையின் பொதுச் சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று தந்தையர்களின் குழு - பொதுச் சங்கத்திற்குத் தலைமை தாங்கும், சங்கத்தின் உணர்வுக்கு ஒத்தபடி சபையை மாற்றி யமைக்கும் பணியைப் பொறுப்பேற்றுக்கொள்ளும். எல்லாமே தலைகீழாகத் திருப்பப்பட்டு விடும் - முற்றிலுமாக மாற்றப் பட்டு விடும் என்றும், ஒரு புதிய உணர்வை, நான் உள்ளே அனுமதிக்க முடியாததும், சங்கத்தின் போது நான் எதிர்த்துப் போராடியதுமாகிய ஓர் உணர்வை, சபை தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளும் என்று நான் தெளிவாகக் கண்டேன். நான் இன்னும் அதிசிரேஷ்டராக இருந்ததால், உண்மையில் சபையின் அழிவை உறுதிப்படுத்த இருக்கும் மாற்றங்களில் நான் கையெழுத்திட வேண்டியிருக்கும் என்றும், நடைமுறை யில் பேசும்போது, இதெல்லாவற்றிலும் கையெழுத்திட்ட அதிமேற்றிராணியார் லெஃபவர்தான் இதற்குப் பொறுப்பு என்று சபையின் எதிர்கால வரலாறு சொல்லும் என்றும் நினைப்பது: இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது இருந்தது.

ஆகவே, வாக்கெடுப்பிற்குப் பிறகு, அவர்கள் எப்படி யும் என் பதவியை எடுத்துக்கொள்ள விரும்பியதால், நான் என் காரை எடுத்துக்கொண்டு, புறப்பட்டு, தாய்மடத்திற்குத் திரும்பி வந்தேன். அதற்கு முன்னதாக துறவறத்தாருக்குரிய திருச்சங்கத்தின் தலைவராகிய கர்தினாலைப் பார்த்து, அவர்கள் செய்து கொண்டிருந்ததை அவர் ஏற்றுக்கொள்கிறாரா, அது அனுமதிக்கப்படக் கூடியதுதானா என்று அவரிடம் கேட்கும் படி அங்கே போனேன். கர்தினால் அந்தோனியுட்டி அந்தச் சமயத்தில் தென் அமெரிக்காவுக்குச் சென்று விட்டதால், அவர் அங்கே இல்லை. கர்தினால் இல்லாதபோது முதல் பொறுப்பாள ராக இருந்த திருச்சங்கத்தின் செயலாளர்தான் என்னை வரவேற்றார். ஆகவே நான் சூழ்நிலையை அவருக்கு விளக்கிக் கூறினேன்.

“இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா?”

“ஓ, உங்களுக்குத்தான் தெரியுமே, சங்கத்திலிருந்து, இது எப்படி இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உணமையில், பாருங்கள், இரட்சகர் சபையின் அதிபர் இப்போது தான் இதே காரணத்திற்காக வந்தார்... அவர்கள் மாற விரும்புகிறார்கள்... நல்லது, குறைந்தபட்சம் பொதுச் சங்கத்தை நடத்துபவர்கள் அப்படி விரும்பினார்கள்... ஆகவே நான் இந்த அதிசிரேஷ்டரிடம் அமெரிக்காவுக்கு ஒரு பயணம் மேற்கொள்ளும்படியும், அதன் பிறகு...”

அவர் அதிசிரேஷ்டராகிய என்னிடம், நானும் அமெரிக்காவுக்கு ஒரு பயணம் மேற்கொள்ளும்படியும், என் சபையைக் கைவிடும்படியும், என் சபையின் பொதுச்சங்கத்தை அதனிடமே விட்டுவிடும்படியும் அறிவுறுத்தினார்! பைத்தியக்காரத்தனம்! இதை உங்களால் நம்ப முடிகிறதா?



**சர்வதேச சங்கத் தந்தையர்களின் குழுமம்**

இதை நான் செயலாளரோடு விவாதிக்கவும் போவதில்லை. காரியங்கள் இப்படித்தான் இருக்கின்றன என்றால், அதைச் செய்வதில் நேரம்தான் வீணாகும்! என்று நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

தாய்மடத்தில், பாப்பரசருக்கு நான் ஒரு மிக அருமை யான கடிதம் எழுதினேன். அதில், சபையில் தற்சமயம் வளர்ந்து வரும் சூழ்நிலையில் என்னிடம் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கும் காரியத்தின் காரணமாக, நான் என் ராஜினா மாவைச் சமர்ப்பிக்கிறேன் என்றும், இந்த விதமான மாற்றத் திற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள என்னால் இயலாது என்றும் நான் எழுதினேன்.

என் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது. நான் இனியும் அதிசிரேஷ்டர் இல்லை, அந்தப் புரட்சிகரமான சூழலில் இனியும் நான் சபையில் தங்கியிருக்க முடியாது. வாய்ப்பேயில்லை! உரோமையில் நான் வாழக்கூடிய ஓர் இடத்தைத் தேடியலைந்து, லித்துவேனியன் வே என்னுமிடத் திலிருந்த லித்துவேனியக் குருக்களிடம் நான் தஞ்சமடைந்தேன். இந்த லித்துவேனிய குருக்களிடம் ஒரு குருமடம் இருந்தது. தெருவின் மறுபக்கத்தில் இருந்த குருமடத்திற்குக் குறுக்காக, அவர்களிடம் ஒருவிதமான விடுதி இருந்தது. அந்த விடுதியை லித்துவேனியாவிலிருந்து வந்த அவர்களுடைய குருக்கள் சில நாட்கள் தங்குவதற்குப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள்.




அது உரோமையில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு சில தந்தை யர்களின் வசிப்பிடமாக இருந்தது. ஆகவே அவர்கள் அங்கே என்னை ஏற்றுக்கொள்வார்களா என்று நான் கேட்க, அவர் களும் தயவோடு என்னை ஏற்றுக்கொண்டார்கள்.

ஆகவே, என்னுடைய ஒரு சில சொந்த உடைமைகளை எடுத்துக்கொண்டு, அர்ச். கத்தரீனம்மாள் சபையின் ஜெர்மானிய சகோதரிகளால் பராமரிக்கப்பட்டு வந்த இந்த லித்துவேனிய குருக்கள் விடுதிக்கு நான் குடிபெயர்ந்தேன். அதிக எண்ணிக்கையில் இருந்த இந்தச் சகோதரிகளுக்கு ஃப்ரீபர்க்கிலும் வேறொரு இடத்திலும் பெரிய மருத்துவமனை கள் இருந்தன. அவர்கள் லித்துவேனிய குருமடத்தின் இல்லத்து வேலைகளையும், இந்த குருக்களுக்கான விடுதியின் வேலை களையும் கவனித்துக்கொள்ள ஒப்புக்கொண்டிருந்தனர். மிகுந்த கருணையும், மிகுந்த அர்ப்பணிப்பும் உள்ள இந்த சகோதரிகளை நான் அறியவந்தேன். அவர்களிடையே சாண்டா கேட்டரினா மாகாணத்திலிருந்து வந்திருந்த, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரேசிலிய சகோதரிகள் இருந்தனர்.

நான் இந்த விடுதியை என் இல்லமாக்கிக்கொண்டேன். அந்தச் சமயத்தில், சபை அலுவல் எதுவும் இப்போது எனக்கு இருக்கவில்லை. ஏனெனில் இப்போது சபையில் எனக்கென்று எந்தப் பதவியுமில்லை. நான் நன்கு அறிந்திருந்த ஒரு சில தந்தையர்களோடு நான் தொடர்ந்து தொடர்பு வைத்து இருந்தேன்; அவர்கள் சபையின் பொதுச் சங்கத்தில் கலந்து கொண்டிருந்தார்கள், வத்திக்கான் பொதுச் சங்கத்திலும் பங்கெடுத்திருந்தார்கள். ஆனால் வெளிப்படையாகத் தெரிந்த படி, நான் விலகி வந்த பிறகு, எல்லாமே மாற்றப்பட்டுக் கொண்டிருந்தது.

விசுவாசப் பரம்புதல் சபையினர் என்னைத் தங்க ளிடம் வந்து, அவர்களுக்காக சில வேலைகளைச் செய்யும்படி, ஒரு ஆப்பிரிக்க ஞான உபதேசச் செயற்திட்டத்திற்குப் பொறுப் பேற்றுக்கொள்ளும்படி என்னிடம் கேட்டுக்கொண்டனர். நானும் போனேன், ஆனால் நீண்ட காலத்திற்கு அல்ல. ஏனெனில், மிக விரைவில்...நல்லது, என்ன நடந்திருக்குமென்று உங்களுக்குத் தெரியும். நாம் ஒரு முடிவை நோக்கி வந்து கொண்டிருந்தோம் என்பதால், இந்த ஞான உபதேச உரை களைத் தொடர்வதில் ஏதாவது பயன் இருந்ததா என்று எனக்குத் தெரியவில்லை...

*குறிப்பு:*

[1] செயிண்ட் ப்ரியூக் பிரான்ஸின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

## ஒருபோதும் தேவ பராமரிப்பை முந்திச் செல்லாதீர்கள்

நாம் ஒரு முடிவை நோக்கி வந்துகொண்டிருக்கிறோம்... முடிவை நோக்கியும், தொடக்கத்தை நோக்கியும்... சபையின் ஸ்தாபத்தின் தொடக்கத்தை நோக்கியும், சபை ஸ்தாபிக்கப்பட்டவுடன் என் பயணத்தின் முடிவை நோக்கியும் (வந்து கொண்டிருக்கிறோம்).

இந்தச் சமயத்தில்தான் இப்போது சுவாமி ஆலாஞ்யேர் மற்றும் சுவாமி கோட்டார்ட் ஆக இருக்கிற இருவரும் (அச்சமயத்தில் அவர்கள் உரோமையிலுள்ள பிரெஞ்சு குருமடத்தில் குருமாணவர்களாக இருந்தார்கள்), இன்னும் ஐந்தாறு பேரும் என்னிடம் வந்து, பிரெஞ்சு குருமடத்தில் இருந்த நிலையை விளக்கிக் கூறினார்கள். அங்கே காரியங்கள் மென்மேலும் மோசமாகிக் கொண்டே போயின: மேற்கொண்டு எந்த ஒழுங்குமில்லை, குரு மாணவர்கள் இரவில் வெளியே போகிறார்கள், குருத்துவ அங்கி இல்லை, வாராந்தர வழிபாட்டு முறையில் மாற்றங்கள் (ஒரு வழிபாட்டுக்குழு ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய வழிபாட்டிற்கு ஆயத்தம் செய்வதற்குப் பொறுப்பாக இருந்தது). மிகவும் செழிப்புற்று வளர்வதாக நான் அறிந்திருந்ததும், எவ்வளவோ அதிகப் பிரியத்தோடு நான் நினைவுகூர்ந்து வந்ததுமாகிய பிரெஞ்சு குருமடத்தில் இப்போது உண்மையாகவே நம்ப முடியாத ஒழுங்கின்மை இருந்தது.

இந்த இளம் குருமாணவர்கள், அந்தச் சமயத்தில் நான் எந்த அலுவலுமின்றி ஓய்வாக இருக்கிறேன் என்பதை அறிந்து, தங்களுக்காக நான் ஏதாவது செய்யவேண்டும் என்று என்னை வற்புறுத்தினார்கள். தனிப்பட்ட முறையில், நான் மீண்டும் வேலை செய்யத் தொடங்குவதில் ஆர்வமுள்ளவனாக இருக்கவில்லை. அது 1969- ஆம் ஆண்டு. எனக்கு ஏறக்குறைய அறுபத்தைந்து வயதாகியிருந்தது. நான் புதிதான ஒன்றைத் தொடங்குவதற்கான நேரம் அது என்று நான் நினைக்கவில்லை. அநேக மக்கள் அறுபத்தைந்து வயதில் தங்கள் பணிகளிலிருந்து ஓய்வு பெற்று விடுகிறார்கள், ஆகவே அப்படியே ஓய்வு பெற எனக்கும் உரிமை இருப்பதாக நான் நினைத்தேன். ஆனால் அவர்களுடைய வற்புறுத்தலின் காரணமாக, நான் அவர்கள் மீது அக்கறை எடுத்துக்கொள்ளச் சித்தமாயிருந்தேன், என்றாலும் அப்போது ஒரு துறவற சபையைத் தொடங்குவதற்கான ஒரு சிறு எண்ணம்கூட எனக்கு இருக்கவில்லை. அதற்கு நேர்மாறாக!



ஃப்ரீபர்க் பல்கலைக்கழகம்

### ஃப்ரீபர்க்

அதிசிரேஷ்டர் என்ற முறையில், சுவிட்ஸர்லாந்திலும், குறிப்பாக சபையின் சுவிஸ் மாகாணத்திலும் எனக்குச் சில தொடர்புகள் இருந்தன. அங்கே மாணவர்களைத் தங்க வைத்து, ஃப்ரீபர்க் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க அனுப்புவதற்கான ஒரு இல்லம் இருந்தது. நான் மேற்றிராணியார் ஷாரியேரை தனிப்பட்ட முறையில் நன்கு அறிந்திருந்தேன். நான் டாக்காரில் அதிமேற்றிராணியாராக இருந்தபோது, அவர் அங்கே வந்திருந்தார். இந்த ஒரு சில குருமாணவர்கள் ஃப்ரீபர்க்கில் உள்ள பல்கலைக்கழகத்தில் தங்கள் படிப்பைத் தொடரும்படி, அங்குள்ள இஸ்பிரீத்துசாந்து குருக்களின் குருமடத்தில் அவர்களைச் சேர்க்க என்னால் முடியும் என்று நான் நினைத்தேன். இதுதான் அனைத்திலும் அதிக எளிதான தீர்வாக இருக்கும் என்று நான் நினைத்தேன்.

அவர்களுடைய தற்போதைய சூழ்நிலைகளிலிருந்து அவர்களை வெளியேற்றும்படி, நான் அவர்களில் சிலரை நேரடியாக ஃபிரீபர்க்கிற்கு அனுப்பினேன். அவர்களைப் பார்க்கவும், அங்கே காரியங்கள் எப்படி நடந்து கொண்டிருந்தன என்று காணவும் ஓரிரு தடவைகள் நான் அங்கே சென்றேன். ஆனால் அங்கேயும் ஒரு அக்கியார்னமெந்தோ (நவீன காலத்திற்கேற்ப சுய மாற்றம்) நடந்து கொண்டிருந்தது. மாற்றங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் குருமாணவர்கள் இஸ்பிரீத்துசாந்து குருக்களின் இல்லத்தில் மகிழ்ச்சியாக இருக்கவில்லை, ஏனெனில் வழிபாடு மாற்றப்பட்டுக்கொண்டிருந்தது. சாதாரண மக்களைப்போல உடையுடுத்தும் நிலை ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது, இப்போது அங்கே எந்த ஒழுங்கும் இருக்கவில்லை. “ஓ, நாங்கள் இங்கே அதிக காலம் தங்கப் போவதில்லை. எங்களுக்கு இங்கே எந்த விதமான குருத்துவ உருவாக்கமும் கிடைக்கவில்லை. அவர்கள் எங்களுக்கு எதையும் தரவில்லை. ஞான உரைகள் இல்லை, எதுவுமே இல்லை. காரியங்கள் இப்போது இருக்கும் நிலையில், எங்களால் இங்கே தங்க முடியாது” என்று அவர்கள் சொன்னார்கள்.

“ஓ இது கவலைக்குரியதுதான்” என்று நான் நினைத்தேன்.

ஆகவே, நான் மேற்றிராணியார் ஷாரியேரைக் காணச் சென்றேன். நான் அவரிடம் இஸ்பிரீத்துசாந்து தந்தையர்களின் இந்த இல்லத்தைவிடச் சிறந்ததாக இருக்கக் கூடிய வேறு ஏதாவது இடம், என் பொறுப்பிலுள்ள குருமாணவர்கள்

தங்கி, நல்ல ஒரு குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றுக்கொள்ள இருக்கிறதா என்று கேட்டேன். அவர் எனக்கு இப்படிப் பதிலளித்தார்: "மேற்றிராணியார் அவர்களே, உங்களுக்கே தெரியும், நிலைமை இப்போது மிகவும் மோசமாகி விட்டது, அது மேலும் மேலும் மோசமாகிக்கொண்டே வருகிறது. நான் இந்த மேற்றிராசனம் மற்றும் குருத்துவ உருவாக்கத்தின் எதிர்காலத்தைப்பற்றி மிகவும் எதிர்மறையான எண்ணம் கொண்டிருக்கிறேன். நான் எதிர்மறையான எண்ணமுள்ளவனாக இருக்கிறேன்; காரியங்கள் எப்படியெல்லாம் மாறப் போகின்றன என்று எனக்குத் தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும், எங்களிடம் மேற்றிராசனங்களுக்குப் பொதுவான ஒரு குருமடம் இருக்கிறது. அது அனைத்து சுவிஸ் மேற்றிராசனங்களுக்கும் பணியாற்றுகிறது, வெளி மாணவர்களையும்கூட அது ஏற்றுக்கொள்கிறது. ஆகவே உங்கள் மாணவர்களையும் அது அநேகமாக ஏற்றுக்கொள்ளலாம். நீங்கள் அங்கே விசாரிப்பது நல்லது."

நான் இந்த மேற்றிராசனங்களுக்குப் பொதுவான மேற்றிராசனத்தைக் காணச் சென்றேன். அதன் அதிபர் என்னை மிகுந்த கனிவோடு வரவேற்றார். மேற்றிராணியார் அவர்களே, நாங்கள் வெளி மாணவர்களை ஏற்றுக்கொள்கிறோம், ஆகவே நாங்கள் நிச்சயமாக மேற்கொண்டு ஒரு சில, பல்கலைக்கழகத்திற்குச் செல்கிற குருமாணவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். அது பிரச்சினை இல்லை. ஆனாலும், ஒளிவுமறைவில்லாமல் பேசுவதானால், இங்குள்ள குருமாணவர்கள் எந்த ஒரு விசேஷ குருத்துவ உருவாக்கத்தையும் பெறுவதில்லை. அவர்கள் இங்கே தங்குகிறார்கள், தாங்கள் விரும்புவதைச் செய்கிறார்கள், தாங்கள் விரும்புகிறபடி தங்கள் காரியங்களை ஒழுங்கு செய்துகொள்கிறார்கள்; ஆனால் எங்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு நாங்கள் பொறுப்பு அல்ல. அவர்கள் ஆசைப்பட்டால், மிக எளிதாக தங்கள் சொந்த வாழ்வு விதியை ஏற்படுத்திக்கொள்ளலாம், அதைப் பின்செல்லலாம். அவர்கள் ஒன்று சேர்ந்து சிற்றாலயத்தில், தங்களுக்கிடையே தங்கள் ஞானப் பயிற்சிகளை மிக எளிதாகச் செய்துகொள்ளலாம். எந்தப் பிரச்சினையுமில்லை. ஆனால் எதற்கும் எங்களை நம்பாதீர்கள். நாங்கள் அவர்களைத் தங்கவைத்து, அவர்களுக்கு உணவளிப்போம்.



அவர்கள் இஸ்பிரீத்துசாந்து குருக்களோடு இருந்த போது எந்த நிலையில் இருந்தார்களோ, அதே நிலையில்தான் இங்கேயும் இருக்கப்போகிறார்கள் என்று நான் நினைத்தேன். மீண்டும் புதிய வழிபாடுதான் அதிகாரபூர்வ வழிபாடாக இருக்கப் போகிறது. மற்ற எல்லாமும்கூட மாற்றப்பட்டு விடும்... ஆக, அங்கே போவதால் அவர்களுக்கு என்ன நன்மை ஏற்படும்? அங்கே ஒழுங்கு இல்லை; எந்த நேரமும், இரவிலும் கூட அவர்கள் வெளியே போகலாம். இது ஏற்கத் தக்கதல்ல! இத்தகைய சூழ்நிலைகளில் குரு மாணவர்களின் உருவாக்கத்திற்கு நான் பொறுப்பாளியாக இருக்க முடியாது.

செய்யப்பட வேண்டியதென்ன? இதற்கு ஏதாவது தீர்வு இருக்கவேண்டும். நான் ஒரு சில குருமாணவர்களை வைத்துப் பராமரித்துக்கொண்டு வருகிறேன் என்பதைக் கேள்விப்பட்டு, அர்ச். சாமிநாதர் சபையினரான சுவாமி பிலிப் என்பவரும், ஒரு பொதுநிலை விசுவாசியான திரு பெர்னார்ட் ஃபே என்பவரும் (இவர்கள் இருவரும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக இருந்தார்கள்), சுவாமி டாட்டரீவ் மற்றும் இன்னொரு பொது நிலை விசுவாசியும் (இவர் என்னுடைய நண்பர், ஃப்ரீபர்க்கில் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார்) என்னை வந்து பார்க்க அனுமதி கேட்டார்கள். குருமாணவர்களின் உருவாக்கம்பற்றிய இந்தப் பிரச்சினைபற்றி என்னிடம் கொஞ்சம் பேச அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் இதில் ஆர்வம் காட்டினார்கள், இதில் செய்யப்படக்கூடியது எதுவுமே இல்லையா என்று அவர்கள் வியந்தார்கள்.

அவர்கள் திரு பெர்னார்ட் ஃபே என்பவரின் வீட்டுக்கு என்னை வரச் செய்தார்கள், என்னை மிகவும் வற்புறுத்துபவர்களாக இருந்தார்கள். "வந். மேற்றிராணியார் அவர்களே, நீங்கள் ஏதாவது செய்யவேண்டும்; இப்படி அவர்கள் இப்போது இருக்கிறபடியே அவர்களை நீங்கள் விட்டுவிட முடியாது. நாங்கள் மற்றவர்களையும் நிச்சயமாக உங்களிடம் அனுப்புவோம். அது கடினமானதாக இராது. உண்மையான குருத்துவ உருவாக்கத்தைப் பெற ஆசிக்கிற அநேகரை எங்களுக்கு ஏற்கனவே தெரியும்."

"இதோ நான் இருக்கிறேன், அறுபத்தைந்து வயதானவன், இப்போது மறுபடியும் முதலிலிருந்து எல்லாவற்றையும் நான் தொடங்க வேண்டியிருக்கிறது!... கேளுங்கள், இந்தக் குருமாணவர்களுக்கு உதவி செய்ய நான் சந்தோஷமாக முயற்சி செய்கிறேன். அவர்கள் தங்கும் அறைக்கும், உணவுக்கும் செலுத்த வேண்டிய பணத்திற்கு ஏற்பாடு செய்ய நான் சித்தமாயிருக்கிறேன். அவர்களுடைய கல்வியில் அவர்களை நான் மகிழ்ச்சியோடு வழிநடத்துவேன். அவர்களுக்கு உதவி செய்ய நான் மனதாயிருக்கிறேன். ஒரு குருவை, அவர்களில் ஆர்வம் காட்டுகிற ஒரு பரிபாலனக் குருவை அவர்களுக்குக் கண்டுபிடித்துத் தருவது - இதைப் போன்ற எதையும் எளிதாகச் செய்துவிடலாம்! ஆனால் தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்தவரை, நான் இப்போது உரோமையில் இருக்கிறேன். அதை விட்டுச் செல்லும் எண்ணம் எதுவும் எனக்கில்லை. ஒரு புதிய ஸ்தாபனத்தைத் தொடங்கும் ஆர்வம் எனக்கில்லை" என்று நான் சொன்னேன்.



**டொன் போஸ்கோ குருக்கள் இல்லம்**

எனக்கு எந்த விதத்திலும் பொருத்தமற்றதாக இருந்த இந்தத் திட்டத்தை எதிர்கொள்ளும் விதமாக இங்கே, மீண்டும் தொடர்ந்து செயல்படும்படி என்னை வற்புறுத்திக் கொண் டிருந்தது தேவ பராமரிப்புதான். நான் அவர்களிடம்: “நல்லது! கேளுங்கள், இது எளிதானது. நீங்கள் வற்புறுத்துவ தால், இதைத் தீர்மானிக்க வேண்டியவர் மேற்றிராணியார் ஷாரியேர்தான். எனக்கு ஃப்ரீபர்க் மேற்றிராணியாரான வந். ஷாரியேரைத் தெரியும். நான் போய் அவரைப் பார்க்கிறேன். அவர் தொடர்ந்து செயல்படும்படி என்னை ஊக்குவித்தார் என்றால், இந்தக் குருமாணவர்களுக்காக எதையாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்” என்றேன். ஆனால் இன்னமும்கூட, ஒரு சபையை ஏற்படுத்தும் பேச்சே எழவில்லை, நேரடியாக இந்தக் குருமாணவர்கள்மீது அக்கறை எடுத்துக்கொள்வது மட்டும்தான். “மேற்றிராணியார் ஷாரியேர் சம்மதிக்கவில்லை என்றால், நான் எதுவும் செய்ய மாட்டேன், அல்லது அவர் எனக்கு என்ன சொல்கிறாரோ, அதைச் செய்வேன்” என்றேன்.

நான் மேற்றிராணியார் ஷாரியேரைப் போய்ப் பார்த்து, அவர் முன்பாக இந்தப் பிரச்சினையை வைத்தேன். “ஆம், ஆம், நிச்சயமாக” என்று அவர் சொன்னார். சூழ்நிலை மிக மோசமாயிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும், காரியங்கள் இன்னும் அதிக மோசமாகுமென்பதை நீங்களே பார்க்கிறீர்கள். இதைச் செய்யுங்கள். இதைச் செய்யும்படி நான் உங்களிடம் இரந்து கேட்கிறேன். இங்கே நகரத்திலேயே ஏதாவது ஓர் இடத்தைத் தேடிப் பாருங்கள்; ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுங்கள்; உங்கள் குருமாணவர்களை அங்கே வைத்து, அவர்களைக் கவனித்துக்கொள்ளுங்கள்; இல்லாவிடில் அவர்களுக்கு நல்ல குருத்துவ உருவாக்கம் கிடைக்காது. நீங்கள் அவர்களுக்காக ஏதாவது செய்துதான் ஆகவேண்டும். நீங்கள் அவர்களைக் கைவிட்டுவிடக்கூடாது.”

“நல்லது! இதோ தொடங்கி விட்டது! நீங்கள் தேவ பராமரிப்பின் குரலாக இருப்பதால், எங்களால் என்ன செய்ய முடியும் என்று நாங்கள் பார்க்கிறோம். நான் இதைப்பற்றிச் சிந்திக்கிறேன், அதன்பின் தங்குமிடங்களைக் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்க்கிறேன்” என்று நான் பதில் கூறினேன்.

இவ்வாறு, நாங்கள் எங்கள் ஃப்ரீபர்க் நண்பர்களுடன் சேர்ந்து, எங்கள் குருமாணவர்களுக்கு நாங்கள் தர விரும்பிய உருவாக்கத்திற்கு கூடுதல் உதவியாக இருக்கக்கூடிய சூழலைக் கொண்ட இடம் ஏதாவது கிடைக்குமா என்று தேடத் தொடங்கினோம்; ஒரு சிற்றாலயம், பூசை, ஞான உரைகள், சட்டத் தொகுப்பு, ஒழுங்கு, போன்றவற்றோடு கூடிய, குருமாணவர்களுக்கான உண்மையான உருவாக்கம், ஒரு குருமடத்திற்கான சூழல்.

## மார்லி தெரு

மார்லி தெருவில் இருந்த டொன் போஸ்கோ குருக்க ளிடம் இருந்த ஒரு இடத்தை நாங்கள் கண்டுபிடித்தோம். இந்த குருக்கள் தங்கள் இல்லத்தில் ஒரு மாடி முழுவதையும் எங்களுக்கு வாடகைக்குவிட சம்மதித்தார்கள். இந்த இடம் ஒரு சிற்றாலயத்தையும், பத்து பேருக்குப் போதுமான படுக்கையறைகளையும் கொண்டிருக்க எங்களுக்கு உதவியது. ஒரு தனி உணவறையையும் எங்களுக்குத் தர அவர்கள் சம்மதித்தார்கள். அவர்கள் மாணவர்களுக்குத் தங்க இடம் தந்தார்கள், அந்த மாணவர்களில் தங்கள் சலேசிய சபைக்குரிய தேவ அழைத்தல்கள் கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார் கள், ஆனால் உண்மையில், தேவ அழைத்தல்கள் மிக அரிதாக இருந்தன. இதை நீங்கள் விரும்பினால், தங்கள் படிப்புக்காக பட்டணத்திற்குச் சென்ற இளைஞர்களுக்கான உணவு, தங்கும் வசதி ஆகியவற்றைக் கொண்டுள்ள ஒரு விதமான விடுதி என்று அழைத்துக் கொள்ளுங்கள். என்றாலும் இல்லம் குருமாணவர் களால் நிரம்பவில்லை, ஆகவேதான் இதைப் பராமரித்துக் கொண்டிருந்த சலேசிய குருவானவர், கட்டிடத்தின் ஒரு பகுதியை மிகுந்த மகிழ்ச்சியோடு வாடகைக்கு விட முடிவு செய்தார். ஏனெனில் அவர்களது வரவு செலவுக் கணக்கைச் சரி செய்வதற்குத் தேவையான பணம் இதன்மூலம் அவர்களுக்குக் கிடைத்தது. அவர் தயவோடு எங்களுக்குத் தங்க இடம் தந்தார். நாங்கள் அங்கே செலவிட்ட அந்த வருடம் முழுவதும் அவரோடு எப்போதும் நல்ல நட்புறவு கொண்டிருந்தோம்.

யார் வருவார்கள் என்று பார்க்கும்படி நாங்கள் காத் திருக்கத் தொடங்கினோம். திரு ஆலாஞ்யேர், திரு. திஸ்ஸியே த மலரே, திரு. பெல்லாப்யூஃப், மற்றும் சுவாமி பிலிப்பும், ஃப்ரீபர்க்கிலிருந்த மற்ற நண்பர்களும் அனுப்பிய வேறு ஆறு பேரும் வந்தார்கள். ஆகவே தொடக்கத்தில் எங்களிடம் ஒன்பது மாணவர்கள் இருந்தார்கள். இன்னமும்கூட, உரோமையில் விசுவாசப் பரம்புதல் திருச்சங்கத்தோடு எனக்கு வேலை இருந்ததால், எனக்கு உதவி செய்யும்படி நான் ஒரு குருவைத் தேடினேன். மேலும் இந்த வேலைக்கு முழுமையாக என்னை அர்ப்பணித்துக் கொள்ள நான் திட்டமிடவில்லை. குருமாணவர்கள் ஃப்ரீபர்க்கில் தங்கள் தத்துவவாத, மற்றும் வேதசாஸ்திரக் கல்வியை முடிப்பார்கள், கண்டிப்பான முறையில் பேசும்போது, சலேசிய மடத்தில் குருமடத்துப் பாடங்கள் கற்பிக்கப்படுவதில்லை. அந்த இல்லம் அவர்கள் கல்வி கற்கவும், ஞான முறையில், குருத்துவ முறையில் தாங்கள் உருவாக்கப்படவும் தேவையான உதவிகளைச் செய்யும்படி சாதாரணமாக ஒரு ஞான சூழலை உருவாக்கித் தரும், அவ்வளவுதான். ஆகவே நான் சிறிது காலத்திற்கு

எனக்கு உதவி செய்ய வந்த சுவாமி க்ளெர்க் என்பவரைக் கண்டுபிடித்தேன். 1969 அக்டோபர் மாதம் இவ்வாறு இந்த சிறிய தங்கும் விடுதி தொடங்கப்பட்ட காலமாக இருந்தது...

மீண்டும் ஒருமுறை, நான் உண்மையில் நடக்க ஆர்வ மில்லாமல் இருந்த வழிகளில் தேவ பராமரிப்பு என்னை நடத்திக்கொண்டிருந்தது. ஆனால் நான் நடந்தேன்!

## ஒரு விசித்திரமான நோய்

அதன்பின் நான் திடீரென நோய்வாய்ப்பட்டேன். உண்மையாகவே மிகவும் நோய்வாய்ப்பட்டேன். அது டிசம்பர் 8 அன்று தொடங்கியது. நான் உரோமையில் இருந்தேன், எனக்கு ஃப்ளூ காய்ச்சல், மோசமான ஃப்ளூ, ஹாங்காங் ஃப்ளூ காய்ச்சல் வந்திருந்தது. அது என்ன வியாதி என்று எனக்குத் தெரியாது, ஆனால் நான் பயங்கரமாக உணர்ந்தேன். எனக்கு கல்லீரல் பிரச்சினைகள் இருந்தன. என் உடல் முழுவதும் வலி இருந்தது; சரியாக உறங்க முடிய வில்லை. இந்நிலையில் மருத்துவ உதவியைத் தேடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லாமல் போயிற்று. ஆகவே, குருமாணவர்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை சுவாமி க்ளெர்க்கிடம் நம்பி ஒப்படைத்துவிட்டு, ஒரு சில வாரங்கள் ஓய்வெடுப்பதற்காக நான் இஸ்பிரீத்துசாந்து குருக்க ளிடம் சென்றேன். ஆனால் என் உடல்நிலை இன்னும் மோசமாகி விட்டது.

நான் ஃப்ரீபர்க் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். இறந்து விடப்போகிறேன் என்று நான் உண்மையாகவே நினைத்தேன்! என்னால் மேற்கொண்டு சாப்பிட முடியவில்லை; என் நாக்கு முற்றிலுமாகக் காய்ந்து வறண்டு போயிற்று - மரத்தாலானது போலாயிற்று. என்னால் எதையும் விழுங்க முடியவில்லை. மருத்துவர்கள், பரிசோத னைகள், அது எப்படி இருக்குமென்று உங்களுக்குத் தெரியும். பரிசோதனைக்கு மேல் பரிசோதனை. அவர்கள் எல்லாவற்றை யும் பரிசோதித்தார்கள். உங்களிடம் எந்தப் பிரச்சினையும் இல்லை, நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள் என்று அவர்கள் சொன்னார்கள். என்னிடம் எந்தப் பிரச்சினையுமில்லை, ஆனால் மேற்கொண்டு என்னால் உணவு உண்ண முடியவில்லை, நான் எடை குறைந்து கொண்டு வந்தேன், நான் இறந்து கொண்டிருந்தேன்! இறுதியாக என் வயிற்றை யும், கல்லீரலையும் ஸ்கேன் செய்து பார்ப்பது என்ற யோசனை அவர்களுக்கு வந்தது. நல்ல வேளையாக இந்த யோசனை யாருக்கு வந்தது என்பது எனக்குத் தெரியாது. நான் நினைக்கிறேன், இது தேவ பராமரிப்புதான். எது எப்படி யிருந்தாலும், என் உடலில் ஒட்டுண்ணிகள் ஸ்ட்ராங்கைல்கள் எனப்படும் வட்டப் புழுக்கள் இருந்தன. அவை என் உடலில் கல்லீரலை அரித்துத் தின்றுகொண்டிருந்தன. பேஸில் உள்ள ட்ராப்பிக்கல் நிறுவனத்தில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள் இருந்தன. அந்த மாதிரிகள்தான் என் வியாதிக்குரிய பதிலாக இருந்தது: ஸ்ட்ராங்கைல்கள்! இவற்றை அகற்ற நான் இன்னின்ன மருந்தை உட்கொள்ள வேண்டும், சில நாட்கள் சிகிச்சைக்குப் பின் நான் நன்றாகி விடுவேன். இந்த ஸ்ட்ராங்கைல்களை நான் எங்கிருந்து பெற்றுக்கொண்டேன்? எனக்குத் தெரியவில்லை! "ஓ! இது நிச்சயமாக ஆப்பிரிக்காவில்தான் நடந்திருக்கிறது" என்று மக்கள் சொன்னார்கள். ஆனால் நான் ஆப்ரிக்காவை விட்டு வந்து நீண்ட காலமாகி விட்டது, ஆகவே அது ஆப்ரிக்காவாக இருக்க முடியாது. "அப்படியானால் உங்களுக்கு யாரோ விஷம் வைத்திருக்கிறார்கள்!" யாருக்குத் தெரியும்! எனக்கு இதுபற்றி எந்த விவரமும் தெரியாது! ஆனாலும் அனைத்திலும் அதிக வேடிக்கையான விமர்சனம் கொலம்பியாவிலிருந்த என் தங்கை மரீ தெரேஸிடமிருந்து வந்தது. அவள் என்னைச் சீண்டிப் பார்ப்பவள். அவள் லாரூஸ் மருத்துவ அகராதியில் ஸ்ட்ராங்கைல்கள் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தேடிப் பார்த்தாள். அதில், ஸ்ட்ராங்கைல்ஸ் என்பது பொதுவாக பன்றிகளில் காணப்படும் ஒட்டுண்ணியாகும், பிணப் பரிசோத னையில்தான் இதைக் கண்டுபிடிக்க முடியும் என்று கூறப்பட்டிருந்தது! ஓ என் ஆண்டவரே! லாரூஸ் மருத்துவ அகராதியில் இதைக் கண்டுபிடித்ததுபற்றி அவள் தன்னால் முடிந்தவரை சந்தோஷப்பட்டாள். என்னைப் பொறுத்தவரை நல்ல வேளையாக என் பிரேதப் பரிசோதனைக்கு முன்பே இந்த ஒட்டுண்ணி கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. என் பிரேதத்திலிருந்து அல்ல!... ஆகவே நான் சிகிச்சை பெற்று, நல்ல வேளையாக, குணமாகி விட்டேன்.

இவ்வாறு குருமாணவர்கள் சம்பந்தப்பட்ட என் வேலையை நான் மீண்டும் தொடங்க முடிந்தது. என்றாலும், நான் இதுவரை இருந்த உடல்நிலையின் காரணமாக, நான் இந்த வேலையை எடுத்துக் கொள்வதைக் கடவுள் விரும்ப மாட்டார் என்று நான் உண்மையாகவே நினைத்தேன்...

இன்னமும்கூட அதிகமான துன்ப சோதனைகள் இருந்தன. மூன்று குருமாணவர்கள் போய்விட்டார்கள். அதன் பின் நான்காவது குருமாணவர். மே மாதம் முடிந்தபோது, திரு ஆலாஞ்யோர், திரு திஸ்ஸியே த மலரே மற்றும் பெல்லாப்-யூஃப் ஆகியோர் மட்டுமே இருந்தார்கள். "என் அன்புள்ள நண்பர்களே, அடுத்த வருடம், நாங்கள் சமீபத்தில் போய்ப் பார்த்துவிட்டு வந்த மேற்றிராசனங்களுக்குப் பொதுவான குருமடத்திற்குப் போய் விடுவீர்கள் என்று நான் நினைக்கி றேன். சில ஞானப் பயிற்சிகள் போன்றவற்றைச் செய்வதற்கு, நீங்களே ஏதாவது ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியிருக்கும்.



என்னைப் பொறுத்தவரை, நான் இப்படியே தொடர்ந்து இருக்கப்போவதில்லை; நாங்கள் இந்தப் பரீட்சார்த்த முயற்சியை நிறுத்தப் போகிறோம்'' என்று நான் அவர்களிடம் சொன்னேன்.

திரு ஆலாஞ்யேரும், விசேஷமாக திரு திஸ்ஸியே த மலரேயும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ''கூடாது! கூடவே கூடாது! நாம் நிறுத்தக் கூடாது! எங்களுக்கு எதுவுமே தரப்படாத ஒரு இல்லத்திற்குப் போக நாங்கள் விரும்பவில்லை. அந்த வகையான குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றுக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை! வேண்டாம்! நாங்கள் இங்கேயே தொடர்ந்து இருப்போம், ஒருவேளை மற்றவர்கள் எங்களோடு வந்து சேர்ந்துகொள்வார்கள்'' என்று அவர்கள் கூறினார்கள்.


அதன்பின், ஜூன் மாதத்தின் போது, எங்களிடம் சேர்வதற்கான பன்னிரண்டு விண்ணப்பங்கள் எனக்கு வந்தன. பன்னிரண்டு விண்ணப்பங்கள்! நம்பவே முடியவில்லை! ஆகவே நான் தொடர்ந்து செயல்பட வேண்டியதாயிற்று. இவ்விஷயத்தில் எனக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

அதன்பின் எங்கள் நண்பர்கள் திரு ஆலாஞ்யேரும், திரு திஸ்ஸியே த மலரேயும் என்னிடம்: ''ஆயரவர்களே, குருமடத்திற்குப் பிறகு எங்களுக்கு என்ன ஆகும்? நாங்கள் எங்கே போகப்போகிறோம்?'' என்று கேட்டார்கள்.

''நல்லது, நீங்கள் உங்கள் மேற்றிராசனங்களுக்குத் திரும்பிப் போவீர்கள், உங்கள் மேற்றிராசனங்களில் வேலை செய்வீர்கள்.''

''ஆனால் நாங்கள் பாரம்பரியத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டோமென்றால், நாங்கள் குருத்துவ அங்கி அணிவதைத் தொடர்ந்தோமென்றால், இவை எல்லாவற்றோடும் நாங்கள் இணைந்திருக்க விரும்புகிறோமென்றால், அப்போது மேற்றிராணிமார் எங்களை ஏற்றுக்கொள்ள ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் எங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்! நாங்கள் எங்கே போனாலும் சரி, உடனே வெளியே அனுப்பப்பட்டு விடுவோம். நாங்கள் ஒருபோதும் மேற்றிராசனங்களில் வேலை செய்ய முடியாது.''

''ஆனால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?''



ஈக்கோன் குருமடத்தின் இன்றையத் தோற்றம்

''நாம் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். நம்மை ஒன்றாக இணைக்கும்படி ஒரு சபை ஸ்தாபிக்கப்படவேண்டும். அதன்பின் நம்மை ஏற்றுக்கொள்ளக் கூடியவரும், பாரம்பரியத்தைத் தொடரும்படி சேர்ந்து உழைக்க நம்மை அனுமதிப்பவருமாகிய ஒரு மேற்றிராணியாரை நாம் கண்டுபிடிப்போம். இல்லாவிடில் இது ஒருபோதும் செயல்படாது.''

''நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம்... நாம் ஒரு சபையை ஸ்தாபிக்க முயற்சி செய்வோம். என்றாலும் அது அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியம். ஆகவே, மற்ற எல்லாவற்றிற்கும் முன்பாக, நாம் சபை விதிகளைத் தயார் செய்வோம்.''

நான் சபைச் சட்ட விதிகளை எழுதித் தொகுத்தேன். மேற்றிராணியார் ஷாரியேரிடம் அதை நாங்கள் கொண்டு சென்றபோது, நான் எனக்குள் இப்படிச் சொல்லிக் கொண்டேன்: வந். ஷாரியேர் இவற்றை ஏற்றுக்கொண்டால், நல்லது, ஆனால் அது என்னை ஆச்சரியப்படுத்தும். நாங்கள் பாரம்பரியர்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர் சீக்கிரம் ஓய்வு பெற்று விடுவார். ஜனவரியில் தமது ராஜினாமாவை சமர்ப்பிக்க அவர் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறார். இது போன்ற ஒரு காரியத்தில் சம்பந்தப்பட அவர் விரும்ப மாட்டார். ஆனாலும், பார்ப்போம்.

''நல்லது, நான் இதை ஆய்வு செய்கிறேன்'' என்று வந். ஷாரியேர் என்னிடம் கூறினார். ''விடுமுறை நாட்களுக்குப் பிறகு திரும்பவும் வாருங்கள், பார்ப்போம்.''

இதற்கிடையே எதிர்பார்க்கப்பட்ட பதினொரு இளைஞர்களையும், இன்னும் இங்கேயிருந்த மூன்று குருமாணவர்களையும் என்ன செய்வது? சலேசியர்கள் மேற்கொண்டு எங்களோடு தொடர்பு கொண்டிருப்பதை விரும்பவில்லை. நாங்கள் புதிய பூசையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதால், நாங்கள் பாரம்பரியர்கள் என்பதை அவர்கள் புரிந்துகொண்டு விட்டார்கள். அந்தக் குரு தமது மாகாண அதிபரிடம்: ''அவர்கள் பாரம்பரியர்கள். அவர்கள் புதிய பூசையை மறுக்கிறார்கள்; எப்போதும் பழைய பூசையையே செய்கிறார்கள். அவர்கள் இங்கே நம்மோடு தங்குவதை நாம் அனுமதிக்க முடியாது; அதற்கு வாய்ப்பே இல்லை'' என்று கூறி விட்டார். வருடக் கடைசியில், மேற்கொண்டு அந்த இல்லத்தை நாங்கள் காலிசெய்துவிட வேண்டும் என்று அவர்கள் எங்களுக்குத் தெரிவித்து விட்டார்கள். ஆகவே நாங்கள் மற்றொரு இடத்தைத் தேட வேண்டியிருந்தது.

## விஞ்ஞேட்டாஸ்

அதன்பின் கடவுள் எங்களுக்கு ஃப்ரீபர்க்கில் ஓர் அற்புதமான, விஞ்ஞேட்டாஸ் என்னும் சிறிய இல்லத்தைத் தந்தார். நாங்கள் எங்கள் உடமைகளை ஜூன் முடிவில் அங்கே மாற்றினோம். எங்கள் குருமாணவர்கள் சலேசிய இல்லத்தில் தொடங்கியிருந்ததை இவ்வாறு தொடர்ந்து செய்ய முடிந்தது. ஆனாலும் பதினொரு புது மாணவர்களுக்கு, நாங்கள் ஒரு வருட ஆயத்தத்திற்கு அல்லது ஆன்மீகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது, இது அவர்கள் குருமடத்தில் நுழைவதற்கு முன் அவர்கள் செய்ய

வேண்டிய ஒருவிதமான நவசந்நியாசப் பயிற்சியாக இருந்தது. அவர்கள் எங்கே தங்கப் போகிறார்கள்? நாங்கள் ஃப்ரீபர்க் பகுதியில் எல்லா இடங்களிலும் தேடினோம். ஆனால் அப்படி ஒரு இடத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது.

அதன்பின், இதோ, பிரான்ஸிலிருந்து நான் தொடர்பு கொள்ளப்பட்டேன்: "நீங்கள் ஏன் வழக்கறிஞர், திரு. லோவீ யைப் போய்ப் பார்க்கக் கூடாது? வாலேய்யில் அவருக்கு ஒரு கட்டிடம் இருக்கிறது. அவர் அதை உங்களுக்குத் தரக்கூடும். அது முன்பு மாபெரும் அர்ச். பெர்னார்ட் சபைக் குருக்களுக்கு சொந்தமாயிருந்த கட்டிடம்."

திரு லோவீ ஃபுல்லியில் வசித்து வந்தார். எனக்கு அவரைத் தெரியாது. ஆனாலும் ஃபுல்லி எனக்கு அறிமுகமான வராகத் தோன்றினார். எனக்கு அங்கே பங்குக் குருவாக இருந்த சுவாமி போன்வின் என்பவரை மிக நன்றாகத் தெரியும். நாங்கள் பிரெஞ்ச் குருமடத்தில் சேர்ந்து படித்தோம். அப்போதிலிருந்து எங்கள் பாதைகள் அடிக்கடி குறுக்காகச் சந்தித்திருந்தன.

குருமட பேராசிரியர்களுடன் அதிமேற்றிராணியார்



ஆகவே, நான் சுவாமி போன்வினைப் பார்க்கச் சென்றேன்.

"உங்களுக்கு திரு. லோவியைத் தெரியுமா?" என்று நான் அவரிடம் கேட்டேன்.

"நிச்சயமாக அவரை நான் அறிவேன். ஏன்?"

"நல்லது, அவரிடம் ஒரு கட்டிடம் இருக்கிறது. அவர் அதை ஒரு வருட ஞானப் பயிற்சிக்காக, அதாவது நவசந்நியாசப் பயிற்சிக் காலத்திற்காக நாங்கள் பயன்படுத்த எங்களை அனுமதிப்பாரா என்று நான் அறிய விரும்புகிறேன்."

"இது எளிதான காரியம். நாம் அவரை மதிய உணவுக்கு அழைப்போம். நீங்கள் அதைப்பற்றி அவரிடம் பேசி, அவர் கருத்தைத் தெரிந்து கொள்ளலாம்."

திரு. லோவி வந்து சேர்ந்தார். "ஆம், எங்களிடம் ஒரு கட்டிடம் இருக்கிறது; அது உண்மைதான்; அது பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம்தான்" என்று அவர் என்னிடம் கூறினார். பெரும் அர்ச்சியசிஷ்டவரான பெர்னார்டின் சபை குருக்கள் ஈக்கோனில் உள்ள அவர்களது இல்லத்தை விற்க விரும்பினார்கள். ஒரு காலத்தில் அவர்கள் அதைத் தங்கள் விவசாயப் பண்ணை இல்லமாகவும், தங்கள் நவதுறவற இல்லமாகவும் பயன்படுத்தினார்கள். அங்கே அவர்கள் வழக்கமாக தங்கள் நாய்களை வளர்த்து வந்தார்கள். எங்களுக்கு அந்தக் கட்டிடம் தேவையில்லை, அறுநூறு வருடங்களாக அர்ச். பெர்னார்டின் துறவிகளின் இல்லமாக இருந்து வந்துள்ள அந்த கட்டிடம், வேறு எந்த விதத்திலும் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. ஆகவே அதை விற்க அவர்கள் விரும்பினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்ட போது, வாலேய்யைச் சேர்ந்த திரு.ஜெனோட், திரு. ரோஸலிஸ், திரு. மார்செல் பெட்ரோனி, அவருடைய சகோதரர் திரு. அல்போன்ஸ் பெட்ரோனி மற்றும் நான் ஆகிய ஐந்து பேர் ஒன்று சேர்ந்து, ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, அந்த இல்லத்தை வாங்குவது என்று தீர்மானித்தோம். "நாம் போய் அந்த இடத்தைப் பார்ப்போம், அது உங்கள் நோக்கத்திற்குப் பொருத்தமானதுதானா என்று பாருங்கள். அங்கே குடியேறுவதுபற்றி சிந்தித்துக் கொண்டிருந்த மோன்ட்டேலிமாரின் கார்மேல் சபைக்கு அதை ஏற்கனவே நாங்கள் தருவதாகக் கூறினோம், ஆனால் அந்தக் கட்டிடம் அவர்களுக்குப் பொருத்தமானதாக இல்லை. தற்சமயம், அது சில உடல் ஊனமுற்றவர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும் அவர்களும் அங்கே குடியிருப்பார்கள் என்று தோன்றவில்லை. எப்படியிருந்தாலும், அங்குள்ள நிலைமையை நாம் போய்ப் பார்ப்போம். இதைப்பற்றி அவர்களிடம் பேசுங்கள். அது உங்களுக்குப் பொருத்தமானது என்றால், பிரமாதம். இல்லையென்றால், நீங்கள் வேறு இடம் தேடலாம்."

இது நல்ல யோசனையாக இருந்தது. ஆகவே நாங்கள் உடல் ஊனமுற்றவர்களின் அந்த இல்லத்தைக் காணச் சென்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நான் முதல் தடவையாக ரிட்ஸின் பங்குக் குருவைச் சந்தித்தேன். தமக்கும், தம் கிராமத்திற்கும் அருகிலேயே குருமாணவர்கள் இருக்கக் கூடுமென்ற எண்ணம் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. நாங்கள் அந்த இல்லத்தைப் பார்வையிட்டு, அங்கிருந்த வயல்களின் மாதா சிற்றாலயத்தில் சால்வே ரெஜினா பாடினோம். அது ஏற்கனவே ஏறக்குறைய நன்றிப் பாடலாக இருந்தது. எல்லாமும் இன்னும் சரிவர நடந்து விடவில்லை, என்றாலும் அதைப் பற்றி என்ன!

எல்லாமே சற்று வேகமாக நடக்கத் தொடங்கியது... தேவ பராமரிப்புதான் எங்களை முன்னோக்கி நடத்திக் கொண்டு சென்றது. நாங்கள் அதைத் தொடர்ந்து செல்லவும், அங்கே செல்லக் கூடிய இளைஞர்களைக் கவனித்துக் கொள்ளக்கூடிய குருக்களைக் கண்டுபிடிக்கவும் வேண்டியிருந்தது. உண்மையில் உடல் ஊனமுற்றோர் அங்கே குடியிருக்கவில்லை. திரு. லோவி என்னிடம்: "இதோ! இது உங்கள் கைவசம் இருக்கிறது. நீங்கள் எப்போது விரும்புகிறீர்களோ, அப்போது இங்கே குடியேறலாம். பிற்பாடு நாம் பார்த்துக் கொள்வோம்!" என்று சொன்னார்.


நாங்களும் அதைத்தான் செய்தோம். அக்டோபர் மாதத்தின் போது, நாங்கள் அங்கே குடியேறினோம். இவை ஏற்கனவே இரண்டு முக்கியமான நடவடிக்கைகளாக இருந்தன. நீங்களே பாருங்கள், இப்போது எங்களுக்கு ஃப்ரீபர்க்கில் ஒரு இல்லமும், ஈக்கோனில் மற்றொரு இல்லமும் இருந்தன. ஒரு இல்லத்தில் மூன்று குருமாணவர்கள் மட்டுமே இருந்தனர். இதைப்பற்றிப் பேச அதிகமாக எதுவும் இருக்கவில்லை; ஆனால் அதன்பின் மற்றொருவர் அவர்களோடு சேர்ந்துகொள்ள வந்தார், அவர் திரு. வால்ஸ், அவரோடு எண்ணிக்கை நான்கு ஆயிற்று; அதன்பின் திரு. கோட்டார்ட், எண்ணிக்கை ஐந்து ஆயிற்று; விஞ்ஞேட்டாஸில் ஐவர், ஈக்கோனில் பதினொரு பேர். இது ஏற்கனவே ஒரு நல்ல தொடக்கமாக இருந்தது.

**அங்கீகாரம்**

ஆனாலும் மேற்றிராணியார் ஷாரியேர் இந்த சபைக்கு அங்கீகாரம் அளிப்பாரா என்று நாங்கள் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அங்கீகரிப்பாரா, இல்லையா? நான் பல சந்தேகங்களோடு அவரைப் பார்க்கச் சென்றேன், அவர் தம் அங்கீகாரத்தைத் தர மாட்டார் என்று நான் பெரிதும் பயந்தேன். அன்று நவம்பர் 1. “ஆம், ஆம், நான் இதை அங்கீகரிக்கிறேன், நான் இதற்கு முழுமையாக சம்மதிக்கிறேன். ஆம், ஆம், நான் என் செயலாளரை வரச் செய்கிறேன்” என்று அவர் என்னிடம் சொன்னார்.

அதன்பின் அவர் தம் செயலாளரிடம்: “காகிதங்கள் போன்றவற்றைக் கொண்டு வாருங்கள். அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகையவர்களால் ஸ்தாபிக்கப்படும் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் சபைவிதிகளுக்குரிய எனது திருச்சபைச் சட்டபூர்வமான அங்கீகாரத்தைத் தட்டச்சு செய்யுங்கள்” என்றார்.

“இது சாத்தியமேயில்லை!!! நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன்! இதற்குக் கொஞ்சமும் சாத்தியமேயில்லை!” என்று நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன். அந்த அங்கீகரிக்கப்பட்ட சபைச் சட்டத் தொகுப்போடு நான் திரும்பி வந்ததை இப்போதும்கூட என் மனக்கண்ணால் பார்க்க முடிகிறது. மேற்றிராணியார் ஷாரியேரின் கையொப்பத்தையும், என் கையொப்பத்தையும் ... விஞ்ஞேட்டாஸில் இருந்த குருமாணவர்களுக்கு மத்தியில் நின்றபடி நான் அவர்களிடம்: “நல்லது, இதோ அவை! சபையின் சட்டத் தொகுப்பு அங்கீகரிக்கப்பட்டு விட்டது!” என்று சொன்னதை இப்போதும்கூட என்னால் காண முடிகிறது! ஓ! அவர்களும் நான் சொன்னதை நம்பவேயில்லை. ஆ, என்ன ஒரு தேவ பராமரிப்பின் அடையாளம்! உள்ளூர் மேற்றிராணியாரால் அங்கீகரிக்கப்படுவது! இது நம்ப முடியாதது! மூன்று மாதங்களுக்குப் பிறகு அவருடைய பதிலாளியாக வரவிருந்த மேற்றிராணியார் மேமியின் காரணமாக இது இன்னும் அதிகமாக நம்ப முடியாததாக இருந்தது. வந். மேமி ஆண்டகை ஏற்கனவே எங்களுக்கு எதிராக இருந்தார். (அவர் வந். ஷாரியேரின் முதன்மைக் குருவாக இருந்தவர்.) வந். ஷாரியேர் இந்தச் சபைக்குத் தமது கையொப்பத்தைத் தருவதை அவர் விரும்பியிருக்கவே மாட்டார். அவர் அதை அங்கீகரிக்கவில்லை, என்றாலும் அது செய்யப்பட்டு விட்டது.



தேவசிநேகத்தை விசுவசிக்கிறேன்



ஈக்கோன் குருமடத்தில் முதல் கல்வி ஆண்டின் குருமாணவர்கள்


சாங்க்தா மரியா

# முடிவுரை


உண்மையாகவே தேவ பராமரிப்புதான் எங்களை வழிநெடுக இழுத்துக்உ கொண்டு வந்தது. நான் மந்தமானவனாக இருந்தேன், இதை நான் உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்; என்னை வழிநடத்திய பாதச் சுவடுகளை நான் பின்பற்றினேன். ஆனாலும் நான் என் வழிநெடுக இழுத்துச் செல்லப்பட்டேன், இழுக்கப்பட்டேன், இழுக்கப்பட்டேன், எப்போதும் இன்னும் சற்று அதிகமாக, அதை விட சற்று அதிகமாக, நான் கடைசியாக எடுக்கப் படும் வரை. இப்போது நீங்கள் சபையின் வரலாற்றை அறிந்திருக்கிறீர்கள்.

ஆகவே இதை நான் செய்ய விரும்புகிறேன்... இது இப்படித்தான் நடக்கும்... நான் என்ன நினைக்கிறேன் என்றால்... நான் என்ன விரும்புகிறேன் என்றால்... என்றெல்லாம் சொன்னது உண்மையில் நான்தான் என்று என்னால் சொல்ல முடியாது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இது ஒருபோதும் அப்படி நடக்கவே இல்லை. என் வாழ்நாள் முழுவதும் இது ஒரேவிதமாகத்தான் இருந்து வந்தது என்பதை நான் உணர்கிறேன், நீங்களும் அவ் வாறே அதைக் கவனித்திருப்பீர்கள். எப்போதும் எல்லாவற்றை யும் தீர்மானித்தது தேவ பராமரிப்புதான். என் பங்கிற்கு, நான் சற்று எதிர்த்தேன், நான் உண்மையில் சம்மதிக்கவில்லை, நான் அவ்வளவு ஆர்வமுள்ளவனாக இருக்கவில்லை. ஆனாலும், எது எப்படியிருந்தாலும், ஆ, இல்லை, நீ வந்துதான் தீர வேண்டும் என்று சொல்லி அது என்னை இழுத்து வந்தது! அதன்பிறகு, பிற்காலத்தில்... நல்லது... இப்போது உண்மையில் கடவுள் ஆசீர்வதித்திருக்கிறார், எல்லாவற்றையும் ஆசீர்வதித்திருக்கிறார் என்பதையும், எல்லாமே நன்றாக நடந்திருக்கிறது என்றும் நான் காண்கிறேன். தேயோ க்ராத்ஸியாஸ்! இது இப்படியே தொடரும் என்று நாம் நம்புவோம்...


## அதிமேற்றிராணியார் எழுதிய புத்தகங்களில் சில...




குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஒரு திறந்த மடல்




சுற்றுமடல்கள்




அவர்கள் அவரை பதவியிறக்கம் செய்துவிட்டார்கள்




தப்பறைகளுக்கு எதிராக




ஒரு மேற்றிராணியார் பேசுகிறார்



ஆன்ம பயணம்



மதச்சுதந்திரம் ஒரு கேள்வி



சங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிறேன்




# நான் சங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிறேன்

**"நான் சங்கத்தை குற்றம் சாட்டுகிறேன்" என்பது அதிமேற்றிராணியார் எழுதிய பிரபல புத்தகங்களில் ஒன்று. இது அவர் 2-ம் வத்திக்கான் சங்கம் நடந்தபோது அளித்த பல பேட்டிகளைக் கொண்டுள்ளது. பேட்டியின்போது அவர் ஆற்றிய மூல உரைகள் இலத்தீனில் உள்ளன. அவற்றை Acta et documenta concilio æcumenico Vaticano II-ல் காணலாம். சங்கம் முடிந்த பின்பு அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை குருக்கள் இப்பேட்டிகளை மொழிபெயர்த்து ஒரு புத்தகமாக வெளியிட்டனர். அப்புத்தகத்திற்கு அதிமேற்றிராணியார் தாமே முன்னுரை வழங்கியுள்ளார்.**

## புத்தகத்தின் தலைப்பு பற்றி ஒரு குறிப்பு

இந்தப் புத்தகம் "***நான் சங்கத்தைக் குற்றஞ்சாட்டுகிறேன்***" என்று ஏன் அழைக்கப்படுகிறது? இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியதும், அதன் தெளிவற்றவையும், இரட்டை வாதப் பொருளுள்ளவையும், தெளிவான முறையில் பதிதத்தன்மை உள்ளவைகளாகவும் கூட இருந்த ஆவணங்களின் மீதும் ஆதிக்கம் செலுத்திய உணர்வு, இஸ்பிரீத்துசாந்துவானவரின் உணர்வு அல்ல. மாறாக, நவீன உலகத்தின் உணர்வு, விடுதலையியலின் உணர்வு, Teilhard de Chardin உணர்வு, நவீனவாதத்தின் உணர்வு, அது நம் ஆண்டவராகிய சேசுகிறீஸ்துநாதருடைய இராச்சியத்திற்கு எதிரானது என்று நாம் உறுதிபடக் கூறுவது நியாயமானதே என்பதால்தான் இந்தத் தலைப்பை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நம்முடைய இந்த முடிவு உள்ளார்ந்ததும், வெளிப்படையானதுமாகிய விமர்சனத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

உரோமையிலிருந்து வருகிற அதிகாரபூர்வ திருத்தங்களும், தீர்மானங்களும் அந்தச் சங்கத்தின் பெயரால் நம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றன, நம்மீது சுமத்தப்படுகின்றன. இவை அனைத்தினுடையவும் அடிப்படையான மனப்பாங்கு, வெளிப்படையான விதத்தில் பிரிவினைவாத, மற்றும் விடுதலைவாதத் தன்மையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் காலத்திலிருந்துதான் திருச்சபை, அல்லது குறைந்தபட்சம் திருச்சபையின் முக்கிய பதவிகளை வகிக்கிற அதிகாரிகள், நிச்சயமாக பாரம்பரியத்திற்கும், திருச்சபையின் அதிகாரபூர்வ ஆசிரியத்திற்கும் எதிரான திசையில் செல்லத் தொடங்கினார்கள்.




இத்தகைய மனிதர்கள் தாங்கள்தான் உயிருள்ள திருச்சபை என்பது போலவும், தாங்கள் தான் சத்தியத்தின் எஜமானர்கள், ஒரே விதமாக குருநிலையினர் மீதும், விசுவாசிகளின் மீதும் முன்னேற்றத்தையும், பரிணாம வளர்ச்சியையும், மாற்றத்தையும் ஆதரிக்கிற புதிய கொள்கைகளையும், ஒரு குருட்டுத்தனமான, நிபந்தனையற்ற கீழ்ப்படிதலையும் சுமத்த சுதந்தரமுள்ளவர்கள் என்று கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சத்தியத் திருச்சபைக்கு எதிராகத் திரும்பி விட்டார்கள்[1]; அதற்கு புதிய ஸ்தாபனங்களையும், ஒரு புதிய குருத்துவத்தையும், ஒரு புது விதமான வழிபாட்டையும், எப்போதும் புதிதாக எதையாவது தேடிக் கொண்டேயிருக்கிற புதிய போதனைகளையும் தந்திருக்கிறார்கள். இதையெல்லாம் எப்போதும் இந்தச் சங்கத்தின் பெயராலேயே அவர்கள் செய்துவருகிறார்கள்.

சங்கத்தையும், அதன் புதிய, நவீன "நற்செய்தியையும்" எதிர்ப்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டவர்களாகவும், திருச்சபையின் ஐக்கியத்திற்கு வெளியே இருப்பவர்களாகவும் கருதப்படுவார்கள் என்று நினைப்பது எளிதாக இருக்கிறது. ஆனால் "எந்தத் திருச்சபையோடு ஐக்கியம்?" என்று நாம் இவர்களிடம் தாராளமாகக் கேட்கலாம். சந்தேகமின்றி, "சங்கச் சபையோடு ஐக்கியம்" என்று அவர்கள் பதில் சொல்வார்கள். ஆகவே, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்டுள்ள கட்டுக் கதைகளைச் சிதறடிப்பது அத்தியாவசியமாக உள்ளது. இந்தச் சங்கம் கத்தோலிக்க வேதசத்தியத்தைப் பற்றிய

தனது பயங்கர உணர்வின் காரணமாகவும், கத்தோலிக்க வேத பாடங்களுக்குள் விடுதலையியலின் கொள்கைகளை அதிகார பூர்வமாக அறிமுகப்படுத்துவதை எளிதாக்குவதற்கும் வெறுமனே மேய்ப்புப்பணி சார்ந்த ஒரு சங்கமாக மட்டுமே இருக்க விரும்பியது. ஆனாலும் அது முடிவுக்கு வந்த நேரத்தில், அவர்கள் அதை வேதசத்தியங்கள் சார்ந்த சங்கமாக ஆக்கி விட்டார்கள். நிசேயா பொதுச் சங்கத்தோடு அதை ஒப்பிட்டார்கள். அதற்கு முந்தைய சங்கங்களைவிட மேலானதாக இல்லையென்று வைத்துக்கொண்டாலும், அது அந்தச் சங்கங்களுக்குச் சமமானது என்று உரிமை பாராட்டினார்கள்!

முற்றிலுமாக ஆராயப்படவும், பரிசோதிக்கப்படவும் வேண்டிய சங்கத்தைப் பற்றிய கருத்துக்கள் ஏராளம் உள்ளன, உதாரணமாக:

❖ திருச்சபை பற்றியதும், மேற்றிராணியார்கள் பற்றியதும், வேதபோதகங்கள் பற்றியதுமான சங்க ஆவணங்களில் ஆயர்களுக்கும், பாப்பரசருக்கும் இடையிலுள்ள உறவு பற்றிய பிரச்சினைகள்;

❖ "லூமென் ஜெந்த்ஸியும்" *(Lumen Gentium)* ஆவணத்தின் முன்னுரையில் குருநிலையினர் மற்றும் பொது விசுவாசிகளின் குருத்துவம்;

❖ "காவ்தியும் எத் ஸ்பெஸ்" *(Gaudium et Spes)* ஆவணத்தில் திருமணத்தின் நோக்கம்;

❖ "காவ்தியும் எத் ஸ்பெஸ்" ஆவணத்தில், வழிபாடு, மற்றும் மனச்சான்றின் சுதந்திரம் மற்றும் சுதந்திரத்தைப் பற்றிய விளக்கம்;

❖ எக்குமெனிசம் மற்றும் கிறீஸ்தவமல்லாத மதங்கள், நாஸ்தீகர்கள் ஆகியவர்களோடு கொள்ளும் உறவுகள், போன்றவை *(Nostra Aetate)*.

இவை எல்லாவற்றிலும் கத்தோலிக்கமல்லாத ஓர் உணர்வை உடனடியாக நம்மால் உணர முடிகிறது. இந்தக் கருத்துக்களைப் பற்றிய ஆய்வு, தப்பாத முறையில், 2-ம் வத். சங்கத்திலிருந்து வந்த திருத்தங்களைக் கவனித்துப் பார்க்கும்படி நம்மைத் தூண்டுகிறது. திடீரென ஒரு புதிய, விநோதமான ஒளியில் நாம் இந்தச் சங்கத்தைக் காண்கிறோம். அதன்பின் பின்வரும் கேள்விகள் தொடர்ந்து எழுகின்றன:

இந்த அதிசயத்திற்குரிய சதித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்கள் சங்கம் தொடங்குவதற்கு முன்பாகவே இதுபற்றி ஆழமாக யோசித்துத் திட்டமிட்டிருந்தார்களா? யார் அவர்கள்? சங்கத்திற்கு முன் அவர்கள் ஒன்று கூடினார்களா?

உடனே மிக நீண்ட காலத்திற்கு முன்பே தயாரிக்கப் பட்ட ஒரு மலைப்பூட்டுகிற சதித்திட்டத்தைக் காண நம் கண்கள் படிப்படியாகத் திறக்கப்படுகின்றன. இந்தக் கண்டு-பிடிப்பு, இதில் பாப்பரசரின் பங்கு என்ன என்றும், நடந்தவைகளுக்கு அவர் எந்த அளவுக்குப் பொறுப்புள்ளவராக இருந்தார் என்று நம்மை வியக்க வைக்கிறது. திருச்சபைக்கு எதிரான இந்தத் திகிலூட்டுகிற துரோகச் செயலில் மாசற்றவராக பாப்பரசரைக் காண நாம் ஆசைப்பட்டாலும், இதில் அவருடைய ஈடுபாடு மிகப் பெரியதாக இருக்கிறது.


ஆனாலும், இந்தக் காரியங்களைத் தீர்ப்பிடுவதைக் கடவுளிடமும், இராயப்பரின் உண்மையான ஸ்தானாதிபதிகளிடமும் நாம் விட்டுவிட்டாலும், இந்தச் சங்கம் சதியாளர்கள் குழு ஒன்றால் தனது நோக்கங்களிலிருந்து திசைதிருப்பப் பட்டது என்பதும், 2-ம் வத். சங்கத்தின் திருப்திகரமான பல பிரகடனங்கள் இருக்கின்றன என்ற உண்மையையும் மீறி, இந்தச் சதித் திட்டத்தில் எந்த விதத்திலும் பங்கெடுப்பது நமக்கு சாத்தியமற்றதாக இருக்கிறது என்பதும் நிச்சயம். சங்கத்தின் நல்ல ஆவணப் பகுதிகள், கண்ணிகளாகவும், இரட்டை அர்த்தமுள்ளவையாகவும், தெளிவான அர்த்தம் உரிந்து அகற்றப்பட்டு, ஏற்கப்பட்டவையாகவும் இருக்கிற ஆவணப் பகுதிகளை மூடி மறைக்கவே உதவியுள்ளன.

இப்போது நமக்கு ஒரேயொரு தீர்வு மட்டும்தான் எஞ்சியுள்ளது: இந்த ஆபத்தான முன்மாதிரிகைகளைக் கைவிட்டு, பாரம்பரியத்தை, அதாவது திருச்சபையின் 2000 வருட அதிகாரபூர்வ ஆசிரியத்தை உறுதியாகப் பற்றிக் கொள்வதுதான் அது. பின்வரும் பக்கங்கள் திருச்சபையின் எதிரிகள் தெரிந்தே செய்த, அல்லது தெரியாமல் செய்த நாசப் படுத்துகிற முயற்சிகளின் மீது உண்மையின் ஒளியை வீசும், அவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டும் என்று நாம் நம்புகிறோம். விடுதலைவாத குருநிலையினர் மற்றும் விசுவாசிகள், புரொட்டஸ்டாண்ட் சபையினர், சாத்தானின் இரகசிய சபையினர் ஆகியோர் சங்கத்தின் கொள்கைகளை வரவேற்று உள்ள விதம் நம் கருத்துக்களை இன்னும் அதிகமாக உறுதிப் படுத்துகின்றன என்பதையும் இங்கு நாம் கூறுவோமாக. இந்தச் சங்கம் திருச்சபையின் பிரெஞ்சுப் புரட்சி என்று கர்தினால் சுவேனென் அறிவித்தது உண்மைதான் அல்லவா? (பிரெஞ்சுப் புரட்சி 1789-ம் ஆண்டு நிகழ்ந்தது, இந்த ஆண்டில் அறிவாகிய பெண் தெய்வத்தின் விக்கிரகம் ஒன்று நோத்ரதாம் மேற்றிராசன ஆலயத்தின் முக்கிய பீடத்தின்மீது ஸ்தாபிக்கப் பட்டது.)

இதன் காரணமாக, நம் கடமை தெளிவாக இருக்கிறது: அறிவாகிய பெண் தெய்வத்தின் இராச்சியத்திற்கு எதிராக நமதாண்டவராகிய சேசுகிறீஸ்துநாதருடைய இராச்சியத்தைப் போதிப்பதே அந்தக் கடமை.

*குறிப்பு:*

[1] பாரம்பரிய கத்தோலிக்கர் மீது சங்கச் சபையின் உயர் அதிகாரிகள் பொழியும் வெறுப்பு பல்வேறு நிகழ்ச்சிகளில் காணப்படுகிறது. அவற்றில் ஒன்று ஃப்ரீபர்க் மேற்றிராணியார் கர்தினால் மோரேரோ என்பவர் கடந்த டிசம்பர் 2012–ல் ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை ஃப்ரீபர்க் மேற்றிராசனத்திலுள்ள அனைத்து கோயில்களிலும் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் கண்டுள்ள விஷயம் இதுதான்: "அவரது மேற்றிராசனத்திலுள்ள எல்லா கத்தோலிக்கக் கோயில்களையும் பிரிவினை சபையார் தங்களது வழிபாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ளலாம்; ஆனால் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையினர் பாரம்பரிய பூசைக்கு மேற்கூறிய கோயில்களைப் பயன்படுத்தக் கூடாது"



# நண்பர்களுக்கும் உபகாரிகளுக்கும் மடல் எண்: 80

**அர்ச். பத்தாம் பத்திநாதரின் சபை குறித்து சமீபத்தில் பல கேள்விகள் எழுப்பப்பட்டது. அதில், அதனுடைய போக்கில் புதிய மாற்றம் தெரிவதாகவும், 40 ஆண்டுகள் போராட்டத்தில் தளர்ச்சி ஏற்பட்டதாகவும் சிலர் தங்களுடைய வீண் வாதங்களால் பல குழப்பங்கள் செய்தனர். அவர்களின் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் முயற்சியில் இதோ! நமது அதிசிரேஷ்டரின் புதிய மடல். இதில் அதிமே. மார்செல் லெஃபவர் ஆண்டகை வகுத்த வழியில் இன்றும் தடம் புரளாமல் நாம் செல்வதாக தெளிவாக எடுத்துரைக்கிறார்.**

***அன்புள்ள நண்பர்களே, உபகாரிகளே,***

நீண்ட கால தாமதத்திற்குப் பின்பு இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறோம். இந்தப் பாஸ்கு காலத்தில், திருச்சபை இன்று இருக்கும் நிலை பற்றிய சில சிந்தனைகளை உங்கள்முன் வைக்க விரும்புகிறோம்.

**முன்னுரை**

நம் சபை 2012-ம் ஆண்டின் பெரும் பகுதியில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்ததென்பது நீங்கள் அறிந்த ஒன்று. நம் சூழ்நிலையை இயல்பானதாக்க பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர் தரப்பில் வைக்கப்பட்ட பல முன்மொழிகளை ஆராய்வதில் நம் சபை கடந்த ஆண்டின் பெரும்பகுதியினை செலவிட நேர்ந்தது. உரோமை நம்முன் வைத்த ஆலோசனைகளில் பலவற்றை நாம் ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தோம், இன்னமும் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாகவே இருக்கிறோம். மேலும், பரிசுத்த ஸ்தானத்திடம் இருந்துவந்த முன்மொழிகளில் பலவற்றின் தெளிவின்மை காரணமாக பிரச்சினைகள் எழுந்தன. பாப்பரசரின் முடிவான விருப்பம் என்னவென்பதை நமக்குச் சரியாகச் சொல்பவருமில்லை, என்னென்ன காரியங்களில் எதையெதை அவர் நமக்கு விட்டுக் கொடுக்க தயாராக இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள பரிசுத்தஸ்தானம் நம்மை அனுமதிக்கவுமில்லை. இந்த நிச்சயமற்ற நிலைகளால் ஏற்பட்ட குழப்பமானது, 2012, ஜுன் 13 அன்று மறைந்துபோனது. அதே மாதத்தின் 30-ம் நாள், பதினாறாம் ஆசீர்வாதப்பர் தாமே எழுதிய ஒரு மடலால் இந்த நிச்சயமற்ற நிலை முழுமையாக மறைந்தது. இந்தக் கடிதத்தில் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் என்ன நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை பாப்பரசர் உறுதியாகத் தெரிவித்து விட்டார்.

இந்த நிபந்தனைகள் வேத சத்தியங்களோடு தொடர்புள்ளவை. நாம் 2-ம் வத்திக்கான் சங்கத்தையும், 6-ம் சின்னப்பரின் புதுப்பூசையையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவை வற்புறுத்துகின்றன. ஆகவே, எக்ளேஸியா தேயி ஆணையத்தின் துணைத் தலைவரான அதிமேற்றிராணியார் அகஸ்டீன் தே நோய்யா (*Augustine de Noia*), அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை உறுப்பினர்களுக்கு கடந்த வருட இறுதியில் எழுதிய ஒரு மடலில் கூறியுள்ளதன்படி, 1970-களில் நம் சபை தொடங்கப்பட்டபோது நாம் இருந்த அதே வேத சத்தியச் சார்பு நிலையிலேயே இன்னும் இருக்கிறோம். உரோமை அதிகாரிகளின் இந்த அவதானம் உண்மையென்று ஒப்புக் கொள்ளமட்டுமே நம்மால் முடிகிறது. மேலும், நம் சபையின் ஸ்தாபகர், அதிமேற்றிராணியார் மார்சல் லெஃபவர் ஆண்டகை அவர்களால் எடுக்கப்பட்ட முடிவு இன்றும் நிதர்சனமாகவே இருப்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். அவருடைய அந்த முடிவு, அவருடைய மரணம் வரையிலும், சங்கத்தைத் தொடர்ந்து வந்த சில பத்தாண்டுகளில் சற்றும் அசைவுறாததாக இருந்தது. வேதசாஸ்திரம் சார்ந்ததாகவும், நடைமுறை சார்ந்ததாகவும் இருந்த அவருடைய மிகத் துல்லியமான, உள்ளார்ந்த அறிவு, சங்கம் தொடங்கி 50 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட முழுமையாக ஒப்புக்கொள்ளப்படக் கூடியதாகவே இருக்கிறது.

**கர்தினால் ஒட்டாவியானிக்கு 1966–ல் எழுதிய கடிதம்**

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை எப்போதும் தன்னுடையதாக ஆக்கிக்கொண்டுள்ளதும், அதன் வேத சத்தியம் சார்ந்த நிலை மற்றும் அதன் செயல்பாடு ஆகியவற்றிற்கு வழிகாட்டும் கோட்பாடாக நிலைத்திருப்பதுமாகிய அதிமேற்றிராணியாரின் இந்த முடிவுகளை நாம் மீண்டும் நம் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறோம். திருச்சபையை

உலுக்கி வருகிற நெருக்கடி நிலை, வெளியரங்கமான காரணங்களையும் கொண்டுள்ளது என்பதை நாம் கண்டுகொள்ளும் அதே வேளையில், இந்த (2-ம் வத்திக்கான்) சங்கமேகூட திருச்சபையின் சுய அழிவிற்கு முதன்மையான காரணமாக இருந்து வந்திருக்கிறது என்பதே அதிமேற்றிராணியாரின் முடிவு.

சங்கத்தின் முடிவில், கர்தினால் ஒட்டாவியானி அவர்களுக்கு அதிமேற்றிராணியார் எழுதிய *1966*, டிசம்பர் *20* தேதியிட்ட கடிதத்தில், திருச்சபை முழுவதும் இந்தச் சங்கத்தால் விளையப்போகும் மிகப் பெரும் ஒழுங்கீனத்தை விளக்கியிருந்தார். *2005*, செப்டம்பர் *29* தேதியிட்ட, நண்பர்களுக்கும் உபகாரிகளுக்குமான மடல் எண் *68*-ல் நான் ஏற்கெனவே இதை மேற்கோள் காட்டியிருந்தேன். அதிலிருந்து பல பகுதிகளை இன்று மீண்டும் வாசிப்பது பயனுள்ளது.

" இந்தச் சங்கம் ஒரு ஒளிவீசுகிற மேகமாக (அதாவது சத்தியத்தைத் தெளிவாகப் பிரகடனம் செய்ய) ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, நவீனவாதப் பிரச்சினைகளுக்கு எதிராக உறுதியான வேத சத்தியத்தின் அதிகாரபூர்வ கருத்துக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த வரைவுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தால், வேதசத்தியங்கள் நிலைநாட்டப் பட்டிருக்கும். ஆனால், நவீன மாற்றங்களைக் கொண்டு அவை புதுப்பிக்கப்பட்டபோது, திருச்சபைக்குச் சொந்தமாயிருந்த திருச்சபையின் நம்பகமான ஆசிரியத்தால் கற்பிக்கப்பட்ட சத்தியங்களின் நிச்சயத் தன்மையை அது அசைத்து விட்டது.

"மேற்றிராணிமாரின் அதிகார மாற்றமானாலும் சரி, (எழுதப்பட்டதும், எழுதப்படாததுமாகிய) வெளிப்பாட்டின் இரு ஆதாரங்களானாலும் சரி, வேதாகமத்தின் தேவ ஏவுதல், கடவுளுக்குமுன் நாம் நியாயமாக நடந்துகொள்வதற்கு வேண்டிய வரப்பிரசாதத்தின் அவசியம், கத்தோலிக்க ஞானஸ்நானத்தின் அவசியம், பதிதர்கள், பிரிவினைவாதிகள் மற்றும் அஞ்ஞானிகள் மத்தியில் வரப்பிரசாத ஜீவியம், திருமணத்தின் நோக்கங்கள், மதச் சுதந்திரம், (சாவு, தீர்வை, மோட்சம், நரகம் ஆகிய) இறுதிக் காரியங்களானாலும் சரி, இவை போன்ற அனைத்து அடிப்படையான காரியங்களிலும் பாரம்பரிய போதனை தெளிவானதாக இருந்தது. கத்தோலிக்க பல்கலைக்கழகங்களில் இவை ஒரே கருத்தில் கற்பிக்கப்பட்டு வந்தன. இப்போது, இந்தச் சத்தியங்கள் பற்றிய சங்கத்தின் எண்ணற்ற ஆவணங்கள் இந்த சத்தியங் களைப்பற்றிய சந்தேகங்களுக்கு இடமளிக்கின்றன.

"இவற்றின் விரைவான விளைவுகள், திருச்சபையின் வாழ்வைப் பாதித்தன:

❖ திருச்சபை மற்றும் தேவதிரவிய அநுமானங்களின் அவசியத்தைப்பற்றிய சந்தேகங்கள், குருத்துவ அழைத்தல்கள் மறைந்து போக வழிவகுக்கின்றன.

❖ ஒவ்வொரு ஆத்துமத்தினுடையவும் "மனந்திரும்புதலின்" அவசியத்தையும், இயல்பையும் பற்றிய சந்தேகங்கள் துறவற அழைத்தல்கள் மறைந்துபோவதற்கும், துறவற மடங்களில் பாரம்பரிய ஆன்மீகம் அழிந்துபோவதற்கும், வேதபோதக அலுவல்கள் பயனற்றுப்போகவும் வழிவகுக்கின்றன.

❖ மனித மாண்பு, மனச்சான்று, மற்றும் சுதந்திரம் ஆகியவை பற்றிய அதிகப்படியான பேச்சு காரணமாக, அதிகாரம் பற்றிய சட்டபூர்வ நிலை மற்றும் கீழ்ப்படிதலின் கடமை ஆகியவற்றிற்கு எதிராக எழும் சந்தேகங்கள், திருச்சபை, துறவற சபைகள், மேற்றிராசனங்கள், உலகரீதியான சமுதாயம் மற்றும் குடும்பம் தொடங்கி சகல சமூகங்களின் அஸ்திவாரத்தையும் ஆட்டுகின்றன.

❖ கண்களின் இச்சை மற்றும் சரீரத்தின் இச்சை ஆகியவற்றின் வேகமான தாக்கமே ஆங்காரத்தின் இயல்பான விளைவாக இருக்கிறது. அநேக கத்தோலிக்க வெளியீடுகள் எத்தகைய நல்லொழுக்க சீர்கேட்டுக்கு இறங்கி விட்டன என்பதைக் கவனித்தால் நாம் அஞ்சாமல் இருக்க முடியாது. சரீர இன்பம் பற்றிய அறிவு, கருத்தடையின் பல்வேறு வழிகள், விவாகரத்தின் சட்டபூர்வ வழிகள், ஆண்களும் பெண்களும் சேர்ந்து படித்தல், திருமணத்திற்கு முன்பு இளைஞர், இளம் பெண்களுடன் நெருங்கிப் பழகுதல், நடனங்கள் போன்றவை கிறீஸ்தவக் கல்விக்கூடங்களில் அவசியம் கற்பிக்கப்பட வேண்டியவை என்றும் கத்தோலிக்க வெளியீடுகள் எழுதுகின்றன. மேலும் குருக்களின் விரத்தத்துவம் பற்றியும் மற்றும் பல தேவ காரியங்கள் பற்றியும், எவ்வித அச்சமோ, ஒளிவு மறைவோ இன்றி விவேகமற்ற விவாதங்களை கத்தோலிக்க வெளியீடுகள் முன்னின்று நடத்துகின்றன.

❖ இரட்சிக்கப்படுவதற்கு வரப்பிரசாதம் அவசியம் தானா என்ற சந்தேகங்கள், ஞானஸ்நானத்தைக் குறைத்து மதிப்பிடும் அவலநிலையையும், அதைத் தள்ளிப்போடும் நிலையையும், பச்சாத்தாபமாகிய தேவதிரவிய அநுமானத்தை கைவிடும் நிலையையும் தூண்டி விடுகின்றன. மேலும், இது விசேஷமாக விசுவாசிகளின் மனதிலிருந்தல்ல, மாறாக குருக்களின் மனதிலிருந்துதான் வருகின்றன. பரிசுத்த திவ்விய நற்கருணையில் ஆண்டவரின் மெய்யானப் பிரசன்னத்தின் காரியத்திலும் இதுவே நிகழ்கிறது. நற்கருணை ஆண்டவரை மறைப்பதன் மூலமாகவும், பீடத்தின் பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தின்முன் எல்லா சங்கை மரியாதை அடையாளங்களையும் அழிப்பதன் மூலமாகவும், திவ்விய நற்கருணையில் ஆண்டவரின் மெய்யான பிரசன்னத்தின்மீது தங்களுக்கு எந்த விசுவாசமும் இல்லையென்பது போல செயல்படுபவர்கள் குருக்களே.

❖ இரட்சண்யத்தின் ஒப்பற்ற ஆதாரமாக திருச்சபையின் அவசியம் பற்றியும், கத்தோலிக்கத் திருச்சபையே மெய்யான வேதம் என்பதுபற்றியும், எக்குமெனிசம் மற்றும் மதச்சுதந்திரம்பற்றிய பிரகடனங்களால் பிறக்கும் சந்தேகங்கள், திருச்சபையின் ஆசிரியத்தின் அதிகாரத்தை அழிக்கின்றன. உண்மையில் உரோமை இன்னும் 'மாஜிஸ்த்ராவெரித்தாத்திஸ்' ஆக (சத்தியத்தைப் போதிக்கும் ஆசிரியையாக) இல்லை.

***"இந்த உண்மைகளால் வற்புறுத்தப்பட்டு, 2-ம் வத். சங்கம், கற்பனைக்கு எட்டாத விதத்தில் விடுதலைவாதத் தப்பறைகளைப் பரப்புவதை ஆதரித்துள்ளது. அனைத்து பாப்பரசர்களின் தீர்க்கதரிசனங்களின்படி, விசுவாசமும், நல்லொழுக்க விதிகளும், திருச்சபை ஒழுங்கு கிரமங்களும் ஆட்டம் கண்டுள்ளன.***

"திருச்சபையின் அழிவு துரிதமாக நடந்துக்கொண்டு இருக்கிறது. மேற்றிராணிமார் சங்கங்களுக்கு மிகைப்பட்ட அதிகாரங்களைத் தந்த பாப்பரசர் தம்மையே செயலற்றவராக ஆக்கிக்கொண்டுள்ளார். ஒரே வருடத்தில், நாம் இத்தகைய எத்தனை வேதனையான உதாரணங்களை பார்த்துவிட்டோம்! ஆனாலும்கூட, இராயப்பரின் ஸ்தானாதிபதியால் மட்டுமே திருச்சபையைக் காப்பாற்ற முடியும்.

"பரிசுத்த பாப்பரசர், விசுவாசத்தின் வீரியமுள்ள பாதுகாவலர்கள் தம்மைச் சூழ்ந்திருக்கும்படி பார்த்துக்கொள் வாராக! அவர் அவர்களை முக்கியமான மேற்றிராசனங்களில் நியமிப்பாராக! முரண்பாடுகள், எதிர்ப்புகள், பிரிவினை வாதங்கள், சங்கத்தின் மேய்ப்புப்பணி சார்ந்த வழிமுறை களால் தாம் கேள்வி கேட்கப்படுவது பற்றிய பயமின்றி, அவர் முக்கியமான ஆவணங்களைக் கொண்டு சத்தியத்தை அறிக்கை யிடத் திருவுளமிரங்குவாராக!

"ஒவ்வொரு மேற்றிராணியாரும், நல்ல மேய்ப்பருக்குத் தகுதியான விதத்தில், தத்தமது மேற்றிராசனத்தில், விசுவாசத் தையும், நல்லொழுக்க விதிகளையும் ஆதரித்து வளர்க்கும்படி பாப்பரசர் மேற்றிராணிமார்களை ஊக்குவிக்கவும், தைரியம் உள்ள மேற்றிராணிமார்களை ஆதரித்துத் தாங்கி, அவர்கள் தங்கள் குருமடங்களைச் சீர்திருத்தவும், அர்ச். அக்குயினாஸ் தோமையாரின் போதனைகளின்படி குருத்துவக் கல்வியை சீரமைக்கவும், துறவியர் இல்லங்களிலும், கன்னியர் மடங் களிலும் கிறீஸ்தவ கடுந்தவ ஜீவியத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், குறிப்பாக கீழ்ப்படிதலையும் ஆதரித்து வளர்க்கவும், சபைகளின் அதிசிரேஷ்டர்களை ஊக்கப்படுத்த வும், கத்தோலிக்கப் பள்ளிகளில் கத்தோலிக்க கல்வி போதிக்கப் படும்படியாகவும், வேதசத்தியத்தில் சிறந்த கத்தோலிக்க வெளியீடுகளை, கத்தோலிக்கக் குடும்பங்களின் இல்லற அப்போஸ்தலிக்க சபைகள் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்கப் படுத்தவும், இறுதியாக தப்பறைகளைத் தூண்டுபவர்களைக் கண்டனம் செய்து, அவர்களை வாயடைத்துவிடவும் பரிசுத்த பாப்பரசர் திருவுளமிரங்குவாராக! பாப்பரசரின் சுற்றுமடல் களுக்கும், அவரது கட்டளைகளுக்கும், மேற்றிராணிமார்களுக் கான மடல்களுக்கும் இருக்கும் திட்டவட்டமான மதிப்பும் மரியாதையும் புதன்கிழமைதோறும் அவர் தரும் பலகணி பேட்டிகளுக்கு இருக்க முடியாது.

"சந்தேகமின்றி, இந்த முறையில் என் எண்ணங்களை வெளிப்படுத்துவது என் துணிச்சலைக் காட்டுகிறது! ஆனாலும் பற்றியெரிகிற ஒரு நேசத்தோடு, கடவுளின் மகிமையின் மீதான நேசத்தோடு, சேசுநாதரின்மீதான நேசத்தோடு, மாமரி யின்மீதான நேசத்தோடு, திருச்சபையின்மீதான நேசத்தோடு, இராயப்பரின் ஸ்தானாதிபதியும், உரோமையின் மேற்றிராணி யாரும், சேசு கிறீஸ்துநாதரின் பதிலாளியுமாகிய பாப்பரசரின் மீதான நேசத்தோடு, இந்த வரிகளை நான் எழுதுகிறேன்."

### 1974–ம் ஆண்டின் பிரகடனம்

*1974, நவம்பர் 21 அன்று, ஈக்கோனிலுள்ள குருமடத் திற்கான அப்போஸ்தலிக்க விஜயத்திற்குப் பிறகு, அர்ச்.பத்தாம் பத்திநாதர் சபை அநீதியான முறையில் திருச்சபைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதால் தாம் எடுக்க வேண்டிய நிலைபற்றி, தமது புகழ்பெற்ற அந்தப் பிரகடனத்தில் சுருங்கக் கூறுவது அவசியம் என்று அதிமேற்றிராணியார் நினைத்தார். அவரோ, அவருடைய ஸ்தானாதிபதிகளோ இந்த அநீதியான தடையை எப்போதுமே மதிப்பற்றதாகவே எண்ணி வந்திருக்கிறார்கள். மிக முக்கியமான இந்த ஆவணம், சபையின் சகல உறுப்பினர்க ளுடையவும் விசுவாச அறிக்கையாக வெளிவந்தது. அது கீழ்க் கண்டவாறு தொடங்கியது:*

"கத்தோலிக்க விசுவாசம் மற்றும் இந்த விசுவாசத்தைப் பாதுகாக்க அவசியமான பாரம்பரியங்களின் பாதுகாவலியாகிய கத்தோலிக்க உரோமையை, ஞானத்தினுடையவும், சத்தியத்தி னுடையவும் எஜமானியாகிய நித்திய உரோமையை நம் முழு இருதயத்தோடும், முழு மனதோடும் நாம் இறுகப் பற்றிக் கொள்கிறோம்.

"மறுபுறத்திலோ, புதிய நவீனவாத புரொட்ட- ஸ்டான்ட் மனநிலைகளைக் கொண்டதும், 2-ம் வத்திக்கான் சங்கத்தின்போதும், சங்கத்திற்குப் பிறகு, அதிலிருந்து வெளிப் பட்ட சகல திருத்தங்களிலும் தன்னைத் தெளிவாக வெளிப் படுத்தியதுமாகிய இந்த நவீன உரோமையைப் பின்பற்ற நாம் மறுக்கிறோம், எப்போதும் மறுத்தே வந்திருக்கிறோம்.

"உண்மையில், இந்த எல்லாச் சீர்திருத்தங்களும் திருச் சபையின் அழிவிற்கும், குருத்துவத்தின் சிதைவிற்கும், திவ்விய பலிபூசை மற்றும் தேவதிரவிய அறுமானங்கள் அழிவிற்கும், துறவற வாழ்வு மறைந்துபோவதற்கும், பல்கலைக்கழகங் களிலும், குருமடங்களிலும், ஞானோபதேசியார்களின் உருவாக்கத்திலும் ஒரு இயற்கைவாத டெல்ஹார்டியன் கல்வி புகுத்தப்படுவதற்கும் மட்டுமே உதவி வருகின்றன. திருச்சபை யின் அதிகாரபூர்வ ஆசிரியத்தால் பல தடவைகள் கண்டனம் செய்யப்பட்டிருக்கிற விடுதலைவாதம் மற்றும் பிரிவினைவாதம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஒரு கல்விமுறை இது."

இந்தப் பிரகடனம் கீழ்க்கண்ட வரிகளோடு முற்றுப் பெறுகிறது:

"திருச்சபையின் மட்டிலும், கத்தோலிக்க வேதசத்தியத்தின் மட்டிலும் நாம் கொண்டிருக்க வேண்டிய, நம் இரட்சண்யத்துக்குப் பொருத்தமான பிரமாணிக்கத்தின் ஒரே மனப்பாங்கு, இந்தச் சீர்திருத்தத்தை எந்த நிபந்தனையுமின்றி, முற்றிலு மாக ஏற்க மறுத்து விடுவதுதான். ***இதனாலேயே எந்தக் கலகமோ, கசப்போ அல்லது கோப உணர்வோ இன்றி, ஒருபோதும் மாறாதிருக்கிற திருச்சபையின் ஆசிரியத்தின் வழிகாட்டுதலின்கீழ் குருக்களை உருவாக்கும் நம் அலுவலை நாம் தொடர்ந்து மேற்கொள்ளுகிறோம். ஏனெனில் பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபைக்கும், பரிசுத்த***



பாப்பரசருக்கும், எதிர்கால சந்ததிகளுக்கும் இதைவிட மேலான ஊழியத்தை நம்மால் செய்யவே இயலாது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.''

### 1983-ம் ஆண்டின் மேற்றிராணித்துவப் பிரகடனம்

*1983-ல்,* பாரம்பரியத்திற்கான போராட்டத்தின் அர்த்தத்தை நினைவுகூர்ந்தவராக, அதிமேற்றிராணியார் லெஃப்வர், *2-ம்* அருள் சின்னப்பருக்கு மேற்றிராணித்துவ கொள்கைப் பிரகடனம் ஒன்றை அனுப்பினார். வந்திக்கத்தக்க அந்தோணியோ தே காஸ்ட்ரோ மேயர் ஆண்டகையும் அதில் அதிமேற்றிராணியாரோடு சேர்ந்து கையொப்பமிட்டிருந்தார். இப்பிரகடனத்தில், சங்கத்திற்குப் பிந்தைய மாற்றங்களாலும், எல்லாவிடங்களிலும் பரவியிருக்கிற பேராபத்து விளைவிக்கும் கடும் ஒழுங்கீனத்தை அவர் ஏற்க மறுத்தார். குறிப்பாக, போலியான எக்குமெனிசம், மேற்றிராணியார்கள் மேற்றிராணிமார் பேரவைக்குக் கட்டுப்படுதல் *(Collegiality)*, சமத்துவம், மதச் சுதந்திரம், பாப்பரசரின் அதிகாரம் மற்றும் புதுப்பூசை ஆகிய வற்றைப் பற்றிய பின்வரும் கருத்துக்களை அதில் அவர் அடிக்கோடிட்டுக் காட்டியிருந்தார்.

### போலியான எக்குமெனிசம்

''இந்த எக்குமெனிசம் அல்லது கிறீஸ்தவ சபைகளின் ஒற்றுமை என்ற பெயரில் செய்யப்படும் காரியங்கள் உண்மை யில் மோர்த்தாலியும் ஆனிமோஸ் என்ற சுற்றுமடலில் பதினோராம் பத்திநாதர் கற்பித்த போதனைகளுக்கு முரண் பட்டது. இது தொடர்பாக, கிறீஸ்தவ சபைகளின் ஐக்கியத்தை வளர்க்க கத்தோலிக்கரல்லாதவர்கள் எந்த ஒரு போலியான கருத்தின் அடிப்படையில் பிரயாசைப்படுகிறார்களோ, அந்தப் போலியான கருத்தின் முகத்திரையை கிழிப்பதற்கு இதுவே சரியான நேரம். போலி ஒற்றுமையாளர்கள் இடைவிடாமல் மேற்கோள் காட்டும் வரிகள் ''அவர்கள் எல்லோரும் ஒன்றா யிருக்கும்படியாக... ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும்''(அரு. *17:21 & 10:16*). இந்த வார்த்தைகளை கொண்டு, இதுவரை ஒருபோதும் நிறைவேற்றப்படாத ஓர் ஆசையை, அல்லது ஒரு ஜெபத்தைக் கிறீஸ்துநாதர் வெளிப் படுத்துகிறார் என்று அவர்கள் சாதிக்கிறார்கள். உண்மையில், கிறீஸ்துநாதருடைய மெய்யான திருச்சபையின் அடையாளங் களில் ஒன்றாகிய விசுவாச, நிர்வாக பந்தனம் இன்றுவரை ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்று அது திருச்சபையில் இல்லையென்று அவர்கள் சாதிக்கிறார்கள்.




''கத்தோலிக்க ஒழுக்கத்தாலும், சட்டத்தாலும் கண்டனம் செய்யப்பட்ட இந்த எக்குமெனிசம், இப்போது கத்தோலிக்கரல்லாத ஊழியர்களிடமிருந்து *(non catholic ministers)* பாவசங்கீர்த்தனம், திவ்விய நற்கருணை, மற்றும் அவஸ்தைப் பூசுதல் ஆகிய தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்வதை அனுமதிக்கும் அளவுக்குச் செல்கிறது *(தி.ச. 844, CIC 1983)*. மேலும் கத்தோலிக்கரல்லாதவர்களுக்கு திவ்விய நற்கருணை வழங்க கத்தோலிக்க குருக்களை அனுமதிப்பதன் மூலம், எக்குமெனிக்கல் உபச்சாரத்தை அது ஊக்கப்படுத்துகிறது.

### மேற்றிராணியார்கள் மேற்றிராணிமார் பேரவைக்குக் கட்டுப்படுதல் *(Collegiality)*

''இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'லூமென் ஜெந்த்ஸியும்' ஆவணத்தால் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இந்தக் கொள்கை, புதிய திருச்சபைச் சட்டத்தால் வெளிப்படையாகவே மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது *(தி. ச. 336)*. அதன்படி, பாப்பரசர் மட்டுமல்ல அவரோடு இணைந்திருக்கிற மேற்றிராணிமார் சங்கங்களும், திருச்சபை யின் உச்சக்கட்ட அதிகாரத்தை *(Supreme powers)* கொண்டு உள்ளது.

''இந்த இரட்டை முதன்மை அதிகாரம் (உச்சக்கட்ட அதிகாரத்தை பாப்பானவரும் மேற்றிராணியார் பேரவையும் ஒரே நேரத்தில் கொண்டிருப்பது) என்ற கொள்கை, விசேஷ மாக திருச்சபையின் போதனைக்கும் அதன் ஆசிரியத்திற்கும் முரணானது. குறிப்பாக, முதலாம் வத்திக்கான் சங்கத்திலும் *(Denz. Sch. 3055)*, ஸாத்திஸ் கோக்னீத்தும் என்னும் 13-ம் சிங்கராயரின் சுற்றுமடலிலும் காணப்படும் போதனைக்கும் எதிரானது. பாப்பரசர் மட்டுமே இந்த முதன்மையான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார். அவசரமான சூழ்நிலையில் தேவையான அளவிற்கு மற்றவர்களுக்கு அவர் தரலாம்.

''இந்த ஆபத்தான தப்பறையை சேர்த்து, புதிய திருச்சபைச் சட்டம் திருச்சபையில் ஜனநாயக ஆட்சிமுறை யைக் கொண்டுவருகிறது. இந்த ஜான்சனியப் பதிதம் ஆறாம் பத்திநாதரின் ''ஆக்தோரெம் ஃபீதேயி *(Auctorem Fidei)*'' ஆணைமடலால் கண்டனம் செய்யப்பட்டுள்ளது *(Denz. Sch. 2602)*(திருச்சபையின் முதன்மை என்பது அர்ச். இராயப்பரை யும் அவரது வாரிசுகளையும் சார்ந்தது என்பதுதான் திருச்சபை எப்போதும் கொண்டிருந்த நம்பிக்கை. ஆனால், பாப்பானவ ரோடு இணைந்துள்ள எல்லா மேற்றிராணிமார்களும் திருச்சபையில் இன்னொரு முதன்மை பெறுகிறார்கள் என்று இப்போது சங்கம் போதிக்கிறது. இது ஒரு தப்பறை.

### மதச் சுதந்திரம்

''இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஆசிரியத்தின் ''திக்னித்தாத்திஸ் ஹுமானே'' என்ற ஆவணம் தேவகாரியங்

களில் ஒரு போலியான, மனித உரிமையினை உறுதிப்படுத்து கிறது. இது, ஏற்கனவே பாப்புமாரால் நிராகரிக்கப்பட்ட ஒன்று.

"இதன் காரணமாக, 'குவாந்த்தா கூரா' சுற்றுமடலில் 11-ம் பத்திநாதரும், 'லிபெர்த்தாஸ் ப்ரேஸ்தாந்திஸ்ஸிமும்' மற்றும் 'இம்மோர்த்தாலே தேயி' என்ற சுற்றுமடல்களில் 13-ம் சிங்கராயரும், இத்தாலிய கத்தோலிக்க நடுவர்கள்முன் 12-ம் பத்திநாதர் ஆற்றிய உரையிலும், இந்த வகையான உரிமைக்கு பகுத்தறிவின் அடிப்படையில் அல்லது தேவ வெளிப்பாட்டின் அடிப்படையில் எந்த காரணமுமில்லை என்று மறுக்கிறார்கள். வேத சத்தியமானாலும்கூட அதை ஏற்றுக்கொள்ள முடியாதவனிடத்தில் அதைப்பற்றி பேசக் கூடாதென்று 2-ம் வத். சங்கம் பொதுவாக அறிக்கையிடுகிறது. இது ஜான்சனியர்களென்ற பதிதருக்கெதிராக 6-ம்பத்திநாதரின் போதித்த போதகத்திற்கு எதிராக உள்ளது *(Denz. Sch. 2604)*.

"இவ்வாறு இரண்டாம் வத்திக்கான் சங்கம், வேதம் சார்ந்த நோக்கங்களை உலக நோக்கங்களிலிருந்து பிரித்துப் பார்ப்பதை நிறுத்திக்கொள்ள உலக அரசாங்கங்களுக்கு உதவு மாறும், சத்தியத்தோடு ஒன்றிக்காதிருக்கும் உரிமையையும், சத்தியத்தைப் பின்பற்றாதிருக்கும் உரிமையையும் அபத்தமான முறையில் உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு அது பொய் மதங் களுக்கும், மெய்யான வேதத்திற்குமிடையே ஒரு சட்டபூர்வ மான சமநிலையை ஏற்படுத்துகிறது.

"இந்தப் பொய்யான மனித உரிமை 2-ம் வத். சங்கத் தால் அங்கீகரிக்கப்பட்டதன் விளைவு, நம் ஆண்டவரின் சமூக அரசாட்சியின் அஸ்திவாரங்களை அழிக்கின்றது. ஆத்துமங் களை அடிமைப்படுத்துகிற சாத்தானின் சக்திகளோடு திருச்சபை போராட வேண்டும். ஆனால், ஆத்துமங்களிலும், இருதயங்களிலும் ஆண்டவரின் அரசாட்சியை ஏற்படுத்தும் அலுவலில், திருச்சபை கொண்டுள்ள அதிகாரமும், வல்லமை யும் மறுக்கப்படுகிறது. வேதபோதக உணர்வு "மிகைப்படுத்தப் பட்ட மனந்திருப்புதல்" என்ற பெயரில் குற்றஞ்சாட்டப் படுகிறது.

"வேதக் காரியங்களில், அரசுகளின் மதச்சார்பற்ற நிலை, கத்தோலிக்கர் பெரும்பான்மையாய் உள்ள ஒரு நாட்டின் விஷயத்தில், நமதாண்டவருக்கும், அவருடைய திருச்சபைக்கும் ஊறு விளைவிப்பதாக உள்ளது.

**பாப்பரசரின் அதிகாரம்**

"திருச்சபையில் பாப்பரசர் கொண்டுள்ள அதிகாரம், நிச்சயமாக, அனைத்திலும் மேலான, முதன்மையான அதிகாரமே. ஆனாலும் அது முழுமையான அதிகாரமாகவும், வரம்புக்குட்படாததாகவும் இருக்க முடியாது, ஏனெனில், அது பாரம்பரியத்திலும், பரிசுத்த வேதாகமத்திலும், திருச்சபையின் ஆசிரியத்தால் ஏற்கெனவே அமல் செய்யப்பட்டுள்ள வரை-யறைகளிலும் வெளிப்படுத்தப்படுகிற தேவ அதிகாரத்திற்கு உட்பட்ட அதிகாரமாகவே இருக்கிறது *(Denz. Sch. 3116)*.

"பாப்பரசரின் அதிகாரம், அது எதற்காக அவருக்குத் தரப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு அடங்கியதாகவும், அதனால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் இருக்கிறது. முதலாம் வத்திக்கான் சங்கத்தின் "பாஸ்தோர் ஏத்தெர்னுஸ்" என்ற ஆணைப் பத்திரத்தில் இந்த நோக்கம் பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதரால் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது *(Denz. Sch. 3070)*. திருச்சபையின் ஓர் ஆணைப் பத்திரத்தைத் திருத்தி அமைப்பதும், மதச் சுதந்திரத்திலும், புதிய திருச்சபைச் சட்டத் தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நற்கருணை உபச்சாரத்திலும், திருச்சபையில் இரண்டு முதன்மையான அதிகார மையங்கள் இருப்பதை வலியுறுத்தும் ஆவணத்திலும் உள்ளதுபோல, தேவ உரிமைக்கெதிராக மனித உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமென்று சகிக்க முடியாதது. இது கடவுள் தந்த அதிகாரத்தை அவருக்கே எதிராக பயன்படுத்துவதாகும்.

"இந்தக் காரியங்களிலும், இதே போன்ற வேறு காரியங்களிலும், கீழ்ப்படிய மறுப்பது ஒவ்வொரு குருவானவ ருடையவும், ஒவ்வொரு பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்க னுடையவும் கடமை. குருட்டுத்தனமானக் கீழ்ப்படிதல் என்பது கீழ்ப்படிதல் என்ற புண்ணியத்தை தவறாக புரிந்து கொள்ளுதலாகும். தேவ கட்டளையைவிட மனிதக் கட்டளை களை மதிப்போர் தேவ சந்நிதானத்தில் குற்றவாளிகளாக கருதப்படுவர். இதிலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது *(Denz. Sch. 3115)*. இத்தகைய மனிதக் கட்டளைகள் பகிரங்கமானதாகவும், ஆத்துமங்களுக்கு இடறல் வருவிப்ப தாகவும் இருந்தால், இந்த எதிர்ப்பும் பகிரங்கமானதாக இருக்கவேண்டும். *(Summa Theologiae II-II, q. 33, a. 4)*.

"இந்த அறிக்கைகள் நல்லொழுக்கத்தின் ஆரம்பக் கொள்கைகளாக இருக்கின்றன. இவை சட்டபூர்வமான அதிகாரிகளோடு பிரஜைகள் கொண்டுள்ள உறவுகளை ஒழுங்குபடுத்துகின்றன.

"மேலும், இப்போதிலிருந்து பாரம்பரியத்தையும், கத்தோலிக்க விசுவாசத்தையும் உறுதியாகப் பற்றிக்கொள்ப வர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்ற உண்மையால் இந்த எதிர்ப்பு ஆதரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்படுகிறது; பாரம்பரிய மல்லாத கொள்கைகளை அறிக்கையிடுபவர்களோ அல்லது உண்மையாகவே தேவத்துரோகமான காரியங்களைக் கட்டிக் கொள்பவர்களோ எவ்விதத்திலும் துன்புறுத்தப்படுவதில்லை. இதுவே அதிகார துஷ்ப்பிரயோகம்.

**நவீனப்பூசை**

"இருபத்திரண்டாம் அமர்வில் திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் போதனைக்கு முரண்பட்டதும், பன்னிரண்டாம் பத்திநாதரின் 'மேதியாத்தோர் தேயி' என்ற சுற்றுமடலுக்கு முரண்பட்டதாகவும் இருக்கிற நவீனப் பூசையில்,பங்குபெறும் விசுவாசிகளின் பங்கு மிகைப்படுத்தப்பட்டுள்ளது. குருவானவர் சமூக வழிபாட்டின் தலைவராக மட்டுமே ஆக்கப்பட்டுள்ளார். வாசகர்கள் மற்றும் வாசகங்களின் பங்கு மிகைப்படுத்தப்பட்டுள்ளது. பாவப் பரிகாரப் பலியின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டுள்ளது. சமூக உணவு என்ற கருத்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. பொருண்மை மாற்றத்தால் நிகழும் மெய்ப் பிரசன்னத்தின்மீது விசுவாசிகள் கொள்ளும் சங்கைக்கும், விசுவாசத்திற்கும் தீங்கு விளைவிக்கும் விதத்தில், பூசை மாற்றப்பட்டுள்ளது.

பரிசுத்த இலத்தீன் மொழி நீக்கப்பட்டுள்ளதன் மூலம், வழிபாட்டு ரீதிகள் அளவற்ற விதமாகப் பெருக்கமடைந்து உள்ளன. அவை உலகத்தன்மையானதும், அஞ்ஞானத்தன்மை யானதுமாகிய சேர்க்கைகளால் அவசங்கைப்படுத்தப்பட்டு உள்ளன. விசுவாசிகளின் மெய்யான விசுவாசத்திற்கும், மெய்யான தேவ பக்திக்கும் தீங்கு பயக்கும் விதமாக, தவறான மொழிபெயர்ப்புகள் பரப்பப்பட்டுள்ளன.''

### சங். ஸ்மித்பெர்கர் அவர்களின் 1991-ம் வருட கடிதம்

*1986-ல், அதிமேற்றிராணியார் லெஃப்பவர் ஆண்டவர், அசிசியில் நடந்த சர்வசமய மாநாட்டைக் கடுமையாக எதிர்த்தார். அது கத்தோலிக்கத் திருச்சபையில் எப்பொழுதுமே நிகழ்ந்திராத துர்மாதிரிகையாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக பத்துக் கற்பனைகளில், ''உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே, நம்மைத் தவிர வேறே சர்வேசுரன் உனக்கு இல்லாமல் போவதாக'' என்னும் முதலாம் கற்பனைக்கு எதிரானதாகவும் இருந்தது. இந்த மாநாட்டில், சகல மதங்களினுடையவும் பிரதிநிதிகள் தங்கள் பொய்த் தேவர்களிடம் மன்றாடும்படி யாக, கிறீஸ்துநாதரின் பிரதிநிதியான பாப்பரசர் அவர்களைப் பகிரங்கமாக வரவேற்றார். கத்தோலிக்க உணர்வுள்ள யாராலும் சகிக்கக் கூடாததாக இருந்த இந்த நிகழ்வை, மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்ய இயலுமாறு பரலோகத்திடமிருந்து தாம் கேட்டிருந்த அடையாளங்களில் ஒன்றாக, நம் ஸ்தாபகர் எண்ணியதாக அவர் பிற்பாடு கூறினார். 1991, பெப்ருவரி 2 தேதியிட்ட நண்பர்களுக்கும், உபகாரிகளுக்குமான மடல் எண் 40-ல், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் இரண்டாம் அதிசிரேஷ்டராயிருந்த சுவாமி ஸ்மித்பெர்கர், இந்தப் பிரச்சினையை அதன் முழுமையில் மீண்டும் கையில் எடுத்து, விசுவாசத்திற்கு எதிரான சமகாலத் தப்பறைகளின் ஒரு சுருக்கமான தொகுப்பில், கத்தோலிக்க நிலையை மீண்டும் வலியுறுத்திக் கூறினார். சுவாமி மத்தியாஸால் எழுதப்பட்ட திருச்சபையி லுள்ள நெருக்கடி நிலையின் ஞானோபதேசம் என்னும் குறிப்பிடத்தகுந்த நூல் உட்பட, அப்போதிலிருந்து வெளியிடப் பட்டுள்ள பல்வேறு நூல்களில் காணப்படும் இந்த எல்லாக் கருத்துக்களையும் ஒரு விதமான பத்திரிகையின் வடிவில் சுருக்கிக் கூறும்படி நாம் பல சக குருக்களிடம் கேட்டோம்.*

### இதே கொள்கைகளை இன்று அப்படியே தொடர்ந்து கடைபிடிக்கிறோம்

இன்று இந்தக் காரியங்களைப் பொறுத்தவரை, அன்று அதிமேற்றிராணியார் லெஃப்பவரும், சுவாமி ஸ்மித்பெர்கரும் அவரவர் பங்கிற்கு பிரகடனம் செய்த காரியங்களைத் திருப்பிச் சொல்ல மட்டுமே நம்மால் முடியும். அவர்கள் நிராகரித்த சகல தப்பறைகளையும் நாமும் நிராகரிக்கிறோம். எவையில் லாமல் யாரும் இரட்சிக்கப்பட முடியாதோ, எவையில்லாமல் சர்வேசுரனை யாரும் மகிழ்விக்க முடியாதோ, அந்த நவமான கத்தோலிக்க வேதசத்தியத்தை, அந்த வெளிப்படுத்தப்பட்ட விசுவாசக் கொள்கைத் திரட்டை, ஆத்துமங்கள் இனியும் கற்றுக்கொள்ள முடியாமற்போவதால், அவை அழிந்துபோக அனுமதியாதபடி பரலோகத்தையும், திருச்சபையின் அதிகாரி



சர்வ சமய பிரார்த்தனை

களையும், குறிப்பாக புதிய பாப்பரசரும், கிறீஸ்துநாதரின் பிரதிநிதியும், இராயப்பரின் ஸ்தானாதிபதியுமாகிய பிரான்சிஸ் பாப்பரசரையும் இரந்து மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

மக்களுக்கு சேவை செய்யத் தன்னை அர்ப்பணிக்கும் ஒருவன், அவசியமானதும், அவர்களுடைய வாழ்வின் நோக்கத்தையும், பாவத்தின் கடுமையையும் பாவத்தை விலக்க வேண்டிய அவசியத்தையும் அவர்களிடமிருந்து மறைப்பான் என்றால், அதனால் என்ன நன்மை விளையும்? ஏழைகளுக் காகவும், தேவையில் இருப்போருக்காகவும், நோயாளிகளுக் காகவும் செய்யப்படுகிற பிறர்சிநேகச் செயல்கள் எப்போதுமே திருச்சபையின் உண்மையான அக்கறையாக இருந்து வந்துள்ளன. நியாயமாக அவற்றிலிருந்து நம்மை நாம் விலக்கிக் கொள்ள முடியாது. ஆனாலும் அது வெறுமனே மனிதனை மையமாகக் கொண்ட மனிதநேயச் செயலாக மட்டுமே ஆகிவிடுமென்றால், அப்போது, திருச்சபை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவலை நிறைவேற்றவில்லை என்பது பொருள். விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், மற்றும் வரப்பிரசாதம் ஆகிய சுபாவத்துக்கு மேலான வழிகளால் மட்டுமே உண்மையில் திருச்சபை ஆத்துமங்களைக் கடவுளை நோக்கி வழிநடத்த முடியும். ஆகவே, விசுவாசம், மற்றும் நல்லொழுக்கத்திற்கு எதிரான தப்பறைகளை கண்டிப்பதன் மூலமாகவே திருச்சபை தமது மக்களை ஆண்டவரிடம் வழிநடத்த முடியும். தப்பறைகள் மறுக்கப்படாததால், அதன் விளைவாக மக்கள் பாவம் செய்கிறார்கள் என்றால், அவர்கள் நித்தியத்திற்கும் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாகிறார்கள். அதாவது திருச்சபை தன் பணியை செய்யவில்லை என்பதுதான் உண்மை. காரணம் மனிதனை இரட்சிப்பதும், நித்திய அழிவின் நிர்ப்பாக்கியத்தைத் தவிர்க்க அவர்களுக்கு உதவுவதுமே திருச்சபை இவ்வுலகில் இருப்பதன் ஒரே நோக்கம். ஆனால் இது உலகத்தை மகிழ்ச்சிப்படுத்தாது. ஆகவேதான் உலகம் திருச்சபையை அடிக்கடி மிக வன்மையாகச் சாடுகிறது. இது வரலாறு கூறும் காரணம்.

இதோ 2013 பாஸ்கு காலத்தில் நாம் இருக்கிறோம். திருச்சபையின் நிலை சற்றும் மாறாததாகவே இருக்கிறது. அதிமேற்றிராணியார் லெஃப்பவர் ஆண்டகையின் வார்த்தைகள்

ஒரு தீர்க்கதரிசனம்போல தோன்றுகிறது. அந்த வார்த்தைகள் எல்லாமே நிறைவேறி விட்டன, இரட்சண்யத்தின் செய்தியை தங்கள் மேய்ப்பர்களிடமிருந்து மேற்கொண்டு கேட்கமுடியாத நிர்ப்பாக்கியத்தில் பல ஆன்மாக்கள் இருக்கிறார்கள்.

இந்த பயங்கரத்துக்குரிய நெருக்கடி நிலை இப்படி நீடித்துக் கொண்டே போவதைப் பற்றியோ, அல்லது, ஆறாம் சின்னப்பர் ஒத்துக்கொண்ட, திருச்சபையின் சுய அழிவைத் தேடுகிற மேற்றிராணிமாரின் எண்ணிக்கையைப் பற்றியோ நாம் நிலைகுலைந்து போகவில்லை. மாறாக, நம்மால் இயன்ற வரையிலும், திருச்சபை தன் விசுவாச சத்தியங்களையோ, தன் நல்லொழுக் கத்தையோ மாற்ற முடியாது என்று தொடர்ந்து அறிக்கையிடுகிறோம். ஏனெனில் ஒரு பெரும் நாசத்தை விளைவிக்காமல், இந்த வணக்கத்துக் குரிய தேவ ஸ்தாபகங்களின் காரியத் தில் யாரும் தலையிட முடியாது. எல்லா மனித ஸ்தாபகங்களிலும் நிகழ்வதுபோல வெளியரங்க அமைப்பிற்குரிய சில எதிர்பாராத மாற்றங்களைச் செய்ய வேண்டி யுள்ளது என்றாலும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவை முந்தின எல்லா நூற்றாண்டுகளிலும் திருச்சபையை வழிநடத்தி வந்த கொள்கைகளுக்கு முரண்பட்டவை யாக அவை இருக்க முடியாது.



**அர்ச். சூசையப்பருக்கு அர்ப்பணம்**

*2012 ஜுலையில்* நம் சபையின் பொது அவையில் தீர்மானிக்கப்பட்டபடி, நம் சபை அர்ச். சூசையப்பருக்கு அர்ப்பணிக் கப்படுவது, இந்த முக்கியமான தருணத்தில் நிகழ்ந்து கொண்டிருக் கிறது. ஏன் அர்ச். சூசையப்பர்? ஏனெனில் அவரே கத்தோலிக்கத் திருச்சபையின் பாதுகாவலர். பிதாவாகிய சர்வேசுரன் அவரது தேவ சுதனின் காரியத்தில், தம்மிடம் ஒப்படைத்த பணியை, அந்தத் தேவ சுதனின் ஞான சரீரத்தின் காரியத்திலும் அர்ச். சூசையப்பர் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார். கிறீஸ்துநாதரே திருச்சபையின் சிரசாக, ஞான சரீரத்தின் சிரசாகவும் இருக்கிறார். மனுவுருவான சர்வேசுர னுடைய திருச்சுதனைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண் டிருந்தவர், இப்போது கிறீஸ்துநாதரின் ஞான சரீரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் கொண்டிருக்கிறார்.

அவருடைய அலுவல் பூரண பலனுள்ளதாக இருந்த அதே வேளையில் மிக இரகசியமானதாகவும், பெருமளவுக்கு மறைவாகவும் இருந்தது. அதுபோல, திருச்சபையின் பாதுகாவலர் என்ற இந்த அலுவலும் இன்று மிக இரகசியமான முறையிலும் முற்றிலும் பலனுள்ளதாவும் அவரால் செய்யப் படுகிறது. நூற்றாண்டுகள் செல்லச் செல்லத்தான் அர்ச். சூசையப்பர் பக்தி அதிகமதிகமாகத் தெளிவாக வெளிப் படுத்தப்பட்டது. அனைவரிலும் சிறந்த அர்ச்சியசிஷ்டவர். அனைவரிலும் அதிக இரகசியமானவர். முழுத் திருச்சபையி னுடையவும் பாதுகாவலர் என்று அவரைப் பிரகடனம் செய்த ஒன்பதாம் பத்திநாதரைப் பின்பற்றியும், அகில உலகத் திருச்சபையின் பாதுகாவலரான அர்ச்.சூசையப்பருக்கு ஜெபம் என்னும் அதியற்புதமான ஜெபத்தை அறிமுகப்படுத்தியவரும், அவருடைய இந்த அலுவலை உறுதிப்படுத்தியவருமாகிய பதின்மூன்றாம் சிங்கராயரைப் பின்பற்றியும் இந்த ஜெபத்தை நம் கோவில்களில் ஒவ்வொரு நாளும் சொல்கிறோம். தமது பெயர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரான சூசையப்பரிடம் ஒரு மிக விசேஷ பக்தி கொண்டிருந்தவரான அர்ச். பத்தாம் பத்திநாதரைப் பின்பற்றியும், திருச்சபையின் வரலாற்றின் இந்தத் துயரமிக்க தருணத்தில், நாமும் அர்ச். சூசையப்பர் பக்தியை நம் பக்தியாக கொண்டு, அவரை நம் பாதுகாவலராகவும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறோம். *(2013-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-தேதி அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை அனைத்து குருக்கள் இல்லங்களும் அர்ச். சூசையப்பருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டன.)*

**முடிவுரை**

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் அன்பார்ந்த நண்பர்களே, உபகாரிகளே, அதிமேற்றிராணியார் மேற்கொண்ட, திருச்சபையை மீண்டும் ஸ்தாபிக்கும் அலுவலுக் காக நீங்கள் செய்த ஜெபங்களுக் காகவும், உங்கள் தாராளத்திற்கா கவும் என் நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளையில் என் முழு மனதோடு உங்களை நான் ஆசீர்வதிக்கிறேன். மேலும், கத்தோலிக்கப் பாரம்பரியத் திற்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாக நிலைத்திருக்க உங்கள் குடும்பத்திற்குத் தேவைப்படுகிற தேவ வரப்பிரசாதங்களை உங்களுக்குப் பெற்றுத்தரும்படியாக அர்ச். சூசையப்பரை நான் மன்றாடுகிறேன்.

**✠ பெர்னார்ட் ஃபெல்லே**

(துணைத் தலைப்புகளும் அடைப்புக் குறிகளுக்குள் காணப்படுபவையும் ஆசிரியரால் தரப்பட்டவை)

# 50 ஆண்டுகளுக்குப் பின் ?

**2013–ம் ஆண்டு ஜனவரி மாதம் 4, 5 மற்றும் 6–ம் தேதிகளில் வர்சயல்ஸ் மற்றும் பாரிஸில் நடந்த கருத்தரங்குகளின் இறுதியில் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை தலைவர் வந். பெர்னார்டு ஃபெல்லே ஆண்டகையவர்கள் சில கேள்விகளுக்குப் பதில் தந்தார்.**

## இரண்டாம் வத்திக்கானுக்கு 50 ஆண்டுகளுக்குப் பின், நம் மதிப்பீடு என்ன?

*சுவாமி அலேய்ன் லோரான்ஸ்: ஆண்டகையே, திருச்சபையின் தரத்திலிருந்து வந்துள்ள மதிப்பீட்டை நீங்கள் எங்களுக்குத் தந்திருக்கிறீர்கள்; 2-ம் வத்திக்கான் சங்கம் நடந்தபோது அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை தோன்றியிருக்கவில்லை. என்றாலும் கூட, அச்சபை தொடங்கி கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 50 ஆண்டுகளாக (அர்ச். பத்தாம் பத்திநாதர்) சபை எடுத்து வரும் நடவடிக்கையைப்பற்றி, தங்கள் கருத்து என்ன?*

**வந். பெர்னார்ட் ஃபெல்லே:** அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் நடவடிக்கையா? எல்லாமே ஒரே வரியில் அடங்கியுள்ளது. அது இதுதான். வந். லெஃபவர் ஆண்டகை, "நான் பெற்றுக் கொண்டதையே உங்களுக்குக் கையளித்தேன்" (1 கொரி. 15:3) என்ற அர்ச். சின்னப்பரின் வார்த்தைகளை தனதாக்கி தனது பணிகளைத் தொடர்ந்தார். அதிமேற்றிராணியாரிடமிருந்தே நாம் செய்கிற எல்லாப் பணிகளையும் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அனைத்து காரியங்களும் ஒரு புள்ளியைச் சுற்றியே சுழலும்படி வந். அதிமேற்றிராணியார் செய்திருக்கிறார். நீங்கள் பின்பற்ற ஒரு பாதை இருக்கிறது. ஒரு நதி புறப்படும் இடத்தைக் கண்டுவிட்டீர்களாயின் அதன் போக்கிலே நீங்கள் சென்றுவிட்டால் கடல்வரை வந்து சேர்ந்துவிடுவீர்கள்.

## கிறீஸ்தவ உணர்வின்படி பூசையை மையமாகக்கொண்டு வாழ்வதே இந்த நெருக்கடி நிலைக்குத் தீர்வு

காரியங்கள் அங்கிருந்தே தொடங்குகின்றன; அடிப்படை அம்சம் திவ்விய பலிபூசையே. அதுவே பிரச்சினைக்குத் தீர்வாகவும், அதே வேளையில் மாபெரும் இரகசியமாகவும் இருக்கிறது. திருச்சபைக்கு அது சொந்தமாக இருக்கிறது. மிகச் சில மனிதர்கள் மட்டுமே அதை அறிந்திருக்கிறார்கள். நல்ல ஆண்டவர் பின்வரும் விதத்தில் காரியங்களை ஒழுங்குசெய்தார்; ஒரு கிறீஸ்தவனின் வாழ்விலுள்ள சகல காரியங்களும், திவ்விய பலிபூசையிலிருந்து, சிலுவையில் நம் ஆண்டவர் செலுத்திய பலியிலிருந்தே வருகிறது. எல்லா வரப்பிரசாதங்களும், எல்லாப் பேறுபலன்களும், பாவ சோதனைகளை எதிர்த்து நிற்க நமக்குத் தேவையான சகலமும், நம் காயங்கள் குணமாக்கப்பட நமக்குத் தேவையான சகலமும், அனைத்து காரியங்களும் பூசையிலிருந்தே கிடைக்கிறது. சிலுவைப் பலியினை எக்காலத்திற்கும் தொடர்ந்து நிகழும்படி செய்யப்பட்டதும், புதுப்பிக்கப்படுவதும், மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படுவதுமாகிய நம் ஆண்டவரின் சிலுவைப் பலியிலிருந்தே நமக்குத் தேவையான அனைத்து வரங்களும் நம்மீது பொழியப் படுகின்றன. இதுதான் தீர்வு; வெறும் செயல் அல்ல, அந்தச் செயலை உட்கிரகித்துக் கொள்ளுதல், இதையே நாம் கிறீஸ்தவ உணர்வு என்று அழைக்கிறோம். வேறு வார்த்தை களில் கூறுவதானால், நம் ஆண்டவர் இதையெல்லாம் நிறைவேற்றினாலும், அதன் பலாபலன்களை நாம் உட்கொண்டால் மட்டுமே நாம் பயனடைய முடியும். நமதாண்டவர் பாடுபட்டு, மரித்தார் என்ற உண்மை, இந்த நன்மைகளையெல்லாம் நாம் உண்ணும்படி, ஒரு மேஜையின்மீது வைக்கப்படும் உணவுபோல இருக்கிறது. நாம் அவற்றிலிருந்து நன்மை பெற விரும்பினால், இந்த நன்மைகளை நாம் உட்கிரகித்துக் கொள்ள வேண்டும். அதாவது, அவற்றை நாம் உட்கொள்ளவேண்டும்.


**வந். பெர்னார்ட் ஃபெல்லே**

இதுவே உண்மையான மேய்ப்புப்பணி சார்ந்த ஊழியத்தின் பரம இரகசியம். இதுவே குருவானவரின் ஊழியம். வரப்பிரசாதத்தை நோக்கி மனிதர்களை வழிநடத்துவதும், அதன் மூலம் அந்த வரப்பிரசாதத்தை அவர்களிடம் கொண்டு வருவதும்தான் குருக்களின் பணி. ஆன்மாக்களை நம் ஆண்டவரிடம் வழிநடத்துவது! ஒரு குருவானவர் ஓர் ஆன்மாவை நம் ஆண்டவரிடம் அழைத்துவருகிறார். அதுதான் அவரது வெற்றி, மிகப்பெரிய வெற்றி.

இதை மிக எளிதாகச் சொல்லி விட்டேன், ஆனால் நான் வற்புறுத்த விரும்புவது கிறீஸ்தவ உணர்வு அல்லது கிறீஸ்துவின் மனநிலை என்ற அம்சம். (இதுவே உண்மையில் அதிமேற்றிராணியாரின் மாபெரும் தாகம்.) வெறுமனே தேவதிரவிய அநுமானங்கள், வழிபாடு மற்றும் தேவதிரவிய அநுமான ஒழுங்கு, விசுவாசம் ஆகியவற்றை மீண்டும் கொணர்வது மட்டுமல்ல, கிறீஸ்தவ உணர்வு அல்லது கிறீஸ்துவின் மனநிலை என்ற அம்சம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதுதான் இந்த நெருக்கடி நிலைக்குத் தீர்வு. கிறீஸ்தவ உணர்வு அல்லது கிறீஸ்துவின் மனநிலை என்பதின் பொருள் என்ன?

கடவுள் தமது நன்மைத்தனத்தில், இந்த எல்லா வரப்பிரசாதங்களையும் நமக்குத் தருகிறபோது, நாம் அவற்றின்படி வாழவேண்டும். அவற்றை நாம் கிரகித்துக்கொள்வது அவசியம். நம் ஆண்டவர் நமக்குள் வரும்போது, அவர் வெறுமனே ஒரு கால்மணி நேரத்தை நம்மோடு செலவழித்துவிட்டுப் போய்விட மாட்டார். அவர் நம் மத்தியில் தம் பிதாவோடு என்றென்றைக்கும் தங்கி ஜீவிப்பதற்காக வருகிறார் (அரு.14:23). அங்கே தமது நேசத்தை நட்டு வளர்க்கும்படி அவர் வருகிறார். இது நம்மை அர்ச்சிக்கும்படியாகவும், மற்றவர்களை அர்ச்சிக்கும்படியாகவும் நம்மிடமிருந்து சுடர்வீசிப் பிரகாசிக்கவேண்டிய நேசமாக இருக்கிறது. இதுவே அதிமேற்றிராணியாரின் வற்புறுத்துதல். திருச்சபையில் நடந்து கொண்டிருக்கிற நெருக்கடிக்கு இதுவே அவர் நமக்குத் தருகிற தீர்வாக இருக்கிறது. பூசைக்குத் திரும்பி வருதல் என்பது, வெறுமனே பூசையை ஒரு இலெளகீக அம்சமாக எண்ணி அதனிடம் திரும்பி வருவது அல்ல, "என்னைப் பார், இப்போது என்னிடம் பழைய பூசை இருக்கிறது, இப்போது நான் ஒரு பாரம்பரிய கத்தோலிக்கன்" என்று நீங்கள் உங்களிடமே சொல்லிக்கொள்வது போதாது. அது



இரட்சண்யத்திற்குரிய முழுக் காரியங்களையும் செய்வதில்லை. பூசை நமக்கு மிக அதிகமாக உதவி செய்கிறதென்பது உண்மைதான், என்றாலும் அதன்படி வாழ்வது அவசியம். அது நமக்குள் ஊடுருவ வேண்டியது அவசியம்.

### அடிப்படையில் சுபாவத்திற்கு மேற்பட்ட தீர்வு

குருக்களைப் பொறுத்தவரை, நாம் மற்றொரு கிறீஸ்துவாக ஆவது நமக்கு அவசியமான காரியம். ஒருவர் குருத்துவ அங்கி அணிவது மட்டும் போதாது, ஒருவர் இலத்தீனில் பூசை வைப்பது மட்டும் போதாது, பூசையின்போது, அவர் உண்மையாகவே கிறீஸ்துநாதரின் ஆள்தன்மையில் *(Persona Christi)* இருக்க வேண்டும், வெறும் தேவதிரவிய அநுமான முறையில் ஒருவர் செயல்படுவது போதாது. ஏனெனில் சேசு கிறீஸ்துநாதரைக் கண்டுபாவிப்பதையே நம் செயல்முறையாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்று விளங்குகிற ஒரு புத்தகம், ஒரே வரியில் இவ்வாறு கூறுகிறது: "சேசு கிறீஸ்துநாதரைக் கண்டுபாவிப்பது என்பது, அவருடைய நற்செயல்களில் பங்குபெறுவதாகும்". அர்ச். சின்னப்பரோ நம்மிடம்: "நான் ஜீவிக்கிறேன், ஆனாலும் நான் அல்ல, கிறீஸ்துவே என்னில் ஜீவிக்கிறார்" (கலாத். 2:20) என்று கூறுகிறார். இந்த வரப்பிரசாதத்தின் மறைந்த வாழ்வே நம் ஜீவியம் முழுவதையும் உருவாக்குகிறது என்னும் அளவுக்கு இந்த மறைந்த வாழ்வு நம்மில் ஆதிக்கம் செலுத்துவது மெய்யாகவே அவசியம். இது முற்றிலும் ஞான ரீதியான ஒரு பதிலாகத் தோன்றலாம், ஆனால் மொன்சிஞ்ஞோர்தாமே நம்மிடம்: "நீங்கள் இதைக் கொண்டிராவிடில், குருத்துவத்தின் அடையாளத்தைத் தவற விட்டுவிட்டீர்கள்" என்று சொல்கிறார்.

பாரம்பரியத்தில் சில வெளிப்படையான காரியங்கள் உள்ளன. ஆனால் நாம் இன்று காண்கிற தீமையை எதிர்த்துப் போரிடுவதற்கு அது போதாது. நாம் திருச்சபையை மீண்டும் ஸ்தாபிக்க விரும்புகிறோம். இது உள்ளரங்க பரிசுத்தமான வாழ்வின் விளைவால் மட்டுமே நிகழும். இது உண்மையில் இயற்கையான சுபாவத்துக்கு மேலான செயலாக இருக்கிறது. வெளிப்படையான செயல்கள் தேவைதான். நான் சொல்வதைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். ஆகவே பாரம்பரிய பூசைக்கும், அதன் வழிபாட்டுக்கும் திரும்பி வருவது தேவைதான், எந்த விசுவாச சத்தியத்தையும் விட்டுவிடாமல் முழுமையான விசுவாசத்திற்குத் திரும்பி வருவது அவசியம்தான். இந்தப் போரில் ஈடுபடுவது முக்கியம்தான், என்றாலும், விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் ஆகிய தேவசம்பந்தமான புண்ணியங்களில் வாழ்கிற நம் ஆண்டவரோடு கூடிய ஆழமான, அந்நியோன்னியமான ஐக்கியத்தில் இந்த அம்சம் நம்மில் குறைவுபடுமானால், அப்போது இந்த வேலை முழுவதும் பயனற்று போய்விடும். மீளவும்: "மலைகளைப் பெயர்க்கத்தக்க எவ்வித விசுவாசத்தை உடையவனாயிருந்தாலும், என்னிலே தேவசிநேகம் இல்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை; அன்றியும் என் ஆஸ்திபாஸ்திகள் எல்லாவற்றையும் நான் ஏழைகளுக்குப் போஜனமாகப் பகிர்ந்தாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கும்படி கையளித்தாலும், என்னிடத்தில் தேவசிநேகம் இல்லாவிட்டால், எனக்கு ஒன்றுமில்லை" (1 கொரி. 13) என்று அர்ச். சின்னப்பரே கூறுகிறார்.

நமது அதிமேற்றிராணியார் நமக்குச் சொல்வதும் இதுதான். நம் சபை திருச்சபையின் வரலாற்றில் இந்தத் தருணத்தில் பயனுள்ளதாக இருக்க விரும்பினால், நம் சபை உறுப்பினர்கள் ஆண்டவரோடு ஐக்கியமாக இருக்கவேண்டியது அவசியம். நாம் பாரம்பரியத்தைப்பற்றிப் பேசும்போது, சிலர் வெளியரங்கமானதும், இலௌகீகமானதுமாகிய அம்சத்தை வலியுறுத்துகிறார்கள். ஆனால் பாரம்பரியம் என்பது அத்தியா வசியமானதும், உள்ளரங்கமானதும், ஞானரீதியானதுமாகிய ஒரு அம்சத்தையே குறிக்கிறது. அது இல்லாவிடில் பாரம்பரியத் தைப்பற்றிப் பேசுவதில் எந்தப் பயனுமில்லை...

***சுவாமி லொரான்ஸ்:*** கடந்த ஆண்டின்போது, நீங்கள் உரோமை அதிகாரிகளுடன் அநேக முறை தொடர்பு கொண்டிருக்கிறீர் கள்? இப்போது காரியங்கள் எந்த நிலையில் இருக்கின்றன?

***மேற். ஃபெல்லே:*** இங்கேயும்கூட நம்முடைய தீர்வு முற்றிலும் எளிய ஒன்று. இது லெரின்ஸ் நகர அர்ச். வின்சென்ட் நமக்கு ஏற்கனவே தந்திருக்கிற வழிதான். ஓர் அசாராணத் துணிச்ச லோடு அவர் இரண்டு கேள்விகளை எழுப்புகிறார். "திருச்சபையின் சரீரத்தின் ஒரு பகுதி நோய்வாய்ப்பட்டால், அப்போது நாம் என்ன செய்வோம்? தப்பறை என்னும் அழுகல் நோயால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியில் வாழ நேர்கிற ஒரு கிறீஸ்தவன் என்ன செய்யவேண்டும்? திடீரென்று ஒரு தப்பறை பரவுகிற ஒரு நாட்டில், ஒரு மேற்றிராசனத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்: நீங்கள் என்ன செய்ய வேண்டும்?" அவரே பதில் சொல்கிறார்: "இது மிகவும் எளிது; நோய்வாய்ப் படாத பகுதியோடு உங்களை உறுதியாகப் பிணைத்துக் கொள்ளுங்கள்." அர்ச். வின்சென்ட் இன்னும் ஆழமாகச் செல்கிறார். "சரீரம் முழுவதையும் வேறொரு வியாதி பாதித்தால், என்ன செய்யவேண்டும்? எல்லாமே அழுகலாக இருந்தால், என்ன செய்யவேண்டும்?" இதற்கு அவர் தரும் தீர்வு, "நாம் கடந்த காலத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும்." ஏனெனில் கடந்த காலம் இன்றைய வியாதியால் பாதிக்கப்பட முடியாது. ஆகவே அர்ச்சியசிஷ்டவர்கள், தாங்கள் அர்ச்சிய-சிஷ்டவர்களாக இருக்கும்படி முன்பு என்ன செய்தார்களோ, அதையே இன்றும் நாம் செய்யவேண்டும். அவர்கள் தாங்கள் விசுவசித்ததையே செய்தார்கள். இதெல்லாமே நிரந்தரமான தாக இருக்கிறது. இதையே நாம் பாரம்பரியம் என்று அழைக்கிறோம்.

## திருச்சபையின் தற்போதைய நிலைக்கு நம் பதில்

திருச்சபை எப்போதும் விசுவசித்து வந்ததும், செய்து வந்ததும், போதித்து வந்ததுமாகிய சத்தியங்களோடு நம்மைப் ஒன்றித்துக்கொள்வதுதான் இதற்கானப் பதில். இதைக் கொண்டு, நாம் எந்த ஒரு கணத்திலும் திருச்சபைக்கு வெளியே இல்லை என்பதில் உறுதியாயிருக்கிறோம். ஆனாலும், இது ஓர் அசாதாரணமான நிலை. ஏனெனில் நாம் யாராலும் தீர்வை யிடப்படாத ஒருவரை நம் விரலால் சுட்டிக் காட்ட வேண்டி யிருக்கிறது. பரிசுத்த ஸ்தானம் யாராலும் தீர்ப்பிடப்படுவது இல்லை. இது நாமும் நம்முடையதாக ஏற்றுக்கொள்கிற ஒரு கொள்கையாக இருக்கிறது. இது நமதாண்டவர் அனுமதிக்கிற ஓர் அசாதாரண நிலை. ஆனாலும் நடக்கும் நிகழ்வுகள் நிதர்சனத்தை அடையாளம் கண்டு கொள்வதை நமக்குக் கடமையாக்குகின்றன.

இது 'லா சலேத்தை', அதன் பயங்கரத்துக்குரிய, வன்மையான தீர்க்கதரிசனங்களை நினைக்க என்னைத் தூண் டுகிறது. "உரோமாபுரி தன் விசுவாசத்தை இழக்கும். அங்கே திருச்சபையின் கிரகணம் ஒன்று இருக்கும். அது அந்திக் கிறீஸ்துவின் ஆசனம் ஆகும்!" இது நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது. அப்படியானால் பதினாறாம் ஆசீர்வாதப்பர்தான் அந்திக் கிறீஸ்து என்று நீங்கள் சொல்கிறீர்களா? இல்லை, நான் அப்படிச் சொல்லவில்லை. அது தவறானது. ஆனால் விசுவாச இழப்பு, விசுவாச மறுப்பு என்பது உலகளாவிய சூழ்நிலை. உரோமையிலும்கூட, விசுவாசத்தை இழந்துவிட்ட சில மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை. கர்தினால்மாரின் வாய்களிலிருந்தும்கூட இதை நீங்கள் கேட்கிறீர்கள். ஓய்வு பெற்ற ஒரு கர்தினாலின் வாயினின்றும்கூட மிகச் சமீபத்தில் நான் இதைக் கேட்டேன். ஒரு குடும்ப விழாவின்போது அவர் இதைச் சொன்னார்: "உரோமையை விட்டு விலகி, இங்கே இருப்பதுபற்றி நான் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது, ஏனெனில் உரோமை பசாசின் பிடியில் இருக்கிறது! உரோமை பசாசால் ஆளப்படுகிறது." இன்று ஒரு கர்தினால் இப்படிச் சொல்கிறார்!

நாம் இப்போது நம்மையே இப்படிக் கேட்டுக் கொள்கிறோம்: அப்படியானால், நாளைக்கு, சபைக்கு என்ன நடக்கும்?

***சுவாமி லொரான்ஸ்:*** இந்தக் கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

***ஆயர் ஃபெல்லே:*** நாம் அப்படியே விட்டுவிட்டுப் போய் விடுவோமா? நாம் படகிலிருந்து வெளியேறி விடுவோமா? இல்லை. அந்தப் பேச்சுக்கே இடமில்லை! கத்தோலிக்கத் திருச்சபைதான் நம் திருச்சபை, நமக்கு வேறொரு திருச்சபை இல்லை. வேறு திருச்சபை என்று எதுவுமில்லை. நமதாண்டவர் தமது திருச்சபை நோய்வாய்ப்பட அனுமதிக்கிறார். அப்படி யானால், அந்த வியாதி நம்மைத் தொற்றிவிடாமலிருக்க நாம் முயல்கிறோம். ஆனாலும் நாம் வேறொரு திருச்சபையை உருவாக்குகிறோம் என்று சொல்லப்போவது இல்லை. வேறொரு திருச்சபையும் இல்லை. சர்வேசுரன் தமது நன்மைத் தனத்தில் அனுமதிக்கக்கூடிய மிகக் கடினமான துன்ப சோதனைகளில் இதுவும் ஒன்று - ஆபிரகாமுக்கு வந்த துன்ப சோதனைக்கு மிகவும் ஒப்பானது. அதாவது நாம் உணர்கிற, நாம் கேட்கிற, நாம் பார்க்கிற எல்லாக் காரியங்களுக்கு மத்தியிலும் நாம் விசுவாசம் கொள்ளவேண்டும். நாம் பார்க்கிற நிகழ்ச்சிகளைக்கொண்டு, இவர் பாப்பரசர்தானா, இது திருச்சபைதானா என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் நாம் உறுதியாய் இருக்கவேண்டும். நாம் பார்ப்பதுதான் உண்மையான திருச்சபை. ஆனால் நோயுற்ற திருச்சபை. ஒரு மனிதர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அவருடைய உடல் முழுவதும் புற்றுநோய் பரவியிருக்கிறது. அவர் நோயாளியாக இருந்தாலும், அந்த மனிதர் அவராகவேதான் இருப்பார். அந்த மனிதர் உங்கள் தந்தையாக இருந்தால், அவர் நோயாளி

யாக இருந்தாலும், உங்கள் தந்தையாகவே இருக்கிறார். திருச்சபை நம் தாயாக இருக்கிறது, அது நோய்வாய்ப்பட்டு இருக்கிறது, என்றாலும் அது நம் தாயாகவே நிலைத்திருக்கிறது. நம் தாயை விட்டு நாம் விலகிவிடப் போவதில்லை. நாம் அந்த நோய்க்கு எதிராகப் போராடுகிறோம் என்பது உண்மையே. ஆனால் இங்கேயுள்ள இந்தத் திருச்சபை உண்மையில் நம் ஆண்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபை. நரகத்தின் வாசல்கள் தன்னை மேற்கொள்ளாது என்ற வாக்குத்தத்தத்தை கொண்டிருப்பது இந்தத் திருச்சபையே. இதில் பிரச்சினை என்னவென்றால், காரியங்கள் இவ்வளவு தூரம் மோசமாக போக முடியாது என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவ்வளவு மோசமான நிலையை நாம் அடைந்து விட்டோம்.

### திருச்சபை நோய்வாய்ப்பட்டிருந்தாலும்கூட, இன்னமும் நம் தாயாகவே இருக்கிறது.

வேறு வார்த்தையில் சொல்வதானால், திருச்சபை படிப்பித்த அனைத்து விசுவாச சத்தியங்களையும் நாம் பாது காக்கிறோம்: இராயப்பரின் ஸ்தானாதிபதிதான் பாப்பரசர் என்னும் கோட்பாடு உட்பட அனைத்து விசுவாச சத்தியங் களையும் நாம் காத்துக்கொள்கிறோம். உலகம் முடியும்வரை, உண்மையாகவே இராயப்பரின் ஸ்தானாதிபதி ஒருவர் இருக்கிறார். இது முதலாம் வத்திக்கான் சங்கம் வரையறுத்த திருச்சபைச் சட்டங்களில் ஒன்று. இறுதிவரை, இராயப்பரின் ஸ்தானாதிபதி ஒருவர் இருப்பார். அவர் நல்லவராக இருப்பாரா, கெட்டவராக இருப்பாரா என்றோ, எல்லாமும் நன்றாக நடக்குமா, அல்லது கெட்டதாக நடக்குமா என்றோ அந்தத் திருச்சபைச் சட்டம் சொல்லவில்லை, ஆனால் ஒரு பாப்பரசர் இருப்பார், அவ்வளவுதான். அது போதுமானது. நமதாண்டவர் பார்த்துக்கொள்வார். இந்த அமைப்பு சில நேரங்களில் பலவீனப்பட்டாலும்கூட, இந்த அமைப்பின் வழியாகத்தான் தமது வரப்பிரசாதமும், விசுவாசமும் நம்மிடம் வரும்படி அவர் செய்வார். இப்படிப்பட்ட ஒரு காலக்கட்டத் தில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; இது எளிதான காரியமல்ல, ஆனாலும் இதன் காரணமாக நாம் விசுவாசத்தை இழந்துவிடக் கூடாது. நாம் விசுவாசத்திற்காக சர்வேசுரனிடம் மன்றாட வேண்டும்.

பல எளிதான தீர்வுகள் உண்டு. ஆனால் அவற்றின் விளைவுகளிலிருந்து, அவை நடைமுறையில் சாத்தியமான தீர்வுகள் அல்ல என்பதை நாம் காண்கிறோம். உதாரணமாக, இனியும் பாப்பரசர் என்று யாருமில்லை என்றோ, அல்லது இப்போது திருச்சபை என்ற ஒன்று இல்லை என்றோ சொல்லிக் கொண்டு எல்லாவற்றையும் மறுதலிப்பது. அப்படியானால், 21-ம் நூற்றாண்டின் மத்தியில் நாம்தான் நம்முடைய சொந்தத் திருச்சபை ஒன்றைக் கண்டுபிடிப்பவர்களாக இருக்கப்போகி றோமா? இல்லை! அப்படி ஒன்றை நாம் கண்டுபிடித்தால், நம் சொந்த முயற்சியால்தான் அது உருவானது என்பதால், தோல்வியே அதற்கு நியமிக்கப்பட்டதாக இருக்கும். தமது நன்மைத்தனத்தில் கடவுள்தான் உண்மையான திருச்சபையை ஸ்தாபித்தவரும், இந்த அச்சத்திற்குரிய துன்ப சோதனையை அதற்கு அனுமதித்துக் கொண்டிருப்பவருமாக இருக்கிறார்.

நான் 'ல சலேத்' தீர்க்கத்தரிசனத்தைப்பற்றிப் பேசினேன். (மக்கள் தொடர்ந்து பாவம் செய்தால், ஞாயிறு கடனைத் தீர்க்கவில்லையென்றால், சிறுவர்கள் நடுக்கமுற்று சாவார்கள், உணவு விளைச்சல் பாதிக்கப்படும், இறுதியில் உரோமாபுரி தன் விசுவாசத்தை இழந்துவிடும் என்பது சலேத் செய்திகளின் சுருக்கம் - ஆசிரியர்.) ஆனால் 13-ம் சிங்கராயர் பற்றியும் மிக நன்றாகப் பேச என்னால் முடியும். பூசையின் முடிவில் நாம் சொல்கிற "அதிதூதரான அர்ச். மிக்கேலே..." என்ற ஜெபத்தை இயற்றிய இந்த பாப்பரசர், பசாசு தன் தலைமையகத்தை உரோமையில் ஸ்தாபிக்கும் என்று சொன்னார். இந்தப் பேயோட்டும் ஜெபத்தை அவர் ஏன் இயற்றினார் என்பதற்கான காரணத்தை யாரும் ஒருபோதும் சரிபார்க்க முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு குரல் வெளிப்பாடாக இருந்தது. அதில் நமதாண்டவர் பசாசோடு பேசியதை அவர் கேட்டதாகவும், பசாசு ஆண்டவ ரிடம்: "எனக்கு நூறு வருடங்களைத் தாரும், நான் உம் திருச்சபையை வென்று காட்டுகிறேன்" என்றதாகவும், ஆண்டவர், "சரி" என்று சொன்னதாகவும் சொல்லப்படுகிறது. இது உண்மைதானா என்று சரிபார்ப்பது சுவாரஷ்யமானதாக இருக்கும். உரோமையின்மீது பசாசு கொண்டுள்ள பேராபத் தான செல்வாக்கைப்பற்றி 13-ம் சிங்கராயர் தாம் இயற்றிய பேயோட்டும் ஜெபத்தில் மிகத் தெளிவாகப் பேசினார் என்பது உண்மை.

மேலும் அந்திக் கிறீஸ்து பற்றிய பேச்சும் இருக்கிறது என்பது அனைவரும் நன்கு அறிந்ததே. ஒருநாள் அவன் வந்து சேர்வான். இன்றைய நாள்தான் அந்த நாளா? இந்த விவாதத்தில் நான் கலந்துகொள்ள மாட்டேன். அவன் இங்கே இருக்கிறானா இல்லையா என்பதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பாத்திமாவில் அறிவிக்கப்பட்ட திவ்விய கன்னிகை யின் வெற்றிக்கு முன் அவன் வருவானா, அல்லது அதற்குப் பின்பா? இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. சிலர் ஆம் என்கிறார்கள், சிலர் இல்லை என்கிறார்கள். நாம் நிச்சயமாகப் பார்ப்போம், இதற்கான ஒரு பதில் நம்மிடம் இருப்பதில் என்ன அனுகூலம் இருக்கக்கூடும்? அதிகமாக எதுவுமில்லை.

### ஒவ்வொருவரும் அவரவர் நிலையிலிருந்து, அவரவருடைய வாழ்வின் அந்தஸ்தின் கடமைகளை நிறைவேற்றுதல்

இதுவே என் முடிவு, நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம் அந்தஸ்தின் கடமையை நிறைவேற்றுவதே. திருச்சபையில் காரியங்கள் அதிக நல்லவையாக மாறும் என்று நாம் நம்புகி றோம். நம் எல்லோராலும் ஏதோ ஒன்றைச் செய்ய முடியும் என்பதை மட்டும் மனதில் இருத்துங்கள். எல்லோரும் ஏன்? ஏனெனில் நாம் போராடும் திருச்சபை என்று அழைக்கிற இந்தத் திருச்சபைக்கு நாம் அனைவரும் சொந்தமாயிருக்கி றோம். போராடும் திருச்சபை ஒரு போர்ப்படை போன்றது. எப்பேர்ப்பட்ட வரலாற்றுப் போரிலும் நீங்கள் ஒரு படையின் வெற்றியைப்பற்றிச் சிந்திப்பீர்கள் என்றால், என்ன நடந்தது? அந்தப் போரில் எவ்வாறு வெற்றி கிடைத்தது என்பதை பார்ப்பீர்கள். மிக உறுதியாக, தனது உத்தரவுகளைத் தருகிற தளபதி ஒருவர் இருக்கிறார், ஒவ்வொரு போர்வீரனும் தான் செய்ய வேண்டியதைச் செய்தான். மாறாக, ஒரு குறிப்பிட்ட

எண்ணிக்கையிலான படைவீரர்கள் தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டிருந்தால், அந்தப் படைக்கு வெற்றி கிடைத்திருக்காது. தனிப்பட்ட முறையில் பார்த்தால், மிகச் சிறிய காரியங்கள் அநேகம் இருக்கலாம். சமையல்காரன் உணவுகளைச் சமைத்தான், அவ்வளவுதான். ஆனால் அவனும் வெற்றியில் பங்கு பெற்றான். போர்கொடி தாங்குபவன் தேசக் கொடியைச் சுமந்து சென்றான், அவனும் வெற்றியில் ஒரு பகுதியாக இருந்தான். உத்தரவுகளைக் கொண்டுவந்து சேர்க்க நியமிக்கப்பட்ட தூதுவனும் வெற்றியில் பங்கு பெற்றான். துப்பாக்கியோ, பீரங்கியோ வைத்திருந்தவர்கள் அதை இயக்கினார்கள். தன் பதவியில் இருந்த ஒவ்வொருவரும், தன் வாழ்வின் அந்தஸ்தின் கடமையைச் செய்ததன் மூலம் வெற்றிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்தார்கள்.

கடவுள் நம் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறார். மேற்றிராணியார் ஃபெல்லேயையோ அல்லது வேறு யாராவது ஒருவரையோ அல்ல, மாறாக நம் ஒவ்வொருவரையும் அவர் சார்ந்திருக்கிறார். நாம் எல்லோரும் நம் அந்தஸ்தின் கடமைகளைச் செய்யவேண்டும். ஒருவன் எதையும் விட்டுவிடாமல் தன் கடமைகளை முழுமையாகச் செய்தால், திருச்சபையின் மறுபிறப்பிற்கும், அதன் புதுப்பித்தலுக்கும், வெற்றிக்கும் அது அவனது பங்களிப்பாக இருக்கும். வரப்பிரசாதத்தோடு ஒத்துழைப்பதன் மூலம் இது செய்யப்படுகிறது.



பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் கொள்கைகளுக்கும் நாம் செல்வோம் என்றோ, எல்லாத் தீமையும், அல்லது எல்லா நன்மையும் யாராவது ஒரு மனிதனிடமிருந்து வருவதாகவோ நான் கூறவில்லை. நம் வாழ்வின் முடிவில் ஆண்டவர் திருமுன் நாம் வந்து சேரும்போது, நாம் பதில் சொல்ல வேண்டியது இத்தகைய கேள்விக்கு அல்ல. அவர் நம்மிடம், நல்லது, 2012, டிசம்பர் 21 அன்றுதான் உலகத்தின் முடிவுநாளாக நியமிக்கப் பட்டுள்ளது என்று நீ நம்பினாயா? என்று கேட்க மாட்டார். இல்லை, நமக்காகக் காத்திருப்பது அந்த விதமான கேள்வி அல்ல. ஆறாம் சின்னப்பரைப்பற்றியோ, 2-ம் வத். சங்கத்தைப்பற்றியோ எந்தக் கேள்வியையும் நம்மிடம் கேட்க மாட்டார். ஆறாம் சின்னப்பர் தாம் செய்த காரியங்களுக்கு ஆண்டவருக்குக் கணக்குக் கொடுப்பார். அவருக்காகப் பதில் சொல்ல வேண்டியவர்கள் நாம் அல்ல. இதற்கு மாறாக, நாம் செய்தது, நாம் சொன்னது, அவற்றிற்குத்தான் நாம் பதில் சொல்ல வேண்டும்.

### அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையைத் திருச்சபையின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பருக்கு அர்ப்பணித்தல்

முடிவாக, தற்போதைய நெருக்கடி நிலைக்கு நம்முடைய உண்மையான பதில் இதோ: நாம் ஜெபிக்க வேண்டும், நாம் வரப்பிரசாதத்தை நம்பியிருக்க வேண்டும்; இந்த வரப்பிரசாத ஜீவியத்தைக் கொண்டு, விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகம் ஆகியவற்றின் இந்த ஜீவியத்தைக் கொண்டு, நம் ஆண்டவரின் செல்வாக்கைப் பரப்பும்படி முடிந்தவரை மேன்மையுள்ளதாக இருக்கிற ஒரு ஜீவியத்தைக் கொண்டு, நாம் நல்ல முறையில் ஜீவிக்க வேண்டும்; மற்றதெல்லாம் நல்ல ஆண்டவர் சித்தம் கொள்ளும்போது, திவ்விய கன்னிகையின் பாதுகாவலின் கீழ், அதற்குரிய சரியான நேரத்தில் வரும்.

நமக்காகப் பரிந்து பேசுகிற மற்றொருவரை அறிமுகப் படுத்த விரும்புகிறேன். ஏனெனில் அவரை சேர்த்துக்கொள்வது முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். அவர்தான் அர்ச். சூசையப்பர். அவர் உண்மையாகவே ஒரு முக்கியமான பரிந்துரையாளர், மிக முக்கியமானவர். அவர் எப்போதுமே மறைவிலிருப்பவர், பரிசுத்த சுவிசேஷங்களில், ஓர் அசாதாரண மறைந்த தன்மையில் அவர் இருக்கிறார். இருந்தாலும் அவர்தான் பாதுகாவலராகவும், உண்மையில் சேசு பாலனின் மாபெரும் பாதுகாவலராகவும், இருக்க வேண்டியவராக இருந்தார். அவர் திருச்சபையின் பாதுகாவலராகவும் இருக்கிறார். அந்தப் பிரசித்திபெற்ற, பாத்திமாவில் சூரிய அதிசயம் நிகழ்ந்த 1917 அக்டோபர் 13-ஆம் நாளில், திவ்விய கன்னிகை, சேசு பாலனோடும், அர்ச். சூசையப்பரோடும் உலகத்தை ஆசீர்வதிக்கத் தான் வரப்போவதாக அறிவித்தார்கள் என்பது மிக அழகான காரியம். ஆக, 1917 அக்டோபர் 13 அன்று பரிசுத்த திருக்குடும்பத்தால் உலகம் ஆசீர்வதிக்கப்பட்டது! அர்ச். சூசையப்பரிடம் ஒரு அலுவல் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. திருச்சபைபற்றி நீங்கள் பேசும்போதெல்லாம், திருச்சபையின் பாதுகாவலைப்பற்றி நீங்கள் பேசும்போதெல்லாம், அர்ச். சூசையப்பர் அதில் மிக முக்கியமான பங்கு வகிக்கிறார். அர்ச். சூசையப்பருக்கு நல்ல விதமாக உருவாக்கப்பட்ட ஒரு பக்தி நம்மிடமுள்ளது. இந்தக் கடினமான தருணங்களில், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையை ஒரு விசேஷமான முறையில் அவருக்கு அர்ப்பணிக்க நாம் விரும்புகிறோம். இந்த ஆண்டு, அதாவது 2013-ல் மார்ச் 19 அன்று நாம் இதைச் செய்தோம். சேசுவின் திரு இருதயத்தின் பேரில் மிகுந்த செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிற இந்த அர்ச்சியசிஷ்டவர்களின் பாதுகாப்பில் நான் உங்களை ஒப்புவிக்கிறேன். அவர்கள் நம் எல்லோரையும் பாதுகாப்பார்களாக!

# ஒரு குருவானவரின் தாய்

**உங்கள் குடும்பத்தில் தேவ அழைத்தலைப் பெற்றுக் கொள்வதற்கு ஏழு இரகசியங்கள்**

**சுவாமி ஹெர்வே த லா டுர் 1981-ல் அதிமேற்றிராணியார் மார்செல் லெஃபவரால் குருத்துவ அபிஷேகம் செய்விக்கப்பட்டார். அவர் ஒரு குருமடப் பேராசிரியராகவும், 1983 முதல் 1989 வரை அர்ச். மாமரியின் கல்விக் கழகம் மற்றும் கல்லூரி அதிபராகவும் இருந்தார். அவர் இப்போது செயின்ட் மேரீஸில் வசிக்கிறார். அங்கே அவர் கல்வி சார்ந்த காரியங்களில் சபையின் அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கு ஆலோசனைகள் தருகிறார்.**

ஒரு கத்தோலிக்கத் தாய்க்கு அவளுடைய மகன்களில் ஒருவன் பரிசுத்த குருத்துவத்திற்கு உயர்த்தப்படுவது ஒரு மிகப் பெரும் மகிமையாக இருக்கிறது. ஒரு நாள், தன் மகனிடம் தேவ அழைத்தலுக்கான அறிகுறிகள் தென்படுவதைத் தற்செயலாகக் காண்கிற ஒரு தாய் பின்வரும் வார்த்தைகளைக் கூறுவதாக சுவாமி லார்த் கூறுகிறார்:

> "என் சிறு மகன் மிகப் பெரியவன் ஆவான்...
> சர்வ வல்லபரான சர்வேசுரன் அவனது
> விரல்களில் பிரசன்னமாயிருப்பார்...
> கலக்கமுற்ற ஆத்துமங்கள் சமாதானத்தைக்
> கண்டடையும்படி அவனிடம் வருவார்கள்...
> சர்வேசுரன் தமது மனிதாவதாரத்தைத் தொடரும்படி,
> என் சொந்த மாம்சத்தைச் சேர்ந்த ஒன்றை
> என்னிடம் கடன் வாங்குவார்!"



**அர்ச். அகுஸ்தீனாரின் தாயார்**
**அர்ச். மோனிக்கம்மாள்**

ஒரு குருவின் தாயின் சந்தோஷங்கள் மிகப் பெரியவை. தன் சொந்தக் குழந்தையால் நிறைவேற்றப்படும் திவ்விய பலிபூசையில் பங்கெடுப்பதும், அவர் கரத்தினின்று திவ்விய நன்மை வாங்குவதும் ஒரு மாபெரும் சந்தோஷம்..... குரு என்பவர் மறு கிறீஸ்துவாக இருப்பதால், தன் குருமகன், சேசுவின் திரு இருதயத்திடமிருந்தே தாம் பெற்றுக்கொள்கிற ஒரு விசேஷ கனிவோடு தன்னை நேசிக்கிறார் என்பதை உணர்வது ஒரு மிகப் பெரும் சந்தோஷம்..... கடவுள் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிற மோட்சத்தைத் தான் பாதுகாப்பாக அடைவதற்காக அவர் தனக்காக ஜெபித்துக் கொண்டும், திவ்விய பலிபூசைகள் ஒப்புக்கொடுத்துக் கொண்டும் இருக்கிறார் என்பதை உணர்வது மிகப் பெரும் சந்தோஷம். ஆம், உண்மையில் குருக்களின் தாய்மார், சகல தாய்மாரிலும் அதிக மகிழ்ச்சியானவர்களில் சிலராக இருக்கிறார்கள்.

ஒரு தாய் என்ற முறையில் உங்கள் சொந்தக் குடும்பத்தில் ஒரு குருத்துவ தேவ அழைத்தலை வளர்க்க நீங்கள் என்ன செய்ய முடியும்? இந்தக் கட்டுரையில் சில நடைமுறை சார்ந்த யோசனைகளை நாம் தர விரும்புகிறோம். இவை வேறு பல தாய்மாருக்கு மிகுந்த பலனளிப்பவையாக இருந்துள்ளன. ஏற்கனவே ஒரு குருவின் தாயாயிருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் நம் வாசகிகளையும் நாம் அழைக்கிறோம். கடவுளின் வரப்பிரசாதத்தினால், தங்கள் சொந்தக் குடும்பத்திற்கு வெற்றிகரமானவையாக இருந்திருக்கிற சிறு இரகசியங்களை அனைவருடைய நன்மைக்காகவும் எழுத்து பூர்வமாக நம்மோடு பகிர்ந்து கொள்வார்களாக.

### 1. அடிக்கடி ஜெபியுங்கள்

தேவ அழைத்தல்கள் தேவ இரக்கத்தின் கொடையாக இருக்கின்றன. பக்திப் பற்றுதலுள்ள மிக அதிகமான

ஜெபத்தின் மூலமாகத்தான் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். தன் ஒரேயொரு குழந்தையை மட்டுமல்ல, மாறாக தனது எல்லாக் குழந்தைகளையும் குருக்களாகவும், கன்னியர்களாகவும் கடவுள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே திவ்விய சற்பிரசாதத்தின் முன்பாக எலிசா வாகன் என்ற தாயின் அனுதின ஜெபமாக இருந்தது. உரிய காலத்தில் எலிசாவின் பதின்மூன்று குழந்தைகளில், எட்டு ஆண்களில் ஆறு பேர் குருக்களாகினர். ஐந்து பெண் குழந்தைகளுமே கன்னியர்கள் ஆனார்கள். இந்த உத்தமமான பழைய கத்தோலிக்கக் குடும்பம் வாரிசற்றுப் போய்விடாதபடி காப்பாற்றிய மீதமுள்ள இரண்டு மகன்களும்கூட, குருமடங்களில் குருக்களாக முயற்சி செய்த பிறகுதான் திருமணம் செய்துகொண்டார்கள்.

தன் திருமண வாழ்வின் எல்லா வருடங்களிலும் ஒரு தாய் இடைவிடாமல் செய்த ஜெபங்கள்தான் இந்த அற்புதமான பலன் கிடைக்கக் காரணமாக இருந்தது. சேசுவின் திரு இருதய அரசாட்சியைக் குடும்பங்களில் நிறுவும் பக்தியின் மாபெரும் அப்போஸ்தலராகிய சுவாமி மத்தேயோவால் வளர்க்கப்பட்ட 'இல்லத்தில் இரவு ஆராதனை' என்னும் பக்தி முயற்சியை வாசகர்களுக்குப் பரிந்துரைக்க நாம் விரும்புகிறோம். பல குடும்பங்கள் தங்கள் மாதாந்தர திருமணி ஆராதனையைப் பிரமாணிக்கத்தோடு செய்துகொண்டு இருக்கின்றன. அவர்களுடைய ஜெபங்களின் வழியாக, அநேக வரப்பிரசாதங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்பதில் நாம் உறுதியாயிருக்கிறோம். நீங்கள் இந்த இரவு ஆராதனையாளர்களின் சிறு குழுவில் இன்னும் இணையாமல் இருக்கிறீர்கள் என்றால், இப்போது அதைச் செய்வதுபற்றிச் சிந்திப்பீர்களா?

## 2. உங்களைப் பலியாக்குங்கள்

ஜெபம் போதாது, நீங்கள் ஜெபத்தோடு தவத்தையும் சேர்க்கவேண்டும். திருமதி ஸ்டெப்பினாக் என்பவர் தன் பதினொரு குழந்தைகளில் ஒருவராவது குருத்துவ அபிஷேகம் பெறுவதைக் காண வேண்டுமென்ற தணியாத தாகம் கொண்டிருந்தார். சுய பரித்தியாகத்தின் மூலமாக இந்த வரப்பிரசாதத்தைக் கடவுளிடமிருந்து எப்படியாவது அடைந்தே தீர்வது என்று அவர் தீர்மானித்துக்கொண்டார். தன் திருமண வாழ்வின் தொடக்கத்தில் வாரத்திற்கு மூன்று தடவைகள் உபவாசம் இருக்கும் வழக்கத்தை அவர் தொடங்கியிருந்தார். இதை 35 வருடங்களாக அவர் தொடர்ந்து அனுசரித்தார். அவருடைய குழந்தைகளில் ஒருவரிடமாவது ஒரு குரு ஆவதற்கான எந்த அடையாளமும் வெளிப்படாதது அவரை அதைரியப்படுத்தினாலும், அவர் இந்தத் தவமுயற்சியில் நிலையாக இருந்தார்.

ஆனாலும் இறுதியாக, அவருடைய இளைய மகன் அலாய்ஸியஸ், குருத்துவப் படிப்பின் மீதான தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான். அதே சமயத்தில் முதல் உலகப் போர் தொடங்கியது. இந்த இளைஞன் இராணுவத்தில் சேரவேண்டியிருந்தது. அந்தோ, போருக்குப் பிறகு, குருமடத்தில் சேரும் ஆசை முழுவதுமாக அவனிடமிருந்து விலகியிருந்தது. இப்படியே ஐந்து வருடங்கள் கடந்தன. அவனுடைய தாய் தொடர்ந்து உபவாசம் இருந்துவந்தார். அலாய்ஸியஸ் ஏறத்தாழ திருமணம் செய்துகொள்ளும் நிலைக்கு வந்தபோது, அவன் திடீரென தான் ஒரு குருவாகப் போவதாகத் தன் தாய்க்கு அறிவித்தான். இந்த இளைஞர் பிற்காலத்தில் க்ரோயேஷியாவின் அதிமேற்றிராணியார் ஆனார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இவர் கம்யூனிஸ்ட்களின் கரங்களில் பெரும் சித்திரவதைகளை அனுபவித்தார்.

இந்த வெற்றி ஒரு தேவ அழைத்தலின் வரப்பிரசாதத்தைச் சம்பாதிக்கும்படி 35 ஆண்டுகளாக உபவாசத்தைக் கடைப்பிடிக்கச் சித்தமாயிருந்த அவருடைய தாயின் மேன்மையுள்ள இருதயத்தின் காரணமாக அவருக்கு வந்தது. தாய்மார்களே, தேவ அழைத்தல்களுக்காக கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்படக்கூடிய சிறு சிறு பரித்தியாகங்களைக் கண்டுபிடிக்க முயற்சியெடுங்கள்.

## 3. தேவ அழைத்தலுக்கான தூண்டுதலாக இருங்கள்

*1950-ம் வருடம் குருக்களுக்கான ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் ஒரு சுவாரஷ்யமான ஆய்வு வெளியிடப்பட்டது. அதில், எட்டு குருமடங்களில் இருந்த 2000 குருமாணவர்களுக்குத் தரப்பட்டிருந்த ஒரு வினாத்தாளுக்கு அவர்கள் அளித்த பதில்களை நாம் வாசிக்கிறோம். இந்த இளைஞர்களிடம், அவர்கள் குருமடத்தில் சேரும் முடிவை எடுக்கத் தூண்டுதலாக இருந்தது எது என்று கேட்கப்பட்டு இருந்தது. நீங்கள் நம்புகிறீர்களோ, இல்லையோ, அந்த 2000 இளைஞர்களில் 1593 இளைஞர்கள் (நான்கில் மூன்று பங்கையும்விட அதிகமானோர்) தங்கள் தேவ அழைத்தலுக்கு தங்கள் தாயும் ஒரு முக்கியக் காரணம் என்று பதில் சொல்லியிருந்தார்கள்.* தேவ அழைத்தல்களின் விதைகள் விதைக்கப்படுகிற நிலம் கத்தோலிக்க இல்லமே. கடவுளின் மிக மெல்லிய குரலைக் கேட்க செவிகள் பழக்கப்படுத்தப்படவில்லையென்றால், தேவ அழைத்தல்களுக்கு ஒருபோதும் பதில் அளிக்கப்படாது. தங்கள் குழந்தைகளிடம் கடவுளையும், அவருடைய சிநேகத்தையும்பற்றிச் சொல்பவர்களும், சுபாவத்துக்கு மேலானது தங்களுக்கு இயல்பானதாக இருப்பதால், அதை தங்கள் குழந்தைகளுக்கும் இயல்பானதாக ஆக்குபவர்களுமாகிய தாய்மாரால் செவிகள் பழக்கப்படுத்தப்படுகின்றன.

ஆ! அர்ச். பத்தாம் பத்திநாதரின் தாயாராகிய மார்கரீட்டா சார்த்தோவைப் போன்ற ஓர் அர்ச்சியசிஷ்ட ஸ்திரீயின் முன்மாதிரிகையின் வல்லமையே! அவள் தன் சிறுவனின் இருதயத்தில் எத்தகைய மேலான நல்ல பாதிப்பை ஏற்படுத்துகிறாள்! இந்தக் கட்டுரையை வாசிக்கிற கத்தோலிக்க தாய்மாரே, உங்கள் அர்ச்சிப்பே கடவுளின் சித்தமாக இருக்கிறது (அர்ச். சின்னப்பர்) என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்கள் சொந்த பலவீனத்தைப்பற்றி அதைரியப்படாமல், உத்தமதனம் அடையப் பாடுபடுங்கள். நீங்கள் கடவுளோடு பரிச்சயமுள்ளவர்களாகவும், அவரோடு அந்நியோன்னியமாகப் பேசுபவர்களாகவும் இருந்தால், உங்கள் குழந்தைகளும் கடவுளோடு பரிச்சயமுள்ளவர்கள் ஆவார்கள். தாங்கள் ஒருவரோடொருவர் பேசுவதுபோல, கடவுளோடும் எளிதாகவும், அந்நியோன்னியமாகவும் பேசுவார்கள்.

## 4. பூசையை வாழ்வாகக் கொள்வோம்

நம் ஆண்டவர் சிலுவையின்மீது தாம் செய்தது போலவே, திவ்விய பலிபூசையின்போதும் தம்மைத் தமது பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்று நம் கத்தோலிக்க விசுவாசம் நமக்குச் சொல்கிறது. ஆனாலும் இப்போது பூசையில் சரீரப்படியான இரத்தப்பலி இல்லை, மாறாக அங்கே தேவதிரவிய அநுமான ரீதியான பலி நிறைவேறுகிறது. சேசு உத்தம கீழ்ப்படிதலுள்ள பலிப்பொருளாக இருக்கிறார். அவருடைய சித்தம் அவரது தந்தையின் திருச்சித்தத்திற்கு முழுவதும் ஒத்ததாக இருக்கிறது.

நாம் கிறீஸ்துநாதரின் உறுப்புகள், ஆகவே நாமும் அவருடைய ஐக்கியத்தில் நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம் வேலை, துன்பங்கள், ஏமாற்றங்கள் போன்றவற்றை, பலிபீடத்தில் புதுப்பிக்கப்படுகிற சேசுநாதரின் திருப்பாடுகளோடு நாம் இணைக்கும்போது தான், நாம் உண்மையாகவே பூசையை வாழ்வாகக் கொள் கிறோம். ஒரு நாளில் இந்த தாராள உணர்வைச் செயல்படுத்த ஒரு தாய்க்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கின்றன. உங்கள் வாழ்வின் சகல சிறு சிறு மகிழ்ச்சியற்ற நிகழ்ச்சிகளும், பூசையின் மகா பரிசுத்த பலிப்பொருளானவரின் உன்னதப் பலியோடு ஒன்றிணைக்கப்படும்போது, அவை கடவுளின் கண்களில் விலையேறப்பெற்றவையாக ஆகிவிடுகின்றன. ஒரு தாய் பூசையின் மட்டில், தான் கொண்டுள்ள அன்பைத் தன் சொந்தப் பிள்ளைகளுக்குத் தர கடுமையாக முயலவும் வேண்டும். குழந்தைகள் பூசை காண நாம் உதவுவது அவசியம்.

பூசையை மதித்துப் போற்ற நமக்கு உதவும்படி உருவாக்கப்பட்டுள்ள அநேக புத்தகங்கள் இருக்கின்றன என்பதை நாம் உங்களுக்கு நினைவுபடுத்துகிறோம். நம்மால் புரிந்துகொள்ள முடியாத ஒன்றை நம்மால் நேசிக்க முடியாது. பூசையையும், அதன் சடங்குகளையும், அதன் வரலாற்றையும், பூசை உடுப்புகளையும், பரிசுத்த பாத்திரங்கள், மற்றும் லினன் துகில்கள் ஆகியவற்றை நாம் ஆராய்ந்தறியவில்லை என்றால், பூசையை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. மேலே குறிப்பிடப்பட்ட அந்தக் கேள்வித் தாளில், "நான் பூசை வைக்க விரும்புகிறேன்" என்பதை குருமடத்தில் தாங்கள் பிரவேசிப்பதற்கான முக்கியக் காரணமாகப் பட்டியலிட்ட இளைஞர்கள்தான் மிகப் பெரும்பான்மையாக இருந்தார்கள் (2000-க்கு 1326 பேர்). இந்த இளைஞர்கள் பூசையை வாழ்வா கக்கொண்ட ஒரு தாயைக் கொண்டிருந்தார்கள் என்பதில் நான் நிச்சயமாயிருக்கிறேன்.

## 5. குருத்துவத்திற்கு சங்கை செலுத்துங்கள்

சுல்ப்பீஸிய குருக்கள் சபையின் அர்ச்சியசிஷ்ட ஸ்தாபகரின் தாயாகிய திருமதி ஆலியேர், தன் குழந்தைகளின் இருதயங்களில் குருத்துவத்தின் மீது ஒரு பெரும் மதிப்பை ஏற்படுத்த எப்போதுமே பாடுபட்டு வந்தார். தமது ஏழு வயதிலிருந்தே, தமது எளிய குழந்தைத்தனமான மனதில், குருக்கள் மனிதர்களுக்கு மேலானவர்கள் என்று தாம் நம்பி வந்ததாக அந்தத் தாயின் மகன் அறிவித்தார். குருக்களின் மீதான அவருடைய இந்த மாபெரும் மதிப்பிற்குக் காரணம் என்ன என்று அவரிடம் கேட்டபோது, அவர் தம் தாயைச் சுட்டிக் காட்டினார்.

பிரெஞ்சுப் புரட்சியின்போது, மற்றொரு தாய், சில வீரமிக்க குருக்களைச் சந்திக்கும்படி தன் மகனை அவர்கள் அடைபட்டிருந்த சிறைச்சாலைக்குக் கூட்டி வர சற்றும் தயங்க வேயில்லை. அந்தக் குருக்கள் தங்கள் வேதசாட்சியத்திற்கு முன்பாக அங்கே அடைக்கப்பட்டிருந்தார்கள். பிற்பாடு இந்த இளைஞர் ஒரு குருவாகவும், மேற்றிராணியாராகவும் ஆனார்.

ஆம், அன்புள்ள தாய்மார்களே, நீங்கள் உங்கள் குருக் களின் மட்டில் வணக்க உணர்வுகளை எப்போதும் கொண் டிருக்கவேண்டும். அவர்கள் 'மறு கிறீஸ்துக்களாக' இருக்கிறார் கள். "ஓ! தேவ திருச்சுதனானவர் திவ்விய கன்னிகையின் திருவுதரத்தில் மனுவுருவானதுபோலவே, யாருடைய கரங் களில் மனுவுருவாகிறாரோ அந்த குருக்களின் மகத்துவமுள்ள மேன்மையே!" என்று அதிசயிக்கிறார் அர்ச். அகுஸ்தீனார். குருத்துவம் இல்லாவிடில், உங்களுக்கு தேவ வசீகரமும் இல்லை, பாவ மன்னிப்பும் இல்லை. குருக்கள் நமக்காகப் பரலோகத்திலிருந்து பெற்றுக்கொள்கிற அநேக வரப்பிரசாதங் களுக்காக அவர்கள்மட்டில் நாம் கொண்டிருக்க வேண்டிய நன்றி உண்மையாகவே மிகப் பெரிதாக இருக்க வேண்டும். நாம் மோட்சத்தை அடையும்படி நடந்துசெல்ல வேண்டி யிருக்கிற பாலமாக அவர்கள் இருக்கிறார்கள்.

ஓர் உண்மையான கத்தோலிக்கக் குடும்பம் தங்கள் அனுதின ஜெபமாலையில் குருக்களுக்காக ஜெபிக்க ஒருபோதும் மறக்காது. சில குடும்பங்கள் குருக்களுக்கான ஜெப அப்போஸ்தலத்துவத்தில் சேர்ந்துள்ளன. இது வெகுவாக ஊக்குவிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. இது தேவ அழைத்தல்களின் ஓர் ஆதாரமாக இருக்கும். (திரு இருதய அரசாட்சி ஸ்தாபகம், வீடு மந்திரிப்பு, வியாதியாயிருக்கிற குழந்தையை மந்திரித்தல் போன்ற காரணங்களுக்காக) உங்கள் வீட்டுக்கு குருவை அழைக்க உங்களால் முடிகிறது என்றால், அவருடைய வருகையை முடிந்தவரை பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகள் குருவானவருக்கு



**அர்ச். டொன்போஸ்கோவின் தாயார் மார்க்கரெட்**

மிகுந்த சங்கை மரியாதை செலுத்த அவர்களுக்கு உதவுங்கள். அவர்களுக்கு முன்பாக அவரை ஒருபோதும் விமர்சனம் செய்யாதீர்கள். உங்கள் குழந்தைகள் அவரில் நம்பிக்கை கொள்ளும்படியும், தங்கள் ஆன்ம வழிகாட்டுதலுக்காக அவரிடம் செல்லும்படியும் செய்ய உங்களால் முடிந்தால், அப்போது, நேரம் வரும்போது கடவுளின் அழைப்பை அவர்கள் கேட்பார்களென்பதில் நீங்கள் நிச்சயமாயிருக்கலாம்.

## 6. ஏழைகளை நேசியுங்கள்


தேவ அழைத்தல்களை வளர்ப்பது எப்படியென்று அறிவுரை தருகிற காரியத்தோடு இந்தத் தலைப்பிற்கு தொடர்பில்லாதது போலத் தோன்றலாம். ஆனாலும் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவ அழைத்தல்களைப் பெற்றுத் தந்த தாய்மாரின் வாழ்வில், ஏழைகளுக்கு அவர்கள் காட்டும் பிறர்சிநேகம் அவர்களுக்குப் பிடித்தமான புண்ணியங்களில் ஒன்றாக எப்போதும் இருந்தது என்பது ஒரு தெளிவான அம்சமாக இருக்கிறது. ஆன் மெக்னாப் என்பவர் மாபெரும் சாமிநாதர் சபை வேதசாஸ்திரியான சுவாமி வின்சென்ட் மெக்னாப் என்பவரின் தாயார் ஆவார். பதினொரு குழந்தைகளுக்குத் தாயான இந்தப் பெண்மணியின் கணவர் ஒரு கப்பல் மாலுமி என்பதால், இவருடைய வாழ்வு கடினமானதாக இருந்தது. ஆனால் கடவுள் அவருடைய குடும்பத்தில் எப்போதும் முதல் இடத்தில் இருந்தார். இதன் காரணமாக, ஏழைகள் எப்போதுமே இவரால் வரவேற்கப்பட்டார்கள். ஆன் அம்மையாரின் பிறர்சிநேகம் மட்டற்றதாக இருந்தது. வாசலில் அழைப்பு மணி ஒலித்தபோதெல்லாம், "வாசலில் ஒரு ஏழை மனிதர் இருக்கிறார்" என்ற வார்த்தைகளை நாங்கள் எப்போதும் கேட்டோம். "பெத்லகேமின் ஏழைக் குழந்தையானவர்தான் வாசலில் இருந்தார் என்றே நாங்கள் உணர்ந்தோம்" என்று அந்தப் பெண்மணியின் மகன் எழுதினார். அந்தத் தாய் தன் பிள்ளைகளுக்குள் ஊட்டிய இந்தப் பிறர்சிநேகமானது, சுவாமி வின்சென்டின் குணநலனில் ஒரு முக்கியமான அம்சமாக இருந்தது, ஏழைகளின் மீதான அவருடைய அன்பில் அது காணப்படக்கூடியதாக இருக்கிறது.

எலிசா வாகன் தன் குழந்தைகள் அவ்வளவு வசதியில்லாத குழந்தைகளுக்கு தங்களுடைய மிகச் சிறந்த பொம்மைகளில் சிலவற்றைக் கொடுக்கும்படி எப்படி அவர்களுக்குப் பயிற்சி தந்தார் என்பதையும் நீங்கள் வாசிக்கலாம். 2013-ல் வாழும் தாய்மார், உதாரணமாக தபசு காலத்தின்போது, (இந்தியா மற்றும் காபோனிலுள்ள) வேதபோதக ஊழியங்களுக்கு தர்மங்கள் தருவதற்கு தங்கள் குழந்தைகளுக்கு நிச்சயமாகக் கற்றுக்கொடுக்க முடியும். குழந்தைகள் கிறீஸ்தவ பிறர்சிநேகத்தைப் பயிற்சிசெய்யக் கற்றுக்கொள்ளும்படி மரியாயின் சேனை மூலம் ஏழை வயோதிகர்கள் வீட்டிற்கு வர ஏற்பாடு செய்யலாம். முன்பு இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட அந்த வினாத்தாளில், 2000 பேரில் 1306 சிறுவர்கள், குருத்துவத்திற்குத் தாங்கள் ஈர்க்கப்பட்டதற்கான முக்கியக் காரணம், "நான் மற்றவர்களுக்கு உதவ விரும்பினேன்" என்று எழுதினார்கள். இந்தச் சிறுவர்களில் பெரும்பான்மையானவர்கள், நம் அயலாருக்கு நாம் செய்யக்கூடிய அனைத்திலும் மேலான ஊழியமாக ஆத்துமங்களின் இரட்சண்யத்திற்காகத் தங்களை அர்ப்பணிக்கும் இந்த ஆசையைத் தங்கள் சொந்த வீடுகளில்தான் பெற்றுக்கொண்டார்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்.

## 7. கடவுளின் திருச்சித்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்

ஒரு வேதபோதகராக ஆகி, அதன் மூலம் அநேக ஆத்துமங்களை இரட்சிக்கக்கூடிய ஒரு குருவை திருச்சபைக்கு தரவேண்டும் என்பது திருமதி மார்ட்டினின் பெரும் ஆசையாக இருந்தது. தன் முதல் மகன் பிறந்த சில நாட்களுக்குப் பிறகு, அவன் பூசை வைக்கும்போது எத்தகைய அற்புதமான தோற்றத்தைக் கொண்டிருப்பான் என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவனுடைய குருத்துவ அபிஷேகத்திற்காக ஒரு வெள்ளை அங்கி தயாரிப்பதுபற்றியும்கூட அவர் யோசிக்கத் தொடங்கிவிட்டார். ஆனால் சின்ன லூயிஸ் ஆறு மாதங்களுக்கும் குறைவாகத்தான் உயிரோடு இருந்தான். ஷான் பாப்டிஸ்ட் என்னும் இரண்டாவது மகன் ஒன்பது மாதங்களானபோது இறந்து போனான். ஆகவே திருமதி மார்ட்டினின் மிகப் பிரியமான ஆசை நிறைவேற வாய்ப்பே இல்லாமலிருந்தது. இருந்தாலும் அவர் கடவுளின் சித்தத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டார். இந்த மிக அற்புதமான கத்தோலிக்கத் தாய் மட்டில் தேவ பராமரிப்பு வேறு திட்டங்களை வைத்திருந்தது. கடவுள் அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாளை இவருக்கு மகளாகத் தந்தார்! தன் குழந்தையின் மூலமாக, ஆயிரக்கணக்கான குருக்களுக்கு உதவ அந்தத் தாயால் முடிந்தது. இந்தக் குருக்கள் கடவுளை நேசிப்பது எப்படியென்றும், அவருக்காகத் துன்புறுவது எப்படியென்றும் லிசியேயின் தாழ்மையுள்ள நம் கார்மெல் சகோதரியிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்.

ஆகவே, இந்த வரிகளை வாசித்துக்கொண்டிருக்கிற அன்புள்ள தாய்மாரே, உங்கள் ஜெபங்களையும் மீறி, உங்கள் குடும்பத்தில் ஒரு குருவைப் பெற்றுக்கொள்ளும் உங்கள் ஆசைக்குக் கடவுள் செவிசாய்க்காதது போலத் தோன்றினாலும், அதனால் அதைரியப்படாதீர்கள். அவருடைய அளவற்ற நன்மைத்தனத்தில் நம்பிக்கை வையுங்கள். சர்வ வல்லபரான சர்வேசுரன் உங்களுக்கென்று வேறு திட்டங்களை வைத்து இருக்கலாம். உங்கள் குழந்தைகளில் சிலர் தங்கள் குடும்பங்களில் குருக்களைக் கொண்டிருக்கலாம். அல்லது இந்த வரப்பிரசாதத்திற்காகத் தன் தாயிடமிருந்து எந்த ஜெப உதவியும் கிடைக்காத ஓர் இளைஞனுக்கு தேவ அழைத்தலை தர கடவுள் உங்கள் ஜெபங்களைப் பயன்படுத்தலாம். கடவுளின் வழிகள் மெய்யாகவே பரம இரகசியமானவை, அவருடைய தீர்மானங்களின் ஞானத்தை நாம் ஒருபோதும் கேள்வி கேட்கக் கூடாது. நம் வாழ்வின் சகல நிகழ்வுகளும் எப்படித் தேவ பராமரிப்பால் ஆளப்பட்டன என்பதை நாம் மோட்சத்தில் பூரணமாகப் புரிந்துகொள்வோம். கடவுளை நேசிப்பவர்களுக்கு, எல்லாக் காரியங்களும் இணைந்து நன்மை பயக்கும்.




# அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள்




**(23)** பின்பு தெரேசம்மாள் கார்மேல் மடத்தின் சிரேஷ்டர் சுவாமியைச் சந்தித்து அனுமதி கேட்டாள். அவர் அவளிடம், "மேற்றிராணியார் உனக்கு அனுமதி தரவில்லையென்றால், 21 வயது வரை நீ காத்திருக்க வேண்டும்" என்று சொல்லி விட்டார். 1887, அக்டோபர் 21 அன்று திரு. மார்ட்டினும், தெரேசம்மாளும் மேற்றிராணியாரைச் சந்தித்தனர். "நான் இது பற்றி சிரேஷ்டர் சுவாமியுடன் ஆலோசிக்க வேண்டும்" என்று மேற்றிராணியார் கூறிவிட்டார்.







**(24)** பாப்பரசர் பதின்மூன்றாம் சிங்கராயர் தமது குருத்துவ ஜூபிலியைக் கொண்டாடிக் கொண்டிருந்த போது, திரு மார்ட்டினும் அவருடைய மகள்களும் உரோமைக்குத் திருயாத்திரையாகச் சென்றனர். பாப்பரசரின் ஆசீர்வாதங்களைப் பெறும்போது, யாரும் பேசக் கூடாது என்றாலும் தெரேசம்மாள் கார்மேல் மடத்தில் சேர்வதற்கு அவருடைய விசேஷ அனுமதியைக் கேட்டாள். கார்மேல் சபை மேலதிகாரிகள் அவள் சேர்வது பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பாப்பரசர் அறிந்ததும், அவர்களுடைய முடிவுக்காகக் காத்திருக்கும்படி அவளிடம் கூறினார்.

**(25)** 1887, டிசம்பர் 28 அன்று, 15 வயதான தெரேசம்மாளை மேற்றிராணியார் அனுமதி அளித்ததின்பேரில் மடத்துத் தாயார் கார்மேல் மடத்தில் சேர்த்துக்கொண்டார்கள். 1888, ஏப்ரல் 9 அன்று, திவ்விய பலிபூசைக்குப் பிறகு, தெரேசம்மாள் தன் சகோதரிகளிடம் விடைபெற்றுக்கொண்டபின் தன் தந்தை முன் முழந்தாளிலிருந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றாள். அதன்பின் அவள் மடத்தில் பிரவேசித்தாள்.

சாங்க்தா மரியா



**(26)** ஓர் உண்மையான கார்மேல் சகோதரியாக ஆவதற்கு முன், தெரேசம்மாள் ஒரு வருட பரிசோதனைக் காலத்திற்கு உட்பட வேண்டியிருந்தது. அவளுக்கு ஆயத்த நிலைச் சகோதரிகள் அணியும் சாம்பல் நிறத் துணியில் தைத்த முரட்டு அங்கியும், ஒரு கம்பளித் தொப்பியும் வழங்கப்பட்டன. அவளுடைய அறையில் வைக்கோலால் ஆன ஒரு மெத்தையும், ஒரு மேஜையும், ஒரு குடமும், ஒரு விளக்கும் இருந்தன. பெருக்குவது, தூசி துடைப்பது, தோட்டத்தில் களை பிடுங்குவது போன்றவை அவள் செய்ய வேண்டிய வேலைகளாக இருந்தன.



**(27)** 1889, ஜனவரி 10 அன்று, தெரேசம்மாளுக்கு கார்மேல் அங்கி அணிவிக்கப்படும் நாளாக இருந்தமையால், காலையில் அவள் வெண்ணிற ஆடையும், மலர் முடியும் தரித்தவளாக மடத்திலிருந்து வந்தாள். அவளுடைய தந்தை அவளைக் கைபிடித்து, வெளிப்புறமிருந்த சிற்றாலயத்திற்குக் கூட்டிச் சென்றார். திவ்விய பலிபூசை முடிந்தபின், அவர் மடத்தின் வாசல் வரைக்கும் அவளோடு சேர்ந்து வந்தார். பின்பு அவர் சிற்றாலயத் திற்குத் திரும்பிச் சென்றார்.



**(28)** ஒவ்வொரு கன்னிகையும் எரியும் மெழுகுவர்த்தி ஒன்றை வைத்திருந்தார்கள். கன்னியர்கள் இரண்டு நீண்ட வரிசைகளாக நின்று, மடத்தின் அடைபட்ட பகுதியைக் கடந்து சென்றார்கள். தெரேசம்மாள் குழந்தை சேசுவின் சுரூபம் ஒன்றைக் கடந்து சென்றபோது, அவள் அதை உற்று நோக்கினாள். ஏனென்றால் குழந்தை சேசுவின் மீது அவள் மிகுந்த பக்தி கொண்டிருந்தாள். அவள் முற்றத்தைக் கடந்து சென்றபோது, அங்கே பனி பெய்து இருந்ததை தெரேசம்மாள் கண்டாள். இயற்கையும் அவளைப் போலவே அன்று வெண்ணாடை உடுத்தியிருந்தது.



**(29)** தெரேசம்மாளின் தலைமுடி வெட்டி அகற்றப்பட்டது. அவள் மறுபடியும் தன் சாதாரண உடையை அணிந்திருந்தாள். தன் தலைமீது வெண்பட்டினாலான தொப்பியை வைத்திருந்தாள். அவள் மடத்துத் தாயாருக்கு அடுத்து இருந்தாள். கன்னியர்களின் பவனி அவளுக்கு முன்பாக இருந்தது. மேற்றிராணியார் ஒரு வெண்ணிற கார்மேல் மேலங்கியை ஏற்கனவே மந்திரித்து வைத்திருந்தார். மடத்துத் தாயார் அதைத் தெரேசம்மாளின் தோள்களின்மீது அணிவித்தார். அதன்பின் அவர் அவள் மீது ஒரு கறுப்பு முக்காட்டை அணிவித்தார்.

**"ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்தமுந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்"** (மத். 6:33).



**(30)** 1890, செப்டம்பர் 8 அன்று, தனது நிரந்தர வார்த்தைப் பாட்டுக்கு சற்று முன், தெரேசம்மாள் தனது தேவ அழைத்தலைப் பற்றி, தான் ஏக்கமுள்ள கவலையோடு இருப்பதாக தாயாரிடம் கூறினாள். அவள் கார்மேல் சபைக்கு தேவ அழைத்தல் பெற்றிருந்ததுபற்றி தாயார் அவளை உறுதிப்படுத்தினார்கள். ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு, தெரேசம்மாள் தன் தலையின் மீது ரோஜாக்களால் ஆன ஒரு முடியை அணிந்துகொண்டாள். அன்றிரவு, தன் பெயர் இன்னும் நட்சத்திரங்களால் எழுதப்பட்டு இருந்ததை அவளால் காண முடிந்தது.



**(31)** நீண்ட காலம் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு சகோதரிக்கு துணைவியாக தெரேசம்மாள் இருந்தாள். அந்தச் சகோதரியை சந்தோஷப்படுத்துவது கடினமானதாக இருந்தது. ஆனாலும் தெரேசம்மாள் பொறுமையோடு அவளை எல்லா இடங்களுக்கும் கூட்டிச் சென்று, அவளுக்குப் பணிவிடைகள் செய்தாள்.



**(32)** தெரேசம்மாளுக்கு சக்ரீஸ்த் பொறுப்பாளர் வேலை எல்லா வற்றையும்விட அதிகமாக பிடித்திருந்தது. கோவிலுக்காக மலர் களை ஆயத்தம் செய்யும் வேலையையும் அவள் மிகவும் விரும்பினாள்.



**(33)** 1895-ம் வருடம் ஜனவரி மாதம் மடத்துத் தாயார் தெரேசம்மாளிடம், அவளுடைய குழந்தைப் பருவத்தைப்பற்றி எழுதும்படி அவளிடம் கூறினார்கள். இன்று, இந்த எழுத்துக்கள், ''ஓர் ஆன்மாவின் கதை'' என்று அழைக்கப்படுகிறது.

**(34)** 1894-ல் இருந்து தெரேசம்மாள் தொண்டைப் புண்க ளாலும், இருமலாலும் துன்பப்பட்டாள். 1896 பெரிய வியாழனன்று மாலையில், அவள் படுக்கையில் இருந்தபோது, அவளுடைய வாயிலிருந்து இரத்தம் வழிந்தது. தாயார் அது கடுமையான வியாதி என்று நினைக்கவில்லை. தெரேசம்மாள் முன்பு போல தன் வேலைகளைத் தொடர்ந்தாள். ஆனால் சீக்கிரத்தில் அவள் படுத்த படுக்கையானாள். தெரேசம்மாள் தன் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடிதான் தன் புத்தகத்தின் கடைசிப் பக்கங்களை எழுதினாள்.









**(35)** 1897 ஜூலை முதல் செப்டம்பர் வரை, தெரேசம்மாள் இரண்டு தடவைகளுக்கு மேல் திவ்விய நன்மை உட்கொள்ள முடியாதபடி அவளுடைய நோய் தடுத்தது. முதல் தடவை, 1897 ஜூலை 16, கார்மேல் மலை மாதா திருநாள் அன்று அவள் திவ்விய நன்மை உட்கொண்டாள். ஆகஸ்ட் 19 அன்று அவள் இரண்டாவது தடவையாகவும், கடைசித் தடவையாகவும் திவ்விய நன்மை உட்கொண்டாள். இந்தத் திவ்விய நன்மையை, பரிசுத்த வேதத்தை விட்டு விலகியிருந்த ஒரு பிரசித்திபெற்ற கத்தோலிக்கர் மனந் திரும்பும்படியாக அவள் ஒப்புக்கொடுத்தாள்.

**(36)** தனது கடைசி நாளன்று பிற்பகல் நான்கு மணிக்கு, தெரேசம்மாள் சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு அதிகமாக வியர்த்துக் கொண்டிருந்தது. அவள் நடுக்கத்துடன் காணப்பட்டாள். அனைத்து சகோதரிகளும் அழைக்கப்பட்டார்கள். தெரேசம்மாள் பாடுபட்ட சுரூபத்தை உற்று நோக்கி, ''நான் உம்மை நேசிக்கிறேன், என் தேவனே! நான் உம்மை நேசிக்கிறேன்!'' என்று கூறி மரணமடைந்தாள்.

அது 1897, செப்டம்பர் மாதம் 30-ம் தேதி மாலை 7.20 மணியாக இருந்தது.







**(37)** இப்போது தெரேசா தன் நித்திய சம்பாவனையை அனுபவித்த படி, மோட்சத்தில் இருக்கிறாள்.




**(38)** 1913-ஆம் ஆண்டு, இத்தாலி நாட்டிலுள்ள பார்மாவில் திரு இருதயத்தின் சிறிய சகோதரிகள் சபையைச் சேர்ந்த சகோதரி கேப்ரியேலா த்ரிமுஸி என்பவளுக்கு இடது முழங்காலில் வந்த வலியை மருத்துவர்கள் எவ்வளவு முயன்றும் குணப்படுத்த முடியவில்லை. சபையின் பரிபாலகரான குருவானவர், அர்ச்சிஷ்ட குழந்தை சேசுவின் தெரேசம்மாளிடம் ஜெபிக்கும்படி அவளுக்கு அறிவுரை கூறவே, சகோதரிகள் ஒரு நவநாளைத் தொடங்கினர். நவநாளின் இறுதிநாளன்று, அவள் கார்மேல் கோவிலில் அற்புத மாகக் குணமாக்கப்பட்டாள்.

**(39)** தெரேசம்மாளுக்கு அர்ச்சிஷ்ட பட்டம் வழங்குவதற்காக, அவளுடைய வாழ்க்கை பற்றிய ஆய்வு 1914 ஜூன் 9 அன்று தொடங்கியது. பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர், 1925 மே 17 அன்று அர்ச். இராயப்பர் தேவாலயத்தில் அவளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் வழங்கினார். அவள் நமக்கு ஒரு முன்மாதிரிகையாக இருக்கிறாள். நம் தேவைகளில் நமக்கு உதவக் கூடியவளாக இருக்கிறாள்.

**(முற்றிற்று)**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

## ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த இராக்கினியே
### எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !



சர்வேசுரன் தமது தாசர்களின் பொருட்டு எவ்வளவோ அற்புதங்களைச் செய்து இருக்கிறார்; செய்துகொண்டும் வருகிறார். ஆனால் இதுவரை யாருக்குமே அளிக்கப்படாத ஒரு ஒப்பற்ற வரத்தை, பாக்கியத்தை, ஏன், ஒரு அற்புத உரிமையைத் தமது பரிசுத்த மாதாவுக்கு மாத்திரமே அளித்து இருக்கிறார். அதுதான் ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்துப் பிறக்கும் பாக்கியம். சிருஷ்டிகளுள் அற்புதமான சிருஷ்டி அர்ச். கன்னிமரியம்மாள். ஜென்மப் பாவத் தோடு பிறந்த பெற்றோர்களிடமிருந்து ஜென்மப்பாவமில்லாமல் பிறக்கிறார்கள் நம் பரிசுத்த தேவமாதா. இதனால்தான் அர்ச். தமாசீன் அருளப்பர்: "ஓ, மரியாயே, நீர் அலங்கிருத அற்புத சிருஷ்டி!" என வியந்துரைக்கிறார். ஆம், ஜென்மப் பாவம் இல்லாமல் உற்பவித்த மாமரி உண்மையிலேயே அற்புதமானவர்கள்தான்.

**ஜென்மப்பாவம் என்றால் என்ன?**

மனுக்குலத்தில் ஆதிப் பெற்றோராகிய ஆதாம், ஏவாளை சர்வேசுரன் பரிசுத்தமும், பாக்கியமுமான அந்தஸ்தில் உண்டாக்கி, அவர்களை சுபாவத்திற்கு மேலான அந்தஸ்திற்கு *(Supernatural order)* உயர்த்தி, ஆச்சரியத்திற்குரிய வரங்களால் அலங்கரித்து இருந்தார். சர்வேசுரன் ஆதாமுக்குக் கொடுத்த வரங்களுள் முதன்மையானது தேவ இஷ்டப்பிரசாதம். அதோடு விசேஷ அறிவு, ஆசாபாசமின்மை, சாகாமை, பாடுபடாமை, வியாதியின்மை முதலிய வரங்களையும் அளித்திருந்தார். இவற்றால் அவர்களுடைய ஆத்துமம் கடவுளுக்கு முற்றிலும் அமைந்திருந்தது. அதுபோலவே அவர்களுடைய சரீரமும் ஆத்துமத்திற்கு எல்லாவற்றிலும் கட்டுப்பட்டு இருந்தது. ஆதாமிடமிருந்து உதிப்பவர்கள் எல்லோரும் இந்த வரங்களோடு ஜென்மிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இவைகளைச் சர்வேசுரன் ஆதாமுக்குத் தந்தார். ஆதித்தாயும், ஆதித்தகப்பனும் இந்தப் பாக்கியமான அந்தஸ்தில் நிலைத்திருந் திருந்தால், மரணமின்றி ஏதேன் தோட்டத்திலிருந்து நித்திய மோட்ச பாக்கியத்திற்கு நேரே சென்றிருப்பார்கள். ஆனால் நடந்தது என்ன? மனுக்குலத்தின் தந்தையாகிய ஆதாம், பசாசை நம்பி, தேவ கட்டளையை மீறி, விலக்கப்பட்ட கனியைத் தின்று பாவம் கட்டிக்கொண்டார். இதுதான் "**ஆதிப் பாவம்**" அதாவது ஆதியிலே செய்யப்பட்ட பாவம் *(Original sin)* எனப்படும். இப்பாவத்தால் சர்வேசுரன் தங்களுக்கு இலவசமாய் அளித்திருந்த அத்தனை வரங்களையும், கொடைகளையும் ஒருங்கே ஒரு நொடிப் பொழுதில் இழந்து விட்டனர்.

பெற்றோரின் தொற்றுநோய் பிள்ளைகளைத் தாயின் உதரத்திலேயே பிடிப்பது போன்று அவர்கள் கட்டிக்கொண்ட பாவமும், அப்பாவத்தின் காரணமாய் ஏற்பட்ட சாபங்களும் அவர்களின் மக்களாகிய நம் ஒவ்வொருவரையும், நாம் நமது தாயின் உதரத்தில் உற்பவிக்கும் கணத்திலேயே பீடிக்கின்றன. அத்துடன் நாம் இவ்வுலகில் பிறக்கிறோம். இதனால்தான் இது **ஜென்மப் பாவமென்று** சொல்லப்படுகிறது. (ஜென்மம் = பிறப்பு; ஜென்மப் பாவம் = நாம் பிறக்கும் போது நம்மோடு கூடப் பிறக்கிற பாவம்).

**தேவதாயின் அமலோற்பவம்**

எனினும் இந்தச் சட்டம் ஒரேயொரு புண்ணியவதியைமட்டும் பாதிக்கவில்லை அவர்கள்தான் மாசணுகாத அமலோற்பவ கன்னிமாமரி. சர்வேசுரனுடைய விசேஷ உதவியினால், தாயின் உதரத்தில் தோன்றிய கணத்திலேயே ஜென்மப் பாவமின்றி காப்பாற்றப்படுகிறார்கள். ஆதலால்தான் அவர்களை "**அமலோற்பவ மாதா**" என்று அழைக்கிறோம். அர்ச்சியசிஷ்டவர்கள் எல்லோரும் பாவத்தோடு உற்பவித்து, பாவத்தோடு பிறக்கிறார்கள். ஆனால் நமது தேவ அன்னையோ, தனது தாயின் உதரத்தில் தோன்றிய கணத்திலிருந்தே சகல வரங்களாலும் புண்ணியங்களாலும் நிரப்பப்பெற்றுப் பிறக்கிறார்கள். ஆதலால்தான் கபிரியேல் சம்மனசானவர் தேவமாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னபோது, "அருள் நிறைந்த மரியாயே வாழ்க!" என்று வாழ்த்துகிறார்.

பரிசுத்த மாமரி ஜென்மப்பாவமின்றி உற்பவித்தார்கள் என்று சொல்லும்போது நமதாண்டவரைப் போன்று அற்புத மாய்ப் பிறந்தார்கள் என்று சிலர் தவறாக நினைக்கின்றனர். நமதாண்டவர் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனின் வல்ல மையால், பூலோக தந்தையின் உதவியில்லாமல் அற்புதமாகத் தன் தாயின் உதரத்தில் கருத்தரிக்கப்பட்டுப் பிறந்தார். ஆனால் நம் தேவமாதாவுக்கோ பூலோகத் தந்தையும், தாயும் இருந்தனர். அவர்கள்தான் அர்ச். சுவக்கீனும் அர்ச். அன்னம் மாளும். தேவ தாய் நம்மெல்லோரையும் போலவே தாயின் வயிற்றில் கருத்தரிக்கப்பட்டார்கள். எனினும் நமக்கும் பரலோக மாதாவுக்கும் பாரதூர வித்தியாசம் உண்டு. ஏற்கனவே காண்பிக்கப்பட்டதுபோல் நாமெல்லோரும் பாவத்திலே கருத்தரிக்கப்பட்டு, ஜென்மப் பாவத்தோடு பிறக் கிறோம். ஞானஸ்நானம் பெறும்போது ஜென்மப் பாவத்தி னின்று கழுவப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாகிறோம். எனினும் ஜென்மப் பாவத்தின் விளைவான ஆசாபாசங்களும் சோதனை போராட்டங்களும் நம்மிடமிருந்து அகற்றப்படுவ தில்லை. ஆனால் தேவ அன்னையோ தமது உற்பவத்தின் முதற்கண நேரத்திலேயே, ஜென்மப் பாவமின்றி காப்பாற்றப் பட்டு தேவ இஷ்டப்பிரசாதத்தை அடைந்தார்கள். பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள்.

பரிசுத்த கன்னிமாமரியின் அமலோற்பவத்தை எண்பிக்கப் போதிய சான்றுகள் வேதாகமத்தில் உள்ளன. "(ஓ மரியாயே!) நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதே கிடையா" (உந். சங். 4:7). "இதோ கன்னியானவள் கர்ப்பமாகி மகவைப் பெறுவாள்; அது மனுவேலன் என்னும் அபிதானம் பெறும்" (இசை. 7:14). இக்கன்னிகைதான் பசாசின் தலையை நசுக்க வந்த "ஜீவியத்தின் குமாரத்தி." சர்வேசுரன் துஷ்டப் பசாசைப் பார்த்து, "உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்; அவள் உன் தலையை நசுக்குவாள்" என்றார் (ஆதி. 3:15). இந்த ஸ்திரீ அமலோற்பவ கன்னிமாதாவேயன்றி வேறல்ல.

### திருச்சபையின் போதனை

பரிசுத்த கன்னிகை ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்தார்கள். என்ற சத்தியம் 9-வது பத்திநாதரென்ற பாப்பானவரால் 1854-ம் வருஷம் விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இவ்வுண்மையை அறிந்துதான் விசுவாசிகளும், வேத சாஸ்திரிகளும் திருச்சபை உண்டான காலத்திலிருந்தே நமது பரிசுத்த அன்னையை "**ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த இராக்கினி**" என்றும், "**அமலோற்பவ மாதா**" என்றும் அழைத்துவந்தனர்.

அர்ச். ஜுஸ்தின், தெர்துலியன், அர்ச். இரனேயுஸ், ஆரிஜன் முதலிய பெரிய வேதசாஸ்திரிகள் தாங்கள் இயற்றித் தந்த பெரிய நூல்களில் இவ்வுண்மையை நன்கு விளக்கு கிறார்கள். நான்காம் நூற்றாண்டில் அர்ச். எஃப்ரேம் என்ற வேதபாரகர் சொல்லுகிறதாவது: "மெய்யாகவே ஆண்டவரே, தேவரீரும், உமது திருமாதாவும்தான் எவ்விதத்திலும் முற்றும் அழகுவாய்ந்து விளங்குகின்றீர்கள். ஏனெனில் ஆண்டவரே, உம்மிடம் யாதொரு குறைவுமில்லை. அப்படியே உமது மாதாவிடமும் யாதொரு பாவக் கறையுமில்லை." இவருக்குப் பிறகு தோன்றின அர்ச். அகுஸ்தீன், அர்ச். எரோணிமுஸ், அர்ச். அம்புரோசியார் போன்ற பெரிய வேத சாஸ்திரிகள் இவ்வுண்மையை விஸ்தாரமாக விளக்கிக் காட்டுகின்றனர்.

கி.பி. 5-ம் நூற்றாண்டிலிருந்தே அமலோற்பவ மாதாவின் திருநாளை விசுவாசிகள் சிறப்பாகக் கீழ் நாட்டினர் *(Eastern Church)* கொண்டாடி வந்துள்ளனர். ஐந்தாம் நூற்றாண்டில் திருச்சபையைவிட்டுப் பிரிந்துபோன பிரிவினை சபைகளிலிருந்து வந்த கிறீஸ்தவர்களும் இத்திருநாளைக் கொண்டாடி வந்தனர். 1000 ஆண்டளவாக இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களில் இத்திருநாள் வழக்கத்திலிருந்து வருகிறது. ஆதலின், தேவதாயார் ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்தார்கள் என்ற உண்மை திருச்சபை யால் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதல்ல.

தேவமாதாவின் அமல உற்பவத்தைத் திருச்சபை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்த 4 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1858-ம் வருஷம் தேவமாதா தானே பிரான்ஸ் தேசத்தில் லூர்து நகரில் மசபியேல் கெபியில் பெர்னதெத் என்ற பெண்ணுக்குக் காட்சியளித்து, "**நாமே அமலோற்பவம்**" என்று மொழிந்தார்கள்.

### தேவதாய் அமலோற்பவி ஏன்?

ஏன் சர்வேசுரன் நமது தேவமாதாவை பாவமாசு சிறிதேனும் அணுகாமல் சிருஷ்டித்து, சகல தேவ வரங்களால் அவர்களை நிரப்ப வேண்டும்? எல்லாம் வல்ல சர்வேசுரன் ஏதாவதொன்றை சிருஷ்டிக்கும்போது ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் சிருஷ்டிக்கிறார். உலகில் வெளிச்சத்தையும், செடி கொடிகள் தழைத்து வளர்வதற்கான சக்தியையும் கொடுப்பதற்காக சூரியனை உண்டாக்கினார். ஆகாயத்தில் பறக்கும் பறவைகளுக்குச் சிறகுகளைக் கொடுத்திருக்கிறார். மனிதனுக்குப் பகுத்தறிவையும், அழியாத ஆன்மாவையும் அளித்திருக்கிறார். நாமும் ஒரு காரியத்தைச் செய்யும்போது ஆழ்ந்து யோசித்து ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் செய்கிறோம். நம்மெல்லோரையும் உண்டாக்கியது போல் சர்வேசுரன் மாமரியை உண்டாக்கவில்லை. மாமரிக்கு ஒரு விசேஷ கடமையும் அலுவலும் இருந்தது. அதுதான் சர்வ வல்லப சர்வேசுரனுக்குத் தாயாகும் ஓர் ஒப்புயர்வற்ற தனிப் பாக்கியம். பாவத்தில் உழலும் ஒரு சிருஷ்டி தூய சர்வேசுரனின் தாயாக இருக்க முடியுமோ? மோட்சத்தில் கோடானகோடி சம்மனசுக்களும், அர்ச்சியசிஷ்டவர்களும், "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று ஆராதிக்கும் கடவுளுக்கு நம்மைப் போன்ற ஒரு மாது தாயாக இருக்க முடியுமோ? சர்வேசுரன் சமுகத்தில் சம்மனசுக்கள் முதலாய் அஞ்சி நடுநடுங்குகிறார் களே; அத்தகைய தூய தேவனை சீராட்டித் தாலாட்டி, அமுதூட்டி வளர்த்த ஒரு புண்ணிய ஸ்திரீ மற்ற பெண்களைப் போன்று ஒரு பாவியாக இருக்க முடியுமோ? சிலுவை மரத் தடியில் நின்று தமது குமாரன் மூலமாய், நம்மெல்லோரையும் பசாசின் அடிமைத்தனத்தினின்றும் மீட்டு மனுக்குலம் முழுவதற்குமே இரட்சண்யம் பெற்றுத் தந்து நமக்காகப் பரிந்து பேசும் இப்புனித அன்னை நம்மைப் போல பாவ ஆசாபாசங்களில் கட்டுண்டு கிடக்க முடியுமோ?

பிதாவாகிய சர்வேசுரனின் நேச குமாரத்தியாகவும், சுதனாகிய சர்வேசுரனின் அன்புள்ள தாயாகவும், இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனின் பிரிய பத்தினியாகவும் விளங்கிய மாசில்லா மாமரி நம்மைப் போல் பாவச் சகதியில் புரளுவது நியாயமாகுமோ? பசாசின் தலையை நசுக்கின நம் பரிசுத்த மாதா பாவத்தினால் பசாசுக்கு ஒரு நிமிஷமாவது அடிமை யாவது கூடுமோ? கூடாது! கூடாது!!

“மரியாயே! நீர் முற்றிலும் சௌந்தரியம் உள்ளவர். ஜென்ம மாசு அற்பமேனும் இல்லாத் தூய செல்வி நீர். அம்மா! ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அமலோற்பவ நாயகியே, நாங்கள் எல்லோரும் கண்ணீர்க் கணவாயாகிய இப்பூலோகத்தில் சோதனை சஞ்சலங்களாலும் தாக்கப்பட்டுப் பாவச் சேற்றிலும் உழலுகிறோம். எங்களைக் கைதூக்கி இரட்சியும் மாதாவே!”

**ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த இராக்கினியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !**

# பாரம்பரியத்தின் நிருபணம்

திருச்சபையின் தொடக்கக் காலத்திலிருந்து இந்த வேத சத்தியத்தில் தெளிவான நம்பிக்கை இருந்ததா இல்லையா என்று தீர்மானிக்கக் காரண காரிய விவாதம் தேவையில்லை. மாறாக, இவ்வுண்மை பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும் வரலாற்று ஆதாரங்களை உற்று நோக்கினாலே போதும். தத்துவ முதுரைப்படி (axiom) உண்மையின் இறுதி உரைகல், மெய்யான புறப்பொருள் சான்றுதான். திருச்சபையின் முடிவையும் இத்துடன் இணைத்து, எவ்வுண்மை சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.



**எபேசுஸ் சங்க (கி.மு. 431.) போதனை:**
**ஏவாளுக்கும் மாதாவுக்கும் இடையிலான ஒப்புமை**
*(Parrallelism)*

இவ்வொப்புமை, ஒற்றுமை, வேற்றுமை என்ற இருவித ஒப்பிடுதலைக் கொண்டுள்ளது. ஏவாளும் கன்னி மரியாயும் கடவுளின் கரங்களிலிருந்து வருகையில் மாசற்றவர்களாயிருந்தனர். இருவரும் முழு நிறைவுடன் எவ்வித சிதைவின்றி கன்னியாயிருந்தனர். இது அவர்களுடைய ஒற்றுமை.

அவர்களுடைய வேற்றுமை எதில் அடங்கியுள்ளதென்றால், ஏவாள் தன் கீழ்ப்படியாமையாலும் ஆங்காரத்தாலும் மனித இனத்தினுடைய வீழ்ச்சியின் கருவியானாள். மரியாயோ தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிதலாலும், தம் தாழ்ச்சியாலும், மீட்பரின் தாயாகி உலக மீட்புக்கு உதவத் தகுதியானார்கள்.

இம்முரணிசைவை (antithesis) முதலில் உபயோகித்தவர் அர்ச். ஜஸ்டின் (100–167) : எவ்வித கேடுமின்றி, கன்னியாயிருந்தபோதே ஏவாள் பாம்பின் வார்த்தைகளைத் தன் உள்ளத்தில் ஏற்று, அதன்மூலம் கீழ்ப்படியாமையையும் சாவையும் பிறப்பித்தாள். கன்னியான மரியாயோ, தன் ஆன்மா விசுவாசத்தாலும் மகிழ்ச்சியாலும் நிறைந்திருக்க, மகிழ்ச்சிகரமான நற்செய்தியைத் தனக்கு கொண்டுவந்த கபிரியேல் தூதுவரிடம், உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் என்று பதிலிறுத்தார்கள். அவர்களிடமிருந்து, வேதாகமத்தில் உலக இரட்சகரான மெசியா பிறந்தார்.

இதே போன்ற வாசகங்கள் அர்ச். இரேனேயுஸ் (130–202) மற்றும் தெர்த்துல்லியன் (160–240) முதலானோரின் எழுத்துக்களிலும் காணக்கிடக்கின்றன.

# மோட்ச ஆரோபணம்

**பன்னிரண்டாம் பத்திநாதர் இயற்றிய ஜெபம்**

மதுரை, தே நொபிலி அச்சகத்தில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தினின்று எடுக்கப்பட்டது

“அமலோற்பவக் கன்னிகையே, சர்வேசுரனுடைய மாதாவே, மனுக்குலத்தின் தாயாரே, நீர் ஆத்தும சரீரத்தோடு ஜெயசீலியாய் பரலோகத்திற்கு எழுந்தருளி, அங்கே சம்மனசுக்களாலும் அர்ச்சியசிஷ்டவர்க ளாலும் இராக்கினியாகக் கொண்டாடப்பட்டு வருகிறீரென்று நாங்கள் பூரண பக்திப் பற்றுதலோடு விசுவசிக்கிறோம். அந்தப் பரலோகவாசிகளோடு நாங்களும் பரிசுத்தவான்கள் அனைவ ருக்கும் மேலான இந்த மகிமையை உமக்குத் தந்தருளின சர்வேசுரனை வாழ்த்தி ஸ்தோத்தரித்து, எங்களுடைய பக்திப் பற்றுதல்களாகிற காணிக்கையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.”



உலகிலிருந்தபோது, நீர் தாழ்மைக்கும், துன்ப துயரங்களுக்கும் உள்ளாயிருந்த சேசுநாதரின் மனுஷீகத் தைப் பராமரித்து வந்தீரே; இப்போது பரலோகத்தில் மகிமைப் பிரதாபத் தோடு விளங்கும் அந்த மனுஷீகத்தின் தரிசனையாலும், நித்திய ஞானத்தின் காட்சியாலும், ஆராதனைக்குரிய பரம திரித்துவத்தை முகமுகமாய்க் கண்டு ஆனந்திக்கும் பாக்கியத்தி னாலும் உமது இருதயம் பரிபூரண சிநேக ஆனந்தத்தால் நிரப்பப்பட்டு இருக்கிறதே!

ஆத்துமத்தின் உயர்ந்த ஆசைகளுக்குத் தடங்கலாய் இருக்கும் இந்த சரீரத்தைக் கொண்ட எங்கள் இருதயத்தை நீர் பரிசுத்தப்படுத்தி, அதனால் நாங்கள் உலகிலிருக்குமளவும், சிருஷ்டிப் பொருட்களின் வழியாய் சர்வேசுரனையே காணும் வரத்தை எங்களுக்கு அளித்தருளும்படி உம்மை மன்றாடு கிறோம்.

எங்கள் துன்ப துயரங்களிலும், சோதனை பலவீனத் திலும், எங்கள்மீது உமது கருணைக் கண்களைத் திருப்பி, எங்கள் வெற்றி சந்தோஷங்களில் அன்போடு எங்களை நோக்கி யருள்வீரென்று நம்புகிறோம். ஒருநாள் சேசுநாதர் தமது நேச சீஷனைப் பார்த்து, “இதோ உன் தாய்” என்று சொன்ன அதே வார்த்தைகளை இப்போது எங்களைப் பார்த்தும் அவர் சொல்லுவதை நீர் கேட்டருள்வீர் என்றும் நம்புகிறோம். ஆகையால் உம்மைத் தாயே என்று அழைக்கப் பாக்கியம் பெற்ற நாங்களும், அருளப்பரைப்போல, அழிந்துபோகிற உலக ஜீவியத்தில், உம்மை எங்களுக்கு வழிகாட்டியாகவும், துணையாகவும், ஆறுலாகவும் கொண்டிருக்கக் கிருபை செய்தருளும்.

சேசுநாதருடைய திரு இரத்தத்தால் தோயப்பட்ட இந்தப் பூமியை நோக்கி அழுத உமது திருக்கண்களால், இப்போது யுத்தங்களாலும், கலாபனைகளாலும், நல்லவர் களுக்கும் பலவீனர்களுக்கும் செய்யும் இம்சைகளாலும் பீடிக்கப்பட்டு நிற்கும் இவ்வுலகத்தையும் கிருபையோடு நோக்கியருள்வீர் என்ற நம்பிக்கையால் மனந்தேறி நிற்கிறோம். கண்ணீர் கணவாயாகிய இந்த உலகத்தின் இருளில் நின்றுகொண்டு, உமது பரலோக சகாயங்களினாலும், உருக்க முள்ள இரக்கத்தினாலும் எங்களுக்கு ஆறுதலும், திருச்சபைக்கும் எங்கள் தாய்நாட்டிற்கும் சோதனைகளில் சகாயமும், உமது பரலோக நன்கொடை களாலும் உருக்கமுள்ள இரக்கத்தினால் எங்களுக்கு அநுக்கிரகமும் செய்தருளும் படி உம்மை மன்றாடுகிறோம்.

கடைசியாய், சூரியனை ஆடையா கவும், சந்திரனைக் கிரீடமாகவும் தரித்து, நீர் அரசாட்சி புரியும் அந்தப் பரலோக இராச்சியத்தில், சேசு கிறீஸ்துநாதருக்குப் பிறகு, சகல சம்மனசுகளுக்கும், அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் ஆனந்த பாக்கியமுமாயிருக்கிறீர் என்று விசுவசித்து, இந்த உலகில் பரதேசிகளாக ஜீவித்துவரும் நாங்களும், மாமிச உத்தானத்தின்மீது எங்களுக்குள்ள நம்பிக்கையால் உம்மையே எங்கள் ஜீவியமும், மதுரமும், நம்பிக்கையுமாகக் கருதுகிறோம்.

சாந்தமும், அன்பும், மதுரமும் நிறைந்த கன்னி மரியாயே, உமது திருவாய் மலர்ந்து எங்களை உமதருகில் அழைத்து, ஒருநாள் எங்கள் பரதேச வாழ்வு முடியும்போது, எங்களை உமது திரு உதரத்தின் கனியாகிய சேசுவிடம் கூட்டிச் சேர்த்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம் தாயே. ஆமென்.

# தாகமாயிருக்கிறேன்!


**சேசுவின் திரு இருதயத்திற்கு ஆத்தும இரட்சண்யத்தின் பேரிலுள்ள ஆவலை நாமும் கண்டுபாவிக்கத் தூண்டும் கட்டுரை.**

நன்றி: திரு இருதய தூதன்

மனிதன் சர்வேசுரனை வணங்கி நேசித்து சேவித்து தமது ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்வது மனித ஜீவியத்தின் ஏக கதி. மனிதரெல்லோரும் மோட்ச பாக்கியம் அடைய வேண்டுமென்பது சர்வேசுரனுடைய விருப்பம். ஆனால் "**உன்னையின்றி உன்னைப் படைத்த சர்வேசுரன் உன்னையின்றி உன்னை இரட்சிக்கமாட்டார்**" என்று வேதசாஸ்திரியாகிய அர்ச். அகுஸ்தீனார் எச்சரித்து இருக்கிறார். சர்வேசுரன் உன்னை சிருஷ்டிக்கும்முன் உன் சம்மதத்தைக் கேட்கவில்லை; ஆனால் உன்னுடைய சம்மதமின்றி உன்னை மோட்ச கரை சேர்க்கமாட்டார் என்பதே இதன் கருத்து. மனிதன் சுயமனதுள்ளவனாகையால் தனது கதியாகிய மோட்ச பாக்கியத்தை அடைவதற்கு அவனுடைய சொந்தப் பிரயாசையும் அவசியம் என்று அர்ச். அகுஸ்தீனார் இதனால் வற்புறுத்திக் கூறுகிறார்.

### ஆத்தும இரட்சண்யமே இறுதி கதி

மோட்சபாக்கியமானது மனித சுபாவத்திற்கு மேலான நன்கொடை. ஆனதால் மனிதன் தனது சொந்த சுபாவ பலத்தை கொண்டு மாத்திரம் மோட்ச கரை ஏறுவது முடியாத காரியம். சர்வேசுரனுடைய விசேஷ உதவி அத்தியாவசியம். "என்னையின்றி உங்களால் யாதொன்றும் செய்ய முடியாது" (அரு. 15:5). நல்ல மனதுடன் பிரயாசைப்படுகிறவர்களுக்கு சர்வேசுரன் தமது உன்னத உதவியை கொடுக்க ஒருபோதும் மறுப்பதில்லை. சரியாய்ச் சொல்ல வேண்டுமானால், ஒவ்வொரு மனிதனும் தனது ஆத்துமத்தை இரட்சித்துக் கொள்ள அவசியமான தேவ வரங்களை எப்போதும் தந்தருளுகிறார்.



எவ்வளவுக்கு இந்த தேவவரங்கள் மோட்சத்தினின்று இறங்கி வந்து மானிடர் இருதயத்தை நிரப்புகின்றனவோ அவ்வளவுக்கு அநேக ஆத்துமங்கள் இரட்சண்யமடைவார்கள். தேவ வரப்பிரசாதம் பரலோகத்தினின்று இறங்கிவந்து ஏராளமாய் மானிடர் இருதயத்தில் பொழியச்செய்ய ஏற்ற சாதனங்கள் ஜெபதபம், நற்கிரிகை, தேவதிரவிய அநுமானங்கள் முதலானவைகளாம். இவ்வுலகில் உயிர்வாழும் திருச்சபையின் மக்களாகிய 35 கோடி கத்தோலிக்க கிறீஸ்தவர்களும் தங்களுடைய ஜெபதபம் முதலிய நற்கிரிகைகளினால் தேவ வரப்பிரசாத மழை தாராளமாய் ஆத்துமங்களின்மீது பொழியும்படி செய்தால், உலக முழுவதிலும் சேசு இராஜாவின் பரிசுத்த செங்கோல் வெகு சீக்கிரம் ஸ்தாபிக்கப்படும். சகல மனிதரும் உலக மீட்பரின் ஜெயவிருதைக் கையிலேந்தி சத்திய திருச்சபையின் பக்தியுள்ள மக்களாய் சமாதானத்துடன் வாழ்வார்கள்.

### சேசுவின் திரு இருதயத்தின் ஆவல்

உலகிலுள்ள சகல மனிதரும் தமது பிள்ளைகளாகி, ஆத்தும ஈடேற்றமடைய வேண்டும் என்பதே நமது திவ்விய கர்த்தரின் ஆவல். திவ்விய சேசுவின் திரு இருதயத்தில் பற்றியெரியும் இந்த ஆவலை, விசுவாசிகள் அனைவரும், முக்கியமாய் ஜெப அப்போஸ்தல சபை அங்கத்தினரும், கண்டுபாவிக்க கடமைப்பட்டிருக்கின்றனர். ஏனெனில், திரு இருதயத்தைப் போல ஆத்தும இரட்சண்யத்தின்மீது அவ்வளவு ஆவல்கொண்ட இருதயம் வேறில்லை. திரு இருதயத்தைப் போல் நமது இருதயத்தில் ஆத்தும இரட்சண்ய ஆவலை உற்பத்தியாக்கி, வளர்த்து அதிகரிக்கச்செய்ய வல்லமையுள்ள இருதயம் வேறெதுவுமில்லை. ஆத்தும இரட்சண்ய அலுவல் உள்ளவர்களுக்குத் திரளான ஞான நன்மைகளைத் தந்தருள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கும் இருதயம் சேசுவின் திரு இருதயம் ஒன்றே. திரு இருயதப் பக்தி வணக்கம் முழுவதும் சேசுவின் திரு இருதயத்திற்கு

ஆத்தும இரட்சண்யத்தின் பேரிலுள்ள ஆவலில் ஊன்றியிருக்கிறதென்று மெய்யாகவே சொல்லலாம்.

திவ்விய சேசுவின் திரு இருதயமானது சகல புண்ணியங்களும் நிறையப்பெற்ற பூரண பொக்கிஷம். இந்தப் புண்ணியங்களுள் மிக்க சிறப்புற்றதும் யாவராலும் போற்றப் பட்டதுமான புண்ணியம்: **திரு இருதயத்திற்கு ஆத்தும இரட்சண்யத்தின்மீதுள்ள ஆவல்.** அதாவது, சகல ஆத்துமங்களையும் மனந்திருப்பி, உன்னத நன்கொடைகளால் நிரப்பி, மோட்சானந்த பேரின்ப வீட்டிற்கு அழைத்துச்செல்ல வேண்டுமென்கிற ஆவல் திரு இருதயத்தில் நிறைந்து சம்பூரணமாய் இருந்தது. "உமது வீட்டின்மேல் எனக்குள்ள ஆவல் என்னைப் பட்சித்தது" (அரு. 2:17) என்று நமது திவ்விய இரட்சகரைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. இந்த ஆவலானது அக்கினிக்குச் சமானம். தன்னைச் சுற்றியிருக்கும் சகலத்தையும் பற்றியெரிய செய்வது அக்கினியின் குணம். திரு இருதயத்தில் பற்றியெரியும் ஆத்தும் இரட்சண்ய ஆவலாகிய அக்கினி உலகமெத்திசையிலும் பரவக்கூடிய அக்கினி; மனிதர்களின் இருதயங்களில் பரிசுத்த சிநேகத்தை மூட்டக்கூடிய அக்கினி. "நான் பூமியில் அக்கினியைப் போடவந்தேன்; அது பற்றியெரிய வேண்டும் என்பதல்லாதே,வேறென்னத்தை விரும்புகிறேன்" (லூக். 12:49) என்று நமதாண்டவர் கேட்கிறார். ஆத்தும இரட்சண்ய ஆவலுக்கு ஊற்றும் மத்திய ஸ்தானமுமாயிருப்பது பரிசுத்த சிநேகம் நிறைந்த இருதயம். சேசுவின் திரு இருதயமோ சிநேக அக்கினி சுவாலைத்தெரியும் சூளை. சகல இருதயங்களுக்கும் அரசும் மூலஸ்தானமுமாய் இருப்பது சேசுவின் திவ்விய இருதயமே. நமதாண்டவர் பிறந்த மாட்டுக்கொட்டிலிலும் அவர் தமது உயிரை நமக்காக பலியிட்ட திருச்சிலுவையிலும், மானிடருக்கு ஆறுதலாக மறைந்த ஜீவியம் ஜீவிக்கும் தேவநற்கருணைப் பேழையிலும், மகிமைப்பிரதாபத்தோடு பரம பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் மோட்ச சிம்மாசனத்திலும், எவ்விடத்திலும், எக்காலத்திலும், நமது திவ்விய கர்த்தரின் திரு இருதயம் சிநேக அக்கினி சுவாலை விட்டு எரிந்துகொண்டே இருக்கிறது. சம்பூரண சிநேகம் நிறைந்த இந்த இருதயம் மானிடர்பேரில் அணைகடந்த அன்புள்ள இருதயம் என்பது சுவிசேஷத்தை வாசிப்பவர்கள் அனைவரும் எளிதாய்க் கண்டுகொள்வார்கள்.

### சேசுவின் தேவசிநேகமும், பிறர்சிநேகமும்

தேவசிநேகமும் பிறர்சிநேகமும் பூரணமாயுள்ள இருதயமே அதி உத்தம இருதயம். நமது தேவ இரட்சகரிடம் இவ்விரு சிநேகமும் மகா மகத்துவ பிரதாபத்துடன் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கிறது. திவ்விய சுதன் தமது பரம பிதாவை அத்தியந்த சிநேகத்தோடு சிநேகித்து அவர் சித்தப்பிரகாரம் எப்போதும் நடந்துவந்தார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே தமது ஆனந்தமும் ஆறுதலும் என்கிறார். நமதாண்டவர் இவ்வுலகில் ஜீவித்த 33 ஆண்டளவும் அவர் செய்தருளிய ஒவ்வொரு கிரிகைக்கும் பரமபிதாவின் திருச்சித்தமே ஆதியும் அந்தமும், அளவும் ஒழுங்கும், கதியும் கருத்துமாயிருந்தது. தமது பிதாவுக்கு மரணபரியந்தம் கீழ்ப்படிந்து நடக்கிறார். தமது மகிமையைத் தேடாமல் தேவ பிதாவின் மகிமையையே தேடுகிறார். தம்மை இவ்வுலகிற்கு அனுப்பியவர் தமது பரம பிதா எனப் பிரஸ்தாபிக்கிறார். தாம் போதிக்கும் உன்னத சத்தியங்கள் பரலோக பிதாவின் போதகம். தாம் செய்யும் புதுமைகள் பிதாவின் அலுவல்கள். இவ்வாறு தேவசிநேகம் திவ்விய இரட்சகரிடம் ஒளிவிட்டுப் பிரகாசித்ததென்பதற்கு சுவிசேஷமே நிச்சயமான அத்தாட்சி.

தேவசிநேகமும் பிறர்சிநேகமும் இணைபிரியாத இரு சிநேகங்கள். எங்கே தேவசிநேகமிருக்கிறதோ அங்கே பிறர் சிநேகமும் இருக்கும். சர்வேசுரனை சிநேகிக்கும் இருதயம் பிறரையும் அவருக்காக, அவர் நிமித்தம் சிநேகிக்கும். தமது பிதாவை அத்தியந்த விதமாய்ச் சிநேகித்த நமதாண்டவர் நம்மையும் அத்தியந்த விதமாய்ச் சிநேகிக்கிறார். திவ்விய சேசு சர்வேசுரனாயிருந்தும் எவருமறியாத பரம ஏழையாய்ப் பிறந்து, குளிரிலும் வெயிலிலும் வேதனைப்பட்டு, தமது சிருஷ்டிகளுக்குக் கீழ்ப்படிந்து முப்பது வருடகாலம் மறைந்த ஜீவியம் ஜீவித்ததிற்குக் காரணம் நமதுபேரில் அவருக்குள்ள சிநேகமே. மனுக்குல முழுவதையும் இரட்சிப்பதற்கு மனிதாவதாரம் எடுத்த தேவசுதனின் ஒரு கண்ணீர்த் துளி, ஒரேயொரு நற்கிரிகை, ஒரு பெருமூச்சு போதுமானதாயிருந்திருக்கும். ஆயினும் கொடிய யூதர் தமது திருச்சரீரத்தைப் பிடித்துக் கட்டி கசையினால் அடிக்கவும், தமது திருச் சிரசில் முள்முடி சூட்டவும், பரிகாச இராஜாவாக பட்டணப்பிரவேசமாய் நடத்தவும், பாரச் சிலுவையைத் தோளில் சுமத்தவும், கல்வாரி மலையில் சிலுவையிலறைந்து கொல்லவும் தம்மைக் கையளித்ததிற்குக் காரணம் அவருக்கு நமதுபேரிலுள்ள அணைகடந்த சிநேகமே.

### நமது பேரில் சேசுவின் அன்பு

தமது திருச் சிநேகத்தின் இவ்வளவு அரிய அத்தாட்சி போதாதென்றாற்போல், தமது திருச்சபையை ஸ்தாபித்து, தம்மையே நமது அநுதின ஆகாரமாக அளித்து, தமது பரிசுத்த மாதாவை நமது பட்சமுள்ள தாயாகக் கொடுத்து, நமக்காகத் தமது பரிசுத்த பிதாவுடன் எக்காலமும் மனுப்பேசிக்கொண்டிருப்பதற்குக் காரணம் அவரது தெய்வீக இருதயத்தில் சுவாலை விட்டெரியும் திருச் சிநேகமல்லவா? இவ்வளவு செய்தபின் நம்மை நோக்கி, "நான் செய்யக்கூடியது எதைச் செய்யாமல் விட்டேன், சொல்லுங்கள் பார்ப்போம்" என்று மனோவியாகுலத்துடன் கேட்பது நியாயமல்லவா? "நமது பேரில் கொண்ட அன்பால், தேவனாயிருந்தும் அடிமையின் ரூபம் எடுத்தார். சர்வேசுரன் சிநேகமாய் இருக்கிறார்; அவர் உலகத்திலிருந்த தம்முடையவர்களைச் சிநேகித்தபடியால், அவர்களை முடிவுபரியந்தம் சிநேகித்தார்" என்று நமது ஆண்டவரைக் குறித்து அர்ச். சின்னப்பர் அச்சாதிசயத்துடன் கூறுகிறார். அர்ச். மார்கரித் மரியம்மாளுக்குத் தமது திரு இருதயத்தைக் காண்பித்து,"மனிதரை அத்தியந்த விதமாய் நேசித்து, தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் தன்னை முழுவதும் பரித்தியாகம் செய்த திரு இருதயத்தைப் பார்" என்று அன்புடன் வசனிக்கிறார்.

நமது திவ்விய இரட்சகர் இவ்வுலகில் ஜீவிக்கும் ஒவ்வொரு மனிதரையும் தனித்தனியே விசேஷ அன்போடு நேசிக்கிறார் என்று மெய்யாகவே சொல்லலாம். "என்னைச்

சிநேகித்து எனக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" என்று சொன்ன அர்ச். சின்னப்பரோடு நம்மில் ஒவ்வொருவரும், "திவ்விய சேசு என்னைச் சிநேகித்தார், எனக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" என்று சொன்னால் பொய்யாகாது. மனிதரை அளவற்ற நேசத்தோடு நேசித்த திரு இருதயம் சகல மனிதரும் தங்கள் தீய வழியை விட்டு மனந்திரும்பி நித்திய பேரின்ப பாக்கியமடைய வேண்டுமென்று ஆவலாயிருக்கிற தென்று சொல்ல பூரண நியாயமுண்டல்லவா? இந்த ஆவல் தான் சேசுவின் திரு இருதயத்திற்கு ஆத்தும இரட்சண்யத்தின் பேரிலுள்ள ஆவல் என்னப்படும்.

### நமது கடமை

திரு இருதயத்தில் பற்றியெரியும் இந்தப் பரிசுத்த ஆவலை நாமும் கண்டுபாவித்து, பிறர் ஆத்தும இரட்சண்ய அலுவலில் ஈடுபட்டு திரு இருதயத்தோடு ஒன்றித்துழைப்பது நம்முடைய கடமையாகும். சரீர ஆபத்திலிருக்கும் ஒருவனுக்கு நாம் உதவி செய்யாவிடில் நமதுபேரில் குற்றமாகுமென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அப்படியானால் ஆத்தும ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்யாது அலட்சியமாய் இருப்பது எவ்வளவு பெரிய குற்றமாகும்! நமதாண்டவரின் முன்மாதிரிகையைப் பின்சென்று பிறர் ஆத்தும இரட்சண்யத் திற்காகத் தங்கள் சுகம், செல்வம் உயிரை முதலாய்ப் பரித்தியாகம் செய்தவர்கள் அநேகமாயிரமென்று திருச்சபை சரித்திரத்தில் நாம் வாசிக்கிறோம். இந்த அப்போஸ்தலர்கள், வேதசாட்சிகள், குருமார், கன்னியர், சன்னியாசிகள், புண்ணி யவாளராகிய விசுவாசிகள் முதலானவர்களைப்போல நாம் பிறர் ஆத்தும இரட்சண்யத்திற்காக நமது சொத்து, சுதந்திரங் களையும் உயிரையும் பரித்தியாகம் செய்யாவிட்டாலும், அவரவர் அந்தஸ்திற்குத் தகுந்தாற்போல் பிறரை இரட்சிக்க நம்மாலான பிரயாசைப்பட வேண்டாமா? நமது தேசத்தில் உள்ள அஞ்ஞானிகளை மனந்திருப்ப நாம் என்ன செய்து வருகிறோம்? அவர்களுக்காக அநுதினமும் வேண்டிக் கொள்ளுகிறோமா? நமக்கு வரும் துன்பதுரிதங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு அவர்கள் மனந்திரும்ப ஒப்புக்கொடுக்கிறோமா? நமது நன்மாதிரிகையினாலும் பிறர்சிநேகத்தினாலும் நாம் சேசுநாதரின் பிரிய சீஷரென்று காண்பிக்கிறோமா? அஞ்ஞானிகளை மனந்திருப்ப குருக்களுக்கு நம்மாலான பொருளுதவி செய்கிறோமா? அநாதைக் குழந்தைகள் இல்லம், பள்ளிக்கூடம், கோவில், வைத்தியசாலை முதலிய தர்ம ஸ்தாபனங்களைக் கட்ட நாம் எடுத்துக்கொண்ட பிரயாசை என்ன? நமது பரிசுத்த வேதத்தின் சத்தியங்களை அஞ்ஞானிகளுக்குமுன் அறிக்கையிட வாக்கி னாலும் கிரிகையினாலும் நாம் என்ன செய்துவருகிறோம்? கத்தோலிக்க அச்சுப்பிரசுரங்களை அபிவிருத்தி செய்ய நாம் எடுத்துக்கொள்ளும் பிரயாசை என்ன? சத்திய வேதப் பத்திரிகைகளுக்குச் சந்தாதாரராய் இருக்கிறோமா? நமது ஞானமேய்ப்பருக்குக் கீழ்ப்படிந்து நடந்து அஞ்ஞானிகளுக்கு நமது பரிசுத்த வேதத்தின்மீது மதிப்பும் நல்லெண்ணமும் உண்டாக வழி தேடுகிறோமா? இங்கு எடுத்துக் கூறிய புண்ணியக் கிரிகைகளுள் சிலவற்றையாகிலும் நாம் பிரமாணிக் கமாய் அநுசரித்துவந்தால், ஆத்தும ஈடேற்ற ஆவல் நம்மிடத்தில் இருக்கிறதென்று ஒருவாறு சொல்லலாம். சேசுவின் திரு இருதய மாதமாகிய ஜுன் மாதத்தில் திரு இருதயத்தை நேசிக்கும் நாம் எல்லோரும் அத்திரு இருதயத்தில் சுவாலை விட்டெரியும் ஆத்தும இரட்சண்ய ஆவலைக் கண்டுபாவிப் போமாக. சேசுவின் திரு இருதயத்தில் விளங்கிய பரித்தியாகம், சுயநலம் கருதாமை, தாழ்ச்சி, சாந்தம், பொறுமை, நிலைமை, எல்லாவற்றிற்கும் மேலாக பிறர்சிநேகம் முதலிய புண்ணியங் களே பிறர் ஆத்தும இரட்சண்ய அலுவலில் ஈடுபட்டு உழைப் பவர்களிடம் கட்டாயமாய் இருக்கவேண்டிய புண்ணியங் களாம். இப்புண்ணியங்களை நமக்கு அளித்தருளும்படி திவ்விய சேசுவின் திரு இருதயத்தை இரந்து மன்றாடுவோமாக!



**அர்ச். மர்க்கரீத் மரியம்மாளுக்கு சேசுவின் திரு இருதயக் காட்சி**



# நற்கருணையின் பாப்பரசர்

**- அர்ச் பத்தாம் பத்திநாதரின் ஜீவிய சரிதை**

திரு. ஆர்.பி. குழந்தைசாமி, தூத்துக்குடி, 1956

## VI - மாந்துவா மேற்றிராணியார்

*"**சர்வேசுரன் தம்முடைய இரத்தத்தினால் தமக்குச் சொந்தமாக்கின திருச்சபையை ஆளுவதற்கு இஸ்பிரீத்துசாந்துவானவர் உங்களை மேற்றிராணிமார்களாக ஸ்தாபித்து (ஒப்பித்த) சர்வ மந்தையின் மட்டிலும் எச்சரிக்கையாயிருங்கள்**" (அப். 20:28).*

**1884**-ம் வருஷம் செப்டம்பர் மாதம் சரியாய் வந்திக்கத் தக்க அப்போலோனியோ மேற்றிராணியார் வெளியூர்களில் சென்று மேற்றிராசன விசாரனை செய்துகொண்டிருந்தவர் திடீரென்று திரெவிசோவுக்குத் திரும்பிவந்தார். வந்தவர் உடனே சங். சார்த்தோ சுவாமியாரைத் தம்மிடம் வரவழைத்து, தமது சிறு கோவிலுக்கு அவரைக் கூட்டிக்கொண்டுபோய்,

"சுவாமி, உம்மையும் என்னையுஞ் சேர்ந்த ஓர் அவசர மான காரியத்தைப்பற்றி சற்றுநேரம் திவ்விய நற்கருணைக்கு முன் ஜெபிக்கவேண்டும்" என்று கூறினார்.

இதன் மர்மம் என்னதென்றறியாக சார்த்தோ சுவாமி மேற்றிராணியார் கூறியபிரகாரம் சற்பிர சாதருக்குமுன் சற்றுநேரம் ஜெபித்து எழுந்தார். அப்போது அப்போலோனியோ ஆண்டவர் அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, அதை வாசித்து விசேஷம் என்னவென்று அறிந்துகொள்ளும்படி மொழிந்தார்.

"**மாந்துவா மேற்றிராசனத்துக்கு சார்த்தோ சுவாமியார் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டிருக்கிறார்**" என்னும் சுபசெய்தியே அக்கடிதத்தில் அடங்கி யிருந்தது.

இப்பொறுப்பான பதவிக்கு உயர்த்தப்பட்ட செய்தியை அறிந்த சங். சார்த்தோ மிகவும் கலங்கி கவலைப்பட்ட மனதுடன் அப்போலோனியோ மேற்றி-ராணியாரை நோக்கி,




"ஆண்டவரே, அடியேன் இத்துணை பொறுப்பான வேலையை வகிக்கத்தக்கவனல்லன்! இப்பாரத்தை என்மேல் ஏன் சுமத்தவேண்டும்?" என்று வெகு பரிதாபமாய் கூறினார்.

மேற்றிராணியாரோ,"கடவுள் சித்தம் இதுவாகையால், அவர்மேல் உமது நம்பிக்கையெல்லாம் வைத்து, அமைதியுடன் அதை ஏற்றுக்கொள்வதே தகுதி" என்று தைரியம் கூறினார்.

ஆயினும் தாம் அப்பெரிய பொறுப்பான அந்தஸ்துக்கு முற்றுந் தகாதவரென்ற எண்ணங்கொண்ட சார்த்தோ சுவாமி அதைப்பற்றி உரோமாபுரிக்கு ஒரு கடிதமெழுதித் தமது எண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டார். ஆனால் அக்கடிதத்தி னால் யாதொரு பிரயோசனமும் உண்டாகவில்லை.

சங். சார்த்தோ சுவாமியார் மாந்துவா மேற்றிராணியாராக நியமிக்கப்பட்ட சுபசெய்தியைக் கேட்டவரெல்லோரும் களிப்புற்றனர்.

"சூசை சார்த்தோ சுவாமியாரைவிட மேற்றிராணியார் ஆவதற்குத் தக்க குரு வேறெவருண்டு?" என்று எல்லோரும் ஒருவாய்ப்படக் கூறினர்.

இரண்டு மாதம் கழிந்து நவம்பர் துவக்கத்தில் சார்த்தோ சுவாமியார் உரோமாபுரிக்கு போனார். வழியில் பாதுவா நகரத்தில் அதன் மேற்றிராணியா ரான வந். கல்லேகாரி ஆண்டவர் தமது பரிவாரத்துடன் சார்த்தோ சுவாமியைச் சந்தித்து, வாழ்த்தி வழியனுப்பினார். நவம்பர் 8-ம் தேதி உரோமை அடைந்து

பரி. பிதா 13-ம் சிங்கராயரைத் தரிசித்து அவரின் அன்பான ஆசிபெற்று வெகுவாய்த் தேறுதலடைந்தார். 16-ம் தேதி மேற்றிராணியார் பட்டம் பெற்று, 29-ம் தேதி திரெவிசோவுக்கு திரும்பிவந்து தமது மேற்றிராசனத்தைக் கைக்கொள்ளுமுன் அவ்விடத்தில் இரண்டொரு மாதம் தங்கியிருந்தார்.

தமது மேற்றிராசன நகரான மாந்துவாவுக்கு போகுமுன் தமது சொந்த ஊரான ரியேஸ் கிராமத்துக்குப் போய்த் தாயாரையும் சகோதரரையும் பார்க்க எண்ணி, ஒருநாள் வேறொரு குருவானவருடன் சாதாரண குருவைப்போல் தாம் உடை அணிந்து புகைவண்டியில் ஏறிப்போனார். அவர் யாரென்று அறியாத மாந்துவா பட்டணத்துச் சீமான்கள் இருவர் அவர் இருந்த வண்டியிலேறிப் பயணம் செய்தார்கள். அவர்கள் தங்களுக்குப் புதிதாய் நியமிக்கப்பட்டிருந்த சார்த்தோ மேற்றிராணியாரைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

“மாந்துவா பட்டணத்தில் இதுவரையில் மிகவும் பேர் பெற்ற மேற்றிராணிமார் இருந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறவர் ஒரு சாமான்ய பட்டிக் காட்டில் வெகு ஏழைக் குடும்பத்தில் பிறந்த சார்த்தோவாம். அவருக்கு என்ன நாகரீகமிருக்குமோ! படிப்பில் எப்படியோ!” என்று இவ்வாறாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டபோது, சார்த்தோ ஆண்டவரும் அவர்கள் சம்பாஷணையில் கலந்துகொண்டு,

“உங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் மேற்றிராணியார் சற்று மந்தன் என்றுதான் கேள்வி. பட்டணத்திற்கு தக்க நாகரீகம் நாட்டுப்புறத்தானிடம் இருக்காதென்பதே என் அபிப்பிராயம். மாந்துவாவைப்போல் அத்தனை மேன்மை பொருந்திய மேற்றிராசனத்தை ஆண்டு பரிபாலிக்கத்தக்க திறமையுள்ளவன் சார்த்தோ சுவாமியாரோவென்று எனக்கும் மிகச் சந்தேகமுண்டு.

‘**கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்**’ என்பது போல் எல்லாம் இன்னும் சிலநாளில் வெட்ட வெளியாகிவிடும் என்று வெகு வேடிக்கையாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுக்கொண்டு வந்தார். அவர்கள் இறங்க வேண்டிய ஊர் வந்தவுடன்,

“ஆனாலும் திருச்சபையின் தலைவரால் நியமிக்கப் பட்ட மேற்றிராணியார் தமது மேற்றிராசனத்தைச் சரிவரக் கண்காணித்து, தமது ஆட்டுக் கிடைக்கு நல்ல மேய்ப்பனாய் இருக்கவேண்டுமென்று நீங்கள் கடவுளைப் பிரார்த்திப்பது உங்கள் கடைமை” என்று தமது பேச்சை முடித்து, எல்லோருக்கும் முந்தி வண்டியைவிட்டுக் கீழே இறங்கிச் சென்றார்.

மாந்துவா நகரத்தார் இருவரும் இத்தனை தமாஷாய் இதுவரையில் பேசிக்கொண்டு வந்தவர் யாரென்று மற்ற குருவிடம் விசாரித்தார்கள்.

“அவர்தான் உங்கள் ஊருக்குப் புதிதாய் நியமிக்கப்பட்டிருக்கிற வந்திக்கத்தக்க சூசை சார்த்தோ ஆண்டவர்” என்று அவர் சொல்லவே, இருவரும் ஆச்சரியப்பட்டு அவரிடம் மன்னிப்பு கேட்க ஓடினார்கள்.

தமது கிராமத்தை அடைந்து தாயார், சகோதரருடனும், உற்றார் உறவினருடனும் சிலகாலம் அளவளாவியிருந்தார். தங்கள் கிராமத்தில் பிறந்து வளர்ந்த அஞ்சல் தலைவன் மகன் மாந்துவா நகரின் மேற்றிராணியாராகப் போவதை நினைத்து அக்கிராமத்தார் மனம் பூரித்தார்கள். அவருக்கு தக்க மங்கள உபசாரம் செய்தனர். கடவுள் கிருபை அவர்மேல் மென்மேலும் பெருக வேண்டுமென்று பிரார்த்தித்தனர். யாவரும் இவ்வாறு ஆனந்தமடைந்தனரென்றால் மகனை ஈன்ற தாயின் மனவெழுச்சியும் மகிழ்ச்சியும் சொல்லக் கூடுமோ!

பெரிய திருவிழா முடிந்தவுடன் அவர்களிடம் விடை பெற்று, திரெவிசோவில் வந்துசேர்ந்து, மாந்துவாவுக்கு போக தயார் செய்தார்.

திரெவிசோவைவிட்டுப் புறப்படுமுன் அவருடைய குருமடத்து மாணவரும் இன்னும் மற்றவரும் ஓர் பிரிவுபசாரக் கூட்டங்கூட்டி, அவருக்கோர் வாழ்த்துமடல் சமர்ப்பிக்கக் எண்ணியிருந்தார்கள். ஆனால் அவ்வித ஆடம்பரம் அவருக்குப் பிரியப்படாதபடியால், தமது மாணவருக்குச் சொல்லவேண்டிய சில புத்திமதிகளை ஓர் துண்டு காகிதத்தில் எழுதி சிரேஷ்டரிடம் கொடுத்து, அதை அவர்களுக்குச் சாப்பாட்டு அறையில் வாசிக்கும்படி கேட்டுக்கொண்டார். இவ்வாறாக யாதொரு சந்தடியுமின்றிக் குருமடத்தைவிட்டுச் சற்று தூரத்தில் காத்து இருந்த வண்டியிலேறி மாந்துவா நகரத்திற்குப் புறப்பட்டார்.

மாந்துவா நகர் ரயில் நிலையத்தில் தங்கள் மேற்றிராணியாருக்கு நல்வரவு கூற குருக்கள் கூட்டமும், பட்டணத்தில் பல சங்கங்களின் பிரதிநிதிகளும், பக்திக்குரிய அநேக சபைகளின் தலைவரும், காரியதரிசிகளும் வந்து கூடியிருந்தார்கள்.

மாந்துவா நகரம்



வந். சூசை சார்த்தோ மேற்றிராணியாரை விமரிசையுடன் வரவேற்று, அவர் ஆசி பெற்று அகமகிழ்ந்தனர்.

மாந்துவா நகர் சண்டை சச்சரவிற்குப் பேர்போன தென்று இத்தாலியர் சொல்வது வழக்கம். 1885-ம் வருடம் சார்த்தோ மேற்றிராணியார் அங்கே போனபோதும் அப்பெய ருக்குத் தக்காப்போல் மேற்றிராசனத்தில் பலவிடங்களில் குருக்களுக்கும் கிறீஸ்தவர்களுக்குமிடையே ஓயாமல் விபரீத சண்டைகள்; குருமடங்கள் காலி; அநேக கோவில்களில் விசாரணைக்குரு கிடையாது. இவ்விதமான பல அலங்கோலம் எங்கு நிறைந்திருந்தபடியால், மாந்துவாவுக்கு மேற்றிராணியா ராகப் போகிறவரிடத்தில் விசேஷ திறமையும் சூழ்ச்சியும் அவசியமாயிருந்தன.

சார்த்தோ ஆண்டவர் மேற்றிராசன ஆளுகையை ஒப்புக்கொண்டவுடன் எழுதிய முதல் நிருபத்தில், “ஆத்தும இரட்சண்யத்திற்காக என்னை முழுவதும் பரித்தியாகஞ் செய்து, மனம், வாக்குக் கிரிகைகள் எல்லாம் அந்த ஒரே காரியத்திற்காகச் செலவழிக்கத் துணிந்து, நான் இப்பதவியை மேற்கொண்டேன். பலமற்றவர்க்குப் பலமளிக்கும் கிறீஸ்துவில் என் நம்பிக்கையெல்லாம் வைத்திருக்கிறேன். அவருடைய சக்தியோ மட்டில்லாதது; பலவீனனான எனக்கு அவர் சக்தியே சக்தி தரும். அவருடைய ஞானம் எல்லையில்லாதது; என் அவசரங்களில் அவருடைய ஆலோசனையைத் தேடிப்போ னால் என் புத்திக்குத் தெளிவு கிட்டும். அவருடைய நன்மைத் தனமோ வரம்பு அற்றது; என் நம்பிக்கையெல்லாம் அவர்மேல் வைத்தால், என்னை ஒருபோதும் கைவிடமாட்டார். இம்மேற்றிராசனத்தின் பொறுப்பு எனக்கு மிகவும் பெரிய பாரமாயிருந்தாலும், கிறீஸ்துவின் கிருபையாலும், அவர் எனக்கு அளிக்கும் பலத்தாலும் இப்பாரத்தை மன மகிழ்வுடன் தாங்கி, என் கிடையைச் சேர்ந்த ஆடுகளும் ஆட்டுக்குட்டி களும் செவ்வென ஒழுகி, இம்மேற்றிராசனத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் என்னால் இயன்றதையெல்லாம் செய்யத் தயாராய் இருக்கிறேன்” என்று விளம்பரப்படுத்தினார்.

மேற்றிராணியாரின் முதல் கவலை குருமடம். கிறீஸ்தவர்களின் ஞான ஜீவியத்தைக் கவனிக்கக் குருக்களில்லா விட்டால், சபையோர் கதி என்னவாகுமென்று கவலைப்பட்டு, குருமடத்தை சீர்திருத்துவதே தமது முதல் வேலையாகத் துவக்கினார் சார்த்தோ ஆண்டவர். ஒரு வருடத்துக்குள் காலி யாயிருந்த குருமடங்கள் நிறைந்து, 147 நவசந்நியாசிகள் மடத்தில் சேர்ந்தார்கள். ஆனால் வெறுங்கை முழம்போடுமோ! 147 நவசந்நியாசிகளுக்கு உண்ண உணவு, உடுத்த உடை, கல்வி கற்றுத்தர வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தேவையான பணம் எங்கிருந்து வரும்! எண்ணித் துணிபவர்க்கு எதுவும் அசாத்தியமல்ல. கடவுளின் மகிமைக்காக மேற்கொண்ட காரியம் கடைத்தேறாமலும் போகுமோ! ரியேஸ் கிராமத்தில் தமக்குச் சொந்தமான ஒரு சிறு தோட்டத்தை விற்று, குருமடத்தின் செலவுக்காக மேற்றிராணியார் கொடுத்தார். இந்த நன்மாதிரிகையைக் கண்ட அநேக பிரபுக்கள் தாங்களும் தாராளமாக உதவிசெய்து, குருமடங்கள் விமரிசையாக நடக்க வேண்டிய சாதனங்களை வெகு சீக்கிரம் ஏற்படுத்திவிட்டனர்.

தமது மேற்றிராசனத்திலுள்ள சகல கோவில்களையும் கூடிய சீக்கிரத்தில் சந்தித்து, ஒவ்வோர் பங்குக் கோவிலுக்கும், அதிலுள்ள கிறீஸ்தவர்களுக்கும் அவசியமானவற்றை வெகு அக்கறையாய்க் குறித்துக்கொண்டு மாந்துவாவுக்குத் திரும்பினார். தமது தீர்மானத்துக்காகக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு காரியத்தையும் வெகு நுணுக்கமாய் விசாரித்து, தீர்க்காலோசனைசெய்து, பாரபட்சமின்றித் தீர்மானஞ் செய்வார். தனவந்தர் தரித்திரரென்றும், படித்தவர் பாமரர் என்றும், இத்தாலியர் இதர ஜாதியாரென்றும், குருக்கள் சாதாரண கிறீஸ்தவர்களென்றும் வித்தியாசம் சற்றும் பாராமல், மனிதர் அபிப்பிராயத்திற்குப் பயப்படாமல், நியாயம் எந்தப் பக்கமோ அப்பக்கத்தையே ஆதரிப்பார். தம்மிடத்தில் காரியங் களைப்பற்றி பேச வருபவரும் ஒன்றும் ஒளியாமல் தங்கள் காரியங்களைத் விளக்கமாய் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வார். முக்கியமாய் ஏழை எளியவர் அவரவர் முறைப்பாடுகளைத் தம்மிடம் நேரே தெரிவித்துக்கொள்ளத் திட்டஞ்செய்தது யாவர்க்கும் திருப்திகரமாயிருந்தது.

தாம் பங்கு விசாரணைக்குப் போகும்போது தமது வரவேற்பின் நிமித்தம் அவசியமற்ற செலவும் ஆடம்பரமும் கூடாதென்று கண்டிப்பாய்த் தடுத்துவிட்டார்.

“உங்கள் மேற்றிராணியார் உங்களைக் காணவரும் போது, மேளதாளமும், கும்பல் கூட்டமும், கூச்சல் இரைச்ச லுமே தக்க நல்வரவென்று எண்ணுகிறீர்கள்? இவையெல்லாம் வீணிலும் வீணென்று வெகு அழுத்தமாய்ச் சொல்லுகிறேன். இவ்வாடம்பரங்களுக்குப் பதில் நாம் உம்முடைய பங்கு விசாரணைக்கு வரும்போது யாவரும் உங்கள் கோவிலில் கூடி, மேற்றிராணியாரின் ஆசி பெற்று, திவ்விய பலிபூசை கண்டு,


மாந்துவா நகர சதுக்கம்

நற்கருணை உட்கொண்டீர்களானால் அதுவே வெகு மங்கள கரமான வரவேற்பாகும்; நமது மனம் பூரிக்கும்; ஆண்டவர் மகிமை அதிகரிக்கும்; உங்கள் குடும்பங்கள் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்று மென்மேலும் விருத்தியடையும்; இதுவே என் ஆசை, இதுவே நீங்கள் நமக்கு காட்டும் பெரிய மரியாதையும், நல்வரவேற்பும்; மற்றதெல்லாம் வீணிலும் வீணான ஆடம்பரம். பொருட்செலவும் தெருக்கூட்டமும் மேற்றிராணியாருடைய வரவேற்புக்கு அவசியமற்றவை" என்று கூறிவிட்டார்.

மாந்துவா நகர அதிகாரிக்கு அன்புநிறைந்த ஓர் கடிதம் எழுதி, திருச்சபை அதிகாரிகளும் நகர அதிகாரிகளும் ஒற்றுமை யாயிருப்பதால் பொதுஜனங்களுக்கு கிடைக்கக்கூடிய பற்பல நன்மைகளை அதில் தெளிவாய் எடுத்துக்காட்டி தாம் எவ்வளவு ஏழையாயிருப்பினும், அந்நகரத்தார்மட்டிலுள்ள அன்பிற்கு அளவில்லையென்றும், அந்நகரிலுள்ளோர் அனைவரும் சகோதர வாஞ்சையுடன் சமாதானப் பிரியராய், ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவிருந்து வாழ்ந்து, கடவுளை ஸ்துதித்துக் கடைசியில் இரட்சண்யம் அடையவேண்டும் என்பதே தமது பேராவல் என்றும் தெரியப்படுத்தினார்.

திருச்சபை, நகர அதிகாரிகளுக்குள் இத்தாலியில் அடிக்கடி சமாதானக் குறைவு ஏற்பட்டிருந்தது. மாந்துவா நகரிலும் இச்சமாதானக் குறைவு சில சமயங்களில் மும்முரமா யிருந்து நகரவாசிகளை வெகுவாய் வாதிக்க, அவர்கள் பல கட்சிகளாய்ப் பிரிந்திருக்க நேரிட்டது. சார்த்தோ ஆண்டவர் நகர அதிகாரிக்கு எழுதி தெரியப்படுத்திய மேற்கூறிய நிருபம் இச்சமாதானக்குறைவை ஒருவாறு நீக்கி, நகரத்தாரனைவரும் ஒரு குடும்பத்தார்போல் ஒற்றுமையாயிருக்க ஏதுவாயிருந்தது.

மேற்றிராணியாருடைய பெரு முயற்சியாலேயே 1890-ம் ஆண்டில் பியாசென்ஸா நகரத்தில் இத்தாலிய கூட்டுறவு சங்கத்தின் பொதுக்கூட்டம் முதல் தடவையாகக் கூடினது. பத்திரிகைகளின் அதிகாரத்தையும், பலனையும் நன்குணர்ந்தவராகையால் தமது மேற்றிராசனத் தலைநகரில் "**மாந்துவா நகரவாசி**" என்ற பெயர் கொண்ட ஓர் பத்திரிகை யை சார்த்தோ ஆண்டவர் ஸ்தாபித்து, அது செழித்துப்பரவித் தமது பிரஜைகளுக்கு அதிக பிரயோசனமாயிருக்கும்படி வெகு ஊக்கத்துடன் உழைத்தார்.



**மாந்துவா மேற்றிராசன ஆலயம்**

நவமாயுதித்த " மாந்துவா நகரவாசி" என்னும் பத்திரிகை மூலமாய் மேற்றிராணியார் பல நன்மைகள் செய்து வந்தாலும், மாந்துவாவிலுள்ள வேறோர் பத்திரிகை ஆசிரியன் காய்மகார முற்று, அவர்மேல் அபத்தமான குற்றங்கள் கூறி அவதூறு வார்த்தைகள் அடங்கிய புத்தகமொன்று வெளியிட்டான். இதையறிந்த சார்த்தோ மேற்றிராணியார் அவனுடைய கேவல புத்தியை ஒழித்து நல்ல புத்தியளிக்க வேண்டுமென்று கடவுளிடம் விசேஷமாய்ப் பிரார்த்தித்துக்கொண்டார். அவனுடைய புத்தகத்தை வாசித்த சிலர் மேற்றிராணியாரிடஞ் சென்று அவன் அப்புத்தகத்தால் அவருக்கு வருவித்த, மான நஷ்டத்திற்காக அவன் மேல் வழக்காடும்படியாகக் கேட்டுக் கொண்டனர். அவனைத் தண்டிப்பதிலும் அவனை மன்னித்து, அவன் மனந்திரும்ப மன்றாடுவதே மேலென்று உரைத்தார் மேற்றிராணியார்.

சில காலஞ்சென்றபின் அப்புத்தக ஆசிரியன் வெகு நெருக்கிடையான சங்கடங்களில் அகப்பட்டு, கடன்காரர் உபத்திரவத்தால் கலங்கி நின்றான். இதுதான் தக்க சமயமென்று மற்ற பத்திரிகை அதிபர் அவனை வேரோடழித்துவிட எண்ணி யிருக்கையில், சார்த்தோ மேற்றிராணியார் இச்செய்தியைக் கேள்விப்பட்டு, பக்தியுள்ள ஓர் முதியவளைக் கூப்பிட்டு, அவளிடத்தில் அவன் கடன் முழுவதும் தீர்க்கும்படியான பெருந்தொகையைக் கொடுத்து,

"இதைக் கொண்டுபோய் அப்பத்திரிகை ஆசிரியனின் மனைவியிடம் கொடு, இதனால் அவனுடைய கடன் தீர்ந்து, கஷ்டம் நீங்கும். யார் இந்த உதவியை அனுப்பியதென்று அவளுக்குத் தெரியவேண்டாம். ஆனால் அது கட்டாயம் அவர்களுக்கு தெரியவேண்டுமென்று உன்னை வற்புறுத்திக் கேட்டால், இந்த பணத்தை உங்களுக்காக கவலையுடன் சேர்த்து வைத்திருந்தவள், பெண்களில் மிகவும் இரக்கமுள்ளவ ளான உபகாரமாதா என்று மறுமொழி சொல்" என்று சொல்லி கொடுத்தனுப்பினார்.

மேற்றிராணியார்பற்றி அவதூறு பேசி, அவரை அவமா னப்படுத்தியவன் அவர் இரகசியமாய் அனுப்பிய பொருளைக் கொண்டு கவலை தீர்ந்தான்.

தெம்போலோ, சால்சானோ, திரெவிசோ என்ற பங்கு களில் சிறுவரின் ஞானோபதேசத்திற்காகச் சார்த்தோ சுவாமி எவ்வளவு அக்கறையெடுத்துக்கொண்டாரோ அதைப்போலவே மேற்றிராணியாரான பிறகும் சிறுவரின் ஞானோபதேசமே அவருடைய முக்கிய கவலையாயிருந்தது. மேற்றிராசனத்தில் ஒவ்வொரு சிறு பங்கிலும் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்படவும், அப்பள்ளிக்கூடங்களில் ஞானோபதேசம் ஒழுங்காய் கற்றுக் கொடுக்கப்படவும் வேண்டிய சட்டதிட்டம் செய்ததுமன்றி, தாம் மேற்றிராசன விசாரணைக்காக இப்பங்குகளுக்குப் போகும்போது தாமே அச்சிறு பள்ளிக்கூடங்களுக்குச் சென்று, சிறுவரை தமக்குமுன் வரச்சொல்லி, அவர்களுக்குத் தாமே ஞானோபதேசம் கற்றுக்கொடுப்பார். ஞானோபதேசத்திற்கு தங்கள் பிள்ளைகளை ஒழுங்காய் அனுப்பாத தாய் தகப்பன் மட்டில் மேற்றிராணியார் வெகு கண்டிப்பாயிருந்தார். யாவரிடத்திலும் மிகவும் தயவு பாராட்டிய, சாந்த குணம்

படைத்த சார்த்தோ ஆண்டவர் இவ்விஷயத்தில் காட்டின கண்டிப்பு, சிறுவருடைய ஆத்தும நன்மைக்காகவே. கோவிலில் பாடும் பாட்டுகள் கடவுள் தோத்திரத்திற்கானபடியால், நாடக மேடைகளில் நடிப்போர் பாடும் நவீன கூத்து இராகங்களைத் தவிர்த்து, அடக்கமும் மரியாதையும் ஆனால் கெம்பீரமும் நிறைந்துள்ள கிரகோரியார் கானமே உத்தமமானதென்று வற்புறுத்திவந்தார். தமது மேற்றிராசனக்கோவிலும் தாம் பங்கு விசாரணைக்காகச் சுற்றுப்பயணம் போகும்போது மற்ற கோவில்களிலும் தாம் வழக்கம்போல் இனிமையான பிரசங் கங்கள் செய்து கிறீஸ்தவர்களுக்குப் புத்தி புகட்டி அவர்கள் இருதயத்தைப் பூரிப்பிப்பார். சார்த்தோவின் பிரசங்கங்கள் சலேசியாருடைய பிரசங்கங்களுக்கு ஒப்பானவை என்று குருக்கள் யாவரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

காலை ஐந்து மணிக்குத் தமது சிறு கோவிலில் திவ்விய பலிபூசை செய்து முடித்தவுடன் மேற்றிராசனக் கோவிலில் தினந்தோறும் பாவசங்கீர்த்தன தொட்டியில் அமர்ந்து பாவசங்கீர்த்தனம் கொடுப்பது அவருக்கு மிகப்பிரியமான காரியம். எப்போதும் மிக மிதமான சாப்பாடு உண்பதே அவர் வழக்கம். சாதாரண குருவாயிருந்தபோது எவ்விதம் வருந்தி உழைத்தாரோ அவ்வாறே இப்போதும் அயராமல் வேலை செய்வார். "கடின உழைப்பே கர்த்தரின் ஊழியருக்குரிய சின்னம், உழைப்புக்கு அஞ்சும் குருவுக்கு ஐயோ கேடாம்! சுகவீனத்தால் நான் என்னுடைய அந்தஸ்தின் வேலைகளைச் செய்ய இயலாவிடின் இறப்பதே உத்தமம்" என்று சொல்வார்.

சாயங்காலத்தில் சாதாரண குருவானவரைப்போல் வெளியே உலாவப்போய், எவருடனும் கலந்துபேசி, சந்தோஷ மாகக் காலம்போக்கித் தமது அரண்மனைக்குத் திரும்புவார். என்ன வேலையிருந்தாலும் சரி இரவில் ஒன்பது மணிக்குத் தம்முடன் வசிப்பவர் எல்லோருடனுங்கூடி ஐம்பத்துமூன்று மணி ஜெபம் செய்து, தினமும் தேவதாயைப் புகழ்வது அவருக்கு ஆனந்தம். எந்த நேரத்தில் யார் போனாலும் மேற்றி ராணியார் பேட்டி எளிதில் கிடைக்கும். இரவு பன்னிரண்டு மணிவரையில் படித்து எழுதிக்கொண்டிருக்கும் வழக்கத்தை விட்டவரல்லர்.

எந்த வேலையானாலும் மனமகிழ்வுடன் சார்த்தோ செய்வாரென்று ஏற்கனவே நாமறிந்திருக்கிறோம்.

ஒரு நாள் காலை, பூசைமுடித்துத் தமதறையில் எழுதிக் கொண்டிருந்தபோது ஒரு இளங் குருவானவர் அவர் அறைக் கதவைத் தட்டினார்.

உள்ளே வாருமென்று அவருக்கு உபசாரஞ் செய்தார் சார்த்தோ ஆண்டவர்.

குருவானவர் உள்ளே வந்தவுடன்,

மேற்றிராணியார்: "பூசை செய்துவிட்டீரா, சுவாமி?"

சுவாமியார்: "ஆம் ஆண்டவரே, இப்போதுதான் மேற்றிராசனக் கோவிலில் பூசை முடித்தேன்".

மேற்றிராணியார்: "அப்படியானால் கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டு நீர் வந்த காரியத்தைப்பற்றிக் கவனிக்கலாம்."

"ரோசாள், அன்னாள்! கொஞ்சம் காப்பி தயார் செய்துகொண்டு வாருங்கள்" என்று சொல்லிச் சற்று நேரம் காத்திருந்தார். தமது சகோதரிகள் இருவரும் கோவிலிலிருந்து இன்னும் திரும்பிவரவில்லையென்று கண்டு,

"பரவாயில்லை சுவாமி, என்னோடு கீழே இறங்கி வாருங்கள்" என்று சொல்லிக் குருவானவரை அழைத்துக் கொண்டு, சமயலறைக்குப் போய், சீக்கிரம் தாமே அவருக்கு வேண்டிய காப்பி தயார்செய்து, அங்கிருந்த சொற்பச் சிற்றுண் டிகளையும் மலர்ந்த முகத்துடன் அவருக்கு வழங்கினார்.

இவ்வாறு காப்பி தயார்செய்த மேற்றிராணியார் பிற் காலத்தில் மகிமையுள்ள பத்தாம் பத்திநாதரென்னும் பரிசுத்த பாப்புவாக விளங்கினார். அன்று அவருடைய விருந்தினராயி ருந்த வாலிபக் குருவோ கீர்த்தியுடன் திருச்சபையை ஆண்டு வந்த பரிசுத்த பிதா பதினோராம் பத்திநாதரே.

மாந்துவா நகரின் பாதுகாவலரான அர்ச். ஆன்செல்ம் என்பவருடைய நூற்றாண்டின் விழாவை மேற்றிராசனக் கோவிலில் வெகு விமரிசையாகக் கொண்டாடி, குருக்களின் சீர்திருத்தத்தைப்பற்றி மிகவும் அரியதோர் நிருபம் எழுதி வெளியிட்டார் சார்த்தோ ஆண்டவர். மாந்துவா பட்டணத் தின் பழைய கிறீஸ்தவக் குடும்பங்களின் ஆபரணமாய் விளங்கிய கொன்சாகா கோத்திரத்தாரின் மங்காவொளியான அர்ச். ஞானப்பிரகாசியாருடைய மூன்றாம் நூற்றாண்டின் கொண்டாட்டமும் இனியெங்குமில்லை என்று சொல்லக் கூடிய அதியற்புத ஆனந்த கோஷங்களுடன் நடந்தேறும்படி யாகவும் சார்த்தோ ஆண்டவர் திட்டமிட்டார். அப்போது அப்பட்டணத்தின் வாலிபருக்குத் தாமே பெரும் உற்சாக மூட்டும் ஓர் பிரசங்கம் செய்து,

"இக்காலத்தில் வாலிபர்களை ஏமாற்றும் ஓர் நூதன வழியேதென்றால், வேதமும் சாஸ்திரமும் ஒன்றோடொன்று முரண்பட்டவை. வேதத்தில் கூறப்பட்டிருப்பவை சாஸ்திரத் தால் மறுக்கப்படுகின்றன. அப்படியிருக்க வேதமேது, பூதமேது என்று, "**அறப்படித்த மூஞ்சூறு கழநீர்ப்பானையில் விழுந்தது**" போல் சில போலி சாஸ்திரிகள் கூறி சிறுவர் மனதைக் கடவுளி னின்று திருப்பி அவர்களைக் கொஞ்சங்கொஞ்சமாய் நாஸ்தீக ராக்கிவிடுகிறார்கள். ஆனால் காரியத்தை கவனமாய் ஆராய்ந் தால், வேதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் சற்றேனும் முரண்பாடு



**மேற்றிராசன ஆலயத்தின் பிரதானப் பீடம்**

ஏற்படவே ஏற்படாது. அதற்கு விரோதமாய்ச் சாஸ்திரங்களையும் வேதத்தில் சொல்லப்படுவனவற்றையும் நுட்பமாய் ஆராய்ந்து பார்க்க வல்லவர், சாஸ்திரங்களே வேதத்தின் மகிமையை வெளிப்படையாய்க் கூறுகின்றன; சாஸ்திர ஆராய்ச்சியே சகலத்தையும் படைத்து இரட்சிக்கும் சர்வ வல்லபக் கடவுள் ஒருவர் உண்டென்று பறைசாற்றுகின்றன என்பர். ஆகையால் உண்மையான சாஸ்திரப் படிப்பினால் சத்திய வேதத்திற்கு அதிக கீர்த்தியும், கடவுளுக்கு சதா தோத்திரமும் உண்டாகுமேயொழிய வேறல்லவென்று வற்புறுத்தி வாலிபருக்குள் வேத சாஸ்திரங்களைப் படிப்பதில் மிக்க ஊக்கமுண்டாக்கி விட்டார்.

அர்ச். ஞானப்பிரகாசியாரின் பிறப்பிடமாகிய காஸ்தி-கிளியோனுக்குத் திருயாத்திரை செல்லத் திட்டமிடப்பட்டது. சிறுவர் சிறுமியர்க்கு ஞானவொடுக்கமும் கொடுக்கப்பட்டது. இம்மகோற்சவம் கொண்டாடப்பட்ட விமரிசையினால் அநேகர் ஞான பலனடைந்து மகிழ்ந்தனர்.

1887-ம் ஆண்டு பரிசுத்த பிதாவாகிய 13-ம் சிங்கராயருடைய குருப்பட்டத்தின் ஜூபிலி நிகழ்ந்தது. அந்த மங்களகரமான சம்பவத்தை தமது மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள் நன்றியறிந்த நல்ல மனதுடன் அநுசரிக்க அவர்களைத் தூண்டும் பொருட்டு சார்த்தோ ஆண்டவர் ஒரு நிருபம் எழுதினார். அதில் அவர் எழுதியதாவது:

“கடவுள் கருணையால் தற்காலம் திருச்சபையை ஆளும் பரிசுத்த பாப்புவின்மட்டில் நமக்குள்ள விசுவாசத்தையும் சிநேகபாசத்தையும் வெளிப்படையாகக் காட்டத் தகுந்த சமயம் நமக்கு வாய்த்திருக்கிறது. கிறீஸ்தவர்களாகிய நமக்கு அவரே **வேதவித்யா வல்லவன்**; சேசு கிறீஸ்துவின் போதனைகளை வியாக்கியானம் செய்யும் **விற்பன்னர்** அவரே; திருச்சபையின் தலைவரும், தவறாவரம் பெற்ற **அத்தியாபகனுமவரே**, சர்வேசுரனின் இரக்கத்தினால் சபையில் சேர்ந்துள்ள ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் அயராமல் கண்காணித்துக் காப்பாற்றும் நல்லாயனும் அவரே. திருச்சபையின் பலம் முற்றிலும் பரிசுத்த பாப்புவினால் உண்டாகிறது. நமது விசுவாசத்தின் மூலகாரணம் அர்ச். இராயப்பர் ஸ்தானத்திலிருக்கும் பாப்புவின்மேல் நமக்குள்ள நம்பிக்கையே. அவரையெதிர்த்து, அவருடைய உபதேசத்தை மறுத்து, அவருடைய உந்நத அந்தஸ்துக்குத் தக்க வணக்கம் செலுத்தாதவர்கள் திருச்சபையின் எதிரிகளாவர். இப்பேர்ப்பட்டவர்கள் தங்களுடைய பலவித சூழ்ச்சிகளினால் எவ்வளவுக்கு நமது விசுவாசத்தை அசைத்து அழிக்கப் பிரயாசைப்படுகிறார்களோ அவ்வளவுக்கும் நாம் நமது தலைவரான பரிசுத்த பிதாவின் மட்டில் காட்டும் நேசத்தாலும், பிரமாணிக்கத்தாலும், வணக்கம் கீழ்ப்படிதலாலும் சத்திய வேதத்தில் நமக்குள்ள நம்பிக்கையை நாம் வெளியரங்கமாகப் பிரசித்திப்படுத்த அதுவே நல்ல சமயமென்று எண்ணவேண்டும்” என்பதே.

அசட்டையாயிருந்த குருக்களிடத்தில் வெகு சாந்தமாயும் சமயோசிதமாயும் பேசி, தமது நன்மாதிரிகையாலும் அவர்களை நல்வழியில் திருப்பிவிடுவார். உதாரணமாக, மாந்துவா நகருக்கு அருகாமையிலிருந்த ஓர் பங்கு சுவாமியாருக்குக் காலையில் பாவசங்கீர்த்தனம் கேட்பதென்றால் மிகவும் கஷ்டமான காரியம். ஆகையால் அவ்வூர் கிறீஸ்தவர்கள் மேற்றிராணியாரிடம் முறையிட்டார்கள். சார்த்தோ ஆண்டவரும் பலதடவை அந்தக் குருவானவருக்கு அதைப் பற்றி எழுதி, காலையில் சோம்பலை நீக்கி பாவசங்கீர்த்தனம் கேட்கவேண்டுமென்று வற்புறுத்தினாலும் குருவானவர் அசட்டையாகவே இருந்தார். தமது கடிதங்களால் பலன் இல்லையென்று கண்ட மேற்றிராணியார் மேற்படி குருவானவர் அறியாமல் ஒருநாட் காலை அவருடைய கோவிலுக்குப் போய், அங்கு பாவசங்கீர்த்தனத்திற்காகக் காத்திருந்தவர்களுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்துக்கொண்டிருந்தார். வெகுநேரம் கழித்து வழக்கம்போல் பங்குசுவாமியார் கோவிலுக்குப் பூசைக்காக வந்தபோது கோவிலில் ஒரு குருவானவர் பாவசங்கீர்த்தனம் கேட்பதையறிந்து, இவர் யாராயிருக்கலாமென்று அருகில் போய்ப் பார்த்தார். தனது மேற்றிராணியார் சார்த்தோ ஆண்டவரே பாவசங்கீர்த்தனத்தொட்டியில் இருப்பதைக் கண்டார். தனது சோம்பலைப்பற்றி வெட்கப்பட்டார். அன்றுமுதல் அந்த துர்வழக்கத்தை வென்று, அதிகாலையில் எழுந்து கோவிலில் பாவசங்கீர்த்தனம் கேட்பதே தனது முதல் அலுவலாகக்கொண்டார். பங்கு ஜனங்களும் திருப்தியடைந்தனர்.

ஒரு சனிக்கிழமை சார்த்தோ மேற்றிராணியார் பூசை முடித்துத் தமது அறையில் ஏதோ வேலையாயிருக்கும்போது ஒருவன் அவரைப் பார்க்க வந்தான். உடனே மேற்றிராணியார் அவனை நோக்கி:


“நீ யார், எங்கிருந்து வருகிறாய், என்ன காரியமாக



என்னிடம் வந்தாய்?" என்று கேட்கவே, அவன்,

"ஆண்டவரே, நான் **கொய்தோ** கிராமத்திலிருந்து வருகிறேன். அங்கே கோவில் காரியங்களில் எங்களுக்குச் சில கஷ்டங்கள் உண்டு. அதாவது எங்கள் பங்கு சுவாமியார் வயோதிகராகையால் ஞாயிற்றுக்கிழமை திவ்விய நற்கருணை உட்கொள்ள ஆசிப்பவர்கள் எல்லோருக்கும் பாவசங்கீர்த்தனம் கொடுக்க சக்தியற்றவராயிருக்கிறார். மேலும் வாரந்தோறும் ஞாயிறு பூசையில் பிரசங்கஞ் செய்யவும் அவரால் முடிய வில்லை. இப்போது ஏறக்குறைய மூன்று மாதங்களாய் எங்கள் பங்குக் கோவிலில் பிரசங்கமே கிடையாது. இதைப்பற்றி மேற்றிராணியாண்டவரிடம் தெரியப்படுத்தும்படியாக எங்கள் ஊரார் என்னை இங்கே அனுப்பினார்கள். எங்களுடைய வயோதிக பங்கு சுவாமியாருக்குத் துணையாக வேறோர் குருவானவரை ஆண்டவர் தயவுசெய்து அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்" என்றான்.

"ஆம், உங்கள் ஊருக்கு ஓர் துணைப்பங்கு சுவாமி-யாரை நியமிக்கவேண்டியிருக்கிறது உண்மையே. ஆனால் அதற்குக் கொஞ்சநாள் நீங்கள் பொறுமையாயிருக்கவேண்டும்; ஏனென்றால் குருமடத்தில் படிப்பு முடிப்பவர்களுக்குக் குருப்பட்டம் கொடுத்தபின் அவர்களில் ஒருவரை உங்கள் துணைப்பங்கு சுவாமியாராக அனுப்ப முடியும். அதுவரை சனிக்கிழமை சாயங்காலங்களில் பாவசங்கீர்த்தனம் கேட்கவும், ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்கம் செய்யவும் ஒரு குரு வானவரை ஏற்பாடு செய்து அனுப்புவோம். இந்த ஏற்பாடு இன்றுமுதலே செய்யப்படும். இன்று சாயங்காலம் உங்கள் ஊருக்கு ஒரு குருவானவர் வருவார். அவர் அங்கு வந்து ஏமாந்து போகாமலிருக்க, நீ முன்னதாகப் போய் பாவசங்கீர்த்தனத்திற்கு ஆயத்தமாயிருப் பவர்களைக் கோவிலில் அமரவைக்க வேண்டும்" என்று புன்னகையுடன் கூறினார் சார்த்தோ ஆண்டவர்.



**மேற்றிராணியார் சார்த்தோவின் கையொப்பம்**

கொய்தோ கிராமத்தில் இச்செய்தி பரவவே, அன்று சாயங்காலம் கிராமத்தார் அநேகர் பாவசங்கீர்த்தனத்திற்காக கோவிலில் கூடிவிட்டார்கள். ஆனால் மாந்துவாவிலிருந்து வந்த குருவானவர் அவர்களுக்குமுன் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் தயாராக இருந்தார். அங்கு வந்த அனைவருக்கும் பாவசங்கீர்த்தனம் கொடுத்து முடிய இரவில் வெகு நேரமான படியால் மாந்துவாவிலிருந்து தங்கள் அவசரத்தின் பொருட்டு வந்த குருவானவர் யாரென்று ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. மறுநாள் அக்கிராமத்து கிறீஸ்தவர்கள் ஏறக்குறைய எல்லோரும் திவ்விய நன்மை உட்கொள்ளும் பாக்கியம் பெற்றனர். மாந்து-வாவிலிருந்து வந்த குருவானவர் "**நாமே நல்ல மேய்ப்பன்**" என்ற வாசகத்தை ஆதாரமாகக்கொண்டு ஓர் அருமையான பிரசங்கம் இனிமையாகச் செய்து, அதில் கடவுள் தமதுமேல் நம்பிக்கை வைத்திருக்கும் பிள்ளைகளை எவ்வளவு அன்புடன் நேசிக்கிறாரென்று விளக்கிக்காட்டினார். சொற்பொலிவும் பொருள்நலமும் மலிந்துள்ள அப்பிரசங்கத்தைக் கேட்டவர் அனைவரும் மனமகிழ்ந்தனர்.

பூசை முடிந்தபின் அக்கிராமத்தின் பெரியவர் சிலர் முந்திய நாள் மாந்துவாவுக்குப் போன மனிதனுடன் தங்கள் பங்கு சுவாமியார் அறைக்குப்போய், தங்களுக்காக சிரமம் பாராது வந்து, பாவசங்கீர்த்தனம் கொடுத்து, அரிய பிரசங்கமும் செய்த குருவானவருக்குத் தங்கள் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்த வேண்டுமென்று தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

முந்தினநாள் மேற்றிராணியாரைக் காணப்போனவன் மற்றவர்களிடம் சொல்வான்:

"இன்று பிரசங்கம் செய்த சுவாமியார் மாந்துவா மேற்றிராணியாருடைய சகோதரராய் இருக்கலாமென்று எண்ணுகிறேன். அவருடைய முகச்சாயல் வெகுவாய் இவரிடத்தில் காண்கிறது."

"ஆ! அப்படியானால் நமக்கு இது பெரிய அதிர்ஷ்டம், பெரிய மகிமையென்றும் எண்ண வேண்டும்" என்றான் வேறொருவன்.

இப்படியாகப் பேசியபடியே தங்கள் பங்கு சுவாமியார் அறைக்குப்போய், மாந்துவாவி லிருந்து வந்த குருவானவருக்கு கிராமத்தார் பெயரால் வந்தன மளிக்க வந்திருப்பதாகச் சொன்னார்கள்.

"ஐயோ! அவர் சற்று முன் புறப்பட்டுப் போய் விட்டாரே. நீங்கள் அவரைக் காணவருவீர்க ளென்று நினைத்தே இவ்வளவு சீக்கிரம் இவ்விடம் விட்டுப் போய்விட்டார்போலும்" என்றார் பங்குசுவாமியார்.

"என்ன துரதிர்ஷ்டம்! அந்த நல்ல குருவுக்கு நாங்கள் எவ்விதம் இனி நன்றி செலுத்துவோம்! அவர் யார்? அவர் பெயர் என்னவென்று சொல்லுங்கள்" என்று தங்கள் பங்கு சுவாமியாரை வினவினர்.

"அவர் பெயர் சங். சூசைநாதர். இதற்குமேல் ஒன்றும் அவரைப்பற்றி நீங்கள் என்னிடம் கேட்கவேண்டாம். அவர் போய்விட்டபடியால் இப்போது நீங்கள் அவரைப் பார்க்க முடியாது. உங்கள் பெயரால் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதி, உங்கள் நன்றியறிதலை அவருக்குத் தெரியப்படுத்து கிறேன். நீங்கள் வீடு போய் சேருங்கள்" என்றார் பங்கு சுவாமியார். இதைக் கேட்டவர்கள் சற்றும் திருப்தியடைய வில்லை. இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டுமென்று சந்தேகித்தார்கள். சந்தேகம் தீர்த்துக்கொள்ளும்படியாக அவர்களில் சிலர் மாந்துவா நகருக்குப் புறப்பட்டுப் போயினர்.

ஆனால் அவர் களுக்கு மேற்றிராணியாருடைய பேட்டி கிடைப்பது அரிதாய் இருந்தது. அரண்மனையிலிருந்த தங்கள் மேற்றிராணியாரின் உருவப்படம் ஒன்றை பார்த்தார்கள். அந்த உருவமும் தங்கள் கோவிலில் முந்தின ஞாயிறு பிரசங்கம் செய்த குருவின் சாயலும் ஒன்றே. தங்கள் மேற்றிராணியாரே தங்களுடைய கிராமத்துக்குச் சாதாரண குருவானவரைப்போல் வந்து, பாவசங்கீர்த்தனம் கேட்டு, பிரசங்கமும் செய்து போனவ ரென்று இப்போது திட்டமாய்த் தெரிந்துகொண்டார்கள்.

இச்செய்தி அறிந்த கிராமத்தார் அனைவரும் தங்கள் நல்ல மேய்ப்பன் சார்த்தோ ஆண்டவரைப் புகழ்ந்து கொண்டாடினர். தலைமுறை தலைமுறையாகக் கொய்தோ கிராமத்தார் இச்சம்பவத்தை யாவரிடத்தும் சொல்லி மேற்றிராணியாரின் பெருந்தன்மையையும் தாழ்ச்சியையும் பெரிதும் பாராட்டினர்.

மாந்துவாவின் மேற்றிராணியாராயிருந்த சார்த்தோ ஆண்டவர் 1903-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நாலாம் தேதி 13-ம் சிங்கராயருக்குப்பின் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு பத்தாம் பத்திநாதர் என்ற பெயருடன் இராயப்பர் சிம்மாசனத்தில் ஏறினார் என்ற சுபசெய்தியைக் கேட்ட கொய்தோ கிராமத்தார் அவருக்குத் தங்கள் நன்றி யறிதலைக் காட்டும் ஞாபகச் சின்னம் ஒன்றை அனுப்ப எண்ணினார்கள். எவ்விதமான ஞாபகச்சின்னம் பொருத்தமா யிருக்குமென்று அவர்கள் ஆலோசனை செய்து கடைசியாய் நல்ல ஆயன் என்ற பெயர்கொண்ட நமது ஆண்டவரின் திருச்சுரூபம் ஒன்றை வெள்ளியால் அமைத்து, அதன் பாதத்தில்,

"**தங்கள் நல்ல ஆயனான பத்தாம் பத்திநாதராம் பரிசுத்த தந்தைக்கு கொய்தோ கிராமத்தார் சமர்ப்பித்தத் தாழ்மையான சந்திப்பு**" என்ற வார்த்தைகளை வெகு அலங்காரமாகச் சித்தரித்து அனுப்பினார்கள்.

ஏழை எளியவர்மேல் சார்த்தோ ஆண்டவருக்குள்ள இரக்க அனுதாபத்தைப்பற்றி முன் கூறியிருக்கிறோம். பங்கு சுவாமியாராகவும், குருமடத்தின் ஆத்ம குருவாகவுமிருந்த காலத்தில் அவர் ஏழைகளுக்கு உதவிசெய்ததைவிட இப்போது அவர் மேற்றிராணியாராக உயர்த்தப்பட்டபின் பலமடங்கு உபகாரம் செய்தாரென்றால் அது உண்மையிலும் உண்மை. அநேக சந்தர்ப்பங்களில் தமது கையில் பணமில்லாவிடினும், கடன் வாங்கி மற்றவர் வறுமை நீக்கி, அவர்களுக்கு ஆறுதல் கொடுப்பார். குருமடத்து ஆத்தும குருவாயிருந்தபோது 50 பவுன் கடன் வாங்கித் தமது மாணவர்களில் ஒருவருக்கு உதவி செய்ததுபோல இப்போதும் அநேகந் தடவைகளில் சார்த்தோ மேற்றிராணியார் அநேகருக்கு உதவி புரிந்தார். சொற்பத் தொகை அவசியப்பட்டபோது தமது மோதிரத்தைப் பணயம் வைத்தே பணம் வாங்குவார். அடிக்கடி இவ்வாறு தம் மோதிரத்தை அடகு வைத்து பணம் வாங்கிப் பிறருக்கு உதவு வதை அறிந்த மாந்துவா நகரத்தார், அவர் கையில் மோதிரம் இல்லாதபோது "மேற்றிராணியார் மோதிரம் மாமியார் வீட்டுக்குப் போயிருக்கிறது" என்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

"மாந்துவா நகரவாசிகள் சார்த்தோ ஆண்டவரை நேசிக்காவிட்டால் மற்றெவரை நேசிப்பார்களோ!" என்று 13-ம் சிங்கராயர் மொழிந்தாரென்றால் சார்த்தோவின் இருதய அன்பை என்னென்று சொல்வோம்!

உண்மையாகவே இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்த குணமுமுள்ள சேசு என்னும் அரசின் திருப்பாதச் சுவடுகளைக் கவலையாய்ப் பின்சென்ற சார்த்தோ மேற்றிராணியாருடைய ஆளுகையில் அவருடைய நன்மாதிரிகையாக மாந்துவா நகரவாசிகள் தங்களுக்குள்ளிருந்த சச்சரவுகளை ஒழித்து சமாதானப்பிரியராய் விளங்கினர்.


## சத்திய வேத சித்திர விளக்கம்

**"உலக ஞானத்தையெல்லாம் கசடறக் கற்றிருந்தும் தெய்வீக ஞானமாகிய ஞானோபதேசம் தெரியாமலிருந்தால் என்ன பிரயோஜனம்?"**

**–வந். பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை**



***எளிய முறையில் ஞானோபதேசத்தை கற்பதற்கான ஓர் அற்புத படைப்பு இப்பொழுது நான்காம் மறுபதிப்பில். . . . .***

***விலை: ரூபாய் 250/- மட்டும். தபால் செலவு தனி.***

# அர்ச்சியசிஷ்ட எண்ணெய்

அருட்கருவிகள் VI

நன்றி: கத்தோலிக்கக் களஞ்சியம், திருச்சி, 1941

வருடந்தோறும் பெரிய வியாழக்கிழமை அன்று ஒவ்வொரு மேற்றிராசனக் கோவிலிலும் வெகு நேர்த்தியும் ஆடம்பரமுமான சடங்கு ஒன்று நடைபெறுகிறது. அன்று முதல் அடுத்த வருடம் பெரிய வியாழக் கிழமை வரையிலும் உள்ள நாட்களில், தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுவதிலும் ஆட்களையும் பொருட்களையும் அர்ச்சிக்கும் பலவித சடங்குகளிலும் உபயோகிக்க வேண்டிய எண்ணெயை இத்தினத்தில் மேற்றிராணியார் மந்திரிக்கிறார்.

எண்ணெய் மந்திரிக்கும் சடங்கில் பலவித ஞான கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. இச்சடங்குக்கு குருக்கள் அநேகர் தேவை. ஏனெனில், அர்ச்சியசிஷ்ட எண்ணெய் திருச்சபை சடங்கு முறையில் உபயோகிக்கிற மற்றப் பொருட்களையெல்லாம்விட அதிக முக்கியமானது. ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவம், அவஸ்தைப்பூசுதல் ஆகிய இந்நான்கு தேவதிரவிய அநுமானங்களிலும் அர்ச்சியசிஷ்ட எண்ணெய் பிரயோகிக்கப்படுகிறது. ஆகையால், அதன் தன்மை, பயன், கருத்து முதலியவைகளை அறிந்திருப்பது மிகவும் பிரயோசனமாய் இருக்கும்.

எண்ணெய் உபயோகத்தின் கருத்து: கீழ்த்திசை நாடுகளிலும், ஐரோப்பாவின் தென் பாகங்களிலும் ஒலிவ எண்ணெய் அநுதினமும் உபயோகிக்கப்படுகிறது. போஜன பதார்த்தங்களை சமைப்பதற்கு உதவுகிறதுமன்றி, மருந்தாகவும் பயன்படுகிறது. முந்தின காலங்களில் தீபங்களுக்கு விசேஷமாய் உபயோகப் படுத்தப்பட்டது இந்த எண்ணெயே. பூர்வத்தில், மல்லக்கச் செட்டிகள், தசை வளம் பெறுவதற்காக இந்த எண்ணெயை உபயோகித்தார்கள். இப்போது கூறின உபயோகங்களை அநுசரித்துத் திருச்சபை ஞான உணவையும், மருந்தையும், அருட்பிரகாசத்தையும், ஞான வல்லபத்தையும் குறிப்பிடுவதற்காக, எண்ணெயை உபயோகிக்கிறது. ஞான வல்லபத்தை அளிக்கும் குறியாக எண்ணெயை உபயோகிப்பது வெகு பொருத்தமுள்ளதென்பதின் நிமித்தம், ஜீவியருக்குமட்டுமின்றி ஜீவனற்றவைகளாகிய மணிகள், பாத்திரங்கள், முதலியவைகளுக்கும் எண்ணெய் பூசி அர்ச்சிப்பது திருச்சபையில் ஏற்படலாயிற்று.



பெரிய வியாழக்கிழமையில் மந்திரிக்கிற எண்ணெய் மூவகைப்படும். **ஞான தீட்சைத் தைலம், பரிமளத் தைலம், வியாதியஸ்தர் தைலம்.** இம்மூன்றும் ஒலிவ எண்ணெய்தான். ஆனால் பரிமளத் தைலத்தில் பால்சம் என்னும் பரிமளவர்க்கம் கலந்திருக்கிறது. மேற்றிராணியார் இம்மூவித எண்ணெய் ஒவ்வொன்றையும் அததற்குரிய விசேஷ ஜெபங்கள் சொல்லி மந்திரிக்கிறார்.

***1. ஞானதீட்சைத் தைலம்:*** இந்த அர்ச்சியசிஷ்ட எண்ணெய் விசேஷமாய் ஞானஸ்நானம் பெறப்போகிறவனுடைய நெஞ்சிலும் முதுகிலும் பூசுவதற்கு உபயோகப்படுவதினால் இந்தப் பெயர் உண்டாயிற்று. ஞானஸ்நான தீர்த்தம் மந்திரிப்பதற்கும், கோவில் அபிஷேகத்திற்கும், பீடம் அல்லது அர்ச்சியசிஷ்ட கல் மந்திரிப்பதற்கும், குருப்பட்டம் கொடுப்பதற்கும், கத்தோலிக்க இராஜா அல்லது இராணியின் பட்டாபிஷேகத்திற்கும் இந்த எண்ணெய்தான் பிரயோகிக்கப்படுகிறது.

***2. பரிமளத் தைலம்:*** முன் கூறிய வண்ணம் பால்சம் என்னும் பரிமளவர்க்கம் இதில் கலந்திருப்பதினால் இதற்கு இப்பெயர் கொடுக்கலாயிற்று. இந்தத் தைலத்தில் பால்சம் கலக்கிற வழக்கம் ஆறாவது நாற்றாண்டில் ஆரம்பமானது. யூதேயா, அரேபியா நாடுகளில் வளருகிற தைல பசையுள்ள ஓர் வகை மரங்களிலிருந்து உண்டாகிற பிசின் போன்ற பொருள்தான் பால்சம் என்று கூறப்படுகிறது. தேவதிரவிய அநுமானத்தால் அருளப்படுகிற வரப்பிரசாதத்துக்கு எண்ணெய் அடையாளமாய் இருப்பது போல், பாவ நாற்றமின்றி புண்ணிய நறுமணம் கமழுவதற்குப் பால்சம் அடையாளமாயிருக்கிறது.

பரிமளத் தைலம் என்னும் அர்ச்சியசிஷ்ட எண்ணெய் விசேஷமாய் உறுதிபூசுதல் கொடுப்பதற்கு உபயோகப்படுகிறது. உறுதிபூசுதல் பெறுகிறவனுடைய நெற்றியில் இந்தத் தைலத்தால் தான் மேற்றிராணியார் சிலுவை அடையாளமாகப் பூசுகிறார். ஞானஸ்நானத்தில் தண்ணீர் வார்த்தவுடன், உச்சந்தலையில் தடவப்படுவதும் இதுவே. மேற்றிராணியார் அபிஷேகத்திலும் கோவில் அபிஷேகத்திலும், பாத்திரங்கள், பத்தேனு, ஞானஸ்நானத் தீர்த்தம், கோவில்

மணிகள் முதலியவைகளை மந்திரிப்பதிலும் இது உபயோகிக் கப்படுகிறது.

***3. வியாதியஸ்தர் தைலம்:*** அவஸ்தைப்பூசுதலுக்கு அவசியமாய் வேண்டிய பொருள் இது. மணி மந்திரிப்பதிலும் இது தேவை. இலத்தீன் ரீதியைப் பின்பற்றுகிற ஆலயங்களில் இந்த எண்ணெய் யாதொரு கலப்பின்றி சுத்தமானதாயிருக்கும். கீழ் நாட்டு ரீதியைப் பின்பற்றுகிற சில சபைகளில் இந்த எண்ணெயில் சிறிதளவு இரசம் அல்லது சாம்பல் கலப்பதுண்டு.

அவஸ்தைப்பூசுதலில் எண்ணெய் உபயோகிப்பது அப்போஸ்தலர் காலந்தொட்டு நடந்தேறி வருகிறது என்பதற்கு அர்ச். இயாகப்பர் நிருபமே போதுமான அத்தாட்சி. அவர் சொல்வதாவது: "உங்களில் எவனுவது வியாதியாயிருந்தால், குருக்களை வரவழைப்பானாக. அவர்கள் ஆண்டவருடைய நாமத்தால் அவன் பேரில் தைலம் பூசி பிரார்த்திப்பார்களாக." அவஸ்தைப்பூசுதலுக்கு அவசியமான பொருளாக இதை ஏற்படுத்தினவர் நமது திவ்விய இரட்சகரே. ஏனெனில் தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தின ஆண்டவர்தாமே அவைகளுக்குரிய பொருளையும் திட்டம் பண்ணியிருக்கிறாரே யொழிய திருச்சபைக்கு இவ்விதம் செய்ய அதிகாரமில்லை.

***பூர்வீக அநுஷ்டானம்:*** ஞானஸ்நானம், குருப்பட்டம், கோவில் அபிஷேகம் முதலியவைகளில் எண்ணெய் உபயோகிக்கும் வழக்கம் பெரும்பாலும் அப்போஸ்தலர் காலத்திலேயே உண்டாயிற்று என்று சொல்ல நியாயமுண்டு. பழைய ஏற்பாட்டில், குருக்களையும் இராஜாக்களையும் அபிஷேகம் பண்ணுவதிலும், பலிகளிலும், சில சுத்திகரச் சடங்குகளிலும் எண்ணெய்ப் பிரயோகம் வெகு சாதராணமாயிருந்தது. திருச்சபை சடங்கு முறைகளில் எண்ணெய்ப் பிரயோகம் உண்டாவதற்கு இதுவே ஆதாரம் என்று சொல்லத்தகும். ஞானஸ்நான தீர்த்தம் மந்திரிப்பது 2-ம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டதாயினும், அதில் எண்ணெய் உபயோகிக்கத் துவக்கினது பிற்காலங்களில்தான். 4-ம் நூற்றாண்டிலிருந்தே, பெரிய வியாழக்கிழமையில் அர்ச்சியசிஷ்ட எண்ணெய் மந்திரிக்கிற வழக்கம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனல், அக்காலங்களில் ஞான தீட்சைத் தைலமும் பரிமளத் தைலமும் மாத்திரம் பெரிய வியாழக்கிழமையில் மந்திரிக்கப்பட்டன. வியாதியஸ்தர் தைலத்தை அவசியத்துக்குத் தகுந்தாற்போல் அந்நாளிலாவது, வேறு தினங்களிலாவது, சில இடங்களில் குருக்களே மந்திரித்து வந்தார்கள். இப்போது இந்த வழக்கம் நீக்கப்பட்டு திருச்சபையின் சட்டப்படி மேற்றிராணியார் மாத்திரம் பெரிய வியாழக்கிழமையில் இம்மூன்றையும் மந்திரிப்பதற்கு அதிகாரம் பெற்றவராய் இருக்கிறார்.


***அர்ச்சியசிஷ்ட எண்ணெய் மந்திரிக்கும் சடங்கு:***

மேற்றிராணியாரும் அவரது பரிசாரகருமல்லாமல், கூடுமான இடங்களில் ஒழுங்குப் பிரகாரம், பன்னிரண்டு குருக்களும், ஏழு தியாக்கோன்மாரும், ஏழு சப்தியாக்கோன் மாரும், இச்சடங்கில் கலந்துகொள்வார்கள். மேற்றிராணியார் வெள்ளை அல்லது தங்க ஆயத்தம் அணிந்து வழக்கம்போல் பூசை செய்வார். நடுப்பூசைக்குப் பிறகு பரலோக மந்திரம் துவக்குமுன், பிரத்தியேகமாய்த் தயாரித்து வைத்திருக்கிற மேசை முன்பாக நின்று, வியாதியஸ்தர் தைலம் கொண்டுவரக் கற்பிப்பார். அப்போது சப்தியாக்கோன் ஒருவர் அதைக் கொண்டுவந்து அவர் எதிரில் வைப்பார். மேற்றிராணியார் துஷ்ட அரூபி விலகிப் போவதற்காகச் சொல்லும் ஜெபத்தை அதன்பேரில் உச்சரித்து, ஆத்தும சரீர ஆறுதலுக்காக திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் அதன்மேல் எழுந்தருளி வரும்படி மன்றாடி, சகலவித வியாதி நோவு பலவீனத்துக்கு அது பரம மருந்தாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறார். பின்னர், திவ்விய பூசையைத் தொடர்ந்து நடத்தி நற்கருணை உட்கொண்டபின், பரிமளத் தைலத்தையும் ஞானதீட்சைத் தைலத்தையும் மந்திரிப்பார். இரண்டு தியாக்கோன்மார் தோள்பட்டு *(Humeral Veil)* அணிந்து, இவ்விரண்டு தைலத்தையும், சப்தியாக்கோன் பால்சத்தையும் சக்கிரீஸ்தியிலிருந்து எடுத்துக் கொண்டு வருவார்கள். அவர்கள் முன்பாக, சுற்றுப்பிரகார சிலுவையுடன் ஒரு சப்தியாக்கோனும், எரிகிற மெழுகுதிரிக ளுடன் இரு சீடர்களும், மேலே சொல்லப்பட்ட குருக்கள், தியாக்கோன்மார், சப்தியாக்கோன்மார் சகலரும் நடந்து செல்ல, பாடகர் இருவர் சில ஸ்துதிகளைப் பாடிக்கொண்டு போவார்கள். மேற்றிராணியார் பால்சத்தையும் மந்திரித்து, அதோடு சிறிது எண்ணெயைக் கலந்து யார் யார் இந்த எண்ணெயால் பூசப்படுகிறார்களோ அவர்கள் மோட்ச இராச்சியத்தில் பங்கடையும்படி அவர்களது உள்ளமும் பூசப்படுவதாக என்னும் கருத்துள்ள ஒரு ஜெபத்தைச் சொல்லி எண்ணெயில் மும்முறை சுவாசிப்பார். அவருக்குப்பின், பன்னிரு குருக்களும் அவ்வாறே சுவாசிப்பார்கள். துஷ்ட அரூபி விலகிப் போவதற்காக ஜெபம் சொன்னபிறகு பழைய ஆகமத்தில் இருந்த எண்ணெய்ப் பிரயோகங்களை விவரித்துக் காட்டி, தண்ணீராலும் இஸ்பிரீத்துசாந்துவினுலும் நவமாய்ப் பிறந்தவர்களின் இரட்சண்யத் தைலமாக உபயோகிக்கப் போகிற இந்த அர்ச்சியசிஷ்ட எண்ணெயை சர்வேசுரன் ஆசீர்வதித்தருள வேண்டுமென்று மன்றாடுகிற, முகவுரையை மேற்றிராணியார் பாடுவார். அதன்முடிவில், எண்ணெயும் பால்சமும் கலந்ததை, பரிமளத் தைலம் இருக்கும் பாத்திரத்தில் வார்த்து, **பரிசுத்த பரிமளத்தைலமே வாழ்க** என்று மும்முறை பாடி பாத்திரத்தின் ஓரத்தை முத்தி செய்வார். பன்னிரு குருக்களும் அவ்வாறே பாடி முழந்தாட்படியிட்டு வணங்கி முத்தி செய்வார்கள். இவ்வண்ணமே ஞானதீட்சை தைலமும் அதற்குரிய வேறு ஜெபங்களுடன் மந்திரிக்கப்படும். இறுதியில், முன்போல் தியாக்கோன்மார் ஆடம்பரமாய் எண்ணெயை எடுத்துக்கொண்டு சக்ரீஸ்தியில் வைப்பார்கள்.

திருச்சபை அர்ச்சியசிஷ்ட எண்ணெயை எவ்வளவு மதிக்கிறதென்று அறிவதற்கு இப்போது சொன்ன சுருக்கமான விபரம் போதுமானதென்று நினைக்கிறோம். ஒவ்வொரு பங்கு கோவிலிலும், சக்ரீஸ்தி சுவரில் அமைந்திருக்கும் பெட்டியில் பத்திரமாய் இந்த எண்ணெயை வைத்திருப்பது வழக்கம். குருக்களல்லாதார் எவரும் இதைத் தொடுவது முறையல்ல. நமது ஆத்தும இரட்சண்யத்துக்கு அவசியமான வரங்களை அடைவதற்காக, தேவதிரவிய அநுமானத்தில் உபயோகிக்கப் படும் எண்ணெயை சங்கையுடன் கையாள வேண்டுமென்பது திருச்சபையின் கருத்து. இதனாலேயே இதை அர்ச்சியசிஷ்ட எண்ணெய் என்று சொல்கிறோம்.

## பரிசுத்த பாப்பரசர்

# பிரான்சிஸ்



**ஜெபிப்போமாக**

நமது சிரேஷ்ட மேற்றிராணியாராகிய பிரான்சிஸ் என்கிற நாமதேயங் கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்ட பாப்பானவருக்காக வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தர் அவரை ஆதரித்துக் காப்பாற்றி இவ்வுலகத்தில் பாக்கியவானாக்கி அவருடைய சத்துராதிகளிடத்தில் அவரைக் கையளிக்காமல் இரட்சித்துக்கொள்ளுவாராக. ஆமென்.

# மேற்றிராணியார் பட்டம் - வெள்ளி விழா
# (1988 - 2013)





அதிமே. வந். மார்செல் லெஃபவர்



அதிமே. மார்செல் லெஃபவருடன்
வந். காஸ்ட்ரோ மேயர்



வந். பெர்னார்டு
ஃபெல்லே



வந். திஸ்ஸியர்
தே மலரே



வந். அல்போன்ஸோ
டி காலரட்டா



வந். ரிச்சர்ட்
வில்லியம்ஸன்

# *Tradidi quod et accepi*





“நான் பெற்றுக்கொண்டதையே உங்களுக்கு கையளிக்கிறேன்”






கடவுளின் உன்னதமான கொடைகளுக்கு நன்றி கூறுவோம் !







உங்கள் ஆதரவுக்கு மிக்க நன்றி.




மே – ஜூன்
2012





ஜூலை – ஆகஸ்ட்
2012





செப்டம்பர் – அக்டோபர்
2012




நவம்பர் – டிசம்பர்
2012




ஜனவரி – பெப்ருவரி
2013




மார்ச் – ஏப்ரல்
2013

வருடாந்தர நன்கொடை ரூபாய் 150/–

**Sancta Maria Publications,** 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: 8903007345; 0462-2586201; 2572389. email: sspxindia@gmail.com